

குருகுகேசர்

முனைவர் வை.இரத்தினசபாபதி

மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு

வெளியீடு எண்: 85

குருகுகேசம்

-3-

திருக்கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனம்
திருவருள் திருமிகு வீரசைவ ஞானாசிரியர்
வீரசைவ ஞானபீடத்தில் திகழ் திருவுரு
திருவருட் குருமகாசந்நிதானம் இருபதாம் பட்டம்
ஸ்ரீ ல ஸ்ரீ **சிவஞான பாலய சுவாமிகள்** அவர்களின்
திருவருட் குருவாணையின் வண்ணம் வெளிவருகிறது.

ஆசிரியர்
முனைவர் **வை.இரத்தினசபாபதி**
மேனாள் தத்துவப் பேராசிரியர்,
சென்னைப் பல்கலைக்கழகம்.

மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு — 2013
மயிலம் — பொம்மபுரம்.

நூல் குறிப்பு


நூல் தலைப்பு	:	குருகுகேசம் - 3
ஆசிரியர்	:	முனைவர் வை. இரத்தினசபாபதி
முதற்பதிப்பு	:	2013
உரிமை & வெளியீடு	:	மயிலம் பொம்மபுர ஆதீனம் மயிலம் - 60304 பொம்மையபாளையம் - 605104
பொருள்	:	வீரசைவத் தத்துவ விளக்கம்
அளவு	:	1/8 டெமி
புள்ளி	:	12 புள்ளி
பக்கங்கள்	:	224
விலை	:	ரூ. 135/-
வடிவமைப்பு	:	கபிலன் ஒளியகம், புதுச்சேரி-8
அச்சிட்டோர்	:	சூர்யா பிரிண்ட் சொலூசன்ஸ் சிவகாசி.

ISBN - 978-81-926955-2-5

இந்நூல் விஜய ஆனி 23, 07.07.2013 ஞாயிற்றுக்கிழமை மயிலம் திருமடத்தில் ஆதிகுருமுதல்வர் ஸ்ரீபாலசித்தர் மகாகுருபூசை விழாவில் இரத்தினகிரி ஸ்ரீபாலமுருகனடிமை சுவாமிகள் முன்னிலையில் மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள் 20ஆம் பட்டம் குருமகாசந்நிதானம் அவர்களால் வெளியிடப் பெற்றது.

உ









ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்
20ஆம் பட்டம்

மயிலம் - பொம்மபுர ஆதீனத்தைத் தோற்றுவித்தருளியவர் மற்றும் அவர்தம்வழி குரு மரபினர்

வ.எண்.	குருமகா சந்நிதானங்கள்	அருளாட்சி முறைமை		அருளாட்சி செய்த ஆண்டுகள்	குருபூசை நட்சத்திரம்
1.	ஸ்ரீ பாலசித்தர்	(ஆதீனத்தைத் தோற்றுவித்த முதல் குரவர்)		500 ஆண்டுகளுக்கு மேல்	ஆனி-திருவாதிரை
2.	ஆதிசிவஞானி தவத்திரு ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	2ஆம் பட்டம்		கி.பி.12 - 17-ஆம் நூற்றாண்டு வரை	வைகாசி-விசாகம்
3.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	3ஆம் பட்டம்	குன்னம்பாளையம்	கி.பி.1645 - 95	தை-திருவாதிரை
4.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	4ஆம் பட்டம்	சிதம்பரம்	கி.பி.1695 - 27	கார்த்திகை-திருவாதிரை
5.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	5ஆம் பட்டம்	கந்தப்பனூர்	கி.பி.1727 - 33	மாசி-சதயம்
6.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	6ஆம் பட்டம்	கரையாம்புத்தூர்	கி.பி.1733 - 46	வைகாசி-பூசம்
7.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	7ஆம் பட்டம்	மாத்தூர்	கி.பி.1746 - 61	மாசி-பூராடம்
8.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	8ஆம் பட்டம்	குமாரசார்வாய்	கி.பி.1761 - 70	புரட்டாசி-கார்த்திகை
9.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	9ஆம் பட்டம்	சிவகுன்றம்	கி.பி.1770 - 73	வைகாசி-மூலம்
10.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	10ஆம் பட்டம்	விருத்தாசலம்	கி.பி.1773 - 84	மார்கழி-சித்திரை
11.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	11ஆம் பட்டம்	சிதம்பரம்	கி.பி.1784 - 09	புரட்டாசி-சுவாதி
12.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	12ஆம் பட்டம்	கல்யாணபட்டினம்	கி.பி.1809 - 17	வைகாசி-பூரட்டாதி
13.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	13ஆம் பட்டம்	விருத்தாசலம்	கி.பி.1817ல் 18நாட்கள் மட்டும்	வைகாசி-சுவாதி
14.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	14ஆம் பட்டம்	சிதம்பரம்	கி.பி.1817 - 43	புரட்டாசி-ரேவதி
15.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	15ஆம் பட்டம்	நல்லாற்றூர்	கி.பி.1843-1887	சித்திரை-புனர்பூசம்
16.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	16ஆம் பட்டம்	நல்லாற்றூர்	கி.பி.1887 - 16	ஆடி-பூராடம்
17.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	17ஆம் பட்டம்	நல்லாற்றூர்	கி.பி.1916 - 28	மாசி-அசுவினி
18.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	18ஆம் பட்டம்	சிதம்பரம்	கி.பி.1928 - 65	புரட்டாசி-ஆயில்யம்
19.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	19ஆம் பட்டம்	பொம்மயபாளையம்	கி.பி.1965 - 2011	ஆனி - உத்திராடம்
20.	ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்	20ஆம்பட்டம்	மயிலம்	கி.பி.2011 முதல்	

2/5

உ

ஸ்ரீ பாலசித்த குருவே போற்றி!

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருவடி வாழ்க!

குருமரபு வாழ்த்து

பரசிவமார் திருக்கயிலைப் பரம்பரையின்
வீரசைவ பரமே காட்டப்
பரனருளால் பொம்மபுரக் கடலுதித்த
சங்குகன்னப் பால சித்தர்
வரமயிலார் முருகனுப தேசமுடன்
வந்துகுரு வாகி யாண்ட
திரமிகுபேர் சிவஞான பாலயநற்
குருமரபு சிறந்து வாழி!

உ

சிவமயம்

ஸ்ரீபாலசித்த குருவே நம

திருக்கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனம்

ஸ்ரீமத் சிவஞானபாலய சுவாமிகள் திருமடம்

மயிலம் – 604304. விழுப்புரம் மாவட்டம்

மயிலம் பொம்மபுர ஆதீனம் சீர்வளர்சீர் குருமகா சந்நிதானம்

20ஆம்பட்டம் சிவஞானபாலய சுவாமிகள் அருளிய

ஆசியுரை

பூமி உயிர்களுக்காகப் படைக்கப் பெற்றது. ஏனைய உயிர்கள் புறவாழ்வோடு தம்முடைய வாழ்வை நிறைவு செய்து கொள்கின்றன. ஆனால் மனிதர்கள் அகவாழ்வான நலவாழ்வைப் பெறவேண்டும் என்னும் நோக்கத்தோடு மனிதர்தம் மனத்தைச் சமைப்பதற்குச் சமயங்கள் தோன்றின.

சமயங்கள் பல உண்டு. ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு கோட்பாடு. எனினும் எல்லாச் சமயங்களும் இறைவனுடைய திருவடிகளையே இலக்காகக் கொண்டிருக்கின்றன. மானுடத்தைச் செம்மையாக்கவே அவை இடையறாது இயங்கிக் கொண்டிருக்கின்றன.

சமயங்களுள் தொன்மைத்தான சைவம் என்பதற்குச் '**சிவனோடு சம்பந்தம் ஆவது**' என்று விளக்கம் தருவார் திருமூலர். சைவம் தமிழோடு வளர்ந்தது. தமிழ் இயற்கையில் முகிழ்ந்தது. சைவம் என்பது தூயநெறி வாழ்க்கை.

சைவத்திலிருந்தும் மேம்பட்டு, கொள்கையினால் உயர்ந்த நிறையுடையவர்களால் வீரசைவம் தோற்றுவிக்கப் பெற்றது. அந்நிறையுடையோர் வழிகாட்டுதலின்படி வீரசைவம் இன்றவளவும் இயங்கியும் இலங்கியும் வருகிறது என்பதனை

நூலாசிரியர் சங்ககாலம் தொடங்கிய இலக்கியப் பதிவுகளிலிருந்து உரிய சான்றுகளோடு தெளிவுபட எடுத்துக் காட்டியுள்ளார்.

தொல்காப்பியம் சுட்டும் பெருமிதம் உடையவர், கணியனார் குறிப்பிடும் திறவோர், மாட்சியில் தெரிந்தோர், திருவள்ளுவரின் செயற்கரிய செய்யும் பெரியர், திருஞானசம்பந்தர் காலத்து கொள்கையினால் உயர்ந்த நிறையுடையவர் ஆகிய வீரர் என்போரே வீரசைவர்கள் என இலக்கியச் சான்று காட்டுகிறார்.

'இறைஉடைமையேன் என்றும் யாரிடத்திலும் எதையும் கேட்டுப் பெறுதல் இல்லேன்' என்ற கொள்கையில் சிறிதும் வழுவாமல் வாழ்க்கையை நடத்தியவர்களே வீரசைவர்கள் எனும் விளக்கம் வீரசைவத்தின் பெருநோக்கைச் சிறப்பிப்பதாக அமைகிறது. வயங்கிய பெருங்குணத்தைப் பெற்று இளங்கோவடிகளால் மன்னும் கண்ணகி எனப் பெயர் பெற்றதும் நுண்மாண் நுழைபுலச் சான்றாகக் காட்டப் பெறுகிறது.

வீரசைவர் ஆத்மலிங்க வழிபாட்டைத் தவிர வேறு எந்த ஒரு தெய்வத்தையும் நாடிச் சென்று வழிபடும் சிறுநெறியைப் பின்பற்றாமையே அவர்தம் நிறையுடைமை.

இவ்வீரசைவம் குருகுகேசம் என்னும் பெயரிலேயே வழங்கப்பட்டது. இறைவனை அடைவதற்கு மாதா, பிதா, குரு, தெய்வம் என்னும் படிநிலைகளை அமைத்தனர் முன்னோர். குருவின் மூலமாகவே இறைவன் திருவருளைப் பெற முடியும். கல்வியைப் போதிக்கும் ஆசிரியர் கல்விக் குருவாகிறார். ஞானத்தைப் போதிக்கும் ஆசிரியர் ஞானாசிரியர் ஆகிறார். அவ்வகையில் ஒவ்வொன்றையும் கற்றுத்தரும் ஒவ்வொரும் ஆசிரியரே. ஞானாசிரியர், சமயாசிரியர், குடும்ப குரு, குலகுரு எனப் பலவகையில் அவர்கள் அமைகிறார்கள்.

'குரு இல்லா வித்தை பாழ்' என்பது ஆன்றோர் வாக்கு. ஞான குருவானவர் இறைவனை அடைவதற்குரிய வழிகளைக் காட்டினாலும், மனிதமேன்மையின் பல்வேறு சிறப்புகளை எடுத்துரைத்து சமய, சமுதாயத்திற்கும் அது எவ்வாறு பயன்பெறுகிறது என்பதையும் அவர் அவனுள் விதைக்கிறார்.

மனிதர்கள் அன்புநிறை வாழ்வு வாழ வேண்டும். அன்பே சிவம் என்பதே குருவின் உபதேசமொழி. அன்பினால் இன்பம் ஆர்ந்து இன்பத்தையே அன்பாகக் கொண்டு கூடும் அன்பினால் கும்பிடுதலையே தம்முடைய தொழிலாகக் கொண்டு வீடும் வேண்டாத விறலின் விளங்கியர்களே வீரசைவர்களின் குரு ஆவர். கயிலைமலை மீதிருந்த காட்சி போல் வந்து மயிலைமலைமீது இருக்கும் வள்ளலாகிய ஸ்ரீபாலசித்தர் சிவஞான பாலயரைத் தம் சீடராக ஏற்று சந்நியாச்சாச்சிரமும் ஆச்சாரிய அபிடேகமும் ஞான உபதேசமும் புரிந்து தம் அம்சத்திலே ஓரம்சம் அவரிடத்தில் பதியும்படி செய்த வரலாறு உலகறிந்தது.

இந்நூல் குருகுகேசம் என்னும் தலைப்பில் வீரசைவத்தினுடைய உயர்ந்த நோக்கங்களையும் குருவிடம் சீடன் சமய அடிப்படையில் எவற்றையெல்லாம் முறையாகப் பின்பற்றவேண்டும் என்பதையும் ஆழ்ந்த மானுட ஒழுகலாறாகப் பதிவு செய்துள்ளது.

நந்திக் கொடி குறித்தும், சம்பிரதாயம் குறித்தும் அவர் மேற்கொண்டுள்ள ஆய்வு பல புதிய ஆய்வுகளுக்கு வழிகாட்டியாக அமையும். அவ்வழியே தத்துவ நோக்கில் வீரசைவமும், அப்பாலைக்கு அப்பால் என்பது வீரசைவமே என்னும் தலைப்புகளும் வீரசைவத்தை மேலும் மேலும் நுணுகி ஆய்வதற்கு வழிகோலுகின்றன.

நூலாசிரியர் முனைவர் வை. இரத்தினசபாபதி அவர்கள் 85 வயது நிறைந்த பழுத்த புலமையர். நமது பெரிய சந்நிதானத்தின் ஆணையின்படியே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தத்துவத் துறைப்படிப்பை மேற்கொண்டவர். 18ஆம் பட்டம் சுவாமிகள் மற்றும் 19ஆம் பட்டம் சுவாமிகள்மீது மிகவும் குருபக்தி உடையவர். இளவயதிலிருந்தே தமிழுக்காக உழைப்பவர். தத்துவ நோக்கில் வீரசைவ மேன்மைகளைப் பன்மொழிகளிலும் ஆராய்ந்தவர். இந்நூல் அவர்தம் தத்துவ ஆய்வுக்குச் சான்று. தமிழுக்கும், வீரசைவத்துக்கும் மற்றொரு அணிகலன்.

மானுட மேன்மையையும் வாழ்வியல் செம்மையையும் முன்னிறுத்தும் வீரசைவ சமயக் கருத்துகளை மக்களிடம் கொண்டு

செல்ல வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு நூல்களைப் படைத்து வருகின்றார்.

அதன் தொடர்ச்சியாகவே குருகுகேசம்-3ஆம் பகுதியையும் படைத்துத் தந்திருக்கிறார்.

அவர் மேன்மேலும் நீடூழி வாழ்ந்து மக்களுக்குப் பயன்பெறக் கூடியவகையில் இன்னும் பல நூல்களைப் படைத்தளிக்க மயிலம் பொம்மபுர ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீபாலசித்தர் அவர்கள் வழி ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் குருவருளையும் மயிலம் வள்ளி தெய்வானையர் உடனுறை முருகப்பெருமான் திருவருளையும் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

இந்நூலை வெளியிடுவதற்கு உதவியாக இருந்த மயிலம் திருமடம், திரு.எஸ்.விஸ்வநாதன் அவர்களுக்கும், மயிலம் சி.பா.தமிழ்க்கல்லூரி நூலகர் திரு.கே.நக்கீரன் அவர்களுக்கும், பொம்மையபாளையம் சித்தர் சிவஞானி கலைஅறிவியல் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் சொ. அருணனுக்கும் எமது வாழ்த்துகளும் அருளும் என்றும் உண்டு.

வாழ்க வீரசைவப் பெருநெறி!

(ஒப்பம்)

மயிலம்
02.07.2013

ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்
20ஆம் பட்டம்
மயிலம் பொம்மபுர ஆதீனம்

முன்னுரை

'குருகுகேசம்' என்ற தலைப்பில் இதுவரை இரண்டு நூல்கள் வெளிவந்துள்ளன. முதல்நூல் 2003ஆம் ஆண்டிலும், இரண்டாம் நூல் 2005ஆம் ஆண்டிலும் வெளிவரத் திருவருளும் குருவருளும் துணை நின்றன. மூன்றாம் நூலாகிய இந்நூல் 2013இல் வெளிவர, என் தீட்சாகுருவும், மயிலம் பொம்மபுர ஆதீனம் பத்தொன்பதாம் திருஅருள்நிரல் (பட்டம்) நிலைபெற்றிலங்கும் திருப்பெருந்தகவு பெற்று என் இதயமாம் குகையில் நின்றும் இருந்தும் கிடந்தும் இயங்கி வரும் திருவும் ஆகிய ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளின் திருவடித் தாமரைகள் இயக்கிய வழியில் நின்று இருபதாம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள் அருளாட்சிக் காலத்தில் வெளிவருவதாயிற்று.

'குருகேசம்' என்ற முதல் நூலானது, மூன்று தலைப்புகளைக் கொண்டதாக அமைந்தது. அவை,

மன்னுதலாம் மனித வாழ்வு
இயற்கையாய் நின்ற இமயம்
மணிவாசகரின் சிவபுராணம்

ஆகியனவாகும்.

'குருகுகேசம்' என்ற தலைப்பில் அமைந்த இரண்டாம் நூலானது கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகளாரின் வாழ்வியல் நிகழ்வுகள் மெய்ப்பொருளியற் பின்னணியில் அமைத்து விளக்கம் காட்டப் பெற்றன. அத்தகைய விளக்கத்தை யானாக அமைத்துக் கொள்ளவில்லை.

அல்லமாப் பிரபு தேவர் எழுவகைப் படிநிலைகளில் ஏறி, சூனிய சிங்காதனத்தில் அமர்ந்த நிலையைப் பசவண்ணர் காண்கிறார். அத்தகைய எழுவகைப் படிநிலைகளின் தன்மைகளைக் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகள் தம்முடைய பிரபுலிங்கலீலையில் அமைத்துக் காட்டுகின்றார்.

கன்னட மாநிலத்தில் வீரசைவப் பெருமக்களால் விளக்கம் காட்டப் பெறுவது 'சூனிய சம்பாதனே' என்பது. கற்பனைக்

களஞ்சியம் சிவப்பிரகாச அடிகள் தம்முடைய பிரபுலிங்க லீலையிற் காட்டுவது 'சூனிய சிங்காதனம்'. அல்லமாப் பிரபு தேவரை எழுவகைப் படிநிலைகளில் முறையே அமரச் செய்து, இறுதியில் சூனிய சிங்காதனத்து இருந்த நிலையை விளக்க முற்படும் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகள், எத்தகைய மெய்ப்பொருளியற் பின்னணியை அமைத்துக் கொள்கிறாரோ, அதே பின்னணியை அமைத்து, சிவப்பிரகாச அடிகளாரின் வாழ்வியல் நிகழ்வுகளை இணைத்து, இறுதியதாக சிவப்பிரகாச அடிகளைச் சூனிய சிம்மாதனத்து அமர்த்திப் பார்க்கலாம் என்ற முயற்சியை மேற்கொண்டு அவ்வகையில் சிவப்பிரகாச அடிகளை யான் நோக்கினேன்.

கற்பனைக் களஞ்சியம் எத்தகைய அடிப்படையை வைத்து அல்லமாப் பிரபுதேவரை நோக்கினாரோ, அத்தகைய அடிப்படைகளையே மூலமாக வைத்துக் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகளை யானும் நோக்கிய வகையில், கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகளின் வாழ்வியல் தத்துவத்தைக் கீழ்க்கண்ட ஏழு படிநிலைகளில் அமைத்தேன். அவை முறையே,

1. சத் என்னும் நித்திய இன்பநிலை
2. (அ) சித் என்னும் உடைமை ஞான இன்பநிலை
   (ஆ) சித் என்னும் உண்மை ஞான இன்பநிலை
3. அறஇயல் என்னும் அனந்த இன்பநிலை
4. அருளியல் இன்பநிலை
5. பேரருளியல் இன்பப் பெருநிலை
6. ஆன்மஇயல் என்னும் அன்ன (ஹம்ச) இன்பநிலை
7. ஆன்மீக இயல் என்னும் பரமஹம்ச இன்பநிலை

எனவாகும்.

கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகள் தாம் அருளிய பிரபுலிங்கலீலையில் இலைமறை காயாக நிறுத்திக் கணித்த மெய்ப்பொருளியல் அணுகுமுறைகளை எடுத்து நிறுத்தி, அவர்

அமைத்த அளவுகோலை அவருக்கே பயன்படுத்தி, சில முடிவுகளை வெளிப்படுத்தியதே என் பணி. நோக்கும் முடிவும் கற்பனைக் களஞ்சியம் வகுத்துக் கொடுத்தவையே. அவற்றின் அடிப்படையில் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகளின் வாழ்வியல் நிகழ்வுகள் அமைத்துக் காட்டப் பெற்றன. இத்தகைய விளக்கமே 'குருகுகேசம்' இரண்டாம் பகுதியில் நூல் நுவலும் செய்தியாக அமைந்தது.

இந்நூல் **'குருகுகேசம்'** என்ற பெயர் வரிசையில் மூன்றாம் நூலாக அமைகின்றது.

'வீரசைவம்' என்ற சொல்லுக்குரியவையாக என்னென்ன செய்திகள், கூறப்பெறுகின்றனவோ, அவற்றையெல்லாம் 'குருகுகேசம்' என்ற தலைப்பிலேயே கூறலாம் என்பது எளியேனின் கருத்து. ஏனெனில், சைவத்திலிருந்து வீரசைவம் தோன்றியது என்பதும் சைவர்களில் ஒரு சாரார் வீரசைவர் என்பதும் மக்கள் மன்றத்தில் இன்றளவிலும் பயிலப் பெற்று வரும் செய்திகள். கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகளாரின் வாக்குகளிலும் **'வீரசைவம்'** என்ற தொடரும் அதற்குரிய சொற்பொருள் விளக்கமும் எடுத்தாளப் பெறுகின்ற காரணத்தால் யான் **'வீரசைவம்'** என்ற தொடரை முற்றாகத் தவிர்க்க முடியவில்லை. எனினும், **'குருகுகேசம்'** என்ற தொடரின்மூலம் வீரசைவக் கொள்கைகள், செயற்பாட்டு முறைகள் ஆகியவற்றை அமைத்து விடலாம் என்ற அடிப்படையில் **'வீரசைவம்'** என்ற தலைப்பை அமைத்துக் கொள்ளாமல் **'குருகுகேசம்'** என்ற தலைப்பையே அமைத்துக் கொண்டேன். இத்தகைய தலைப்பு அமையலாம் என்பதற்கும் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகளாரின் திருவாக்கே அடிப்படைக் காரணமாக அமைகிறது.

கற்பனைக் களஞ்சியம் தாம் அருளிய பிரபுலிங்க லீலையில் முதற்கதியான துதிகதியில் பரம விழுப்பொருள் எனப்பெறும் பரம்பொருள் பற்றியும் அது தோற்றுவிக்கும் பிற நிலைகள் பற்றியும் விளக்கும் வகையில் நான்கு பாடல்களை அமைத்துக் காட்டுகின்றனர்.

அவை முறையே, கீழ்க்கண்ட வகையில் கொடுக்கப் பெற்றுள்ளன.

'பரசிவம் பிரமம் என்னப்பட்டு
ஒரு திரிவும் இன்றி
உரைமனம் இறந்து நின்ற
ஒருசிவ லிங்கம் தன்னுள்
வரும்உயர் சதாசிவன் தான்
மற்றுஅவன் தனைப் பொருந்தும்
உரிமைகொள் ஞான சக்தி
அவர்களாற் சிவன் உதிப்பன்

சாற்றும் அச்சிவனுக்கு இச்சா
சக்தி அவ்விருவ ராலும்
தோற்றுவன் உருத்திரன் தான்
சொல்லிய அவற்குச் சக்தி
மாற்றருங் கிரியை என்பர்
மற்றுஅவர் இருவர் பாலும்
போற்றுறும் அரி உதிப்பன்
பொறிஅவன் சக்தி ஆமால்

அத்திருமாலும் மாவும் அளிப்ப வந்து
உதிப்பன் வண்டு
மொய்த்து இசை முரலும் செங்கேழ்
முளரி வானவன் அவற்குச்
சத்திவெண் கமலை அன்னோர் தரவரும்
உலகின் தோற்றம்
நித்தன் நம்குருகுகேசன் நினைவு
மாத்திரையின் ஆமால்.

ஆக்குறும் செயலது ஒன்றே
அயன்தனக்கு ஆக்கலோடு
காக்குறும் செயல் இரண்டும்
கண்ணனுக்கு ஆக்கல் காத்தல்
போக்குதல் என்றுஇம் மூன்றும்

புராந்தகற்கு அளித்து அவர்க்கு
நீக்கரும் இறைமை நல்கி
நிறுவினன் குருகுகேசன்

(பிரபுலிங்கலீலை, துதிகதி, பாடல்கள் 18-21)

மேலே காட்டப் பெற்ற நான்கு பாடல்களுக்கும் உரிய திரண்ட பொருள்;

"சிவலிங்கம் முதன்மைத்தானது. அது பரசிவம், பிரமம் என்ற சொற்களாற் சுட்டிக் கூறப் பெறுவது. வாக்கு, மனம் கடந்த வான்பொருள் அது. மாற்றம் உறுதல் இல்லாத சத்துப் பொருள்.

சிவலிங்கத்திலிருந்து சதாசிவன் வருவான். சதாசிவனின் சத்திக்கு ஞானசத்தி என்று பெயர்.

சதாசிவன் ஞானசத்தியைப் பொருந்தும் நிலையில் சிவன் உதிப்பான்.

சிவனுடைய சத்தி இச்சாசக்தி எனப் பெறும். சிவனும் இச்சாசக்தியும் பொருந்துவதால் உருத்திரன் தோற்றம் பெறுவான்.

உருத்திரனின் சத்தியானது கிரியை. இருவர்பாலும் தோற்றியவன் அரி எனப்பெறும் விட்டுணு. விட்டுணுவின் சத்தியானவள் திருமகள்.

திருமாலுக்கும் திருமகளுக்கும் அளிப்ப வந்து உதிப்பவன் முளரியானவன் எனப்பெறும் பிரமன். அவனுடைய சத்தியானவள் கமலை எனப்பெறும் கலைமகள்.

பிரமனும் கலைமகளும் உலகத் தோற்றத்திற்குக் காரணம் ஆவர்.

மேலே கூறப்பெற்ற அனைவரும் உலகமும் 'குருகுகேசன்' எனப் பெறும் பரம விழுப்பொருளின் சங்கற்ப மாத்திரையினால் - நினைவு மாத்திரையினால் நிகழும். குருகுகேசன் வேறு ஒன்றிலிருந்து தோற்றம் உறுதலோ ஒடுங்குதலோ இல்லாத நித்தன். (நித்தியத் தன்மையன்)

'ஆக்குறும் செயலதொன்றே' எனத் தொடங்கும் பாடல் (துதிகதி-21) அல்லமதேவன் சிறப்பு என்ற தலைப்பில்

காணப்பெறுகிறது. இப்பாடலில் குறிக்கப்பெறும் அல்லமதேவரும், பிரபுலிங்கலீலையின் பாட்டுடைத் தலைவராகிய அல்லமாப் பிரபுத் தேவரும் வேறு வேறானவர்.

பிரபுலிங்கலீலைத் துதிகதியின் 21ஆம் பாடலுக்குரிய அல்லமதேவர் பரம்பொருளானவர். பாட்டுடைத் தலைவராகிய அல்லமாப்பிரபு தேவர் அல்லமதேவரின் (பரம்பொருளின்) ஓர் அம்சமானவர். அவ்வேறுபாட்டை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

வீரசைவக் கொள்கையின் அடிப்படையில் நித்தன் நம் குருகுகேசனுக்கு 'அல்லமன்' என்றொரு பெயரும் உண்டு.

பிரபுலிங்க லீலையின் பாட்டுடைத் தலைவராகிய பிரபுதேவருக்குத் துதிகதியிலேயே ஒரு துதிப்பாடல் தனியாக அமைத்துள்ளார் கற்பனைக் களஞ்சியம். அது துதிகதியின் 9ஆம் பாடல்.

கலையை மதிக்கும் புலவர் தமைச்
சித்தர் குழாத்தைக் கடவுளரை
நிலையை மதிக்கும் முனிவரரைத்
திசைமா முகனை நிறைவளையாச்
சிலையை மிதிக்கும் நெடியோனை
விழுங்கி உமிழாத் திறன்மாயை
தலையை மிதிக்கும் அல்லமன்செங்
கமல மலர்த்தாள் தலைக்கணிவாம்

என்ற பாடலானது பிரபுலிங்கலீலையின் பாட்டுடைத் தலைவராகிய பிரபுதேவரைப் போற்றித் துதிப்பதாக அமைந்தது.

'குருகுகேசம்' என்ற பெயரில் வெளிவரும் தொடர்வரிசை நூல்களில் இந்நூல் மூன்றாம் பிரிவாக அமைகிறது. இதனுள் மூன்று கட்டுரைகள் அமைந்துள்ளன.

1. 'வீர' என்ற அடைமொழியின் பொருள்
2. இலிங்காயதமும் சம்பிரதாயமும்
3. தத்துவநோக்கில் குருகுகேசம் (அ) வீரசைவம்

முதற்கட்டுரையில் வீரசைவம் என்ற பெயரில் அமைந்த 'வீர' என்னும் முன்னொட்டுச் சொல்தோன்றி வளர்ந்த விவரணத்தை அளவையியல் அடிப்படையில் ஆய்வது. திருஞானசம்பந்தர் காலத்தில் 'கொள்கையினால் உயர்ந்த நிறையுடையவர்' என்று குறிக்கப் பெற்றுப் பாராட்டப் பெற்றவர்கள் வீரசைவர்களே என்ற கருத்தை மையமாகக் கொண்ட செய்திகள் விளக்கப் பெற்றுள்ளன.

இரண்டாவது கட்டுரையில் இலிங்காயதம், சம்பிரதாயம் என்ற தலைப்புகளில் திருமூலர் எடுத்துக்காட்டும் செய்திகள் வீரசைவக் கருத்துகளே என்பது விளக்கப் பெற்றுள்ளன.

அடுத்த மூன்று கட்டுரையானது தத்துவநோக்கில் வீரசைவம் என்பது. 'ஐக்கியம்' என்ற சொல்லின் விளக்கமும் ஐ+ஃ+இயம் என்பன இணைந்து நின்று உணர்த்தும் வாழ்வியல் விளக்கமுமே ஐக்கியவாத சைவம் எனப்பெறும் வீரசைவம் என்பது விளக்கப் பெற்றுள்ளது.

இந்நூல் மயிலம் பொம்மபுர ஆதீனம் பெரிய மடம் ஸ்ரீமத் சிவஞானபாலய சுவாமிகளின் (பத்தொன்பதாம் (அருள்நிரல் வரிசை) பட்டம்) திருவருளாலும் குருவருளாலும் ஆக்கப் பெற்றது.

எளியேனின் தீட்சாகுருவாக எழுந்தருளி என் அகத்தும் புறத்தும் அருளுருவாய் நின்றியங்கும் குருமகாசந்நிதானமவர்களின் திருவடித் தாமரைகளுக்கு இந்நூலைக் காணிக்கையாக்குகின்றேன்.

வீரசைவக் கொள்கையை விரிவாக விளக்கி எழுதவேண்டும் என்ற அருளாணையானது மயிலம் பொம்மபுர ஆதீனம் பதினெட்டாம் பட்டம் குருமகாசந்நிதானமவர்கள் எனக்கு இட்ட ஆணை. அதனாலேயே யான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தத்துவத் துறையில் சேர்ந்து எம்.ஏ. படித்தேன்.

வழிபாட்டிற்குரிய அவ்வாணையை மேலும் மேலும் வலியுறுத்தி, பல்லாற்றானும் என்னை அரவணைத்து இப்பணியில் ஈடுபடுத்திய பெருமை பத்தொன்பதாம் பட்டம் குருமகாசந்நிதானமவர்களுக்கு உண்டு.

மேலே குறிப்பிடப் பெற்ற இருபெருங் குருமூர்த்தங்களும் எளியவனாகிய எனக்கு அருளிய ஆணையை ஓரளவு நிறைவுறுத்தும் வகையில் என்னை அகத்தும் புறத்தும் அணைத்தும் இணைத்தும் குருவருளைப் பெற்றுய்யுமாறு ஆக்கம் கொடுத்தருளிக் காத்தருளிச் செயன்மைப்படுத்திய பெருமை இருபதாம் பட்டம் சிவஞானபாலய சுவாமிகளுக்கே உண்டு. அவர்களுடைய சுத்தஞானம், பரஞானம் எனப்பெறும் இரட்டைத் திருவடிகள் என் தலைமேலன.

இந்நூல் வெளிவருவதற்குத் துணைபுரிந்த நடுநம்பி ஸ்ரீகுமார சிவ - சிவக்குமார் அவர்களுக்கும் இளையநம்பி ஸ்ரீகுமார சிவ. விசுவநாதன் அவர்களுக்கும் என்னுடைய நன்றி கலந்த நல்வணக்கங்கள் உரியனவாகுக.

சென்னை இங்ஙனம்,

24.06.2013 வை. இரத்தினசபாபதி

பொருளடக்கம்

1. குருகுகேசம் வீரசைவம் 'வீர' என்ற அடைமொழியின் பொருள்

'குருகுகேசகம்' என்பதன் அனுபவப் பொருள்

குரு+குகன்+ஈசன் என்ற மூன்று சொற்களைக் கொண்ட ஒரு தொடரானது 'குருகுகேசன்' என நின்று, பரம்பொருளைக் குறித்தது.

பரம்பொருள் என்றும் பரம விழுப்பொருள் என்றும் அது ஓர் உண்மைப்பொருள் என்றும், அறிவுடைப் பெருமக்களாலும் அருளாளர்களாலும் ஒத்துக் கொள்ளப் பெற்ற அப்பொருள் மூவகை நிலைகளில் நின்றது.

'ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க' என்பது மாணிக்க வாசகரின் திருவாசகத்துச் சிவபுராண வரி.

'ஏகன்' என்பது அப்பொருளின் தனிநிலை. வாக்கு, மனம் கடந்த அகோசரப் பொருளாய் (எட்டாப் பொருளாய்) நின்ற அப்பொருள் ஏனைய பொருள்கள் எல்லாவாற்றையும் கடந்ததாய், உளதாய், உணரப் பெறநின்ற அப்பொருள் 'ஏகன்' என நின்றது.

'ஏகன்' என உணரப்பெற்ற அப்பொருள் அனைத்து ஆன்மாக்களிலும் (உயிரிகள்) தனது அளப்பற்ற கருணையால், உள்நின்று வாழவைக்கும் தனிப்பெரும் தலைமைப் பண்பால் வந்து நின்றபோது 'அநேகன்' எனப் பெற்றது.

'ஏகன்' என நின்றவன், 'அநேகன்' என அனைத்து உயிர்களிலும் நின்றவன், அனைத்து உயிரல் பொருள்களிலும் நின்றபோது, 'இறைவன்' என உணரப் பெற்றான்.

பொருள் ஒன்றுதான். நின்ற நிலையால் மூன்று என உணரப் பெற்றான். ஒரே பொருள் மூன்றாக நின்ற வகையில் அப்பொருள்களுக்கு இடை அமைந்த உறவு அநந்நியம் - அந்நியமில்லை என்பதாக அமைந்தது.

'ஏகன்' என்ற நிலையில் அப்பொருளும் அப்பொருளின் பல்வேறு வகையான ஆற்றலும் ஒன்றனுள் ஒன்று என்றோ ஒன்றும் பலவும் என்றோ வேறுபிரித்து அறியப் பெறாமல் 'ஒன்று' என்ற அளவில் மட்டுமே உணரப் பெறுவதாக அமைந்தது.

'அநேகன்' என்ற சொல்லானது பரம்பொருளைக் குறிப்பது போலவே, ஆன்மாக்களையும் குறிக்கும். ஆன்மாக்களும் பரம்பொருளைப் போலவே என்றும் உள்ள பொருள். அவை பலவாய் அறிவுடையவையாய் இருக்கின்றன. அவையும் அழியாத நித்தியப் பொருள்களே.

ஆன்மாக்களாகிய நித்தியப் பொருள்களுள் ஏகன் என்ற பரம்பொருள் தன்னுடைய கருணையால் வந்து தங்கியபோது, அப்பொருள் தங்கியிருக்கும் இடம் காரணமாக 'அநேகன்' எனப் பெற்றது.

இந்த இடத்தில் ஒரு கருத்தைத் தெளிவாக உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

ஆன்மாக்கள் பலவாகவும் அறிவுடைப் பொருளாகவும் இருத்தலின் 'அநேகம்' எனப் பெற்றன. அவற்றினுள் வந்து தங்கிய காரணத்தால் 'ஏகன்' என நின்ற பரம்பொருளும் 'அநேகன்' என்று கணித்தறியப் பெற்றான்.

'ஏகன்' என நின்ற பரம்பொருள் 'உள்ளது' எனப் பெற்றது. 'உள்ளது' எனத் தன்னுள் நின்ற பரம்பொருளை ஓர்த்து உணர்ந்து கொள்ளும் ஆன்மாவுக்கு 'உள்ளம்' என்ற பெயர் உண்டு. ஓர்த்தல்- ஆராய்ந்து நீக்குதல் எனப் பொருள்படும்.

'ஓர்த்து உள்ளம் உள்ளது உணரில்' என்ற திருக்குறளை நோக்குக.

'அநேகன்' என நின்ற ஆன்மாக்களில் 'ஏகன்' என நின்ற பரம்பொருள் வந்து தங்கிய காரணத்தால் 'அநேகன்' எனப் பெயர் பெற்றான். அவன் இங்கே வந்து தங்கியதன் நோக்கம் ஆன்மாக்களில் இயல்பாக- இயற்கையாக அமைந்துள்ள அழுக்கை நீக்கி, ஆன்மாக்களுக்குத் தன்னை அனுபவப் பொருளாக ஆக்க வேண்டும் என்ற கருணையே.

'ஏகனும் ஆகி அநேகனும் ஆனவன்
நாதனும் ஆனான் என்று உந்தீபற
நம்மையே ஆண்டான் என்று உந்தீபற'

என்பது திருவியலூர் உய்யவந்த தேவ நாயனார் அருளிய திருவுந்தியார் என்ற நூலின் ஐந்தாம் தாழிசை. இது மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கனுள் முதலாவது.

ஏகனாய் நின்ற இறைவன் அநேகனாக ஆனான் என்பதற்குப் பரம்பொருளே ஆன்மாவாக- அநேகனாக ஆனான் என்று பொருள் கொள்ளும் மெய்ப்பொருளியலாளர்கள் உளர். அக்கருத்தை உளங்கொண்டு ஏற்றுக் கொள்ளும் வகையில், வீரசைவ அறிஞர் பெருமக்களும் ஒன்றாய் நின்ற பரசிவத்தலம் இலிங்கம் அங்கம் என இரண்டாகப் பிரிந்தது என எழுதியும் பேசியும் வருகின்றனர்.

ஒன்றாக நின்ற பரம்பொருள் இரண்டாகப் பிரிந்தமைக்குரிய காரணம் என்ன? என்ற வினாவுக்கு விரிவான தெளிவான விடை கிடைக்கவில்லை.

'குருகுகேசம்' என்ற தொடர் வரிசையில் வெளிவந்த, இனி வெளிவர இருக்கின்ற நூற்செய்திகளில் இறைவன் வேறு; ஆன்மாக்கள் வேறு என்ற கருத்தமைப்பிலேயே செய்திகள் அமைத்துக் காட்டப் பெறும். **'அங்கலிங்க ஐக்கியம்'**, **'இலிங்காங்க சாமரஸ்யம்'** போன்ற தொடர்களுக்கு அவ்வவ்விடங்களில் விளக்கங்கள் அமைக்கப் பெறும்.

ஆன்மாக்கள் முற்றறிவு உடையன அல்ல; ஆயினும் அறிவுடையவை. அறிவால் ஆன்மாக்கள் தம்மைக் கணித்து அறிந்தபோது - பரம்பொருள் ஆன்மாக்களாகிய தம்மைக் குகையாக அமைத்துக் கொண்டு பரம்பொருள் தன்னுள் தங்கியிருக்கிறது என்று கணித்தறிந்தபோது இறைவனை (அல்லது) தன்னுள் இருக்கும் பரம்பொருளைக் 'குகன்' என்று பெயர்ப்படுத்தின.

பின்னர், அப்பொருள் தனக்கு வெளிப்படும் நிலையில் குருவாக வந்தான். 'குரு' என்ற சொல்லுக்கு உருவம் கொண்டு வந்து உபதேசத்தால் தெளிவு தந்தவன் என்று உரை கொள்ளுவது மரபு. நானும் அவ்வாறுதான் எழுதி வந்திருக்கிறேன்.

'குரு' என்பதற்கு 'ஒளியாக வந்தான்' என்பதே அனுபவப் பொருள்.

'குருவும் கெழுவும் நிறனாகும்மே'

என்பது தொல்காப்பிய நூற்பா.

அருணகிரிநாதரின் கந்தரநுபூதிப் பாடல்களில் இறுதிப் பாடலாக அமைந்தது கீழே வருவது,

'உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே'

மேலே குறிப்பிடப் பெற்ற கந்தரநுபூதி இறுதிப் பாடலில் 'குருவாய் வருவாய்' என்பதற்கு ஒளிப்பொருளாய் வரவேண்டும் என்பதையே பொருளாகக் கொள்ள வேண்டும்.

'உருவாய் அருவாய்' எனத் தொடங்கும் கந்தரநுபூதி துதிப்பாடலில் ஆறு இரட்டைகள் காணப் பெறுகின்றன. இரட்டைகளாயினும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை. இரட்டைகளை நாம் தனித்தனியே அறிய முடியும். நுகர முடியும். ஆறு இரட்டைகளும் ஒன்றோடு ஒன்று இணையும் இடம் ஒன்று உண்டு என்று கணித்தறிய முடியுமேயல்லாமல் நேராகக் காட்சிளவையின் மூலம் கண்டு அறிய முடியாது. இதைக் கண்டு அறிய வேண்டுமாயின் ஒலியால் மட்டுமே இயலாது. ஒளியால்தான் உணர்ந்து துய்க்க முடியும். அதனால், ஒளிப்பொருளாக வந்து உணர்த்த வேண்டும் என்று வேண்டுகிறார்.

குருமக்கள் இருவகையினர்

ஒலியால் உண்மைப் பொருளை உணர்த்துபவர்கள் ஒருவகை. ஒளியால் உண்மைப் பொருளை உணர்த்துபவர்கள் இரண்டாம் வகை. (தட்சிணாமூர்த்தம்) கல்லாலின் கீழிருந்து நால்வர்க்கும் உபதேசம் செய்த குருவான ஒளிமூர்த்தமே,

மெய்ப்பொருளியலாளர்களும் இவ்விருவேறு வகைகளில் வேறுபட நிற்கின்றார்கள். தக்க இடத்தில் இச்செய்தி விளக்கம் பெறும்.

குகனாய்க் கணித்தறியப் பெற்றவன் எவனோ, அவன் ஒளியனாக வெளிப்பட நின்று உணர்த்துகிறான். ஒளியன் என உணர்ந்தவன் மூலம் ஈசத்துவம் பெறுகிறான். இவ்வாறு மூவகை நிலைகளில் கணித்தும், கண்டும், துய்த்தும் நின்ற நிலையில் ஆன்மாவனது அவனைக் 'குரு+குகன்+ஈசன்' என்று பெயர்ப்படுத்தியது.

ஏகன்

அநேகன் — இறைவன்

என உணர்ந்த நிலையில் அவனை 'நின்றனன் மூன்றினில்' எனத் திருமந்திரம் வரையறைப்படுத்தியது.

'அநேகன்' என நின்ற ஆன்மாவானது அவனை,

குகன்

குரு — ஈசன்

எனக் கணித்தும், கண்டும், துய்த்தநிலையில் 'குருகுகேசன்' என அப்பொருளைப் பெயர்ப்படுத்தியது. அவ்வாறு அனுபவத்தின் மூலம் பெயர்ப்படுத்திய நெறியே குருகுகேசப் பெருநெறி என்றும் வீரமாகேசப் பெருநெறி என்றும் பெயர்ப்படுத்தப் பெற்றது.

'குருகுகேசம்' என்பது மக்கள் வாழ்வியற் குறிக்கோள் ஒழுங்குமுறையாகும்.

'குருகுகேசன்' என்ற பரம விழுப்பொருளைத் தன்னுட் கண்டு, கணித்து, காட்சிப்படுத்தி, துய்த்து நின்ற நெறிமுறைகளைப் பிறரும் அவ்வாறே கணித்து, கண்டு, துய்த்து நிற்கவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் அமைக்கப் பெற்ற வாழ்வியற் கொள்கையே 'குருகுகேசம்' என்பதாக நின்றது என விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

'வீர்' என்பதற்கு இருவகை விளக்கங்கள்

'குருகுகேசம்' எனப்பெறும் 'மக்கள் வாழ்வியற் குறிக்கோள் ஒழுங்குமுறை'யானது தமிழகத்தில் 'வீரசைவம்' என்ற பெயரில்

இந்நாள் வரையில் வழக்கத்தில் இருந்து வரும் தொன்மைச் சமயநெறி ஆகும்.

'சைவம் சிவனுடன் சம்பந்தம் ஆகுதல்' என்றார் திருமூலர்.

சற்றே விரித்துக் கூறினால், சிவனுக்கே 'சைவன்' என்றொரு பெயர் உண்டு என்பது திருவாசகத்தால் தெரியவரும் செய்தியாகும். 'சைவா போற்றி' என்பதும் 'ஐயாறதனிற் சைவன் ஆகியும்' என்பதும் மணிவாசகரின் திருவாசகத்திற் காணப்பெறுவனவாகிய தொடர்கள்.

முன்னது அவனுக்கு இயற்பெயராகவும் பின்னது அவனுக்கு ஆக்கப் பெயராகவும் அமைந்தவை என வேறுபடுத்தி உணர வேண்டும்.

சைவம் என்பது மக்களின் வாழ்வியல் தொடர்பானதும் மெய்ப்பொருளியல் சார்பானதும் ஆன ஒரு கோட்பாடு என்றும், பின்னர் அத்னுடன் 'வீர' என்ற முன்னொட்டானது சேர்க்கப் பெற்றது என்றும், பின்னரே 'வீரசைவம்' என்ற மக்கள் வாழ்வியற் கொள்கையானது தோற்றம் பெற்றது என்றும் பொதுவாக அறிஞர்களின் வழக்காற்றிலும் எழுத்துகளிலும் காணப் பெறுகின்றன.

சைவம் தொன்மையானது. அதனுடன் 'வீர' என்ற சொல்லைச் சேர்த்து 'வீரசைவம்' என்ற கொள்கைப் பெயரும் கொள்கையும் தோன்றின என்ற கருத்தை மறுத்து, 'வீரசைவம்' என்பதே அதன் இயற்கைப் பெயர் என்று கூறுவது வீரசைவர்களின் (கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகள் உட்பட) எழுத்துகளிலும் செயல்முறைகளிலும் காணப்பெறும் செய்தியாகும்.

'சைவம்' என்ற பொதுமை நெறியிலிருந்து வீரசைவமானது எந்த வகையில் வீரம் செறிந்ததாக, செயற்பாட்டு வகை எனப்பெறும் துறையாலும், குறிக்கோள் எனப்பெறும் நெறியாலும் உணரப் பெற்று வந்துள்ளது என்பதற்குக் காலந்தோறும் விளக்கவுரைகளை அவ்வப்போது அறிஞர் பெருமக்கள் எழுதியும் பேசியும் வந்திருக்கின்றனர்.

'குருகுகேசம்' என்ற பெயரை வீரசைவம் என்ற கொள்கைக்குரிய மாற்றுப் பெயராக இந்நூல் வரிசையில் குறிப்பிடப் பெற்று வந்தாலும், 'வீரசைவம்' என்ற தொடரில் அமைந்த முன்னொட்டாகிய 'வீர' என்ற சொல்லை எப்படியெல்லாம் உரையாணி இட்டு அறிஞர் பெருமக்கள் போற்றி வந்திருக்கிறார்கள் என்பதை முற்றாக ஒதுக்கி விடமுடியாது.

1977-இல் சென்னைப் பல்கலைக்கழகம், டாக்டர் எஸ்.ராதாகிருஷ்ணன் மெய்யுணர்வு மேல்நிலைக் கல்வி நிறுவனத்தின் மூலம் என்னால் எழுதப் பெற்று வெளியிடப் பெற்ற நூல் வீரசைவம். அது பல பதிப்புகள் கண்டது. அந்நூலினுள் 'வீர' என்னும் முன்னொட்டானது 'சைவம்' என்ற சொல்லுடன் இணைந்தமைக்குரிய காரணங்கள் பலவற்றை எழுதியுள்ளேன். அவை அனைத்தையும் குறிப்பிட்டுக் காட்டும் முயற்சியில் யான் ஈடுபடவில்லை என்றாலும் சில முக்கியமான காரணிகளை நினைவுபடுத்திக் காட்ட வேண்டிய கடன்மைப்பாட்டில் நிற்க வேண்டியவனாகிறேன்.

கொள்கை, சாதனம், அல்லது செயற்பாட்டு முறை, பயன் ஆகிய மூன்று நிலைகளில் இக்கொள்கையை அமைத்துள்ளார்கள்.

கொள்கை வழியில் நின்று வீரசைவத்தை ஆராய்ந்தவர்கள் 'வீர' என்ற முன்னொட்டுச் சொல்லின் அடிப்படையைக் கீழ்க்கண்டவாறு சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

1. 'வி' என்பது 'விகற்பம்' என்ற பொருளைத் தருகின்ற ஓரெழுத்து ஒருமொழி. 'ரகிதம்' என்பது நீக்குதல், கடத்தல் என்ற பொருளைத் தரும் அயல்மொழிச் சொல்.

விகற்பம் என்பது வேறுபாடு; கருத்து வேறுபாடுகளை இயன்றவரையில் நீக்கி, அனைத்துக் கருத்துகளையும் இணைத்துப் பொருள் கொள்ளும் சைவம் எனப் பொருள் கண்டுள்ளார்கள்.

வேறுபட்ட கருத்துகளை எடுத்துக்கூறும் வேத, உபநிடத, ஆகம வாக்கியங்களை மறுத்துக் கூறாமலும் படிமுறை அமைப்பில் (சோபான முறையில்) இணைத்துக் காட்டிப் பொருள் செய்யும்

முறையை வலியுறுத்துகின்ற காரணத்தால் 'வீரசைவம்' எனப் பெயர் பெற்றது என்பது வீரசைவ ஞான மார்க்கத்தினர் கூறும் விளக்கம்.

'வி' என்றால் ஞானம். 'ர' என்றால் ரமிப்பவன். 'சிவ சீவர்களின் இணைப்பைத் தெரிவிக்கும் ஞானத்தில் எப்பொழுதும் தன்னை மகிழ்வித்துக் கொள்பவன் வீரசைவன்' என்று சித்தாந்த சிகாமணி கூறுகிறது.

'விகற்பரகிதம்' என்பதைப் 'பொருமறம் இலாமை' என்று கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகள் தம்முடைய பிரபுலிங்க லீலையில் அமைத்துக் காட்டியுள்ளார்.

பொதுவாக, பிற மதத்தவர்தம் கொள்கைகளை எடுத்து அணுஅணுவாக மறுத்துக் கூறுவதை (சங்கற்ப நிராகரணம்) வீரசைவம் ஏற்றுக் கொள்வதில்லை. பொதுவாகவே, பிறர்தம் கொள்கைகளை எடுத்து விளக்கிப் படிமுறையில் இதற்கு இவ்வாறு விளக்கம் காண வேண்டும் என நெறிப்படுத்துதல் உண்டு. இத்தகைய முறைமையினை, அல்லமாப் பிரபு தேவர் செய்வதாகக் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகள் விளக்கிச் செல்வதை அவர்தம் பிரபுலிங்கலீலையிற் காணலாம்.

'பொருமறம் இலாமை' என்ற கொள்கை விளக்கத்தை யான் எழுதி, 2003இல் மயிலம் பொம்மபுர ஆதீனத்தால் வெளியிடப் பெற்ற குருகுகேசம் முதற்பாகம், 80-90இல் உள்ள பக்கங்களில் கண்டு கொள்க.

2. அடுத்ததாக சமய ஒழுக்கம் அல்லது சாதனம் என்ற வகையில் வீரசைவம் வலியுறுத்துவது ஒன்றே ஒன்றுதான். குருவினால் எடுத்துக் கொடுக்கப்பெற்ற இட்டலிங்க வழிபாட்டைத் தவிர வேறு எந்த வழிபாட்டையோ, செயல்முறைகளையோ ஏற்றுக் கொள்ளாமையால் இந்தக் கொள்கையானது வீரசைவம் எனப் பெற்றது என்ற விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதைப் பற்றிய விரிவான விளக்கங்களை என்னுடைய வீரசைவம், குருகுகேசம் -1 ஆகிய நூல்களிற் காணலாம்.

3. பயன்: கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகள் தூய்மை என்பதையே பயன் என்று வலியுறுத்திக் கூறி, அதனால் வீரசைவம் என்ற பெயர் வந்தது என, பிரபுலிங்கலீலை மான்மிய கதியில் எடுத்துக்காட்டி நிறுவுகிறார்.

வீரசைவத்தில் சமயத்துறை எனப்பெறும் அடைதல் முறையில் மூன்று படிநிலைகள் வகுத்து அமைக்கப் பெறுகின்றன.

1. பஞ்சாசாரம் எனப்பெறும் ஐவகை அருள்நெறி ஒழுக்கம்.

2. அட்டாவரணம் எனப்பெறும் எண்வகைக் காப்புகள் (அ) எண்வகைக் கவச நெறி ஒழுக்கம்

3. சடுத்தலம் எனப்பெறும் அறுவகை இணைப்பு நிலை ஒழுக்கம்.

இம்மூன்றுமே படிநிலைவகைகளில் கடைப்பிடிக்கப்பெறும் ஒழுக்கநிலைகளேயாயினும், இவை தன்னுள் நின்ற பரம்பொருளுக்கும் ஆன்மாவாகிய தனக்கும் அமைந்த உறவை வலுப்படுத்தி, உண்மையை உணர்த்தும் பயனைத்துய்த்தும் நிற்பதற்குத் துணை செய்வனவே.

இவற்றின் விரிவையெல்லாம் யான் இங்கே விளக்க முற்படவில்லை. 'வீர' என்ற சொல்லிற்கு விளக்க வரையாக நின்ற ஒரு செய்தியை மட்டும் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசர் வாக்கின் வழிநின்று விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

வீரம் என்பது தூய்மை

மேலே எடுத்துக் காட்டப் பெற்ற மூவகைப்படி நிலைகளையும் முறையாகவும் முழுமையாகவும் கடைப்பிடித்தாலும் முழுநிலையாகக் கடைப்பிடிக்க வேண்டிய ஒருவகை ஒழுக்கத்தைக் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகள் வலியுறுத்துவதை நாம் மறந்து விடுதலாகாது.

ஆன்மாவானது தன்னுள் இருக்கும் பரம்பொருளை அடைந்து, உணர்ந்து, தெளிந்து நிற்பதற்குரிய பயிற்சி முறைகள் மிகவும் எளிமையுடையனவாக அமையவேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

அடைதல் முறையானது மிகவும் எளிமையுடையதாக அமைதல் வேண்டும். மனத்தின் உடன்பாட்டினை ஒத்துக் கொண்டு, ஐம்புல இன்பங்களை ஆரத்துய்க்கும் எளிமையைக் கடைப்பிடிக்கும் முறையிலேயே ஆன்மாவானது கடைத்தேறுதல் வேண்டும்.

ஐம்புல நுகர்ச்சிகளை ஆரத்துய்க்கும் எளிமையுடைய நெறியானது ஆன்மீகத்தில் முன்னேறுவதற்குத் தடையாக நிற்கும் என்றாலும் அவை அனைத்தையும் முற்றாகத் துறத்தல் வேண்டும் என்றும் சில சமயவாதிகள் வலியுறுத்துகின்றனர்.

இத்தகைய கருத்தின் தாக்கம் திருவள்ளுவரிடத்தும் காணப் பெறுகிறது.

'ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து'

'ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்புளார் கோமான்
இந்திரனே சாலும் கரி'

என்றும்,

'உரன்என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரன்என்னும் வைப்பிற்கோர் வித்து'

என்றும் வரும் குறட்பாக்களின் மூலம் ஐம்புல நுகர்ச்சிகளை அடக்குதல், அவித்தல், காத்தல் ஆகிய நெறிகளால் கட்டுப்படுத்துதல் வேண்டும் என்ற கொள்கை வலியுறுத்தப் பெறுகிறது.

ஐம்புல இன்பங்களை ஆரத்துய்க்கும் எளிமையுடைய இல்லற நெறியில் நின்றே இறைவனை அடைய முடியும் என்ற கருத்தானது வலுவிழந்து, துறவற நெறியில்தான் இறையருளைப் பெற முடியும் அல்லது முத்தியை அடைய முடியும் என்ற கருத்தானது இரட்டைக் காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலையால் வலியுறுத்தப் பெற்றது.

அடுத்தநிலையில், பத்தி இலக்கியத்தின் தலைவர் எனவும், பரசமய கோளரி எனவும் போற்றப் பெற்ற திருஞானசம்பந்தர்,

'துறக்குமா சொலப்படாய் துருத்தியாய்' என்று தொடங்கும் தேவாரப் பாடலின் மூலம் துறவுக் கொள்கை இறைவனுக்கே உடன்பாடன்று என்று வலியுறுத்திப் பேசுகின்றார். அதனாலேயே, இறைவன் மாதொரு பாகனாகவே இருக்கிறான் எனத் தம் பதிகங்கள் முழுவதிலும் எடுத்துக்கூறி விளக்குகிறார்.

மேலும், அவர் அருளிய திருச்சோற்றுத்துறைப் பதிகத்தின் முதற்பாடல்,

'செப்ப நெஞ்சே நெறிகொள் சிற்றின்பம்
துப்பன் என்னாது அருளே துணையாக
ஒப்பர் ஒப்பர் பெருமான் ஒளிவெண்ணீற்று
அப்பர் சோற்றுத்துறை சென்று அடைவோமே'

என அமைகிறது.

'இல்லறத்தானுக்கு விதித்த முறைப்படி யான் இப்பெண்ணுடன் கூடி, இன்பம் நுகர்கின்றேன் என்று எண்ணாமல், நுகரப் பெறும் சிற்றின்பத்தை நுகருங்காலத்தில், தன்முனைப்பில்லாமல், அவன் அருளே எங்களைக் கூட்டுவிக்க, அவனருள் துணையாக இதனைத் துய்க்கிறேன் என்று எண்ணினால் இறைவனார் அதனை ஒப்புவர், ஒப்புவர் என்னும் பொருள்படக் கூறுவதை எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

ஐம்புலன் நுகர்ச்சியே இறைவனை அடைவதற்கு ஒவ்வாது என்பது உண்மையானால் அத்தகைய நுகர்ச்சிக்குக் காரணமாகிய அல்லது பயன்படுவதாகிய இவ்வுடம்பினை ஆன்மாக்களுக்குப் படைத்துக் கொடுத்திருக்க மாட்டான் இறைவன். ஒருமுறையல்ல, பலமுறையல்ல. ஒயாது ஒழியாது படைத்துக் கொடுத்துக் கொண்டேயிருக்கின்றான். ஆகையால், இவ்வுடல் கொண்டு நுகரும் புலனுகர்ச்சி முறையை மடைமாற்றம் செய்ய வேண்டும் என்று எண்ணுகின்றார் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகள். ஆனாலும், அடிகள் முழுத்துறவி என்பதை மறந்து விடுதல் ஆகாது.

பொதுவாக, மக்களுக்கு அளிக்கப் பெற்றிருக்கும் உடம்பானது மாயையால் ஆக்கப் பெற்றது. இருள் உடம்பு. இவ்வுடம்பினால்

அருள்நிலை நுகர்வுகளை ஏற்று அனுபவிக்க முடியாது. அருளனுபவங்களை அனுபவிக்கக் கூடிய வகையில் இவ்வுடம்பானது அருளாக- அருளனுபவப் பேற்று உடம்பாக மாற்றம் பெறவேண்டும். உடம்பை மாற்ற வேண்டும் என்று சொன்னார்களே ஒழிய உடம்பே வேண்டாம் என்று கூறவில்லை.

இறைவன், மாணிக்கவாசகப் பெருமானுடைய உடம்பை எவ்வாறு மாற்றி அருளனுபவப் பேற்றினை நுகருமாறு செய்தான் என்பதைத் திருவாசகம் திருவண்டப் பகுதி வரிகள் 156-182வரை விளக்கமாகக் கூறியிருப்பதை உணர்ந்து தெளியலாம்.

பரம்பொருள் அவ்வாறு உடல்மாற்றம் செய்வதற்கு மக்களாகிய நாம் என்ன வழியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற வினா எழுகிறது. பற்பல மதத்தவர்களும் பற்பல வழிகளைக் கூறினாலும் கற்பனைக் களஞ்சியம் எளிமையும் இனிமையும் கலந்ததாகவும் யாவர்க்கும் மேற்கொண்டு செயலாற்றுவதற்கு உரிமையுடையதாகவும் ஆகிய ஒரு வழியை எடுத்துக் காட்டுகிறார்.

வீரசைவன் ஒருவன் தான் நுகர இருக்கும் பொருளை அர்ப்பணித்துப் பிரசாதமாகப் பெறும் வகையில் ஒருவகைத் தூய்மை உண்டாகிறது. அத்தகைய தூய்மையானது வீரசைவத்தாலன்றி வேறு எச்சமயத்திலும் இல்லை. அத்தகைய தூய்மையே வீரம் செறிந்ததாக அமைகிறது என்பதால் பயன் நோக்கிய வகையில் வீரசைவம் என்ற பெயரை உடையதாக விளங்குகிறது என்று விளக்கம் அளிக்கிறார் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகளார். இக்கருத்தைச் சற்று விரிவாகக் காணுதல் வேண்டும்.

அர்ப்பிதமும் தூய்மையும்

வீரசைவன் இட்டலிங்கம் தரித்தவனாக இருத்தல் வேண்டும் என்பது நியதி.

முதலில் வீரசைவன் தான் நுகர இருக்கும் பொருள் எதுவாயினும் அப்பொருளைத் தான் அணிந்திருக்கும் காட்சிப்படுவதாகிய இட்டலிங்கத்துக்கு அர்ப்பணம் செய்தல் வேண்டும்.

அவ்வாறு அர்ப்பணம் செய்யும்போதே மனத்தால் பிராணலிங்கத்துக்கும் பாவனையால் பாவலிங்கத்துக்கும் ஐந்தெழுத்தோதி அர்ப்பணம் செய்தல் வேண்டும்.

அப்பொருளை உருவநிலையில் ஏற்றுக் கொண்ட மூவகை இலிங்கங்களும், அர்ப்பணம் செய்த வீரசைவனுக்கு 'சுவை' என்ற ஒன்றைப் பிரசாதமாக அளிக்கும்.

சுவை என்ற பிரசாதத்தைப் பெற்ற வீரசைவன் அதனை அப்படியே மீளவும் இட்டலிங்கம் முதலிய மூவகை இலிங்கங்களுக்கும் முன்சொன்னவாறே அர்ப்பிதம் செய்ய வேண்டும்.

சுவையை, ஏற்றுக் கொண்ட மூவகை இலிங்கங்களும் 'மனநிறைவு' என்பதைப் பிரசாதமாக அதே வீரசைவனுக்குக் கொடுக்கும்.

'மனநிறைவு' என்ற பிரசாதத்தைப் பெற்ற வீரசைவன் அதனையும் முன்சொன்னவாறே மூவகை இலிங்கங்களுக்கும் அர்ப்பிதம் செய்துவிட வேண்டும்.

வீரசைவனால் மனநிறைவு என்ற ஒன்றை அர்ப்பிதம் மூலமாகப் பெற்ற மூவகை இலிங்கங்களும் பிரசாதமாகக் கொடுப்பதற்கு வேறு ஒன்றும் இல்லை.

எனவே, தன்னுள் இருக்கும் மூவகை இலிங்கங்கள் மூலமாகக் கூட எந்த ஒன்றையும் ஏற்றுப் பெற்றதில்லை என்ற நிலையானது அர்ப்பிதம் செய்த வீரசைவனுக்குக் கிடைக்கிறது. இதுவே வீரம். அர்ப்பித சேடத்தை அருந்துவதால் கர்மா எனப்பெறும் வினைப்பயன் இல்லை. அதனால் முன்வினைப்பயன், பின்வினைப் பயன் (அ) பிராரப்தம், ஆகாமியம் போன்ற வினைகளெல்லாம் அவனுக்கு உண்டாதல் இல்லை.

இத்தகைய அர்ப்பணிப்பு முறை முழுவதும் ஐந்து மணித்துளிகளில், திருவைந்தெழுத்தைச் சில முறைகள் ஓதி, நறுநீர் வழங்குவதிலேயே அமைந்து விடுகிறது.

இவ்வாறான செய்கையைப் பிற சமயத்தவர்களும் செய்வதைக் காணலாம். ஆனால், அத்தகைய சடங்கினால் துய்க்கப்பெறும்

பொருள் யாரைச் சென்று அடைகிறது? என்ற வினா எழும் ஆனால், வீரசைவத்தில் இட்டலிங்கமானது தன்னிடம் அர்ப்பித்த பொருளை முதலில் ஏற்றுக் கொள்கிறது. அதன் வழியே, பிராண பாவலிங்கங்களும் அர்ப்பிதப் பொருளை ஏற்றுக் கொள்கின்றன. மூவகை இலிங்கங்களும் தத்தம் நிலையில் அர்ப்பிதப் பொருள்களில் அமைந்த தீமைகளை ஒருசேர நீக்கி அவற்றைத் தூய்மையாக்கிப் பிரசாதமாகத் தருகின்றன.

இத்தகைய அர்ப்பித விசேடத்தால் யாரிடத்திலும், ஏன் தன் ஆன்மாவில் நிறைந்திருக்கும் பரம்பொருளிடத்திலும் கூட எதையும் கேட்டுப் பெறவில்லை என்ற வீரமும், அம்மூவகை இலிங்கங்களால் தூய்மை செய்து அளிக்கப் பெறும் பிரசாதத்தைப் பெறுகின்ற காரணத்தால் தூய்மையும் அமைகின்றன என்பதும் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகள் அமைத்துத் தரும் எளிய வழியாகும். இக்கருத்தைக் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகள் திருவாக்கினாலேயே அறிந்து உணரலாம்.

'ஒன்றுஒரு விடயந் தன்னில்
உரு,சுவை, நிறைவு என்றாக்கி
என்றும் எம்முகத்து அளித்திட்டு
எம்பிர சாதம் கொண்டு
துன்றுறு கருமம் உன்னாத்
தூய்மை இவ்வீர சைவத்து
அன்றிவேறு ஒரு மார்க்கத்தின்
அடுக்குமோ வடுக்கண் மாதோ'

(பிரபுலிங்கலீலை, மான்மிய கதி 14)

வீரசைவன் தன் ஆன்மாவில் கலந்திருக்கும் இட்டலிங்கத்தின் மூலமாகக் கூட எதையும் கேட்டுப் பெறுவதில்லை என்ற வீரமும் இட்ட லிங்க, பிராணலிங்க, பாவலிங்க, அர்ப்பிதம் செய்து, அதன்மூலம் பெற்ற சேடம் என்னும் பிரசாதம் அன்றி வேறு எதையும் நுகர்தல் இல்லை என்ற தூய்மையும் உடையவன். ஆதலால், வீரசைவமானது பெருநெறி என்ற பொருளில் மற்றைச் சமயத்தவர்களால் கொள்ளப் பெற்றது என்பதை உணர்ந்து தெளிதல் வேண்டும்.

திருஞானசம்பந்தரின் மதிப்பீடு

குருகுகேசம் என்ற பெயரில் இந்நூல் வரிசையில் விளக்கப் பெறுகின்ற வீரசைவமானது தொன்மையானது என்ற அளவில்தான் கூற இயலுமேயல்லாமல் எத்துணைத் தொன்மை வாய்ந்தது என அறுதியிட்டுக் கூற இயலாது.

மொஹஞ்சதாரோ, ஹாரப்பா போன்ற இடங்களில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சிகளில் சிறுசிறு இலிங்கங்கள் கண்டெடுக்கப் பெற்றுள்ளன. அவையெல்லாம் மனிதர்கள் தங்கள் உடம்பில் தரித்துக் கொண்டனவாக இருந்திருக்க வேண்டும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இதுபற்றிய விரிவான செய்திகளை 'வீரசைவம்' என்ற என்னுடைய நூலில் எடுத்துக் காட்டியுள்ளேன்.

சற்றொப்ப 1800 ஆண்டுகளுக்கு முன் கீழைக்கடல் வழியாக வந்து புதுச்சேரியை அடுத்த பொம்மபுரத்தில் எழுந்தருளிய பாலசித்தர் இலிங்கதாரணத்துடனேயே வந்ததாகத்தான் வரலாறு கூறுகிறது.

அவ்வாறே கி.பி. 12ஆம் நூற்றாண்டளவில் கன்னட தேசத்தில் அவதரித்த பசவேசரும் அவருக்குக் குருவாக விளங்கிய அல்லமாப் பிரபு தேவரும் இலிங்க தாரணத்துடனேயே அவதாரம் செய்ததாகத்தான் வரலாறு எடுத்தியம்புகிறது.

தக்கயாகம் அழிக்கப் பெற்ற காலம் மிகமிகத் தொன்மையானது என வரலாற்றறிஞர்கள் கூறுகின்றனர். தக்கயாகத்தை அழித்த வீரபத்திரர் இலிங்க தாரணத்துடன் வந்ததாகவும், வீரபத்திரத் திருவுருவம் இலிங்கத் தாரணத்துடனேயே காணப் பெறுவதாகவும் வரலாற்றறிஞர்கள் எடுத்துக் கூறுகின்றனர். இச்செய்திகளை யெல்லாம் யான் என்னுடைய 'வீரசைவம்' என்ற நூலிலேயே எடுத்துக் காட்டியுள்ளேன். விரிவு வேண்டுவோர் ஆண்டுக் காண்க.

இனி, திருஞானசம்பந்தர் காலத்தில் அமைந்த வரலாற்றுக் குறிப்பு ஒன்றை எடுத்துக் காட்டி விளக்குதல் இந்த இடத்துக்குத் தேவையான சிந்தனையாகிறது.

திருஞானசம்பந்தர் கி.பி. 7ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். சமுதாயத்தில் பல்வேறு மாற்றங்களை நிகழ்த்தி, சைவம் என்னும் பயிருக்குப் புத்துணர்ச்சி அளித்தவர்.

தமிழக மக்களின் இயல்பான வாழ்வியலுக்கு மாறான கருத்துடைய பல்வகைச் சமயங்கள் அரசின் ஆதரவு பெற்றுத் தலைநிமிர்ந்து வரலாறு படைத்த காலத்தில் இறைவன் திருவருள் துணைகொண்டு தமிழ்ச் சமுதாயத்தை மடைமாற்றம் செய்து நெறிப்படுத்தியவர் திருஞானசம்பந்தர்.

புறச்சமயத்தவர்களை வெல்வதற்கு அகச்சமயத்தவர் பலரையும் இணைத்து ஓர் அணியாகச் செயல்பட வேண்டும் என்று எடுத்துக் காட்டி, இயக்கம் தொடங்கித் தலைமை ஏற்றுத் தொண்டாற்றியவர் திருஞானசம்பந்தர். திருஞானசம்பந்தருடன் இணைந்து நின்று தொண்டாற்றிய பெருமை அப்பரடிகள் என்ற திருநாவுக்கரசருக்கும் உண்டு.

தமிழகத்து மக்கட்சமுதாயம் தடுமாற்றம் இல்லாமல் முன்னேற்றம் அடைவதற்குத் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் இணைந்து உழைத்த உழைப்பை மக்களிடம் எடுத்துக்காட்டிய விழிப்புணர்வின் ஏற்றத்தை இங்கே பலபடக் கூறி விளக்கும் பணியை யான் மேற்கொள்ளப் போவதில்லை. அது உலகமே பாராட்டும் ஓர் உண்மை வரலாறு.

திருஞானசம்பந்தர் அருளிய மூன்று திருமுறைகளுள் முதல் திருமுறையில் ஐம்பத்திரண்டாம் பதிகமாக அமைவது திருநெடுங்களப் பதிகம்.

திருநெடுங்களப் பதிகம் ஒருவகையில் புதுமையானது. தனித்த பெருஞ்சிறப்புடையது.

திருநெடுங்களத் திருப்பதிகத்தில் திருஞானசம்பந்தர் அனைத்துப் பாடல்களிலும் இறையடியவர்களின் துயர் தீர்க்க வேண்டும் என்பதையே பொருளாக அமைத்துப் பாடுகின்றார்.

கொள்கையினால் உயர்ந்த நிறையுடையார் இடர்களையாய்
நின்னை மனத்தகத்தோர் பாடல் ஆடல் பேணி
இராப்பகலும் நினைத்தெழுவார் இடர் களையாய்
கூற்றுதைத்த பொன்னடியே பரவி நாளும் பூவொடு
நீர்சுமக்கும் நின்னடியார் இடர் களையாய்

நின்தாள் நிழற்கீழ் நிலைபுரிந்தார் இடர்களையாய்
நின்தாள் நிழற்கீழ் நீங்கி நில்லார் இடர்களையாய்
அருத்தனாய ஆதிதேவன் அடியிணையே பரவும்
நிருத்தர் தேவர் இடர் களையாய்
சாந்த ம் ஈதுஎன்று எம்பெருமான் அணிந்த
நீறுகொண்டார் இடர்களையாய்
என்றும் நல்ல வாய்மொழியால் ஏத்தி
இராப்பகலும் நின்று நைவார் இடர்களையாய்
கேடிலாப் பொன்னடியின் நீடுவாழ்வார் இடர் களையாய்
துஞ்சல் இல்லா வாய்மொழியால் தோத்திரம்
நின்னடியே நெஞ்சில் வைப்பார் இடர் களையாய்

என அடியவர்களையும் அவர்தம் செய்கைகளையும் முறையே எடுத்தோதி, அவர்களுக்கு வரும் இடர்களைக் களைய வேண்டும் என வேண்டுகின்றார்.

இப்பதிகத்தின் முதற்பாடலில் உள்ள ஒரு வரியை மீண்டும் சிந்தித்தல் வேண்டும்.

'கொள்கையினால் உயர்ந்த நிறையுடையார்' என்று திருஞான சம்பந்தர் பாராட்டிக் கூறுவதை நாம் எளிதில் ஒதுக்கிவிட முடியாது.

திருஞானசம்பந்தர் தம்முடைய காலத்திருந்த அகச்சமயத்தவர் பலரையும் இணைத்து ஒரு கூட்டணி அமைத்திருக்கிறார்.

புறச்சமயத்தவர் கூற்றுகள் பொய்யானவை என்றும் அவை மக்களுக்கு வாழ்வியற் பொதுப் பயனை அளிக்கும் ஆற்றல் அற்றவை என்றும் எடுத்துக்காட்டி, அகச்சமயத்தவர் பலரும் இணைந்து ஒற்றுமைப்பட வேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்தியிருக்கிறார்.

திருநாவுக்கரசரையும் திருநீலகண்ட யாழ்ப்பாணரையும் உடன் இணைத்துக் கொண்டு சமுதாய அறம் மேம்பட்டு ஒளிவீசுமாறும் வாழ்வியற் செம்மையானது சமுதாயத்தில் சிறந்து ஓங்குமாறும் பாடுபட்டிருக்கிறார். அவர் தாம் நினைத்தவாறு சமுதாயத் தொண்டிலும் சமுதாயச் சீர்திருத்தத்திலும் வெற்றி கண்டார் என்பது வரலாறு.

திருஞானசம்பந்தரும் பிறரும் சைவசமயத்தினுள் ஏற்றுக் கொண்ட இரண்டு கொள்கைகளை ஏற்க முடியாமையால் அவருடன் இணைந்து நிற்க முடியாமல் ஒரு பிரிவினர் இருந்தார்கள் என்பது வரலாற்றில் உணர முடிகின்றது.

1. தன்னுடைய ஆன்மலிங்க வழிபாட்டிலும் கூட, வழிபாடு செய்வது கடமை என்று செய்வதைத் தவிர, உலகியல் வாழ்வுக்காகவோ வேறு எந்த ஒரு நன்மையை உள்ளீடாகக் கொண்ட முன்னேற்றத்துக்காகவோ எந்த ஒன்றையும் கேட்டுப் பெறுதல் இல்லை.

2. தன்னுடைய ஆன்மாவில் தங்கியிருக்கும், தான் எடுக்கும் பல்வேறு பிறவிகளிலும் தன்னுடனேயே தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் ஆன்மலிங்கம் என்ற ஒன்றைத் தவிர, அயலாக உள்ள வேறு எந்த ஒரு தெய்வத்தையும் வணங்குதல் இல்லை.

மேலே குறிப்பிடப் பெற்ற இரண்டு கொள்கைகளையும் இணைத்துச் சிந்தித்த வகையில் தோற்றம் பெற்ற வரியே **'கொள்கையினால் உயர்ந்த நிறையுடையார்'** என்பது

'உயர்ந்த கொள்கை உடைமை'

'நிறை உடைமை'

என்பன.

தன் ஆன்மாவில் தங்கியிருக்கும் பரம்பொருளிடத்தும் தனக்காகவோ பிறருக்காகவோ ஏதேனும் ஒன்றைக் கேட்டுப் பெறலாம் என்பதை ஏற்றுக் கொள்ளாமை.

'ஈயென இரத்தல் இழிந்தன்று அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று
கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று

(கழைதின்யானையார், புறநானூறு, செய்யுள் 204)

சங்ககாலம் முதல் மக்கள் வாழ்வியற் கொள்கையாக - வழக்கக் கொள்கையாக இருந்த இந்நெறியானது மெல்ல மெல்ல வலுவிழந்தது.

திருஞானசம்பந்தர் முதலிய அருளாளர்களும் இதனைச் சிந்திக்கவில்லை என்று கூற முடியாது. 'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப் பெறும்' என்ற கொள்கைகளின் தாக்கத்தாலும் இறைவனும் கேளாமலேயே பொற்றாளம், முத்துச் சிவிகை போன்றவற்றைக் கொடுத்து அனுமதி அளித்ததாலும் மக்கள் துன்பத்தை இறைவனிடம் எடுத்துக் கூறி வணங்கலாம், வாழ்த்துப் பாடலாம் என்ற கொள்கையை ஏற்றுக் கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாயிற்று. ஆயினும், அத்தகைய மாற்றத்தை ஏலாது வாழ்வியலை நடத்திய சைவர்கள் வீரசைவர்கள் எனப்பெற்றனர். திருஞானசம்பந்தப் பெருமான் திருவாக்கினாலேயே,

'கொள்கையால் உயர்ந்தார்'

என்று பாராட்டிக் கூறும் தகுதியைப் பெற்ற காரணத்தால் வீரசைவர் என நின்றார்.

இனி, இரண்டாவது கொள்கை நிறையுடைமை 'நிறை' என்ற சொல்லானது தன்னிலையில் தாழாது நிற்றல் என்ற பொருளைத் தரும். நிறை என்ற சொல்லுக்குக் கற்பு என்ற பொருளும் உண்டு.

உலகப் பொருள் இரண்டுவகை. உயிர்ப்பொருள், உயிரல் பொருள் என எல்லாப் பொருள்களிலும் இறைவன் எழுந்தருளியிருந்தாலும் உயிர்ப் பொருள்களில் உள்ள சோதிப் பொருளானது அதோமுகலிங்கம் என்றும், உயிரல் பொருள்களில் கலந்திருக்கும் சோதிப் பொருளானது சதாசிவலிங்கம் என்றும் திருமந்திரம் வரையறை செய்து அமைகிறது.

புல்முதல் தேவர் இறுதியாக உள்ள அனைத்து ஆன்மாக்களிலும், பிறப்பே எடுக்காமல் கேவல நிலையில் இருக்கும் ஆன்மாக்களிலும், சுத்தநிலை பெற்ற ஆன்மாக்களிலும் ஒருவரால் பிரதிட்டை (தாபிதம்) செய்யப்பெறாமல் இயல்பாகத் தங்கியிருக்கும் இறைமைப் பொருள் (அ) சோதிப் பொருள் அதோமுகலிங்கம் எனப் பெறும்.

உலகில் நாம் காணுமாறு திருக்கோயில்களில் தாபிக்கப் பெறும் (அ) பிரதிட்டை செய்யப் பெறும் இலிங்கம் சதாசிவலிங்கம்.

ஒருவரால் தாபிக்கப் பெறாமல் (அ) பிரதிட்டை செய்யப் பெறாமல் தானே வந்து தன் ஆன்மாவில் தங்கியிருக்கும் ஆன்மிகப் பொருளாகிய (அ) இலிங்கப் பொருளாகிய அதோமுகப் பொருளை வணங்குதல் அல்லாமல் உலகில் ஒருவரால் பிரதிட்டை செய்யப் பெற்ற சதாசிவப் பொருளைச் சென்று வணங்குதல் என்பதை ஏற்றுக் கொள்ளாமையே 'நிறை' என்பதாக வீரசைவம் அமைத்துக் கொள்கிறது.

'நிறை' எனப்பெறும் கற்புநெறியின் வயப்பட்ட கணவனுக்கும் மனைவிக்கும் இடை அமைந்த உறவு போன்றதாதலின் இவ்வீர சைவ ஒழுக்கம் 'நிறையுடைமை' என்று திருஞானசம்பந்தரால் போற்றி உரைக்கப் பெற்றது. இதனை,

'பூவாய் நெடுங்கோட்டு உறுபசுந்தேன்
கைகால் முடங்கு பொறியிலிதன்
நாவாய் ஒழுகிற்று என உலகம்
அளந்த மாலும் நான்முகனும்
காவாய் எனநின்று ஏத்தெடுப்பத்
தானே உவந்து எம் கரதலத்தின்
மேவா அமர்ந்த மாமணியைத்
தொழுது வினைக்கு விடை கொடுப்பாம்'

என்பது 'கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகள் அருளிய பிரபுலிங்கலீலை, துதிகதியின் முதற்செய்யுள்.

சைவசமய ஒழுக்கத்தில் முதன்மை பெற்று நிற்பது தீட்சை. வீரசைவத்தில் அமைந்த தீட்சை முறைகளை விளக்கப்புகுந்த கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகள் கீழே குறிப்பிடப் பெறும் ஒரு பாடலை, 'இட்டலிங்க அபிடேக மாலை' யில் குறிப்பிட்டருளுகின்றார்.

'கிடைத்த <u>சிவலிங்கம்</u> அன்று உணராத <u>ஏகாக்</u>
<u>கிரசித்தம்</u> என்னும் விரதம்
கெடாத <u>திடவிரதம்</u> விடயங்கள் சிவனுக்கு
உதவுகின்ற <u>இந்திரியார்ப் பிதம்</u>
உடற்றி உயிர் கொன்றிடா நின்றிடும் <u>அகிம்சை</u> சிவன்
உண்மைகொள் <u>இலிங்க நிசமே</u>

உயர்சிவத்து உளம் அடங்கலும் மனோலயம்
அதனில் ஒன்றாகி நின்று பேதம்
விடுத்தலுறு சத்தியோன்முத்தி எனும் இவைஏழும்
மிக்க குருவருள் புரியவே
மேவல்அரும் மெய்ஞ்ஞான பாவநிலை மேவியிடும்
வேதமுடி யாவும் உணராது
அடுத்தமனம் மொழிஉடற்கு அப்புறப்படும் அமலன்
அபிடேகம் ஆடியருளே
அறிவுற்று என்அங்கை மலர் செறிவுற்று அமர்ந்தஇறை
அபிடேகம் ஆடியருளே'

மேலே குறிப்பிடப் பெற்ற பாடலில் எழுவகையான தீட்சைகள் குறிப்பிடப் பெறுகின்றன. அவற்றுள் முதலாவதாக நிற்பது கொக்கிரசித்தம் எனும் தீட்சை.

குருவின் அருளால் கிடைக்கப் பெற்று கரதலத்தில் எழுந்தருளியுள்ள இட்டலிங்கத்தை அல்லாமல், வேறொரு தெய்வத்தையும் நாடாமல் இருப்பதாகிய விரதம் மேற்கொண்டு அந்த இட்டலிங்க உண்மையை இடைவிடாது நோக்குதல் என்னும் ஏகாக்கிரக சித்தம் என்னும் விரதத்தை உடல் உள்ளவரையும் பாதுகாத்தல் என்பதே ஏகாக்கிர தீட்சை.

தீட்சை வகைகள் ஏழனுள் முதலாவதாக நின்ற தீட்சையின் உட்கருத்தை உணர்ந்தாலே திருஞானசம்பந்தரின் 'நிறையுடையார்' என்ற மறைமொழியின் கருத்தைத் தெளிவாக உணரமுடியும்.

மேலே குறிப்பிடப் பெற்றவாறு திருஞானசம்பந்தரால் எடுத்துக் காட்டப் பெற்ற இரண்டு கொள்கைகளை மேலும் சற்று விரிவாக ஆராய்தல் இற்றைச் சமுதாய அமைப்புக்குப் பெரிதும் துணை செய்வதாய் அமையும்.

'கேட்டுப் பெறுதல் இன்மை' என்ற கொள்கையானது தமிழகத்தில் சங்ககால முதலே அமைந்து வந்த வாழ்வியற் கொள்கை.

புலவர்கள் வள்ளல்களைப் பாடிப் பெறுவது பரிசில். ஆற்றுப்படை பலவும் தமிழ்மொழியில் உள்ளன. அவையெல்லாம் பாடிப் பெற்ற பரிசில்.

இரத்தல் வேறு; பரிசில் வேறு. இரண்டையும் ஒன்றாக எண்ணி இணைத்து விடுதல் கூடாது.

சங்ககால வாழ்க்கையை அப்படியே எல்லா நிலைகளிலும் பின்பற்றி வாழ வேண்டும் என்பதும் சங்ககால மக்கள் வாழ்க்கையே மனித வாழ்க்கையின் கட்டளைக்கல் என்று கொள்வதும் சால்புடைமையின் இலக்கணங்கள் ஆகா.

சங்ககால மக்கள் வாழ்வியல் முறையை அறத்தின் வழிநின்று தள்ள வேண்டியவற்றைத் தள்ளியும் கொள்ள வேண்டியவற்றை ஏற்றும் வாழ்வியல் குறிக்கோள் ஆய்வுமுறையை மிகத் துல்லியமாகக் கணக்குக் காட்டி வழிவகுத்தவர் திருவள்ளுவர். (திருவள்ளுவர்தம் கொள்கையும் இன்று விமரிசனம் செய்யப் பெறுகிறது என்பது தனிக்கதை)

இரத்தலைத் தன்னுடைய நூலில் பதிவு செய்யும் திருவள்ளுவர், அதன் எல்லையை வரையறைப்படுத்தத் தவறவில்லை.

இரத்தலும், இனாம் அல்லது இலவசம் தர விழைதலும், பெற விழைதலும், சமுதாய நோய் என்பதைச் சான்றோர்கள் எடுத்துக் காட்டத் தவறவில்லை.

> ஆவிற்கு நீர்என்று இரப்பினும் நாவிற்கு
> இரவின் இளிவந்தது இல்

என்றும்,

> ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
> சான்றோர் பழிக்கும் வினை

என்றும் திருவள்ளுவர் எடுத்துக்காட்டிய வாழ்வியல் ஒழுக்கங்களை நாம் வலிமையற்றவை என்பதாகத் தள்ளி விடலாகாது.

'ஈன்றாள் பசி காண்பானாயினும்' என்ற குறள் பொதுவாக வினைத்தூய்மையைக் குறித்ததேயாயினும் சிறப்பாக அது இரத்தலை உள்ளார்ந்த நிலையில் அடக்கியதே என்பது ஆன்றோர் கொள்கை.

இரட்டைக் காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலையில் மாந்தர்களின் உயிர் வாழ்க்கையின் எல்லைக் கோட்டினையும், எல்லைக்கோடு இடித்துத் தகர்க்கப் பெறும் காலத்தில் மாந்தர்களின்

வாழ்க்கையானது சீரழிந்து, வையகத்தின் நடுவுநிலைமையும் பிறழ்ந்து விடும் என்பதையும் கோடிட்டுக் காட்டுகின்றார் சீத்தலைச் சாத்தனார்.

'ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்றா மார்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை'

என்பது சீத்தலைச்சாத்தனார் தாம் இயற்றிய மணிமேகலையில் எடுத்துக்காட்டிய சமுதாயக் கொள்கை.

வையகத்தின் மாந்தர்தம் வாழ்வியலைப் புனிதமாக்குவதும் அசிங்கப்படுத்துவதும் ஆற்றல் வாய்ந்த மூவகை இரட்டையர்களின் செயன்மைப்பாடுகளில்தான் அமைந்துள்ளன என்பது சீத்தலைச் சாத்தனாரின் கொள்கை.

சீத்தலைச் சாத்தனாரின் சமுதாயக் கொள்கைக் காவலர்களில் முதல் இடம் வகிப்பவர்கள் 'உழைப்பாளிகளும், அவர்களைப் புரப்பவர்களும்' ஆகிய இரட்டையர்களே.

'ஆற்றுநர்' என்பவர் உழைப்பவர்களே. ஆனால், அவ்வரையறையானது உழைப்பை எட்டுமணி என்ற கால அளவையோடும் அறுபது ஆண்டுகள் என்ற முடிநிலைக் கால அளவையோடும் வரையறை செய்து கொண்டு பணியாற்றுபவர்களைக் குறிக்காது. உழைத்து, உழைத்து சோர்வு ஏற்பட்டு, தன்னை மறந்து கீழே சாய்கின்ற அந்த நிலை உருவாகும் வரை உழைத்தல் வேண்டும். அதுவே 'ஆற்றுதல்' எனப்பெறும். அப்படி உழைப்பவர்களுக்கு அவர்களின் வாழ்வியல் தேவைகளை முன்னிட்டு ஊதி, ஊதி இயங்கும் ஊதியம் தரக்கூடாது. அடிப்படைச் சம்பளம், அதன்மேல் ஈடுகட்டும் பஞ்சப்படி என்றெல்லாம் அவர்கள் வாழ்வியல் தேவைகளை வரையாது அளந்து தருதல் கூடாது. அவர்களை முழுமையாக ஆதரித்துப் புரக்கும் வகையில் அளித்தல் வேண்டும். இற்றை நாளில் பொதுவுடைமையாளர்களும் தொழிற்சங்கவாதிகளும் வலியுறுத்திக் கேட்கும் அளவைவிட உயர்ந்த நிலையில் அளித்தல் வேண்டும் என்று அமைத்துக் காட்டுகின்றார்.

இனி, இரண்டாவது நிலையில் நிற்கும் இரட்டையர்கள் சீத்தலைச் சாத்தனாரால் நடுவுநிலையில் நிறுத்தப் பெறுபவர்கள்.

முதல்நிலையில் அமைக்கப் பெற்ற இரட்டையர்கள் உழைக்கும் வர்க்கத்தினர். இரண்டாம் நிலையில் உள்ளவர்களை அறவிலை பகர்வோர் என்றார். அறவிலை பகர்வோர்கள் அனைவரும் ஒரே இனமாயிருக்க அவர்களை இரட்டையர் என்பது பொருந்துமா? என்ற ஐயம் ஏற்படலாம்.

அறவிலை பகர்வோர் எனப் பெறுபவர்கள் வணிகர்களே. அவர்களைக் குறிப்பிட்ட சாத்தனார் வாங்கி நுகரும் வர்க்கத்தினர்களைப் பற்றிக் குறிப்பிடவே இல்லையே என்ற ஐயம் வரும்.

வணிகர்களைப் பற்றிய செய்தியை ஒரு வணிகரே (சீத்தலைச் சாத்தனார் தானிய வணிகர்) எடுத்துக் கூறுவதை நாம் கூர்ந்து சிந்திக்க வேண்டும்.

சீத்தலைச் சாத்தனார் காலத்தில் பண்டமாற்று முறை வழக்கத்தில் இருந்தது. பொன் கொடுத்துப் பொருளை வாங்கிய அந்தக் காலத்தில் எல்லாவகையிலும் இரட்டைமுறை இருந்தது.

பண்டங்களை மாற்றும்போது உப்புக்கு நெல் என்பதுபோலப் பண்டங்களை மாற்றியமையும் அளவை முறையில் இரட்டை முறை கையாளப் பெற்றது. ஒரு வணிகர் கேழ்வரகை வாங்கிக் கொண்டு நெல் கொடுக்கிறார் என்றால் வாங்கும்போது அளவு கருவியில் அந்தத் தானியத்தைக் கூம்பு போலக் குவித்து வாங்கி, கொடுக்கும் தானியத்தை அதேஅளவு கருவியில் சமமாக அமைத்துக் கொடுக்கும் போதும் வாங்கும்போதும் சரியான அளவுமுறையைப் பின்பற்ற வேண்டும் என்று பட்டினப்பாலை என்ற சங்க இலக்கியம் பேசுகிறது.

விளைவு செய்த உழவர், தன் உழைப்பால் விளைந்த தானியங்களை எடுத்துக் கொண்டு பண்டமாற்றம் செய்ய வருகிறார். வணிகர் எனப் பெறுபவர் உழைப்பவரோ உற்பத்தி செய்பவரோ அல்லர். உற்பத்தியாளர்கள் உழைப்பாளிகள். அவர்கள் தம் உழைப்பால் உற்பத்தி செய்த பொருளைச்

சந்தைப்படுத்த வரும்போது, அவர்களின் இடர்ப்பாடுகளை வணிகர்கள் மிக நன்றாக அறிவார்கள். அதனால்தான் வாங்கும் பொருளுக்கும் விற்கும் பொருளுக்கும் அளவு சரியாக இருக்க வேண்டும் என்பதை முதன்மைக் கொள்கையாக அமைத்தார் சீத்தலைச் சாத்தனார்.

இற்றைநாளில் பண்டமாற்று இல்லாமையாலும் பணம் என்ற பொருட்போலியை மாற்றாக வழங்குவதாலும் 'நிறை' அல்லது அளவு என்பது ஒரு பக்கத்தில் ஒழுங்கு செய்யப் பெற்றுள்ளது என்று கொண்டாலும் தரம், ஈரம் முதலியவற்றை அடிப்படையாக வைத்துப் பண்ட மாற்றம் நடைபெறுகிறது.

தங்கம் போன்றவற்றைப் பரிவர்த்தனை (கொடுத்துக் கொள்ளல்) செய்கின்ற காலத்தில் அளவு சரிசெய்யப் பெற்றாலும் தரம் உறைத்துப் பார்ப்பதிலும் விற்கும் விலை, வாங்கும் விலை என்ற அளவில் வணிகர்கள் இரட்டையர்களே என்ற அடிப்படையில்தான் சாத்தனார் அவ்வாறு கொண்டிருக்க வேண்டும். அடுத்ததாக, சாத்தனார் வலியுறுத்துவது, வணிகத்தில் இலாபம் இவ்வளவு என்பதை வெளிப்படையாகக் கூற வேண்டும் என்பதே.

இற்றைக் கால அளவையில் உலகை ஆட்டிப் படைக்கவும், அதிர வைக்கவும் ஆகிய ஆற்றல் பெற்றவர்கள் இந்த வகையினர் என்பதைச் சாத்தனார் 'அறவிலை பகர்வோர்' என்ற தொடரின் மூலம் எடுத்துக் காட்டியுள்ளார்.

இனி, மூன்றாம் நிலையில் ஒரு கூட்டத்தினரை நிறுத்திக் காட்டுகிறார் சாத்தனார்.

எல்லையற்ற உழைப்பைத் தரமுடியாதவர்கள். எல்லையற்ற உழைப்பை ஒரு காலத்தில் தந்து, முதுமை காரணமாக அந்த அளவுக்கு உழைப்பைத் தர முடியாமல் ஓரளவுக்கு உழைப்பைத் தந்து கொண்டிருப்பவர்கள், உடற்குறை உடையோர் ஆகியவர்களைக் கொண்டதே இந்த மூன்றாம் நிலைக் கூட்டம். இவர்கள் பிச்சைக்காரரர்கள் ஆவர். இவர்களை அரவணைத்தல் வேண்டும். ஆதரித்தல் வேண்டும். இவர்கள் அதிகமாக எதையும் செய்ய வேண்டியதில்லை.

இவர்களின் அரும்பசியைக் களைதல் ஒன்றே செய்யற்பாலது. அவர்கள் பிச்சை எடுக்கக் கூடாது. அவர்களை இணைய நிறுத்தி, அவர்களைப் பசி நீக்கிக் காக்கும் தொழிலை ஆதுரச் சாலைகள் மேற்கொள்ள வேண்டும் என்றார்.

இந்த மூன்றாம் நிலையினர்க்கும் பசிநீக்குதல் மட்டுமே செய்யக் கடவது என்று வலியுறுத்தினார் சாத்தனார்.

மேலே குறிப்பிடப் பெற்ற மூவகை நெறியினரும் தத்தமக்கு அமைந்த அறவிதிகளின் அடிப்படையில் வாழ முற்படுவார்களேயானால் அத்தகைய உறுப்பினர்களைக் கொண்ட சமுதாயம் மெய்ந்நெறி வாழ்க்கையில் நின்றும் இருந்தும் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்று கொள்ள வேண்டும் என்பது சாத்தனார் கருத்து.

சங்க காலத்தில் வாழ்ந்த சிறுகுடிப் பண்ணனாயினும் சரி, ஆபுத்திரனாயினும் சரி, வாங்குநர் வையகம் வருந்துதல் அல்லது தான் தொலைவு இல்லாத தன்மைத்தாகிய அட்சய பாத்திரம் தோன்றினாலும் சரி, அவையெல்லாம் பசிநீக்கும் பணிக்கு மட்டுமே. இத்தகைய வாழ்க்கையில் 'கேட்டுப் பெற்று வாழ்தலே வாழ்க்கை' என்ற மரபு எப்படி வந்தது?

இனி, இக்கொள்கையில் மாணிக்கவாசகரை இணைத்துக் காட்டுபவர்கள் உண்டு.

'வேண்டத்தக்கது அறிவோய் நீ
 வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன் மாற்கு அரியோய் நீ
 வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டிநீ யாது அருள்செய்தாய்
 யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசுஒன்று உண்டு என்னில்
 அதுவும் உன்தன் விருப்பன்றோ

என்பது திருவாசகக் குழைத்த பத்தினுள் ஆறாம் பாடல்.

"எனக்கு என்ன வேண்டும் என்பதை முற்றாக முழுமையாக அறிபவன் நீ. (இறைவன்) எனக்குத் தேவையானவற்றை

முழுமையாகத் தருபவன் நீயே. எனக்குத் தேவை இவை இவை என்று நினைந்து கேட்கும் பிரமனுக்கும் திருமாலுக்கும் அருமை யுடையவனாக, அவர்களுடைய எல்லைக்கு அப்பாற்பட்டவனாக இருப்பவன் நீ. யான் கேட்காமல், நீயே எனக்கு இது தேவை எனக் கருதி, விரும்பி எனக்கு அருள் செய்வாயானால் (கொடுப்பாயானால்) அதனை யானும் விரும்பியதாகவே அல்லது விரும்பிக் கேட்டதாகவே ஏற்றுக் கொள்வேன். மேலே குறிப்பிடப் பெற்ற முறையின் அல்லாமல் யான் ஏதாவது ஒன்றை விரும்பினேன் என்றால், அது என் தனிச்செயலன்று. உன் விருப்பத்தால் என்னிடத்தில் தோன்றிய செயலென்றே கொள்ளுதல் வேண்டும்."

இதனை, மேலே குறிப்பிடப் பெற்ற மணிவாசகரின் திருவாசகப் பாடலுக்கு அமைந்த ஒரு பொதுமைப் பொழிப்புரையாகக் கொண்டு மேலும் சிறிது விரிவாகச் சிந்திக்கலாம்.

'வேண்டத்தக்கது அறிவோய் நீ' - என்பது மேலே குறிப்பிடப் பெற்ற திருவாசகப் பாடலின் தொடக்க வரி.

என்னை முழுமையாக அறியாதவன் யான். (மணிவாசகர்) என்னை முழுமையாக அறிந்தவன் நீ. (இறைவன்) ஆதலால் எனக்கு என்ன வேண்டும் என்பதை நான் அறிவதை விட எனக்கு முழுமையாக, நிறைவாக, முற்றாகத் தெரிந்தவன் நீ.

'வேண்ட முழுதும் தருவோய் நீ' - என்பது மணிவாசகர் பாடலில் தருகின்ற தொடர்ச் செய்தி.

என்னை முழுவதுமாக நினைந்து பார்த்து, யான் இதுவரை எடுத்த பிறவிகள் எல்லாவற்றிலும் எனக்குத் தேவையானவற்றை முறைப்படுத்தியும் வகைப்படுத்தியும் நெறிப்படுத்தியும் தந்து என்னை ஆண்டு கொண்டு வரும் நீதான் (இறைவன்) எனக்கு இப்போதுள்ள தேவைகளை முழுமையாகவும் உறுதியாகவும் தெளிவாகவும் முடிவுசெய்து, அவற்றையெல்லாம் முழுமையாகத் தரும் வல்லமையுடையவனும் தருபவனும் நீயே. (இறைவன்)

வேண்ட முழுவதும் தருவாய் என்பதனுள் உள்ள வேண்ட என்பது வினையாலணையும் பெயர்.

'வேண்டும் அயன் மாற்கு அரியோய் நீ' - என்பது அடுத்ததாக மணிவாசகர் எடுத்தமைக்கும் செய்தி.

நான்முகன் எனப்பெறும் பிரமன், திருமால், மற்றுமுள்ள தேவர்கள் ஆகியவர்களுக்கும் தங்களுக்குத் தேவையானவற்றை முழுமையாக அறியாதவர்கள். எனினும், அவ்வப்போது தங்களுக்குத் தேவையானவற்றை மட்டுமே அவ்வப்போது கேட்டுப் பெறும் நிலையில் உள்ளவர்கள். தேவைகளைப் பெறுவதற்காகவே அவர்கள் வழிபாடு செய்வார்கள். வழிபாடு செய்த பின்னர் தத்தமக்கு வேண்டியவற்றைக் கேட்டுப் பெறுவார்கள். அத்தகையவர்களுக்கு என்றென்றும் எட்டப்படாதவன். அத்தகையவர்களால் அறிவதற்கு அருமையுடையவன் நீ.

வழிபாடு செய்பவர்களுக்கெல்லாம் எளிமையுடையவனாக இருக்கும் இறைவன், வேண்டுதல், இரத்தல், பட்டியலிட்டுக் கேட்டல் என்பதை வழிபாடு செய்தவன் வெளிப்படுத்தும் போது, அவன் அவர்களுக்கு எட்டாக்கனியாகி விடுகிறான். இக்கருத்தையே மணிவாசகப் பெருமான் 'விண்ணோர்கள் ஏத்துதற்கு கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும் நேசன்' என்று திருவெம்பாவையில் அருளிச் செய்துள்ளார்.

'வேண்டி என்னைப் பணிகொண்டாய்' என்பது அடுத்ததாக வரும் செய்தி.

யான் முன்பு எடுத்த எல்லாப் பிறவிகளிலும் எடுத்த உடம்புகளுக்கே பணிசெய்து கொண்டிருந்தேன். உலகவருக் கெல்லாம் பணிசெய்தேன். உடலை வளர்ப்பதற்கு யார் யாரை வணங்கி, யார் யார்க்குப் பணி செய்ய வேண்டும் என நினைத்தேனோ அவர்களுக்கெல்லாம் பணி செய்தேன்.

என்னுடைய இத்தகைய இழிநிலை கண்டு நீ வருந்தி என்மேல் கருணை கொண்டு என்னை மடைமாற்றம் செய்தாய். உடலுக்கும் ஊரார்க்கும் பணி செய்து கொண்டிருந்த என்னை உனக்கே பணி செய்ய வேண்டும் என முதன்முதலில் நீ (இறைவன்) விரும்பினாய், நீ விருப்பம் கொண்ட காரணத்தால், என்மனம் உனக்கே பணி

செய்ய வேண்டும் எனக் கருதியது. பின்னர் யான் உனக்கே பணிசெய்ய முற்பட்டேன்.

உடலுக்கும் ஊரார்க்கும் பணிசெய்து, பணிசெய்து பழக்கப்பட்டு விட்டதால் உனக்குப் பணி செய்யும் முறைமையோ, வழியோ தெரியவில்லை. உனக்குப் பணி செய்யும் தகுதியும் எனக்கு இல்லாது போயிற்று. என் பணியில் குற்றம் உண்டு. அவற்றையெல்லாம் கூர்ந்து பார்த்து என்னைத் தள்ளிவிடாமல் என் பணியை ஏற்றுக் கொண்டாய். (புத்தடியோம் புன்மை தீர்த்து ஆட்கொண்டாற் பொல்லாதோ என அடிகள் முன்னர்க் குறிப்பிட்டது போல) என்னை உனக்கே பணிசெய்யுமாறு மடைமாற்றம் செய்து யான் செய்யும் பணிகளில் உள்ள தவறுகளை நீக்கி என் பணியை ஏற்றுக் கொண்டாய். இவ்வாறு அந்த வரியின் பொருளை விரித்துக் கொள்ளுதல் பயனுடைத்தாம்.

அடுத்ததாக, மணிவாசகர் அருளுவதையும் சிந்திக்க வேண்டும்.

'வேண்டி நீ யாது அருள் செய்தாய் யானும் அதுவே வேண்டின் அல்லால்' என்பது.

இறைவா நீயே விரும்பி, இது எனக்குத் தேவைப்படும் என விரும்பி, எந்த ஒன்றையாவது எனக்கு நீ அருள் செய்தாயானால் அதை நான் விரும்பாமல், இறைவன் எனக்கு அளித்தது என்று வேண்டா வெறுப்பாக அதை ஏற்றுக் கொள்ளாமல், அல்லது இறைவனே அளித்தாலும் எனக்குத் தேவையில்லாதது இது என இகழாமல், அதையும் நான் விரும்பி ஏற்றுக் கொள்வேனே அல்லாமல் (வெறுத்து ஒதுக்க மாட்டேன்) என்பதை அவ்வரியின் கருத்தாகக் கொள்ளுதல் வேண்டும்.

இவ்வரியில் உள்ள முதல் 'வேண்டி' என்பதற்கு, 'எனக்கு எது தேவை என இறைவன் விரும்பி' என்று பொருள் கொள்ள வேண்டும். அடுத்து உள்ள 'யானும் அதுவே வேண்டின்' என்பதற்கு நான் வேண்டிக் கேட்டேன்' என்று பொருள் கொள்ளாமல், 'யானும் அதனையே விரும்பி ஏற்றுக் கொண்டேன்' என்பதையே பொருளாகக் கொள்ள வேண்டும்.

இதற்குரிய எடுத்துக்காட்டாகக் கொள்ள வேண்டுமானால், இறைவனே விரும்பி மணிவாசகரிடம் தன்னைத் தந்து அவரை

எடுத்துக் கொண்டான். அதற்கு ஏதும் மறுப்புச் சொல்லவில்லை. ஏற்றுக் கொண்டார் மணிவாசகர். ஞானத்தையோ ஆனந்தத்தையோ மணிவாசகர் இறைவனிடம் கேட்கவில்லை. அவையெல்லாம் தனக்குத் தேவை என்பதும் தெரியாது. அவனே, அத்தகைய பரிமாற்றம் செய்தான். அவையெல்லாம் மணிவாசகர் விரும்பி ஏற்றுக் கொண்டார்.

சில சமயங்களில் இறைவன் தானே முன் வந்து தருவதை, அதன் அருமை தெரியாத காரணத்தினால் மறுத்திருக்கிறார் மாணிக்க வாசகர். அது அவனிடம் இருக்கிறது என்றோ, அது தனக்குத் தேவை என்றோ அதனைக் கேட்டுத்தான் பெற வேண்டும் என்றோ மணிவாசகருக்குத் தெரியாது.

இறைவன் மணிவாசருக்கு 'அக்காரம்' தருகிறான். மணிவாசகர் மறுக்கிறார். அடிக்கிறான் இறைவன். மீளவும் மறுக்கிறார். வாயைத் திறக்க மாட்டேன் என்று வம்பு பிடிக்கிறார். இறைவன் மணிவாசகர் உதட்டில் அழுத்தமாகத் தடவி விடுகிறான்.

'அடித்து அடித்து அக்காரம் முன் தீற்றிய
அற்புதம் அறியேனே'

என்ற வரிகளைப் பற்றிச் சிந்தித்தால் மணிவாசகரின் உண்மைக் கருத்தை நாம் உணரலாம். முற்பட்ட கால அளவையில் மறுத்த மணிவாசகர் பிற்பட்ட கால அளவையில் ஏற்றுக் கொள்கிறார்.

இனி இறுதியாக நின்ற வரி ஒன்று உண்டு.

'வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில் அதுவும் உன்தன் விருப்பன்றே'

என்பது.

மேலே குறிப்பிடப் பெற்ற வரியின் மூலம் மாணிக்கவாசகப் பெருமான் தானே இறைவனிடம் வேண்டும் நிலையும் உண்டு என்பது தெரிகிறது. வேண்டிப் பெறுவது கூடாது என்பதை வலியுறுத்தும் மாணிக்கவாசகர் இந்த வரியின் மூலம் குறிப்பிடுவது சிந்திக்கத்தக்கது.

பெருமான் தன்னுள் நின்று எழும்பும் விருப்ப உணர்வே யான் அவ்வாறு வேண்டுவதற்குரிய காரணம் என்று மாணிக்கவாசகர் கூறுவது ஆராய்வதற்குரியது.

'நீத்தல் விண்ணப்பம்' என்ற தலைப்பில் அமைந்த பாடல்கள் எல்லாவற்றிலும், **'விட்டிடுதி கண்டாய்'** எனவும், **'என்னைத் தாங்கிக் கொள்ளே'** எனவும் வேண்டுகின்றார்.

இனி, 'குழைத்த பத்தி'னுள் மாணிக்கவாசகர் கூறும் வேண்டுதல் பகுதிகள் எல்லாம் இறைவனின் விருப்பமானது யான் அவ்வாறு வேண்டுகின்றேனே அன்றி, அவ்வாறு வேண்டுதல் தேவை என்ற எண்ணமும் என்னுடையதன்று என்ற கருத்துத் தோன்றவே அத்தகைய வாசகங்கள் வருகின்றன என்பதை ஓர்ந்து உணர்தல் வேண்டும்.

திருஞானசம்பந்தர் எந்த ஒன்றையும் தனக்காகக் கேட்டுப் பெறவில்லை. தந்தை வேள்வி செய்தற்காகப் பொன் கேட்டார் என்பதைத் தனக்காகக் கேட்டார் என்று கொள்ளலாகாது.

சமுதாயச் சீர்திருத்தம் வேண்டியும், வினைக் கொள்கையைத் தகர்த்தெறிய வேண்டியும் உழைத்தார். சமய நெறி சார்ந்த சட்ட திட்டங்கள் பலவற்றையும் மாற்றியமைத்தார். ஆர்வம் என்ற ஒன்றிருந்தாலே முத்தி கொடுக்கலாம் என்ற கருத்துப் பதிவைச் சமுதாயத்தில் புரட்சிகரமாக நிறுவினார்.

அப்பரடிகளும் அவ்வாறே செயற்பட்டார். தொண்டலால் துணையில்லை என்பதை மகாவாக்கியமாகக் கொண்டு செயல்பட்டார்.

சுந்தரர் கேட்டுப் பெற்றார். அவர் வரலாறு தனித்தன்மை வாய்ந்தது. அவர்தம் அருளிப்பாடுகளை முன்னுள்ள இருவர்தம் கொள்கையோடு இணைத்துக் காட்டுதல் மரபு வழுவாய் நிற்கும்.

எவ்வாறாயினும், இறைவனைக் கேட்டுப் பெறலாம் என்ற கொள்கையானது மக்கள் மன்றத்தில் மெல்லத் தலையெடுக்கத் தொடங்கி விட்டது. இன்றைய நிலையில் அக்கொள்கையானது பல்வேறு நிலைகளில் பல்கிப் பெருகி, கேட்டுப் பெறுதல் என்பதை நீக்கிய வழிபாட்டு முறையைச் சமய உலகில் கேட்கவோ பார்க்கவோ இயலவில்லை.

'பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சுரந்து புறம் புறம்
திரிந்த செல்வமே சிவபெருமானே'

என்ற மணிவாசகர்தம் திருவாக்கெல்லாம் இன்று பாராயணம் செய்வதோடு நின்று விட்டது.

'கேட்டுப் பெறுதல் இல்லை' என்ற கொள்கையை முற்றாகக் கடைப்பிடித்து, வீரநெறியில் நின்ற ஒரு தொகுதியினர் இருந்தனர் என்றும் அத்தொகுதியினர் தாம் 'கொள்கையால் உயர்ந்தவர்' என்று திருஞானசம்பந்தரால் பாராட்டப் பெற்றவர் என்றும் ஆராய்ந்து தெளிதல் வேண்டும். அத்தொகுதியினரையே ஏனையோர் வீரசைவர் என்று குறிப்பிட்டு அழைத்தனர் என்றும் கொள்ளுதல் வேண்டும்.

சைவர்கள் இரண்டு பிரிவாக நின்றார்கள். என் வாழ்க்கையில் கேட்டுப் பெறுதல் இழிவு, ஆதலால் அதனைக்கொள்ளேன் என்று நின்றவர் ஒருவகை.

கேட்டுப் பெறுதல் தவறில்லை. தனக்காக இல்லையென்றாலும் பிறருக்காக, சமுதாயத்துக்காகக் கேட்டுப் பெறலாம் என நின்றவர் மற்றொரு வகை.

இரண்டாம் வகையில் அமைந்த கொள்கையாளர்கள் முதலாம் வகையில் அமைந்த கொள்கையாளர்களை 'வீரசைவர்' என்று குறிப்பிட்டார்கள்.

இதுவே, வீரசைவர்களுக்கு 'வீர' என்ற முன்னொட்டு வந்ததன் வரலாறும் வாய்மையும் என்று கொள்ளுதல் வேண்டும்.

இறைஉடைமையேன் என்றும் யாரிடத்திலும் எதையும் கேட்டுப் பெறுதல் இல்லேன் என்ற கொள்கையிலும் சிறிதும் வழுவாமல் வாழ்வியலை நடத்திய காரணத்தால் அவ்வாறு வாழ்ந்து கொண்டிருப்பவர்களை 'வீரசைவர்' என்ற பெயரால் ஏனையோர் அழைத்தனர். அவ்வாறு அழைக்கப் பெற்று வாழ்ந்து

வரும் சைவப் பிரிவினர் நிறை உடைமை என்ற பண்பிலும் தனித்து நின்று வாழ்ந்து காட்டிய காரணத்தால் 'வீரசைவர்' என்று போற்றப் பெற்றார்கள்.

கற்புக்குப் பல்வேறு இலக்கண இலக்கிய வரைவுகள் இருந்தாலும் தன் கணவரைத் தவிர வேறு யாரையும் வணங்காதிருத்தல் கற்புக்கு இலக்கணமாக வரையறை செய்யப் பெற்றது.

'தெய்வம் தொழாஅள் கணவன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை'

என்பது குறள். இன்றைய ஆய்வாளர்களால் அதிகம் விமரிசனம் செய்யப் பெறும் குறளாக இது அமைந்து விட்டது. கற்பு எனப் பெறுவது பெண்களுக்கு மட்டும்தானா? என்ற வினா எழுப்பப் பெறுகிறது.

'பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு'

என்று பிறனில் விழையாமை என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் குறிப்பிட்டிருப்பதை ஓர்ந்து உணர்தல் வேண்டும்.

அனைத்து மக்களிடத்தும் (அ) ஆன்மாக்களிடத்திலும் தங்கியிருக்கும் இறைநிலையே 'இலிங்கம்' எனப் பெறும். அது யாராலும் தாபிக்கப் பெறாதது. இறைவன் தானே வந்து தங்கியிருக்கும் நிலையில் அமைந்தது அந்த இலிங்கப் பரம்பொருள்.

இலிங்கப் பொருளுக்கும் ஆன்மாவுக்கும் அமைந்த உறவும் இருப்பும் ஆதிஅந்தம் இல்லாதது. என்னிடத்தில் வந்து தங்கியிருக்க வேண்டும் என்று எந்த ஆன்மாவும் விரும்பிக் கேட்டுக் கொள்ளவோ தவம் முயலவோ செய்யவில்லை. தானே வந்து அமர்ந்தது. இலிங்கம் என்ற பரம்பொருளும் அது வந்து தங்குவதற்கு இடமாக அமைந்த ஆன்மாவும் ஆதிஅந்தம் இல்லாத பழைமை உடையவர்கள். அவ்வாறே அவ்விரண்டிற்கும் அமைந்த உறவும் ஆதிஅந்தம் இல்லாத பழைமையானது என்பதை உணர்தல் வேண்டும்.

ஆதிஅந்தம் இல்லாத பழைமை உறவில் இலிங்கத்தோடு இணைந்திருக்கும் ஆன்மாவானது, அந்த இலிங்கத்துடன் கற்பொழுக்கத்தில் நின்று உறவையும் வழிபாட்டையும் வளர்த்து, அப்பரம்பொருளுடன் இணைந்து வாழும் பேரின்பப் பெருவாழ்வு நிலையில் வாழாமல், ஆன்மாவானது அந்த இலிங்கத்திடமிருந்து பிரிந்து வெளியில் தனக்கு அயலாக இருக்கும் இலிங்கத்தை வணங்குவதும் வழிபாடு செய்வதும் கற்புத் தன்மைக்கு இழுக்காகும் என்று சொல்வது வீரசைவத்தில் குறிப்பிடப் பெறும் நிறை உடைமை.

கொள்கையால் உயர்வு என்று திருஞானசம்பந்தர் அருளிய செய்தியைச் சிந்தித்த வகையில் முடிவு செய்யப் பெற்ற கருத்தின் அடிப்படையில் 'வீரசைவர்' என ஒரு குழுவானது யாரிடமும் எதையும் கேட்டுப் பெறுதல் இல்லை என்ற கொள்கையினால் தனிமைப்படுத்தப் பெற்று விட்டது என்று தெளியலாம். அவ்வாறே நிறையுடைமை என்ற பண்பின் அடிப்படையிலும் 'வீரசைவர்' என ஒரு குழுவானது தனிமைப்படுத்தப் பெற்று விட்டது என்றும் அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

சிலப்பதிகாரக் காப்பியத் தலைவன் கோவலன் கண்ணகியை விட்டுப் பிரிந்து மாதவி வயத்தனானான். கண்ணகியின் தோழியான தேவந்தி என்பாள் கண்ணகியிடம், சோமகுண்டம், சூரிய குண்டம் துறை மூழ்கிக் காமவேள் கோட்டம் தொழுதால், கோவலனுடன் இணைந்து நின்று வாழ்ந்து இன்புறும்பேறு கிடைக்கும் என்று கூறுகிறாள். அதற்குக் கண்ணகி இரண்டே சொற்களில் தன் கருத்தை வெளிப்படுத்துகிறாள். 'பீடுஅன்று' என்பனவே அவை. அது எனக்குப் பெருமை தருவது அன்று, என்று கூறினாள் கண்ணகி. அதில் பெருமைக்குறைவு என்ன இருக்கிறது? கணவனைத் தவிர வேறு ஒரு தெய்வத்தை வணங்கக் கூடாது என்பது ஒரு குறை. அதுமட்டுமல்லாமல் கணவனைப் பற்றிய குறையை எடுத்துக் காமவேளிடம் கூறுதல் வேண்டும். கணவனைக் குறைகூறுவது குற்றம் என்றும், பெருமைதரும் செயல் அன்று என்றும் கண்ணகி எண்ணுகிறாள்.

சிலப்பதிகாரத்தை யாத்த இளங்கோவடிகள் ஒரு நுட்பமான வரலாற்றுப் பதிவைத் தம் நூலுள் அமைத்துக் காட்டுகின்றார்.

'போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் திறம்இவள் திறம் என்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர் மன்னும் கண்ணகி என்பாள் மன்னோ'

என்பதே அப்பதிவு. கண்ணகியைத் தம் நூலுள் முதன்முதலாக அறிமுகம் செய்யும் இளங்கோவடிகள்,

'மன்னும் கண்ணகி'

என்று குறிப்பிடுகிறார். 'வயங்கிய பெருங்குணம்' என்ற தொடரானது கண்ணகியின் கற்பைக் குறித்தது. 'மன்னும் கண்ணகி' என்று குறிப்பிடுவதன் நோக்கம் 'மன்னாக் கண்ணகி' ஒருத்தி உண்டு என்பதை நிலை நாட்டவேயாகும்.

வரலாற்றுப் பதிவில் தன்னுடைய வாழ்க்கையைப் பதிவு செய்ய இயலாத நிலையில் நமக்கு அறிமுகப்படுத்தப் பெறும் கண்ணகி ஒருத்தி உண்டு. இவள் சிலப்பதிகாரக் கண்ணகியிலும் வேறானவள். சங்ககாலக் கண்ணகி. மயிலுக்குப் போர்வை ஈந்த வையாவிக் கோப்பெரும் பேகன் என்ற வள்ளலின் மனைவி.

பேகன் மயிலுக்குப் போர்வை ஈந்தது உண்மை. ஆனால், அவன் இல்லத்தில் அவன் மனைவியாகிய மயிலின் துன்பம் நீங்குதற்குத் தான் போர்வையாயிராமல் முல்லை வேலி நல்லூரில் உள்ள பெண்ணுக்குப் போர்வையாக இருந்தான்.

பேகன் மனைவி கண்ணகி வாயிற்படியில் நின்று அழுது கொண்டேயிருப்பாள். புலவர்களெல்லாம் வந்து, 'பேகன் எங்கே?' என்று கேட்கும்போது, 'முல்லை வேலி நல்லூரான்' என்ற அளவில் மட்டும் விடைகூறி முடித்துக் கொள்வாள்.

கபிலர், பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்க்கிழார் என்ற நான்கு புலவர்கள் பேகனிடம் சென்று, கண்ணகியின் தனிமையை எடுத்துக் கூறி நல்லுரை பகர்ந்துள்ளார்கள். பேகன் மீண்டு வந்ததாகச் செய்தி இல்லை.

இரண்டு கண்ணகிகளும் கணவன்மார்கள் புறத்தொழுக்கம் மேற்கொண்டமையால் வருந்தியவர்களே. பேகன் மனைவி கண்ணகியானவள் தன் கணவனின் புறத்தொழுக்கத்தை

வெளிப்படுத்தி விட்டாள். ஆனால், சிலப்பதிகாரக் கண்ணகி அவ்வாறு கணவன் குற்றத்தைப் புறத்தே வெளிப்படுத்தாமல்,

'நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை போற்றி ஒழுகப் படும்'

என்ற திருக்குறள் வழிநின்று, தற்காத்து தற்கொண்டான் பேணி, தகைசான்ற சொற்காத்து நின்றவள். அதனால், சிலப்பதிகாரக் கண்ணகியை **'மன்னும் கண்ணகி'** என்று இளங்கோவடிகள் சிறப்பித்தார் என்று கொள்ளுதல் வேண்டும்.

இற்றைச் சமுதாயம் இதனை ஏற்றுக் கொள்ளுமா என்பது வேறு செய்தி. அதை நான் இங்கே எடுத்துக்காட்டி ஆய்வு செய்ய விரும்பவில்லை.

மேலே குறிப்பிடப் பெற்ற **'வயங்கிய பெருங்குணமாகிய நிறையுடைமையை'** கற்பின் திறத்தை வாழ்வியல் குறிக்கோளாகக் கொண்டும் செயற்படுத்திக் காட்டியும் ஒழுகிய காரணத்தால் **'வீரசைவர்'** என ஏனைச் சைவர்களாற் குறிப்பிடப் பெறும் வாழ்வு பெற்றனர் சைவர்களில் ஒரு பிரிவினர்.

குருகுகேச நெறியினர் (வீரசைவர்) தன்னுள் அநாதியே வந்து குடிகொண்டிருந்து, தம்மைப் பல்லாற்றானும் நெறிப்படுத்தி வரும் ஆத்மலிங்க வழிபாட்டைத் தவிர வேறு எந்த ஒரு தெய்வத்தையும் நாடிச் சென்று வழிபடும் சிறுநெறியைப் பின்பற்றாமையே அவர்தம் நிறையுடைமை.

1. **ஆத்மலிங்க வழிபாடு**
2. **ஆத்மலிங்கத்திடமும் கேட்டுப் பெறுதல் இல்லாத வழிபாடு**

என்ற இரண்டுமே ஏனைச் சைவர்களிடமிருந்து வீரசைவர் வேறுபட்டு நிற்பதற்குக் காரணிகளாக அமைந்தன.

ஆத்மலிங்க வழிபாட்டுக்கும் புறத்தேயுள்ள திருக்கோயில்கள் முதலியவற்றில் உள்ள இலிங்கமூர்த்தங்களை வழிபடும் வழிபாட்டுக்கும் உள்ள வேறுபாடு முன்னும் சுட்டிக் காட்டப் பெற்றது. இனி, இச்செய்தியானது அடுத்த தலைப்பிலும் விரிவாக எடுத்து நிறுத்தி ஆய்வு செய்யப் பெறும்.

'ஆத்மலிங்கம்' என்பதற்கு வேறு வேறு விளக்கங்கள் வேறு வேறு மதத்தவர்களால் கூறப் பெறுகின்றன.

எல்லா ஆன்மாக்களிலும் (ஆன்மாக்களில் மட்டும்) ஆன்மாக்களுடன் இணைந்து குடிகொண்டிருக்கும் இலிங்கப் பொருளே இங்கு ஆன்மலிங்கம் என்று கூறப் பெறுகிறது.

தமிழ் எழுத்து வரிசையில் 'ஐ' என்ற எழுத்து ஒன்று உண்டு. அது ஒரு கூட்டெழுத்து. அ+இ என்ற இரண்டு எழுத்துகளின் இணைப்பே 'ஐ' என்பது. இருமையின் ஒருமை. எண்ணிக்கையால் ஒன்று. பொருள் அமைப்பால் இரண்டு. அகரம் என்பது இறைவனைக் குறிக்கும். இகரம் என்பது ஆன்மாவைக் குறிக்கும்.

இருமையின் ஒருமை என்றாலும் கூட, அவை ஒன்றுக்குள் ஒன்றாய் அமைந்துள்ளன. ஆன்மாவினுள் இறைவன். ஆன்மா என்னும் குகையினுள் தங்கியிருக்கும் பரம்பொருள் குருவாக வந்து, ஈசத்வம் வழங்குவதால் 'குருகுகேசம்' எனப் பெற்றது. குகன் என்ற சொல்லுக்கும் இதுவே பொருள். இதுவே இயற்கை நிலை.

'ஐ' என்ற எழுத்தைப் போல் ஆன்மாவினுள்ளும் இறைவனாக அமைந்திருக்கும் இயற்கையாயமைந்த இருமையின் (இரண்டு பொருட்களின்) ஒருமையே (ஒற்றுமைப்பட்டு ஒன்று என நிற்பதே) இலிங்கத்துக்கும், ஆன்மாவுக்கும் அமைந்த உறவு. அதுவே ஆன்மலிங்கம் என்பதன் பொருள். இந்நிலையானது எல்லா ஆன்மாக்களுக்கும் அமைந்த பொதுநிலை.

உயிரற்ற பொருள்களின் உள்ளீடாய் அவற்றில் நிறைந்து நிற்கும் தெய்வப் பொருள் அல்லது இலிங்கப் பொருள் வேறு. ஆன்மலிங்கம் வேறு என்பதைத் தெளிவாக மனத்தில் இருத்திக் கொள்ளுதல் வேண்டும்.

'ஆன்மலிங்கம்' என்ற ஒன்றைத் தன்னுள் இருத்திக் கொண்ட வகையில் அனைத்து ஆன்மாக்களும் ஒரே நிலை உடையனவே. ஆன்மாக்களின் தனித்தன்மைகளில் வேறுபாடு இருந்தாலும் அவற்றின் அகத்தே நின்று ஒளிசெய்து கொண்டிருக்கும் இலிங்கம் என்ற பரம்பொருளில் எத்தகைய வேறுபாடும் இல்லை. இந்த இலிங்கத்தைத்தான் வீரசைவம் நிரஞ்சன சூனிய நிஷ்களலிங்க

லிங்கம் என்று இலக்கண வகையாலும் அனுபவ நிலையாலும் விளக்கிக் காட்டுகிறது.

யாரிடத்தும் யாதொன்றையும் கேட்டுப் பெறாமை என்ற கொள்கை உயர்வும், தன்னுடைய ஆன்மாவில் தானே வந்து தங்கியிருக்கும் ஆன்மலிங்கம் எனும் பரம்பொருளையன்றி வேறு எந்த ஒரு இலிங்கத்தையோ கடவுளையோ வழிபடுதல் இல்லை என்ற நிறையுடைமையும் வாழ்வியல் குறிக்கோள்களாகக் கொண்டு வாழ்ந்த சைவர்களை ஏனைச் சைவர்களும் பிறரும் வழங்கிய வழக்கே 'வீரசைவர்' என்பது என்று கொள்ளுதல் வரலாற்று வாய்மையாகும்.

'வீரசைவம்' என்ற வழக்கானது பெருக வழங்கிய காரணத்தால் 'வீரசைவம்' என்ற குறியீட்டுத் தொடருக்கு விளக்கம் சொல்ல வேண்டிய கட்டாயம் வீரசைவர்களுக்கு ஏற்பட்டு அந்த வகையில் வெவ்வேறு விளக்கங்கள் அருளாளர்களால் எடுத்துக் கூறப் பெற்றுள்ளன.

'பெரியமடம்' என்ற வழக்கு

'பெரிய மடம்' என்ற வழக்கானது வீரசைவத் திருமடங்களையே குறிக்கும்.

கி.பி. 12ஆம் நூற்றாண்டில் 'வீர்' என்ற சொல்லைப் 'பெரிய' என்ற சொல்லோடு சேர்த்தும் விரித்தும் ஒருவகை ஆய்வு நடைபெற்றுள்ளது. அதன் பிரிவை யாரும் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை.

சங்ககாலத்து வாழ்க்கையை விரிவாக ஆராய்ந்தவர்கள் தமிழ் மக்களின் வாழ்க்கையைக் காதலும் வீரமும் என இரண்டாகக் கண்டார்கள்.

தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் எட்டுவகையான மெய்ப்பாடுகளைக் கூறுமிடத்தில் 'வீரம்' என்ற சொல்லையே எடுத்தாளுகிறார். பெருமிதம் என்ற சொல்லுக்கு 'வீரம்' என்று உரை கண்டுள்ளார்கள்.

'நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப'

என்பது தொல்காப்பியர் நூற்பா.

சங்க இலக்கியங்களில் 'வீரம்' என்ற சொல்லுக்குப் பதிலாக வாகை, முல்லை, பேராண்மை, பெருமிதம் போன்ற சொற்களே பயின்று வருகின்றன.

திருமூலர், 'பெருமிதம்' என்ற சொல்லுக்குப் பதிலாகப் 'பெருந்தன்மை' என்ற தொடரைக் கையாளுகின்றார்.

சிவன் செய்த எண்வகை வீரச் செயல்களைக் குறிப்பிடும்போது மொஹஞ்சதாரோ, ஹரப்பா மொழிகளில் தாண்டவன் - இர் - நால் - மறம் என்ற தொடர் காணப்படுகிறது. தாண்டவனின் எட்டு (இர்+நால் = இரண்டுநான்கு) வீரச்செயல்கள் என என்னுடைய 'வீரசைவம்' நூலில் குறிப்பிட்டுள்ளேன்.

திருமூலர் 'பதிவலியில் வீரட்டம் எட்டு' என்ற தலைப்பில் எட்டு மந்திரங்களை அருளிச் செய்துள்ளார். அத்தலைப்பில் அமைந்த எட்டு மந்திரங்களிலும் 'வீர' என்ற சொல்லை அவர் கையாளவில்லை. 'பதிவலியில் வீரட்டம் எட்டு' என்ற தலைப்பானது பின்னர் அமைக்கப் பெற்ற ஒன்றாக அமையலாம்.

அவ்வாறே திருமூலர் சைவப்பிரிவுகளைக் கூறுகின்ற ஐந்தாம் தந்திரத்தில் சுத்தசைவம், அசுத்தசைவம், மார்க்கசைவம், கடுஞ்சுத்தசைவம் என்ற பெயர்களைத்தான் குறிப்பிடுகின்றார். ஆனால், 'கடுஞ்சுத்தசைவம்' ஒன்று உண்டு எனப் பேசும் திருமூலர் யாண்டும் 'வீர' என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை.

அவ்வாறே பெரியாரைத் துணைக்கோடல், மாகேஸ்வரர் என்ற வழக்காறுகளைக் கையாளும் திருமூலர் 'வீர' என்ற சொல்லை அவற்றுடன் இணைக்கவில்லை.

கி.பி.12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அரசவைக் கவிஞர் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர்தான்,

'குடந்தையம் பதியில் கோதிலாப் பெரிய
மடந்தனில் வாழ்வீர மாகேஸ்வரர் வாழியே'

என்று தாம் பாடிய தக்கயாகப் பரணியில் பன்னிரெண்டாம் தாழிசையாக அமைத்துக் காட்டியுள்ளார்.

பேராசிரியர் இரமண சாஸ்திரியார்- திருமந்திரம், தக்கயாகப் பரணி போன்ற நூல்களைப் பதிப்பித்த பெருந்தகையாளர். தக்கயாகப் பரணிப் பதிப்பில் பேராசிரியர் இரமண சாஸ்திரியார் மேலே குறிப்பிடப் பெற்ற தாழிசையைப் பன்னிரெண்டாவது தாழிசையாக அமைத்துள்ளார். இச்செய்தியை, டாக்டர் மா.இராச மாணிக்கனார் எழுதிய 'சைவசமய வரலாறு' என்ற நூலின் மூலம் அறியலாம்.

பேராசிரியர் இரமண சாஸ்திரியாருக்குப் பின்னர் மகாமகோபாத்தியாய உ.வே.சாமிநாதையர் அவர்களால் பதிப்பிக்கப் பெறுகிறது தக்கயாகப் பரணி. உ.வே.சா. பதிப்பில் இந்தத் தாழிசை காணப்பெறவில்லை. நூலின் இறுதிப் பக்கத்தில் 'சில பிரதிகளில் காணப்பெறும் தாழிசைகள்' என்ற தலைப்பில் இந்த ஒரு தாழிசை மட்டும் காணப் பெறுகிறது.

இக்காலத்தில் இரமண சாஸ்திரியார் பதிப்புகள் கிடைக்கப் பெறவில்லை. உ.வே.சா. பதிப்புகளே கிடைக்கின்றன. தக்கயாகப் பரணியைப் படிக்கிறவர்கள் மேலே கண்ட தாழிசையைப் படிப்பதற்கு வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது.

மேலே குறிப்பிடப் பெற்ற தக்கயாகப் பரணித் தாழிசையானது புறக்கணிக்கப் பெற்றமைக்கு உரிய காரணமாக யான் கருதுபவை இரண்டு:

1. பெரிய மடம் என்ற வழக்காறு
2. வீரமாகேஸ்வரர் என்ற வழக்காறு

வீரசைவ மடங்களெல்லாம் 'பெரிய மடம்' என்றும் அத்தகைய வீரசைவத் திருமடங்களில் குருமகாசந்நிதானங்களாக விளங்குகின்றவர்கள் எல்லாம் வீரமாகேஸ்வரர்கள் என்ற வழக்காற்றினால் வழங்கப் பெற வேண்டியவர்கள் என்றும் மேலே

குறிப்பிடப் பெற்ற தக்கயாகப் பரணித் தாழிசையின் மூலம் ஒட்டக் கூத்தர் விளக்கிக் காட்டினார்.

ஒட்டக்கூத்தர் அரசகுருவாக விளங்கியவர். அவர் காலத்திலிருந்த சோழ அரசர்களால் (மூவருலா) பெரிதும் பாராட்டப் பெற்றவர்.

'ஆற்றங்கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழும்'

என்ற வாக்கினுக்கு இலக்கானவர். அவற்றையெல்லாம் பற்றி இங்கே நான் விவரிக்க முற்படவில்லை.

'வீர' என்ற சொல்லையும், 'பெரிய' என்ற சொல்லையும் சைவத்தோடும் திருமடத்தோடும் திருமடத்தலைவர்களோடும் ஒட்ட வைத்த முதன்மைத் தகுதி ஒட்டக்கூத்தரையே சாரும் என்பது என் மதிப்பீடு. (ஆய்வுக்குரியது)

இக்காலத்தில் பொம்மபுர ஆதீனம், மயிலம் சிவஞான பாலய சுவாமிகள் திருமடத்தைத் தவிர வேறு எந்த வீரசைவத் திருமடங்களும் தம்மைப் பற்றிய மரபு வழிச் செய்தியைக் குறிப்பிடும்போது 'பெரிய மடம்' என்று குறிப்பிட்டுக் கொள்வதில்லை.

அவ்வாறே வீரசைவத் திருமடங்களின் தலைவர்களாக விளங்கும் குருமகாசந்நிதானங்களை 'வீரமகேஸ்வரர்கள்' என்று குறிப்பிடும் வழக்கு யாண்டும் காணப்பெறவில்லை.

'வீரசிம்மாசனாதிபதி' என்ற குறிப்பானது மயிலம் திருமடத்திலும் விருத்தாசலம் ஸ்ரீகுமார தேவர் திருமடத்திலும் உள்ள குறிப்புகளில் காணப்பெறுகின்றது.

கன்னட நாட்டில் வீரசைவத் திருமடங்கள் 'உற்ரியமட' என வழங்கப்பெறும் வழக்குள்ளமை காணப் பெறுகிறது.

ஒட்டக்கூத்தர் தம் திருவாக்கினை மறுக்கவோ, எதிர்க்கவோ அக்காலத்தில் உள்ள சைவத் திருமடங்களுக்கு வலிமை இல்லாது போயிற்று. ஆனால், தக்கயாகப் பரணித் தாழிசையின் தாக்கம்

ஏனைச் சைவத் திருமடங்களுக்கும் சைவர்களுக்கும் இல்லாமற் போகவில்லை.

திருஞானசம்பந்தர் காலத்தில் 'கொள்கையினால் உயர்ந்த நிறையுடையவர்' என்று பாராட்டப் பெற்ற (வீர) சைவர்கள் ஒட்டக்கூத்தர் காலத்துக்குப் பின்னர், இன்றுவரை சைவர்களாலும் சைவத் திருமடங்களினாலும் ஓரம் கட்டப் பெற்று வருகிறார்கள் என்பதுதான் வரலாற்றுப் பதிவு.

மேலே குறிப்பிடப் பெற்ற பின்னணியில் சேக்கிழார் காலத்தில் ஒரு மாபெரும் புரட்சி நடைபெற்றிருக்கிறது. ஆனால், அதற்குரிய வரலாற்றுப் பதிவு என்ன காரணத்தினாலோ அமையாமற் போய்விட்டது.

பெரியார், வீரம் என்ற வழக்காறுகள்

கணியன் பூங்குன்றனார் இயற்றிய 'யாதும் ஊரே' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலில்,

> '...........................திறவோர்
> காட்சியில் தெளிந்தனம் ஆகலின் மாட்சியில்
> பெரியோரை வியத்தலும் இலமே
> சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே'

என்ற இறுதி வரிகளின்படி, 'திறம்' என்பது அனுபவத்தைக் குறிக்கும். 'திறவோர்' என்பது அனுபவத்தின் அடிப்படையிலும் காட்சி, கருதல், உரை என்ற நூலறிவின் அடிப்படையிலும் காணும் செய்திகளை இணைய நிறுத்தி, உணர்ந்து, தெளிந்து முடிந்த முடிவுகளை வெளியிடும் ஆற்றல் வாய்ந்தவர்களைக் குறிக்கும்.

> 'சைவசித்தாந்தத் திறன் இங்குத்
> தெரிக்கலுற்றாம்'

என்ற, உமாபதி சிவாச்சாரியாரின் சிவப்பிரகாசத் தொடரின் மூலமும் இவ்வுண்மையை உணரலாம்.

இனி, 'மாட்சியிற் பெரியோர்' என்று கணியன் பூங்குன்றனாரே குறிப்பிட்டிருப்பதால் 'மாண்பு' எனப்பெறும் உயர்மைக் கூட்டுப்

பண்பினைச் செயற்படுத்தும் காரணத்தால் பெரியோர் ஆயினார் என்று கொள்ளுதல் வேண்டும்.

இனி, சங்க இலக்கியங்களிற் காணப்பெறும் 'சான்றோர்' எனப்படுபவர்கள், அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ற ஐந்து பண்புகளாலும் தனித்தனியே நிறைவு பெற்று, பின்னர் அவை ஐந்தன் நிறைவினால் பெற்ற முழுமையான நிறைவை உடையவர்கள் என்ற இலக்கணம் திருவள்ளுவரால் காட்டப் பெறுகிறது என்பதை,

'அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மை என்று
ஐந்து சால்பு ஊன்றிய தூண்'

என்ற திருக்குறளால் அறியலாம்.

ஆயினும், பெரியர் அல்லது பெரியோர் என்பதற்குத் திருவள்ளுவர் காணும் விளக்கத்தை நாம் ஒதுக்கிவிட முடியாது.

திருவள்ளுவர் தம்முடைய திருக்குறளில் பெருமை, பெரியாரைத் துணைக்கோடல், பெரியாரைப் பிழையாமை என்ற மூன்று அதிகாரங்கள் அமைத்துக் கூறினார். ஆயினும், 'நீத்தார் பெருமை' என்ற அதிகாரத்தில்தான் திருவள்ளுவர் 'பெரியர்' என்பதற்கு இலக்கணம் கூறுகின்றார்.

அறனறிந்து மூத்த அறிவுடையார்
உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும் பெற்றியார்
தக்கார்
இடிக்கும் துணையார்
மதலை
நல்லார்
எனப் பெரியாரைத் துணைக்கோடல் என்ற அதிகாரத்திலும்
தகைமாண்ட தக்கார்
குன்று அன்னார்
ஏந்திய கொள்கையார்
சிறந்தமைந்த சீரார்

எனப் 'பெரியாரைப் பிழையாமை' என்ற அதிகாரத்திலும் எடுத்துக் கூறிய திருவள்ளுவர் பெரியவர்களின் இலக்கணமாகக் கொள்ள

வேண்டிய நிலையில் 'நீத்தார் பெருமை' என்ற அதிகாரத்திற் கீழ்வருமாறு குறிப்பிட்டருளுகின்றார்.

'செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்'

என்று நீத்தார் பெருமை, ஆறாம் குறளில் அமைத்துக் காட்டியுள்ளார்.

திருவள்ளுவர் அருளிய திருக்குறள்களுள் சில குறள்கள் இற்றைநாள் திறனாய்வாளர்களால் ஆய்வுசெய்து கண்டிக்கப் பெறுகின்றன. அவற்றுள் ஒன்றாக மேலே எடுத்துக் காட்டப் பெற்ற திருக்குறள் அமைந்துள்ளது.

'செயற்கரிய செய்வார் பெரியர்' என்ற முதற் கூற்றிலேயே 'செயற்கரிய செய்கலாதார் சிறியர்' என்ற கருத்து வெளிப்பட்டதாகவே அமைந்து விடுகிறது. எனவே, 'சிறியர் செயற்கரிய செய்கலாதார்' என்ற தொடர் எந்த ஒரு சிறப்புப் பொருளையும் தராமல் நின்று வற்றியதாகவே முடியும் என்பது ஆய்வாளர் கருத்து.

'சிறியர் செயற்கு எளிய செய்கலாதார்' என்று பாடம் கொண்டோரும் உளர்.

மேலே குறிப்பிடப் பெற்ற திருக்குறளின் பொருளாழம் முழுவதையும் எடுத்துக்காட்டும் பணி இவ்விடத்துக்கு ஏலாதது. 'செயற்கு அரிய செய்தல் பெரியவர்களுக்கு உரிய இலக்கணம்' என்பதை உணரவும் உணர்த்தவுமே ஈண்டு எடுத்துக் காட்டப் பெற்றது.

கி.பி.12ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர் ஒட்டக்கூத்தர் என்றால், சேக்கிழார் அதே நூற்றாண்டில் சமகாலத்தவராக இருந்தார் என ஒருசில ஆராய்ச்சியாளர்களும் பிற்பட்டவர் என ஒருசிலரும் கருதுகின்றனர்.

ஒட்டக்கூத்தரைப் போலவே, 'பெரிய' என்ற சொல்லையும் 'வீர' என்ற சொல்லையும் சேக்கிழார் தம் நூலில் பதிவு செய்தமைக்கிறார்.

சேக்கிழார் தாம் அருளிய நூலுக்கு அவரே அமைத்த பெயர் 'திருத்தொண்டர் புராணம்' என்பதே. அவர் அதற்குப் பெரிய புராணம் என்ற பெயரை அமைக்கவில்லை.

'தெரிவு அரும் பெருமைத் திருத்தொண்டர் தம்
பொருஅரும்சீர்'

எனவும்,

'அருளின் நீர்மைத் திருத்தொண்டு'

எனவும் தோற்றுவாய் செய்து கொள்ளும் சேக்கிழார்,

'இங்கு இதன் நாமம் கூறின் இவ்வுலகத்து முன்னாள்
தங்கு இருள் இரண்டில் மாக்கள் சிந்தையுள் சார்ந்து நின்ற
பொங்கிய இருளை ஏனைப் புறஇருள் போக்குகின்ற
செங்கதிரவன் போல்நீக்கும் திருத்தொண்டர் புராணம் என்பாம்'

என்பது திருத்தொண்டர் புராணப் பத்தாம் பாடல்.

சேக்கிழார் தம் நூலுக்குப் 'பெரிய புராணம்' என்ற பெயரை அமைத்ததாகத் தெரியவில்லை. சேக்கிழார் காலத்திலேயே 'பெரிய புராணம்' என்ற வழக்கானது 'திருத்தொண்டர் புராண'த்துக்கு வந்து விட்டதாக அறிஞர்கள் மத்தியில் ஒரு வழக்கு இருந்து வந்தது என்பது செவிவழிச் செய்தி.

'எடுக்கும் மாக்கதை' எனத் தொடங்குகிறது மூன்றாவது பாடல். 'மாக்கதை' என்ற தொடரே 'பெரியபுராணம்' என வழங்கப் பெறுவதற்கு மூலமாக உள்ளது எனக் கருதுபவர் உண்டு.

பிற்காலப் பதிப்புகள் எல்லாவற்றிலும் 'பெரியபுராணம்' என வழங்கும் 'திருத்தொண்டர் புராணம்' என்றே அமைக்கப் பெறுகிறது.

'திருத்தொண்டர்' என்ற சொல்லுக்குப் பதிலாகப் 'பெரியர்' என்ற சொல்லைச் சேர்த்தன் காரணம் யாதாக இருக்க முடியும்? இக்காலத்தே 'திருத்தொண்டர் புராணம்' என்ற வழக்கானது பெரும்பாலும் இல்லாமற்போய் விட்டது. 'பெரியபுராணம்' என்ற தொடரே பெருவழக்காகப் பயிலப் பெற்று வருகின்றது. ஒட்டக் கூத்தரின் தக்கயாகப் பரணி வழக்காறானது இதற்கு ஒருவகைப் பின்னணியாக அமைந்திருக்கலாம். இதுமேலும் ஆய்வுக்குரியது.

இனி, '**வீர்**' என்ற சொல்லாராய்ச்சியையும் அதன் பொருள் தெளிவையும் சேக்கிழார் விளக்கிக் காட்டுகிறார்.

'**பெரியபுராணம்- ஓர் ஆய்வு**' என்ற நூலை எழுதிய பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தனார் எடுத்துக் காட்டியுள்ள குறிப்பையும் இங்கே இணைத்துக் காணுதல் வேண்டும்.

திருத்தொண்டர் புராணத்தில், 'திருக்கூட்டச் சிறப்பு' என ஒரு தலைப்பை எடுத்துக் கொண்டு அத்தலைப்பின் பாடுபொருளாகப் பதினொரு பாடல்களை அருளிச் செய்திருக்கிறார் சேக்கிழார்.

'**திருக்கூட்டச் சிறப்பு**' என்ற தனித் தலைப்பானது பெரிய புராணத்தில் அமைக்கப் பெற்றதன் உட்கருத்தைச் சற்றொப்பப் பத்துப் பக்கங்களில் பேராசிரியர் அ.ச.ஞா. அவர்கள் ஒதுக்கியுள்ளார்கள். (பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தனார், பெரியபுராணம் - ஓர் ஆய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகத் தத்துவ மையம் - காஞ்சிபுரம், *1987* - பக்கங்கள் *221-229*)

அடியார்களை வீரர் என்று கூறியது ஏன்? என்ற சிறுதலைப்பின் கீழ், பேராசிரியர் அவர்கள் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்.

'**வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டு இல்லை. யாண்டும் அஃது ஒப்பது இல்**' என்று கூறிய திருக்குறளுக்கு முழு இலக்கியமாய் அமைந்த இவர்களின் வேண்டாமைக்கு எல்லை வகுத்துக் காட்டுகின்றார் கவிஞர்.

> '**கூடும் அன்பினால் கும்பிடலே அன்றி**
> **வீடும் வேண்டா விறலின் விளங்கினார்**' (பாடல் *8*)

என்பது திருக்கூட்டச் சிறப்பு.

மேலும், பேராசிரியர் அவர்கள்,

'தன்னலத்தை அறவே துறந்து, ஓட்டினையும் பொன்னையும் ஒக்க நோக்கும் சமதிருஷ்டி பெற்று, பிற உயிர்களிடத்து ஈர அன்பு பூண்டு, அவர்களின் அகந்தையைப் போக்கியும், அவர்களுக்குக் கைத்தொண்டு செய்தும், மாதொர்பாகர் மலர்த்தாள் மறவாமலும் வறுமை, செல்வம் இரண்டையும் ஒன்றாகவே மதித்தும், உடுத்துள்ள கந்தை கூட அதிகப்படியானது என்ற துறவுள்ளம்

கொண்டும் வாழும் இவர்கள் எதற்கும், யார்க்கும் அஞ்ச மாட்டார்கள்.

அகப்பகை, புறப்பகை ஆகிய இவ்விரண்டையும் அறவே ஒழித்தவர்கள் ஆகலின் இவர்களை வீரர்கள் என்று விளிக்கின்றார் கவிஞர். (ப.225)

பேராசிரியர் குறித்துள்ள மேற்கண்ட செய்திகளையெல்லாம் சேக்கிழார் கருதியிருப்பாரானால் திருத்தொண்டர் புராணம் என்ற பெயரை அமைக்காமல் பெரிய புராணம் என்ற பெயரிலேயே அமைத்திருப்பார்.

மேலே குறிப்பிட்ட செய்திக்கு மரபு வழியாக ஒரு காரணம் கூறப் பெறுகிறது.

சுந்தரர் பெருமான் திருத்தொண்டத் தொகை என்ற பெயரில் அடியவர் பெருமையை முன்மொழிந்து விட்டதாலும், நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதி என்ற பெயரில் அடியவர் பெருமையை வழிமொழிந்து விட்டதாலும், சேக்கிழாரால் 'பெரியபுராணம்' என்ற பெயரை அமைக்க இயலவில்லை என்பதே அக்காரணம்.

'வீர' என்ற அடைமொழி விளக்கத்தின் முடிப்புரை

திருஞான சம்பந்தர் எடுத்துக்காட்டியருளிய திருநெடுங்களப் பதிகத்தின் அடிப்படையில்

1. கொள்கையினால் உயர்வுடைமை (கேட்டுப் பெறாமை, தூய்மை)
2. நிறையுடைமை

என்ற இருபாற்பட்ட ஒருமை நெறியில் நின்று வாழ்ந்தமை காரணத்தினாலேயே அவ்வாறு வாழ்ந்த குழுவினர் 'வீரசைவர் எனப் பெற்றார் என்று கொள்ளுதல் பொருந்துவதாகும்.

பெரியமடம், வீரமகேஸ்வரர்கள் போன்ற வழக்காறுகள் மேற்குறிப்பிட்ட கொள்கைகளை வாழ்வியற் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்த ஒரு கூட்டத்தினரையே குறித்து வழங்கப் பெற்றன என்று கொள்ளுதல் வேண்டும்.

பெருமிதம்

இனி, தொல்காப்பிய அடிப்படையில் நோக்கும்போது, வீரம் என்ற சுவையைப் பெருமிதம் என்ற சொல்லால் குறிப்பிடும் முறையே காணப் பெறுகிறது.

'கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப் பெற்ற பெருமிதம் நான்கே'

என்பது தொல்காப்பியம்.

திருமூலர் சிவனைப் பல்வேறு பெயர்களால் குறிப்பிட்டுக் கூறும் மரபினைக் கொண்டவர். எல்லாவற்றுக்கும் மேலாகச் சிவனை, 'பெருந்தன்மையன்' என்று குறிப்பிடுகின்றார். திருமூலர் தன்னைப் பற்றிக் குறிப்பிடும்போது,

'பிதற்று ஒழியேன் பெரியான் அரியானை
பிதற்று ஒழியேன் பிறவா உருவானைப்
பிதற்று ஒழியேன் எங்கள் பேர்நந்தி தன்னைப்
பிதற்று ஒழியேன் பெருமைத்தவன் நானே'

என்பது முதல் தந்திரம், 'சிவபரத்துவம்' என்ற தலைப்பில் அமைந்த 34ஆம் பாடல். இத்திருமந்திரப் பாடலில் பெரியவனை வணங்குதலினால் 'பெருமைத்தவன்' யானே என்று தன்னைப் 'பெருமைத் தவம் செய்தவன்' என்ற பொருளிற் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

பெருமிதம் கொள்வதற்குரிய தவம் செய்தவன் யான் என்று தன்னைக் குறிப்பிடும் தன்மையால் பெருமிதச் சுவை எனப்பெறும் வீரச்சுவையை அனுபவிக்கும் 'வீரன்' என்று குறித்துக் கூறலாம். ஆதலின் பெருமிதமுடைய சைவன் என்ற வகையில் வீரசைவம் என்ற வழக்காறு தோன்றியிருக்கவும் கூடும்.

'இறுமாந்திருப்பன் கொலோ' என்று அப்பரடிகள் கூறுமாப் போல சிவன் பெருந்தன்மை ஒன்றையே அனுபவப் பொருளாகக் கொண்டு வாழ்ந்து வரும் தூய்மயர் ஆதலின், அத்தகைய வாழ்க்கையில் ஒருவகைப் பெருமிதம் - வீரம் உடையவர்களாக விளங்குதலின் அவர்தமைக் கண்டோர் எல்லாரும் 'வீரசைவர்' என்று குறிப்பிடும் வழக்கம் வந்திருக்கலாம்.

'பெருமிதம்' என்ற சொல்லுக்கு பெருந்தன்மை என்று உரை விளக்கங்கண்டார் திருமூலர். சிவன்- பெருந்தன்மை. இவ்வடிப்படையை உற்று நோக்கினால் வீரசைவம் என்பதன் உட்பொருளை விளங்கிக் கொள்ளலாம். பெருந்தன்மையே பெருமிதம். பெருமிதமே சிவம். சுருங்கக்கூறின் சிவப்பெருந் தன்மை, சிவப்பெருமிதம், சிவவீரம், வீரசிவம் என வழக்காற்றில் அமைந்திருக்கலாம்.

'ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியும்
தேடியும் கண்டேன் சிவன் பெருந்தன்மையை
கூடிய வாறே குறியாய்க் குறிதந்து என்
ஊடுநின்றான் அவன்தன் அருள் உற்றே'

என்பது திருமூலர் திருமந்திரம், 1792

மேலும், திருமூலர் 'பெருந்தன்மை நந்தி' எனப் பலவிடத்தும் குறிப்பிடுகின்றார்.

எனவே, சிவனுக்குப் பெருந்தன்மையைக் குணமாகக் கண்டு, பெருந்தன்மையைப் பெருமிதமாகக் கொண்டு, அவ்வகையில் பெருமிதம் வீரமாக மலர்ந்தது எனவும் கொள்ளலாம்.

2. இலிங்காயதமும் - சம்பிராதயமும்

முன்னுரை

கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகளார் பரம்பொருள் எனப்பெறும் பரம விழுப்பொருளைக் குருகுகேசன் என முன்னிறுத்தி வழங்கியமையால் குருகுகேசன் சார்ந்த கொள்கைகளை வீரசைவம் எனக் கொண்டு வீரசைவம் குருகுகேசம் என்ற இரு வழக்காறுகளும் ஒருபொருள் சார்ந்த இருமைகள் என அமைத்துக் கொள்ளப் பெற்றன. அத்தகைய அடிப்படையில் வீரசைவம் சார்ந்த கொள்கை விளக்கங்கள், சாதனங்கள், பயன் ஆகியவற்றையெல்லாம் 'குருகுகேசம்' என்ற தலைப்பிலேயே எழுதி விளக்குவது இந்நூல் வரிசையின் மையக் கருத்து.

குருகுகேசம் (அ) வீரசைவம் என்ற கொள்கையைப் பற்றி விளக்கிக்கூறவோ அல்லது விளங்கிக் கொள்ளவோ முற்படுவோ மானால் அக்கொள்கையில் தவிர்க்க முடியாத இரண்டு கலைச் சொற்களை அனைவரும் உபயோகித்தே தீர வேண்டும். அல்லது அவற்றைப் பற்றிய விளக்கங்களைப் புரிந்து கொண்டே ஆக வேண்டும்.

1. இலிங்காயதம்
2. சம்பிரதாயம்

என்பனவே அவை. மேலே குறிப்பிடப் பெற்ற இரண்டு கலைச்சொற்களின் விரிவான விளக்கமே குருகுகேசம் - மூன்று என்ற இந்நூலின் இரண்டாவது தலைப்பாக அமைகிறது. அவற்றைப் பற்றிய விரிவான விளக்கங்களை முறைப்படுத்திக் காண்பதற்குத் திருவருளும் தீட்சாகுருவின் குருவருளும் துணைசெய்யும் என்ற துணிவுடையேன்.

1. இலிங்காயதம்

'இலிங்கமாக ஆதல்' என்ற பொருளில் வீரசைவ மெய்ப்பொருளியலாளர்கள் 'இலிங்காயதம்' என்ற சொல்லைப்

பயன்படுத்தி வருகிறார்கள். மேலும், 'நீலகேசி' என்ற பழந்தமிழ் இலக்கியநூலில் 667 ஆம் பாடலில் 'ஈண்டியிருந்த இலிங்கியர்' என்ற தொடர் காணப்பெறுகிறது.

'இலிங்காயதர்' என்ற தொடரானது பொதுவாக இலிங்கத்தைத் தரித்துக் கொண்டிருப்பவர்களுக்கு வழங்கப் பெறும் வழங்கற்பாட்டுத் தொடராக இற்றைநாள் வழக்கில் காணப்பெறுகிறது.

இலிங்கம் என்பதன் பொருள்

இலங்குவது இலிங்கம்- இலங்குவது என்றால் விளங்குவது. பிறபொருள்களின் உதவியில்லாமல் தானே விளங்குவதும், உலகில் உள்ள எல்லாப் பொருள்களையும் (ஆன்மாக்களைத் தவிர) தன் சக்தியின்மூலம் உண்டாக்க, அவற்றை விளக்கமுறச் செய்வதும் அவற்றின் தேவை நிறைவுற்றபின்னர் தன் சத்தியின் மூலம் தன்னிடமே ஒடுக்கிக் கொள்வதும் ஆகிய இரண்டு நிலைகளைக் கொண்டு விளங்குவதாகிய ஒருவகைக் குறியே இலிங்கம். பொதுவாக, தானே விளங்குவதும் தன்னைச் சார்ந்த பொருள்களையெல்லாம் விளக்குவதும் ஆகிய குறியே இலிங்கம் ஆகும் என்று கருதினார்கள். வெளிப்படுத்தினார்கள் அருளாளர்கள்.

மேலே குறிப்பிடப் பெற்ற விளக்கமானது தொல்காப்பியத்தின் அடிப்படையில் அமைக்கப் பெற்ற முதன்மை விளக்கமாக அமைகிறது.

'எல்லே இலக்கம்'

என்பது தொல்காப்பிய நூற்பா.

'இலக்கம்' என்பதற்குப் பொதுவாக 'விளக்கம்' என்று பொருள் கொண்டாலும் அதனைத் தன்வினைச் சொல்லாகவும் பிறவினைச் சொல்லாகவும் கொண்டு விரிவாக்கம் செய்துள்ளார்கள்.

தானே விளங்குவது; இலங்குவது இலக்கம் என்பது தன்வினைப் பொருள்.

பிறபொருளை விளங்கச் செய்வது, இலங்கச் செய்வது,

விளக்கமுறச் செய்வதும் இலிங்கமே என்று கொள்வது பிறவினைப் பொருள்.

இலங்குவது இலக்கம்
இலக்குவது இலக்கம்

என வேறுபிரித்துக் காணுதல் வேண்டும். இக்கருத்தை விளக்குவதற்கு வேறும் ஓர் எடுத்துக்காட்டினைக் கொள்ளலாம்.

வெளுத்தல், ஒழுக்கம் என்ற சொற்கள் தன்வினை, பிறவினை என்ற இருவகை நிலையாலும் பொருள் கொள்ளப் பெறும்.

தனிமனிதன் ஒருவன் சத்துள்ள உணவு கொள்ளாமையாலோ பிற காரணங்களாலோ வெளுத்துப் போதல் உண்டு. அப்போது அவனை, 'வெளுத்தான்' எனக் கூறுதல் உண்டு. இது தன்வினைப் பொருள்.

அவனே, ஆடைகளை வெளுத்தான் என்ற நிலையில் வெளுக்கப் பெற்றது ஆடை என்ற பொருளில் வெளுத்தான் என்ற சொல்லும் பொருளும் பிறவினைப் பொருளில் வருகின்றன.

அவ்வாறே, 'ஒழுக்கம்' என்ற சொல்லும் ஒரு தனிமனிதனின் அறச்செயல்களில் வழுவாது நின்று ஒழுகுவது ஒழுக்கம் எனப்பெறும். இது தன்வினைப் பொருள். 'ஒழுகுவது ஒழுக்கம்' என்பது இதன் அடிப்படை.

அவனே, தன்னைப் போலவே பிற ஒருவனையும் ஒழுக்கமுடையவனாக ஆக்குவதும் ஒழுக்கமே. இது பிறவினைப் பொருள். 'ஒழுக்குவது ஒழுக்கம்' என்பது அதன் அடிப்படை.

'பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு'

என்ற குறட்பாவினையும் அதற்குரிய பொருளினையும் ஓர்ந்து உணர்ந்து தெளியலாம்.

இலிங்கோற்பவ மூர்த்தம்

இனி, திருமாலும் பிரமனும் தாம் தாம் பெரியர் என்று தம்முள் கலகம் விளைத்துத் தருக்கி நின்ற காலத்தில் தானே உற்பவித்து,

தானே விளங்கி பிரம விட்டுணுக்களுக்கு உண்மை உணர்த்த வெளிப்பட்ட 'இலிங்கோற்பவ மூர்த்தத்தை'த் தாம் அருளிய அத்துணைத் தலத் திருப்பதிகங்களிலும் எட்டாவது பாடலில் எடுத்துக் கூறி, விளங்க வைத்துள்ளார் திருஞானசம்பந்தர்.

திருஞானசம்பந்தரின் திருப்பதிகங்களில் எட்டாவது பாடலிற் குறிப்பிடப் பெறும் செய்தியின் வரலாற்றினை மட்டும் சிந்தித்து முடித்து விடுதல் கூடாது. ஒருபடி மேலே சென்று இலிங்கமே பரம விழுப்பொருள் என்ற செய்தியையும், அதுவே அனைத்துக்கும் அந்தம் ஆதி என நின்ற பெரும்பொருள் என்பதையும் அருளனுபவ அடிப்படையில் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

இலிங்கம் ஒரு காரணக்குறி

பன்னிரண்டாந் திருமுறை என்கிற பெரியபுராணத்தை இயற்றியருளிய சேக்கிழார் அடிகள் இலிங்கத்தின் இயல்பை எடுத்து விளக்க வருகின்ற இடத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டருளுகின்றார்.

மனிதர்கள் புறக்கண்களால் காணுகின்ற பருப்பொருள்களுக்கும் அவர்களால் அவ்வாறு காண்பதற்கு அருமையாக உள்ள அருவப் பொருள்களுக்கும் அடிப்படைக் காரணமாக அமைந்ததாகிய குறியே சிவலிங்கம் என்று விளக்குகின்றார் சேக்கிழார்.

> 'காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாம்
> நீள்நாகம் புனைந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்'

என்பது சேக்கிழார் வாக்கு. (பெ.புராணம். சாக்கியநாயனார் புராணம், செய்யுள் 8)

இலிங்க விளக்கம்

இலிங்கம் என்ற சொல்லைத் தொல்காப்பியம் நேரடியாக எடுத்து வழங்கவில்லையானாலும் சீன்பிரிலங்கி என்பார் இலிங்கத்தை ஆரியம் அல்லாத சொற்களின் பட்டியலில் இணைத்துள்ளார். 'இலிங்கம்' என்ற சொல்லானது ஆஸ்ட்ரோ-ஏஷியாடிக் (AUSTRO - ASIATIC) மொழியிலிருந்து வந்திருக்கிறது என்று கூறுகிறார். இலிங்கம் வடமொழியன்று என்று உறுதி

செய்யும் இவர் இலிங்க வணக்கம் ஆரியர் அல்லாதாருடையது என்றும் வரையறை செய்கிறார்.

இருக்கு வேதத்துள் பல தமிழ்ச்சொற்கள் கலந்துள்ளன. அவற்றுள் ஒன்று இலிங்கம் என்று சுனித்குமார் சாட்டர்ஜி குறிப்பிட்டுள்ளார்.

'இலங்கு' என்ற சொல்லைத் திருவள்ளுவர் எடுத்தாளுகின்றார்.

'விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்' (410)

மேற்கூறிய கருத்துகளையெல்லாம் இணைத்து நோக்கினால் இலிங்கம் என்பதும் இலிங்காயதம் என்பதும் தமிழக வரலாற்றில் தமிழக நாகரிகத்தில் இணைந்த ஒருவகை வழிபாட்டு முறை என்று தெளிவாகக் கூறலாம்.

இலிங்கத்தோடு தொடர்புடையதாக, கந்தழி வழிபாட்டையும் கொள்ளலாம். அவற்றையெல்லாம் இங்கே விரித்தால் அது நெடுந்தொடராய்ச் சென்றடையும்.

அகத்திநெறி

'இலிங்காயதம்' என்ற வழக்காற்றுக்கு அடிப்படைக் காரணமாக இருக்கும் செய்தி ஒன்றைத் திருமூலர் கூறுகின்றார்.

திருமூலர் தாம் அருளிய திருமந்திரம் என்ற நூலினுள் இரண்டாம் தந்திரத்திலும் ஏழாம் தந்திரத்திலும் இலிங்காயதத்துடன் இணையக்கூடிய செய்திகள் சிலவற்றை எடுத்துக் கூறுகிறார். அவற்றை முறைப்படுத்தியும் நெறிப் படுத்தியும் காணுதல் வேண்டும்.

இரண்டாம் தந்திரத்தில் முதல் தலைப்பானது 'அகத்தியம்' என அமைந்துள்ளது. இரண்டாம்தந்திரம் முழுவதும் புராணதந்திரம் என்று மதிப்பிடப் பெறுகிறது. புராண வரலாறுகள் பலவும் உண்மை நிகழ்ச்சியை மருட்கைச் சுவைபடப் பெரிதும் புனைந்துரைப்பனவும் உண்மைக் கருத்துகளை உருவகமாக்கி உரைப்பனவும் என இருதிறப்படும். காலப்பழமையால் அவ்இருவேறு திறங்களுள், இது இத்திறத்தது எனப் பகுத்து

உணர்தல் அரிது. ஆயினும், புராணக் கருத்துகளை அவ்வப்போது மக்கள் மனத்தினுள் பதிவு செய்தல் வேண்டும் என்ற அடிப்படையிலும் இத்தகைய புராணச் செய்திகள் சிவனையன்றிப் பிற கடவுளர்க்ளுக்கும் அவர்தம் அடியவர்களுக்கும் சொல்லப் பெறாமை கருதற்பாலது என்றும் மகாவித்வான் அருணைவடிவேலு முதலியோர் அவர்கள் திருமந்திர உரையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆயினும், புராணம் என்பதற்கு வேறு விளக்கமும் காணப் பெறுகிறது. திருவாசகத்து, முதல் தலைப்பாகிய சிவபுராணத்துக்கு 'அனாதி சத்காரியமாகிய பழமை' என விளக்கம் அமைக்கப் பெற்றுள்ளது.

புராணம் என்றால் அது பழைமையான உறவு என்றும் அது அநாதியானது என்றும் விளக்கம் கூறப் பெற்றுள்ளது.

'பழைமை என்பது யாதெனின் யாதொன்றும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு'

என்பது திருவள்ளுவர் காட்டும் விளக்கம். அது இங்கே சிவன் எனப்பெறும் இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் இடை அமைந்த நட்பு என்னும் உறவை விளக்குவதாகும் எனக் கொள்ளுதல் வேண்டும்.

அத்தகைய நட்பின் பெருமையை வரலாற்று நிகழ்வுடன் எடுத்துக் காட்டி விளக்குவதே இரண்டாந் தந்திரத்தின் மையக் கருத்தாக அமைந்துள்ளது என்று கொள்ளுதல் பொருத்த முடையதாகும்.

திருமூலர் காட்டும் அகத்தியம்

அகத்தியம் என்ற முதல் தலைப்பின் செய்தியை உரையாசிரியர்கள் தத்தம் போக்கில் எடுத்தமைத்து விளக்கியுள்ளார்கள். திருமூலர் எந்த ஒரு மையக் கருத்தின் அடிப்படையில் இதனை உணர்த்துகிறார் என்பதைத் தெளிவாக விளங்கிக் கொள்ள வாய்ப்பு இருந்தும் கூட, எக்காரணத்தாலோ உரையாசிரியர்கள் அவற்றைப் பின்பற்றாமை வருந்துவதற்குரியது.

'அகத்தியம்' என்ற தலைப்பிற்கு உரையெழுதியவர்கள் அகத்தியரின் பெருமை கூற வந்தது என்றே எழுதியுள்ளார்கள்.

அகத்தீயின் செயற்பாடுகள் என்றே உரை காண வேண்டும். அகத்தீயை உடையவன் எவனோ, அவன் அகத்தீயன். அகத்தியன் என வழங்குவதும் பொருந்தும்.

வேள்வி செய்பவர்கள் இருவகையினர். புலத்தீ- கண்ணாற் காணப்பெறும் வகையில் வெளியில் யாககுண்டம் அமைத்து, தீ வார்த்து அவிசொரிந்து தேவர்களுக்கும் பிறருக்கும் திருப்தியை உண்டாக்குதவன் மூலம் வழிபாடு செய்பவர்கள் இவர்கள். புலத்தீயர்- புலஸ்தியர் எனப் பெற்றனர். இராவணன் புலஸ்தியர் மரபில் வந்தவன்.

அகத்தீ என்பது தனிமனிதன் தன்னுடைய உடம்பகத்துள் ஒளியை வளர்க்கும் நிலை. அகத்தே தீவளர்க்கும் மரபினர் அகஸ்தியர் எனப் பெற்றனர். அதுவே அகத்தியம் என்ற சொல்லாயிற்று.

அகத்தீயன் என்பதற்கு இருதய வெளியுள் பரஞ்சுடரை எப்போதும் இருத்தி நிற்றலால் அகத்தீயன் என்ற பெயர் வந்தது என்பது மகாவித்துவான் அருணையார் உரை.

அகத்தீயன், அகத்தியன் என்ற சொற்களுக்குரிய உரை முன்னர் அமைக்கப் பெற்றது.

ஆயினும், திருமூலர் 'அகத்தியன்' என்று மட்டுமே சொல்லாது 'நடுவுள அங்கி அகத்தியன்' என்றும் சற்றே விரிவுபடுத்திக் கூறினார்.

நடுவுள அங்கி அகத்திய

'நடுவுள அங்கி' என்பதற்கு உரிய விளக்கம் வருமாறு.

'நடுவுள அங்கி அகத்திய' என்றதற்கு உடலின் நடு இடத்தே இருக்கும் இருதயத்தின்கண் உள்ள ஒளியை உடைய அகத்தியன் என்றும், நடுவுநிலைமை உடைய ஞானத்தை உடைய அகத்தியன் என்றும் உரைகண்டார் மகாவித்துவான் அருணையார்.

இவ்வுரைக்கு வேறாக, இல்லத்தில் மற்றும் பொது இடங்களில் வேள்வித்தீ அமைத்து, தீயை எழுப்புதல் மூன்று வகை. அகவனீயம்,

காருகபத்தியம், தாட்சிணாக்கினி என அவை பெயர் பெறும். அவற்றுள் காருகபத்தியம் என்பது நடுவுள் நின்ற தீயெழுப்பும் முறை. அது இல்லத்தில் வேள்வி செய்யும் முறை. காருகபத்ய வேள்வி முறையை அகத்தே வளர்ப்பவன் அகத்தியன் எனக் கொண்டு, நடுவுள அங்கி அகத்திய என்ற குறியீடு வந்தது என்ற உரையும் உண்டு.

அகத்திய நெறிவல்லார் இருவரே

இனி, உரைகளின் பொருத்தமுறு தன்மையை நிகழ்வுகளில் இணைத்துக் காணுதல் வேண்டும்.

தேவர்கள் பலரும் சிவனிடம் வந்து, எம்பெருமானே! ஈசனே! இந்த உலகமானது நடுவுநிலைமையில் நில்லாமல் சரிந்து கெடுகின்றது. காப்பாற்றி இவ்வுலகை நடுவுநிலைமையில் நிற்குமாறு செய்ய வேண்டும் என்று வேண்டினர்.

நடுவுநிலைமையில் நில்லாது உலகம் சரிந்து கெடுவது ஏன்? என்பதற்குரிய காரணத்தைத் திருமூலர் எடுத்துக் காட்டவில்லை. சிவன் மலைமகளை மலையரையனிடம் சென்று மணம்புரிந்த காலத்தில் அனைத்துத் தேவர்களும் ஒரே இடத்தில் கூடினமையால் வடபால் தாழ்ந்து தென்பால் உயர்ந்து உலகம் நிலை குலைவதாயிற்று என்பது வரலாறு. இதனை ஒழுங்குபடுத்தி நடுவுநிலையில் உலகை நிறுத்துவதற்குரிய ஆற்றல் இரண்டு பேருக்குத்தான் இருந்துளது. ஒருவர் திருமண நாயகர். மற்றவர் அகத்தியர். திருமண நாயகர் வந்து சரிப்படுத்த இயலாது. எனவே, அகத்தியரை அனுப்புகிறான் சிவன். வேறு எந்தத் தேவர்களுக்கும் அந்த ஆற்றல் இல்லை. இக்கருத்தையும் திருமூலரே கூறுகிறார்.

'அங்கி உதயம் வளர்க்கும் அகத்தியன்
அங்கி உதயம் செய்மேல் பாலவ னொடும்
அங்கி உதய வடபால் தவமுனி
எங்கும் வளங்கொள் இலங்கு ஒளிதானே'

என்பது திருமந்திரம், இரண்டாம் தந்திரம், அகத்தியம், செய்-2.

" 'புறத்தும் அகத்தும் சுடர்விட்டுளன் எங்கள் சோதி' (தி.3, பதி 54, பா.5) என்றபடி, புறத்தும் அகத்தும் தீயை உண்டாக்கி

வளர்க்கின்ற, மேற்றிசைக்கண் ஞானாக்கினியாய் விளங்கிய அகத்திய முனிவர் தென்திசையிலும், தவம் உடையவரே காணத் தக்கவராக அரிதில் விளங்குகின்ற தவக்கோலத்தை உடைய முனிவனாகிய சிவபெருமான் வடதிசையிலும் வீற்றிருந்து உலகம் முழுவதையும் விளக்குகின்ற ஒளியாய்த் திகழுகின்றார்கள்" என்பது மகாவித்துவான் அருணையார் உரை.

வடக்கில் கயிலாய மலையில் சிவபெருமானும் தெற்கில் பொதிய மலையில் அகத்திய முனிவரும் இருந்ததாலே இவ்வுலகம் வளப்பமும் ஞானமும் பெற்றுத் திகழ்கின்றது என்பது மேலே காட்டப் பெற்ற உரையின் தெளிவாகும்.

அகத்தியனார் திருக்கயிலையில் மேற்குப்பக்கம் தங்கியுள்ளார். அவர் அங்கியை உதயம் செய்யவும், உதயம் செய்த அங்கியை வளர்க்கவும் வல்லவர். அவ்விரண்டு செயல்களால் அவர் மேற்பாலவராக அமைந்துள்ளார்.

அடுத்தவர் வடபால் தவமுனி. அவர் அங்கியைப் போல் உதயம் செய்பவர். இவரை அங்கி (போல்) உதயம் செய்மேல்பால் தவமுனி என்கிறார் திருமூலர்.

அகத்தியர் திருக்கயிலையில் மேற்றிசைக்கண் இருப்பவர் என்று கூறுவதால் அவர் வீரசைவ மரபினர். வீரசைவத்தை வளர்ப்பதற்காக இறைவன் நினைத்தபோது, திருக்கயிலையில் மேற்குத் திசைக்கண் இருந்த சங்குகன்னரை அழைத்துப் பாலசித்தராக அனுப்பி வைக்கின்றார். மேற்றிசைக்கண் உள்ளவர்கள் எல்லாம் இறைவனை அவனுடைய சத்தியோசாத முகமென்னும் மேற்கு நோக்கிய முகத்தை நோக்கி நின்று பூசிக்கவும் நினைக்கவும் வல்லவர்களாய் வழிபாடு, செய்பவர்கள் என்பது வரலாற்றுண்மை.

அகத்தியருக்கு அடுத்ததாக உள்ளவர் வடபால் தவமுனி. அவரே, திருக்கயிலைச் சிவபெருமானார். இருவருக்கும் வேறுபாடு ஒன்று உண்டு.

சிவன் இயல்பாகவே அங்கி என்னும் ஞானாக்கினியாகத் தோன்றுபவர். அகத்தியர் ஞானாக்கினியைத் தோற்றம் கொள்ளச் செய்து வளர்ப்பவர் ஆவார்.

அகத்தியம் என்ற தலைப்பில் வரும் அங்கி என்ற சொல்லுக்கு ஞானாக்கினி என்றே பொருள் கொண்டு விட்டார்கள். அங்கி என்பதற்கு அங்காங்கி பாவத்தின் அடிப்படையில், 'அங்கி நின்று எங்கும் வளங்கொள் இலங்கு ஒளியை வளர்த்தவர்கள்' என்றும் 'அங்கத்தை உட்கொண்ட அங்கியை உதயம் செய்தார்கள்' என்றும் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

அகத்தியமும் பதிவலியும்

இரண்டாந் தந்திரத்தின் முதல் தலைப்பாகிய அகத்தியம் என்பதைப் பாடியதன் நோக்கம் என்ன? உலகமானது நடுவுநில்லாமல் சரிந்து கெடுகின்றது. அதை நடுவுநிலையில் நிறுத்தல் வேண்டும் என்பதே. அதைச் செய்வதற்கு அங்கி வளர்த்தல் எவ்வாறு பயன்படுகிறது? என்பதை ஆய்தல் வேண்டும்.

அகத்தியத்துக்கு அடுத்துள்ள தலைப்பானது பதிவலியில் வீரட்டம் எட்டு என்பது. இத்தலைப்பில் எட்டுப் பாடல்கள் உள்ளன. அட்டவீரட்டச் செயல்களில் பெரும்பாலும் புறவேள்விகள் செய்து அவற்றால் பெரும் வலிமை பெற்ற அசுரர்கள், மற்றையோர்கள் அழிக்கப் பெறுகிறார்கள்.

'பதிவலியில்' என்ற தொடருக்குச் சிவபெருமானது வலிமையால் என்று பொருள் கொள்ளப் பெற்றுள்ளது.

பரம்பொருளானது தன்னுண்மைத் தனிநிலையிற் சிவம் என்றும், அதுவே உலகத்தை ஐந்தொழிற்படுத்த வரும்போது 'பதி' என்றும் பெயர் பெறும் என்பது சைவசித்தாந்த வழக்கு.

திருமூலர் கருத்தைக் கூர்ந்து கவனித்தால், புறவேள்வி (புலத்தீ) செய்து அதனாற்பெறும் வலிமையைக் காட்டிலும் அகத்தீ வேள்வியாற் பெறும் பயன் உயர்ந்தது. வலிமை வாய்ந்தது என்ற பொருளில் திருமூலர் எடுத்துரைப்பதாகக் கொள்ள இடந் தருகிறது. அதனால் 'பதிவலிமை' என்பதற்குத் தலைமையாகிய வலிமை என்று பொருள் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

புறத்தீயை வளர்த்து, அதனாற் பெறும் வலிமையை விட, அகத்தீயை வளர்ப்பதாற் பெறும் பயன் தலைமையானது;

வலிவானது என்ற கருத்தை உள்வாங்கிக் கொண்ட அளவிலேயே திருமூலர் இரண்டாந் தந்திரத்தை அமைப்பதாகக் கொள்ளலாம்.

அகத்தீ வளர்த்தல் அங்கியோகம்

அகத்தீ வளர்க்கும் முறையை ஒருவகை யோகம் என்றே திருமூலர் குறிப்பிடுகின்றார்.

> 'மூலத் துவாரத்து மூளும் ஒருவனை
> மேலத் துவாரத்து மேலுற நோக்கி, முற்
> காலுற்றுக் காலனைக் காய்ந்து அங்கி யோகமாய்
> ஞாலக் கடவூர் நயமாய் இருந்ததே'

என்பது 'பதிவலியில் வீரட்டம் எட்டு' என்ற தலைப்பில் அமைந்த ஏழாம் பாடல்.

'மூலாதாரமாகிய இடத்தில் தலைவைத்துக் கீழ்நோக்கித் துயில்கின்ற நாகராசனை (குண்டலினியை) அதன்மேல் உள்ள சுழுமுனைக்கு மேலதாகிய புருவமத்தியில் இலாடத்தானத்தை நோக்கி நிற்குமாறு எழுப்பி, அதன்பொருட்டு வாயுக்களுள் முதலாவதாகிய பிராண வாயுவைச் சுழுமுனை நாடியின் அடியில் நிறுத்தி, அத்தகைய வாயுப் பயிற்சியாலே, தனக்கு அளந்த வாழ்நாள் எல்லைக்கண் கூற்றுவன் வந்து, தன்னை அணுகாதவாறு தடுத்து, திருக்கடவூரில் நலத்துடன் நீடுவாழ்கின்றமை வியப்பே' என்பது மகாவித்துவான் அருணையார் கொண்ட விளக்கம்.

மேற்குறிப்பிட்ட விளக்கம் பொருந்துவதாயின் அதனைக் 'குண்டலினி யோகம்' என்றே கூறிவிடலாம். அவ்வாறில்லாமல் திருமூலர் அதற்கு 'அங்கியோகம்' என்ற பெயரை அமைக்கிறார். இனி அடுத்த பாடல்,

> 'இருந்த மனத்தை இசைய இருத்திப்
> பொருந்த இலிங்க வழியது போக்கித்
> திருந்திய காமன் செயல்அழித்து அங்கண்
> அருந்தவ யோகம் கொறுக்கை அமர்ந்ததே'

என வருகிறது. இது 'பதிவலியில் வீரட்டம் எட்டு' என்ற தலைப்பில் அமைந்த எட்டாம் பாடல். இதனுள் மன்மதனை அழித்த செயல் கூறப்படுகின்றது.

இப்பாடலுக்கு அருணையார் விரிவாக எழுதவில்லை என்பதுடன், 'அருந்தவயோகம்' என்பது அனைத்துச் சமயத்தவர்களுக்கும் பொதுவானது என்றும் குறிப்பிடுகிறார். சிவனுக்கே உரிய வரலாறு என்று முன்மொழிந்து கொண்டு விளக்கம் காட்டிய அருணையார் அவர்கள் இது அனைத்துச் சமயத்தவர்களுக்கும் பொது என்பது பொருந்துமாறில்லை.

ஆன்மாவுக்கு அகக்கருவியாக இருந்த மனத்தை, தான் மேற்கொள்ள இருக்கும் அருந்தவயோகத்துக்குப் பொருந்துமாறு நிலைநிறுத்தி, பின் ஆன்மாவானது தன்னுட் பொருந்திய ஒளிநெறியில் இலிங்க வழியில் செலுத்தினால் காமனை அழிக்கலாம். அது அருந்தவயோகம். இலிங்க வழியில் செலுத்துதல் என்பது தன்னுள் இயற்கையாகப் பொருந்தியிருக்கிற ஒளிவழி ஆறு உண்டு. அவ்வழியிற் செலுத்தினால் அருந்தவயோகம் கைகூடும் என்பது திருமூலர் கருத்தாகிறது.

ஆன்மாவுக்குக் கருவியாக இருந்தும் ஆன்மாவுக்கு உறுதுணையாக நில்லாமல் வெளியில் விரிந்து பரந்து சென்று ஆன்மாவுக்கு அடங்காதிருந்த மனத்தை, ஆன்மாவானது தனக்கு உறுதி தரும் வழியில், தனக்கு இசையும் முறையில் இருத்துதல் வேண்டும். பின்னர், ஆன்மாவானது தன்னுள் முன்னமேயே பொருந்தி இருந்த ஒளிவழியில் தன்னை இணைத்துக் கொண்டு மேன்மேற் செல்லுதல் வேண்டும் என்பது அப்பாடலின் பொருளாக அமைகிறது. இது குண்டலினி யோகம் அன்று. ஆறாதார யோகமே என்றாலும் இது இலிங்கவழி அல்லது ஒளிவழியிற் செல்லும் யோகம் என்பதை உணர்ந்து வேறுபடுத்திக் காண வேண்டும்.

அங்கியோகம் - விளக்கம்

இரண்டாம் தந்திரத்தின் 'அகத்தியம்' பதிவலியில் வீரட்டம் எட்டு என்ற இரண்டு தலைப்புகளில் வந்த சில செய்திகளைச் சற்று விரித்துப் பொருள் காணுதல் வேண்டும். அவை யாவை?

1. *நடுவுள அங்கி அகத்திய!* *(333)*
2. *அங்க முதல்வன்* *(338)*
3. *அங்கி யோகம்* *(341)*
4. *அருந்தவயோகம்* *(3420.*

புறத்தே வேள்விசெய்து அந்த வேள்வியில் மூன்று வகையான தீயை வளர்த்து முழங்குமாறு செய்து, அவற்றின்மூலம் பல்வேறு பொருள்களை எழுமாறு செய்து அவற்றையெல்லாம் ஈசன்மேல் ஏவிய காலத்தில் ஈசன் அவற்றையெல்லாம் தன்னுடைய அக்த்தீ வலிமையால் ஏற்றுக் கொண்டதோடு யானை முதலியவற்றை உரித்துப் போர்த்துக் கொண்டான். பல தேவர்களும் புற வேள்விகளை எழுப்பிப் பல்வேறு சக்திகளைப் பெற எண்ணினார்கள். ஆனால், நடைபெற்றது என்னவோ இதுதான்; வேள்விக்களம் கொலைக்களம் ஆனது.

புறத்தே எரி எழுப்பிச் செய்யப்பெறும் வேள்வியை மறுத்தபின் அகவேள்வியை எவ்வாறு விளக்கம் செய்கிறார் திருமூலர் என்பதையும் நாம் விளக்கமாகச் சிந்தித்தல் வேண்டும்.

அகவேள்வியின் தன்மை என்ன? என்ற வினாவுக்கு விடை காண வேண்டுமென்றால் வேறுசில திருமந்திரப் பாடல்களையும் இணைத்துச் சிந்திக்க வேண்டும்.

அங்கியோகம் என்பதற்கு இதுவரையில் குண்டலினி யோகத்துடனும், ஆறாதார யோக முறையில் பல்வேறு கடவுளர்களை வைத்துச் சிந்தித்து எழுப்பும் யோகத்துடனும் இணைத்து, அகத்தில் எவ்வாறேனும் ஞானாக்கினியை வளர்ப்பதே குறிக்கோள் என்று உரை கண்டுள்ளார்கள்.

அவ்வாறு அறிஞர்கள் விளக்கம் கொள்வதற்குக் காரணமாய் நின்றது 'அங்கியோகம்' என்ற கலைச்சொல்தான். அங்கி என்பதை நெருப்பு எனக்கொண்டு நெருப்பை வெளிப்படுத்தும் முறையும் இத்தகைய செயல்களில் காணப் பெறுவதால் அங்கியோகம் என்பதற்கு ஆறாதாரங்களில் கீழிருந்து மேல்நோக்கிச் செல்லும் பல்வேறு வழிகளில் ஏதேனும் ஒன்றைப் பின்பற்றி ஞானாக்கினியை வளர்க்க வேண்டும் என்றே உரை கண்டுள்ளார்கள். பதிவலியில் வீரட்டம் எட்டு என்ற தலைப்பில் அமைந்த 338ஆம் பாடல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

'எங்கும் கலந்தும் என்உள்ளத்து எழுகின்ற
அங்க முதல்வன் அருமறை ஓதிபால்
பொங்கும் சலந்தரன் போர்செய்ய நீர்மையின்
அங்கு விரல் குறித்து ஆழி செய்தானே'

இப்பாடல் சலந்தரனை அழித்த முறையைக் கூற வந்தது. இதனுள் அங்க முதல்வன் அருமறை ஓதி என்பதற்கு ஆறங்கங்களையும் வேதங்களையும் ஓதுகின்ற இறைவன் எனப்பொருள் கொண்டனர்.

வேதங்களை ஓதுகிறவன் வேதியன் என்றும் வேதங்களை உண்டாக்கியவன் என்றும் மரபுவழி அமைக்கப் பெறுதலின் அங்கமுதல்வன் என்பதற்கு வேறுபொருள் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

'அங்கம்' என்பது உடல். உடலுக்கு உரிமையுடையவன் ஆன்மா. ஆன்மாவும் இறைவனுக்கு அங்கம். எனவே, அங்கமாகிய ஆன்மாவுக்கு முதல்வன் இறைவன் என்று பொருள் கொள்ள வேண்டும். ஆன்மாவாகிய அங்கத்துக்கு எப்போதும் மூலமந்திரங்களை அருளிச் செய்து கொண்டிருக்கிறான் இறைவன். ஆதலின் அவனை அங்க முதல்வன் அருமறை ஓதி என்று கூறினராதல் வேண்டும்.

இச்செய்தியை மேலும் விரிவாக விளங்கிக் கொள்வதற்கு, திருமந்திரம் ஏழாந் தந்திரம் சம்பிரதாயம் என்ற தலைப்பில் உள்ள இரண்டு பாடல்களைத் துணைக்கொண்டு தெளியலாம்.

'நான் இது தான்என நின்றவன் நாடொறும்
ஊன்இதுதான் உயிர்போல உணர்வான் உளன்
வான் இருமாமழை போல் பொழிவான் உளன்
நான் இதுவாம் பரன் நாதனும் ஆமே' *(1767)*

உயிர் என்றும் உடம்பு போல இருக்க அதன்கண் உயிர்போல நின்று அறிகின்ற ஒருவன் உளன். அவன், 'இவ்வுயிர் நானே' எனத் திருவுளம் செய்து, அவ்வுயிரின் உள்ளத்தில் தனது கருணையை வானத்தில் உள்ள கரிய பெரிய மேகம் பொழிவதுபோலப் பொழிவான். 'இவ்வுயிர்யான், எனத் திருவுளம் செய்கின்ற அவன் குருவுமாய் வந்து மூலமந்திரங்களை- அருமறைகளை உணர்த்துபவனும் ஆவான். இதுவே உள்நின்று உணர்த்தும் முறை. (இது மகாவித்துவான் அருணையார் உரையைத் தழுவிய விளக்கம்)

இனி, அடுத்த பாடலையும் இங்கே உணர்ந்து கொள்ளுதல் நன்மை பயப்பதாக அமையும்.

'பெருந்தன்மை தான்என யான்என வேறாய்
இருந்ததும் இல்லை அதுஈசன் அறியும்
பொருந்தும் உடல் உயிர்போல் உண்மை மெய்யே
திருந்த முன்செய்கின்ற தேவர் பிரானே' (7:8:14) 1768)

என்பது திருமந்திரப் பாடல்.

உண்மையை உண்மையாக உணர்ந்து உயிர்கள் செம்மை எய்தும் வண்ணம் செய்கின்ற சிவன் மிக உயர்ந்த (தீர உயர்ந்த) பெருந்தன்மையை உடைய தான் (இறைவன்) அங்கே எனவும் மிக இழிந்த (தீர இழிந்த சிற்றஞ்சிறு தன்மையை உடைய யான் இங்கே எனவும் இவ்வாறு வேறு வேறாய் முன்பு இருந்ததும் இல்லை. இனி, இருக்கப்போவதும் இல்லை. மற்று, உயிரில் உயிர் வேறறக் கலந்து இருப்பது போல அவன் என்றும் என்னுள் கலந்தே இருக்கின்றான். ஆயினும் ஈசன் அறிவான்; யான் அறிதல் இல்லை.

மேலே குறிப்பிடப் பெற்ற இரண்டு திருமந்திரப் பாடல்களின் உட்கருத்தை நோக்கும்போது திருமூலர் அங்கியோகம் என்று கூறுவதற்கு ஞானாக்கினியை அடிப்படையாக அமைத்துக் கொண்டு அதனைப் பெறும் யோகம் என்று பொருள் கொள்வதை விட அங்கம் அங்கி என்ற இணைப்பை வலியுறுத்தும், யோகம் என்று கொள்ளலாம்.

'உடல் உயிர்' என்ற உறவின் அடிப்படையில் அமைந்து பெறும் யோகத்தை அங்கியோகம் என்றும் அருந்தவயோகம் என்றும் கொள்ளலாம்.

அங்கி என்ற சொல்லாட்சியானது நெருப்பு என்றும் அங்கத்தை உடையது என்றும் இருபொருள் பயக்கும் ஒரு சொல்லாக அமைந்து விட்டமையால் அறிஞர் பெருமக்களால் ஞானாக்கினியை எழுப்பும் முறையே என்று பொருள் கொண்டு விட்டனர். 'அங்கம் அங்கி' என இணைத்துப் பொருள் கொள்ளும் முறையை அறிஞர் பெருமக்கள் சிந்திக்கவில்லை. சிந்திப்பதற்கு உரிய வாய்ப்பு அமையவில்லை.

இனி, அங்கியோகத்தை விளக்கும் திருமந்திரப் பாடலின் விளக்கத்தைக் காணலாம்.

அதோமுகமும் அங்கியோகமும்

பரம விழுப்பொருள் என்றும் பரம்பொருள் என்றும் கருதி உணர்ந்தும் உரைத்தும் வருகின்ற பொருள், 'ஏகம்' எனப் பெறும். அது ஆன்மாக்களில் 'அதோமுகம்' எனப்பெறும், முதன்மை முகம் கொண்டு தங்கியது. ஏகம் என்ற பரம்பொருளின் ஓர் அம்சம் உலகப் பொருள்களில் அசத்துப் பொருள்களில் இறைவன் எனக் கலந்து நின்றது. இதனை மணிவாசகர் '**ஏகன், அநேகன், இறைவன் அடி வாழ்க!**' என்று குறிப்பிடுவாராயினார். இது முன் கட்டுரையிலும் விளக்கப் பெற்றது.

மூலாதாரத்தில் ஆன்மாவைத் தாங்கிக் கொண்டு படுத்திருக்கும் அதோமுகலிங்கமே நந்தி எனப்பெற்றது. அதனாலேயே அதோமுகத்தை மூலத்துவாரத்து மூளும் ஒருவன் என்றார். குண்டலினியை ஒருவன் என்று சொல்லும் வழக்கு இல்லை.

அதோமுகலிங்கம் படுத்திருப்பதாகத்தான் வீராகமம் கூறுகிறது. அதோமுகலிங்கத்தை மேலே உள்ள ஐந்து வழிகளில் மேலேறிச் செல்லுமாறு எழுப்புதல் வேண்டும். அதற்கு என்ன வழி?

'முன்கால் உறுதல் வேண்டும்'

இறைவன் ஆன்மாக்களின் மேல் முதன்முதலாகத் தன்னைப் பதிவு செய்தது அன்பினால். அன்பே - கருணையே முதற்கால். இரண்டாவது கால்தான் உபதேசபரமாக அமைந்த ஞானம். ஆன்மாக்களும் அதோமுகப் பரம்பொருளை எழுப்புவதற்கு அன்பைப் பெருக்குதல் வேண்டும். 'பேரன்பே இன்னும் பெருக்கு' என்றார் காரைக்கால் அம்மையார்.

'தம்மிற் சிவலிங்கம் கண்டதனைத் தாம்வணங்கித்
தம்மன்பால் மஞ்சனநீர் தாமாட்டித் - தம்மையொரு
பூவாக்கிப் பூவழியா மற்கொடுத்துப் பூசித்தால்
ஓவாமை யன்றே யுளன்'

என்று திருக்களியாற்றுப்படியார் கூறும்.

ஆன்மாவானது அதோமுகத்தின்மேல் நினைவை அமைத்து அன்பைப் பெருக்கி அழுதுகொண்டிருக்குமேயானால், அதோமுகப்

பரமானது மேல்நோக்கி ஆன்மாவைத் தாங்கிக் கொண்டே எழும். மேல் உள்ள ஐந்து நிலைகளிலும் ஐந்து இலிங்க வழிகள் உண்டு. அந்த வழியைத்தான் திருமூலர் **'இருந்த மனத்தை இசைய இருத்திப் பொருந்த இலிங்க வழியது போக்கி'** என்று குறிப்பிட்டருளினார்.

முற்கால் உறுதல் என்பது அயரா அன்பினைப் பொழிந்து அழுதல். அன்புப் பெருக்கத்தால் காலனைக் காய்ந்து அவனுக்கும் ஆன்மாவாகிய நமக்கும் உள்ள தொடர்பை அறுத்து விடலாம். இம்முறையையே 'அங்கியோகம்' என்றார்.

அதோமுகமே நந்தி

இலிங்க வழியிற் செல்லுதல் என்பதால் நெருப்புடன் - ஒளியுடன் தொடர்பு என்றாலும் பிறவழியில் ஞான அக்கினியை எழுப்புதல் இந்த அங்கி யோகத்தில் இல்லை.

அங்கியோகத்தில் ஆன்மாவை அங்கமாகக் கொண்டு ஆன்மாவின் உள்ளிருக்கும் அதோமுகப் பரம்பொருளை அன்பால் எழுப்புதல் வேண்டும். ஆன்மாவைத் தாங்கிப் படுத்திருக்கும் அதுவே மேலெழுந்து நின்றும் சென்றும் நிறைநிலை அடைகின்ற காலத்து **'நந்தி'** எனப் பெயர் கொண்டு விளங்கும்.

நடுவுள அங்கி என்பதன் பொருள்

அங்கம்- அங்கி உறவை வலியுறுத்தும் அங்காங்கி யோகமே இவ்விடத்தில் திருமூலரால் கூறப்பெற்றது என்பது உண்மையாயின், **'நடுவுள அங்கி அகத்திய'** என்று அகத்தியரைக் குறிப்பிட்டதன் பொருள் என்ன?

> **அங்கி எனப்பெறுவது அங்கத்தை உடையது.**
> **அங்கத்தை இயக்குவது .**
> **அங்கம் எனப்பெறுவது உறுப்பு.**
> **அது அங்கியால் இயக்கப்பெறுவது.**

என்பது அங்கி, அங்கம் என்பனவற்றின் பொதுப்பொருள்.

அங்கி எண் 1

அண்டம் பெரியது, பிண்டம் சிறியது. பிண்டம் என்பது மனித உடம்பு. அண்டத்தில் உள்ளவையெல்லாம் பிண்டத்தில் உண்டு. அண்டமானது பிண்டத்தின் நன்மைக்காக. பிண்டமானது அண்டத்தை ஏவல் கொள்ளும் ஆற்றல் வாய்ந்தது. ஐம்பூதங்களை ஆட்டிப் படைக்கலாம் பிண்டம். அவ்வகையில் அண்டமானது அங்கம், பிண்டம் என நின்ற உடம்பு அங்கி என நின்றது.

அங்கி எண் 2

உடல் அங்கம். உடலை இயக்கும் உயிர் அல்லது ஆன்மாவானது அங்கி. உடல் உயிர் இணைப்பானது அங்காங்கி உறவில் அமைந்ததே.

அங்கி எண் 3

உயிரினுள் இருந்து இயக்கும் பரம விழுப்பொருள். அது எப்பொழுதும் அங்கியே. எக்காலத்திலும் அது யாருக்கும் அல்லது எதற்கும் அங்கமாக இருத்தல் இல்லை. அது எக்காலத்தும் அங்கியே.

குகபர சாயுச்சியம் பேசுவோர் மட்டும் குகன் என்ற சொல்லுக்கு உரை கூறுங்கால் குகனும் ஆன்மாவுக்கு அங்கமே என்பர்.அது நிற்க.

மேலே கூறப்பெற்ற மூவகை அங்கிகளில் முதல் நின்ற அங்கியானது பரம்பொருள். அது எப்போதுமே அங்கிதான். அது எவ்விடத்தும் அங்கமாக நிற்றல் இல்லை. இறுதியில் நின்ற பிண்டம் என்ற உடலானது அளவையியல் முறைப்படி அமைந்த அங்கி.

உடலானது அண்டத்தை நோக்க அங்கியாக நின்றாலும் உயிரை நோக்க அங்கமே.

இடையில் நின்ற உயிரானது உடம்பை நோக்க அங்கி. உள்நின்று இயங்கும் இறைவனை நோக்க அங்கம். அவ்வகையில் அகத்தியரைக் குறிக்கும்போது நடுவுள அங்கி அகத்திய என்று குறிப்பிட்டுக் காட்டினான் சிவன் என்று கொள்ளுதல் வேண்டும்.

இறைவன்-இலிங்கம் அங்கியாக, ஆன்மா அங்கமாக நின்று இணைந்து, அன்பைப் பெருக்கி இணைந்து, ஒன்றுபடும்

கூட்டுறவே அங்காங்கி யோகம் எனப்பெற்றது எனக் கொள்ள வேண்டும்.

அங்கியோகமும் சடுத்தலமும் 32

அங்காங்கி யோகம் எனப் பெறுவதே அங்கியோகம் எனப் பெயர் பெற்று, வீரசைவ சித்தாந்தத்தில் சடுத்தல யோகமாக அமைந்து நின்றது.

சடுத்தல யோகம் என்பதற்கு அறுவகை இணைப்பு என்று கொள்ளுதல் வேண்டும்.

1. பக்தன் அங்கமாக இருக்க ஆதார லிங்கம் அவனுக்கு அங்கியாக இருந்து இரண்டும் இணையும்.
2. மகேசன் அங்கமாக இருக்க குருலிங்கம் அவனுக்கு அங்கியாக இருந்து இரண்டும் இணையும்.
3. பிரசாதி அங்கமாக இருக்க, சிவலிங்கம் அவனுக்கு அங்கியாக இருந்து இணையும்.
4. பிராணலிங்கி அங்கமாக இருக்க, சங்கமலிங்கம் அங்கியாக இருந்து இணையும்.
5. சரணன் அங்கமாக இருக்க, பிரசாத லிங்கம் அங்கியாக இருந்து இணையும்.
6. ஐக்யன் அங்கமாக இருக்க மகாலிங்கம் அங்கியாக இருந்து இணையும்.

சடுத்தலயோகமே அங்காங்கி பாவயோகம். அதுவே அங்கியோகம் என நின்றது. இதனைத் திருமூலரின் வரலாறு கொண்டும் வேறு சில சான்றுகள் கொண்டும் தெளியலாம்.

முதன்முதலில் தனிமனிதன் தனக்கு அளிக்கப் பெற்ற பருவுடம்பைச் சத்தியமானது என்று கருதவேண்டும். பொய்யான உடம்புக்கு 'மெய்' என்று பெயர் அமைத்தது மங்கல வழக்கு என்பது இலக்கண மேற்கோள். அது பொருந்தாது.

உடம்பானது உண்மையில் சத்தியப் பொருளே. அதனை ஒளிமிகுந்த வடிவமாக மாற்றியமைக்க முடியும்.

'நிழல் தன்னை வீயாது அடியுறைந் தற்று' என்ற வள்ளுவர் வாக்கினுக்கு ஏற்ப, நிழல் உடையதாக இன்று விளங்கும் இந்த உடம்பானது நிழலே இல்லாத ஒளியுடம்பாக மாற்றப் பெறும். அப்போது நமன் வருவது இல்லை. நமன் தமர்களும் வருதல் இல்லை.

நிழலும், இருட்டும், பொய்யும் செறிந்த இந்த உடம்பை என்றும் அழியாத சத்திய உடம்பாக- ஒளி உடம்பாக மாற்றும் முறையை எடுத்துக்கூறுவதுதான் இலிங்காயதம் என்ற முறை. இதனை, ஒருவகை யோக முறை என்றும் கொள்ளலாம்.

திருமூலர் வரலாற்றின் உட்பொருள்

திருமூலர் வரலாற்றைத் தெளிவாக ஆராய்ந்தால் சில உண்மைகள் புலப்படும். திருமூலர் முதன்முதலில் சிறந்த சிவயோகியாக இருந்தவர். யான் இங்கே வரலாற்றுச் சிக்கலை எழுப்பவில்லை.

சிவயோகியார் ஒருவர் தெற்கின்கண் பொதியமலையில் உள்ள அகத்தியரைக் காண வருகிறார். கூடுவிட்டுக் கூடு பாய்தல் முதலிய எண்வகைச் சித்திகளையும் யோகத்தால் பெற்றவர் அவர். அவருடைய யோகமுறையை 'ஆறாதார யோகம்' என்னும் 'குண்டலினி யோகம்' என்றும் அறிஞர்கள் விளக்கியுள்ளார்கள்.

கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகளும் ஆறாதார விளக்கம் அளித்தருளுகின்றார்.

வள்ளிகாவை என்ற ஊரில் நிராங்காரன் சுஞ்ஞானி என்ற இருவரும் இல்லறம் நடத்தி வந்தனர். மகப்பேறு இல்லை. மகப்பேற்றை விரும்பிய நிராங்காரன் சுஞ்ஞானி என்ற தன் மனையாட்டியோடு உடலுறவைத் தவிர்த்து ஒருவகை யோகநெறியை மேற்கொண்டார். கீழ்நோக்கிச் செல்லும் வாயுவையும் மேல்நோக்கிச் செல்லும் வாயுவையும் தடுத்து சுழுமுனை வழியாகச் செலுத்தி, மனத்தை விடயங்களிற் செல்ல விடாது திருப்பி,

நான்கு இதழ்களையுடைய தாமரையைக் கடந்து

ஆறு இதழ்களையுடைய தாமரையைக் கடந்து

பத்து இதழ்களையுடைய தாமரையைக் கடந்து

பன்னிரண்டு இதழ்களையுடைய தாமரையைக் கடந்து

பதினாறு இதழ்களையுடைய தாமரையைக் கடந்து

இரண்டு இதழ்களையுடைய தாமரையைக் கடந்து

(இவை முறையே மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என வரிசைப்படுத்தப் பெறும்)

மேலே சென்று ஆயிரம் இதழ்களையுடைய தாமரையின்மேல் வீற்றிருக்கும் சோதியைக் கண்டு என் எண்ணத்தை முடிப்பேன் என்று எழுந்த நிராங்காரனார் தம் மனைவியையும் அழைத்துக் கொண்டு காட்டை அடைந்து கமலாசனமாக அமர்ந்து விழியை அளவாக மூடி மனத்தைத் திறந்து, இட்டலிங்கத்திற் பதித்து, இடகலை, பிங்கலை வழியாற் செல்லும் காற்றினை மாற்றிச் சுழுமுனையில் நிறுத்தி, அறிவு மாறுபடாமல் இருப்பதற்காக 'சிவோகம்' என்ற மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு, குறியற்ற குறியைக் குறித்து, ஒன்பது திங்கள் சிவயோக சமாதியில் இருந்தார். நிராங்காரனுடைய நெற்றியின்கண் பரஞ்சோதி திரண்டு குழந்தை உருவை அடைந்து, வெளியில் வந்து கிடந்தது. அக்குழந்தையே அல்லமாப் பிரபு தேவர்.

இது சிவபரம்பொருள் முருகனை வெளிப்படுத்திய வரலாற்றை ஒத்ததாக அமைகிறது.

நிராங்காரன் மேற்கொண்ட யோகம் எந்த வகையைச் சார்ந்த யோகம்? என்ற வினா எழுகிறது. தொடக்கத்தில் குண்டலினி யோகமாக, பின்னர் சிவோகம் பாவனையை வலியுறுத்தும் சிவயோகமாக, பின்னர் இட்டலிங்க யோகமாக அமைந்திருப்பதைக் காண முடிகிறது.

அகத்தியரைக் காண வேண்டும் என்று தென்னாடு நோக்கிப் போந்த சிவயோகியார் தென்னாட்டின்கண் அமைந்த சாத்தனூரை அடைந்தபோது அங்கே ஓர் அற்புதம் நிகழ்கிறது.

சாத்தனூரில் மாடுகளை மேய்க்கும் அந்தண குலத்தைச் சேர்ந்த மூலன் என்பான் இறந்து விடுகிறான். இறந்து கிடந்த மூலனைச்

சுற்றி அவனால் வளர்க்கப் பெற்ற மாடுகள் எல்லாம் கதறி அழுது கொண்டிருந்தன.

இடையன் இறந்து கிடப்பதையும் மாடுகள் சுற்றிச் சுற்றி வந்து கதறி அழுவதையும் கண்ட சிவயோகியாருக்கு இரண்டு செய்திகள் தெளிவாகத் தெரிந்தன.

1. மாடுகள் கதறி அழும் அளவுக்கு அவற்றிடம் அன்பைச் செலுத்தி வளர்த்திருக்கிறான் அந்த மூலன் என்னும் இடையன். ஐந்தறிவுடைய உயிர்களும் அன்பால் அழுது அரற்றும் அளவுக்கு அவற்றை அன்பால் வளர்த்திருக்கிறான் என்பது ஒரு செய்தி.

2. மூலன் என்ற இடையன் உயிர்பெற்று எழுந்தாலொழிய, மாடுகளின் அழுகையை வேறுவகையால் மாற்ற இயலாது என்பது இரண்டாவது செய்தி.

திருஞானசம்பந்தரைப் போல, திருநாவுக்கரசரைப் போல, சுந்தரரைப் போல இறந்தாரை எழுப்பும் வலிமை பெற்றிருந்ததாக வடக்கிருந்து வந்த சிவயோகியாரை நாம் எண்ணுவதற்கு இடம் இல்லை.

ஆனால், கூடுவிட்டுக் கூடு பாய்வதன்மூலம் தன்னுடம்பைத் தனிநிறுத்தி விட்டுத் தான் (உயிர்) மட்டும் மூலன் உடம்பில் புகுகிறார். இப்போது சிவயோகியார் மூலன் என்ற உடம்புடன் எழுகிறார். பின்னர் தன் உடம்பை (சிவயோகியாராக இருந்த உடம்பை) மறைத்து வைக்கிறார். மீளவும் வந்து அதில் புகுவதற்காக.

இறந்தாரை எழுப்பும் அளவுக்குச் சிவயோகியார் சித்தி பெறவில்லை என்பது தெளிவு.

மூலன் என்ற இடையனைப் பொறுத்தவரையில் ஐந்தறிவுடைய மாடுகள், அவைபோன்ற பிற உயிர்கள் எல்லாம் அன்பை அனுபவித்து உணரும் வகையில் அன்பைச் செலுத்தும் ஆற்றல் பெற்றிருந்தான். ஆயினும் இத்துணை அன்பைப் பொழிந்தவன் தன்னைச் சாகாமல் வைத்துக் கொள்வதற்குரிய அறிவாற்றலைப் பெற்றுக் கொள்ளவில்லை.

இந்நிலையில் மூலன் உடம்பில் இருந்த சிவயோகியார், தன்னுடைய கடமைகளை முடித்து விட்டு, மனைவிக்கு (இடையன் மனைவிக்கு) உண்மையை உணர்த்தி விட்டு, அவளைப் பிரிந்து வந்து காட்டில் தனியிடத்தில் மறைத்து வைத்த தன் உடம்பைத் தேடுகிறார். அது கிடைக்கப் பெறவில்லை. மூலன் உடம்பிலேயே தங்க வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்படுகிறது.

மூலன் உடம்பில் சிலநாள்கள் வாழ்ந்தபோதுதான் அவ்வுடம்பின் அருமை அவருக்குப் புலப்படுகிறது. இடையன் உடம்பின் அருமையை உணர்கிறார்.

'பின்னை நின்று என்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல்தவம் செய்திலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே'

என்பது திருமந்திரம் 20ஆம் பாடல்.

மூலன் என்ற இடையன் உடலில் புகுந்தபின் சிவயோகியாருக்கு அகத்தியரைக் காணவேண்டும் என்ற குறிக்கோள் மறந்து போய்விட்டது. இன்னொரு பிறவி எடுக்க வேண்டியிருக்கும் என்று எண்ணியிருந்தார் போலும்! அது தேவையில்லை என்பதாகவே உணர்கிறார். இடையன் பிறவி போன்ற நல்ல ஒரு பிறவியை எடுத்து வாழ்வதற்குரிய தவத்தை முற்பிறவியில் நான் செய்தேனில்லை. செய்திலர் என்ற பாடத்தை விடச் செய்திலன் என்ற பாடமே சிறந்தது.

இப்போது என்னை இறைவன் நன்றாக, நல்லதோர் பிறவியில் படைத்திருக்கிறான். ஆதலினால் இறைவனை நான் இன்பப் பொருளாக அனுபவித்தல் (தமிழ் செய்தல்) வேண்டும் என்று விரும்புகின்றார்.

யோகம், ஞானம் ஆகியவற்றில் வல்லவராகவும் சித்தாடல் புரியவல்ல சித்தராகவும் இருந்த சிவயோகியாருக்கு தான் இருந்த உடலிலேயே அருளின்பம் அனுபவிக்க முடியவில்லை. அந்த வகையில் அவர் தம்முடைய உடம்பை நெறிப்படுத்திக் கொள்ளவில்லை. ஆனால், அருளின்பம் துய்ப்பதற்கு ஏற்ற

வகையில் இடையன் தன் உடம்பை அமைத்துக் கொண்டிருந்திருக்கிறான். ஆனால், தன் உடம்பில் சாகாமல் வாழ்வதற்குரிய- இறையின்பம் துய்ப்பதற்குரிய வழிவகைகளை அறியும் ஞானம் இல்லாதவனாக இருந்திருக்கிறான்.

சிவயோகியாருக்காகத் தன் உடலை வளர்த்து விட்டு இடையன் இறந்தானா? இடையன் வளர்த்த உடம்பின் அருமையைச் சிவயோகியார் உணரவேண்டும் என்பதற்காக, இறைவனே இருவருக்கும் உடல் மாற்றம் செய்தானா? என்பன ஆய்வுக்குரிய வினாக்கள்.

ஆயினும் பாயிரப்பகுதி, உபதேசப்பகுதி ஆகியவற்றில் இவ்வினாக்களுக்கான விடை தெரியும் வகையில் சில பாடல்களை அருளிச் செய்திருக்கிறார் திருமூலர்.

'நந்தி அருளாலே நாதனாம் பேர்பெற்றேன்
நந்தி அருளாலே மூலனை நாடினேன்
நந்தி அருளாலே தேன்செயு நாட்டினில்
நந்தி வழிகாட்டி நானிருந் தேனே'

என்பது திருமந்திரப் பாயிரப் பகுதியின் ஏழாம் பாடல்.

திருமூலர் பெற்ற நான்கு பேறுகள்

திருமூலர் நந்தியின் அருளால் தான் பெற்ற நான்கு பேறுகளை எடுத்து விளக்கிக் காட்டுகிறார்.

1. சிவயோகியார் நந்தியின் அருளாலேயே நாதசித்தராய் ஆக்கம் பெற்று, 'நாதம்' என்ற ஒலிவகைகளின் பொருளை அறிந்து சிவயோக ஞானசித்தராக விளங்கியிருக்கிறார். இது அவர் திருக்கயிலையில் இருந்தநிலை. நாத அனுபவம் பெற்று, அதனால் ஞானவலிமை பெற்று, ஞான அனுபவமும் பெற்றவராக இருந்தார். இவ்வளவும் பெற்றிருந்தாலும் அவருக்கு நிறைவு தோன்றவில்லை. அகத்திய முனிவரைக் காண வேண்டும் என்ற அவா உண்டாகிக் கொண்டே இருந்தது. ஞான வலிமை பெற்றார். என்றாலும் ஏதோ ஒரு குறை இருந்து கொண்டே இருந்தது.

2. நாதன் அருளாலே மூலனை நாடினேன். சிவயோகியார் வருகிற வழியில் எவ்வளவோ தலங்களுக்குச் சென்றிருக்கிறார்.

வழியில் எவ்வளவோ மனிதர்கள் இறந்திருக்கலாம். சுற்றியிருந்தவர்கள் கதறி அழுதிருக்கலாம். அங்கெல்லாம் அவர் மனம் இது இயற்கை என்று கருதி இருந்திருக்கிறது.

மூலன் இறந்த நிகழ்ச்சியில் அவர் மனம் ஐந்தறிவுச் சீவர்களையும் அழவைக்கும் அன்புதான் என்னே. அனுபவத்துக்கு உள்ளாக்கி ஈர்த்ததால் மூலனை நாடிச் சென்றிருக்கிறார்.

3. மூலனை நாடியபிறகு அன்பை இன்பப் பொருளாக அனுபவிக்கும் பேறு பெற்றிருக்கிறார்.

'அன்பினால் இன்பம் ஆர்வார்' என்பது பெரியபுராணம்.

'இன்பமே என்னுடைய அன்பே' என்பது திருவாசகம்.

தேன்செயும் நாட்டை அடைகிறார். 'தென்' என்ற சொல்லானது இன்பத்தைக் குறிக்கும். தமிழ் என்றாலே இன்பம். 'தென்தமிழ்' என்பது (இன்பம் திகட்டி விடும்) திகட்டாமல் அனுபவிக்க - இடையறாது துய்க்க வைத்துக் கொண்டிருக்கும் இன்பமே - தமிழே 'தென்தமிழ்' எனப் பெற்றது.

'என்றுமுள தென்தமிழ் இயம்பி இசைகொண்டான்' என்பது கம்பன் வாக்கு.

நாதனாம் பேர் பெற்ற சிவசித்தர் மூலனை நாடி, தேன்தமிழ் (அ) தென்தமிழ்நாடு எனப்பெறும் இன்ப நாட்டில் புகுந்து அன்பினால் இன்பம் துய்க்கும் நிலை பெற்றார்.

4. நந்தியான பரம்பொருள், துய்க்கும் வழியினை எடுத்துக் காட்டி, வழிநடத்திச் செல்ல அன்பினால் இன்பம் துய்த்துக் கொண்டே இருந்தார். இது நான்காம் நிலை.

திருமூலர் இவ்வாறு தன்னுடைய வரலாற்றைப் பாகுபடுத்தித் தெளிவாகக் கூறியிருந்தும் தெய்வச் சேக்கிழார் அதை எடுத்துக் கூறாமைக்குரிய காரணம் தெரியவில்லை.

மேலும், இந்நால்வகை வரலாற்றுத் திருப்பங்களும் தமக்கு வந்து அமைந்தமைக்குரிய காரணம் தம்முடைய யோகநிலைப் பயிற்சியால் என்று கூறவில்லை. ஒருவேளை முதல் வரியின் செயல்

யோகநிலையால் நாதனாம் பேர் பெற்றேன் என்று கூறினாலும் ஏனைய மூன்று வரியில் கூறப்பெறும் வாழ்வியல் திருப்பங்கள் எல்லாம் நந்தியின் அருளால் நடைபெற்றதாகவே கொள்ளுகின்றார்.

இனி, திருமூலர் 'உபதேசம்' என ஒரு பகுதியை அருளிச் செய்துள்ளார். அது முப்பது பாடல்களைக் கொண்டது. இது திருமந்திரத்தில் முதல் தந்திரத்தில் நான்காவது பகுதியாக அமைந்துள்ளது. முழுவதும் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது.

'மூலன் உரைசெய்த முப்பது உபதேசம்
மூலன் உரைசெய்த முன்னூறு மந்திரம்
மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்
மூலன் உரைசெய்த மூன்றும் ஒன்றாமே'

என்பது ஒரு திருமந்திரப் பாடல். ஆயினும், இப்பாடலைத் திருமூலர் பாடவில்லை என்றும் திருமூலர்மீது அன்புடையார் ஒருவரால் பாடப்பெற்றது என்றும் ஆய்வாளர்கள் கொள்ளுகின்றார்கள்.

திருமந்திரமாலை முந்நூறு என்ற பெயரில் ஒரு தனிநூல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தாரால் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

திருமூலரின் முப்பது உபதேசங்களும் பலரால் தனித்தனியாக உரையுடன் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. திருமந்திர உபதேசப் பகுதியில் அமைந்த ஒரு பாடல், இங்கே ஆய்வுக்குரியதாக எடுத்துக் கொள்ளப் பெறுகிறது. அது, 'சிவயோகம்' என்றால் என்ன? என்ற வினாவை எடுத்துக் கொண்டு திருமூலர் விளக்கம் தருவதாக அமைந்த பாடல்.

சிவயோகியார்களின் தன்மையைப் பற்றி ஒன்பதாம் பாடலும் 'சிவயோகம்' என்பதன் இலக்கணம் பற்றிப் பத்தாம் பாடலும் பேசுகின்றன.

'சிவயோக மாவது சித்து அசித்து என்று
தவயோகத்து உள்புக்குத் தன்ஒளி தானாய்

அவயோகம் சாராது அன்பு அதிபோக
நவயோகம் நந்தி நமக்கு அளித்தானே'

என்பதே அப்பாடல். இது, 'சிவயோகம்' என்பதன் இலக்கணத்தை விளக்கிக் கூறும் முறையில் அமைந்திருக்கும் பாடல்.

திருமூலர் காட்டும் மூவகை யோகம்

'யோகம்' என்றால் கூடுதல், இணைதல் என்பது பொருள். எது எதனுடன் இணைதல் நல்லது? என்ற கருத்தில் மூன்று வகையான கருத்துகள் காணப்பெறுகின்றன. அட்டாங்கயோகம் என்பது விருத்திப்படாத - வெளியில் செல்லும் செயன்மைப்படாத (விருத்திவிரோதம்) சித்தத்துள் சமநிலைப்பட்டு ஆன்மாவானது கூடிநிற்றல். இதனைச் சித்த விருத்தி நிரோதம் என்பர். அதுதவிர, மூன்று வகையான யோகங்களைத் திருமூலர் எடுத்துக் கூறி விளக்குகின்றார்.

1. பொருளாய்வின் அடிப்படையில் யோகம்

நிலைத்த சத்தியப் பொருள்: மாறிக்கொண்டேயிருக்கும் அசத்தியப் பொருள்: சத்தியப் பொருளோடு சேர்ந்த காலத்தில் சத்தியப் பொருள் போலவும் அசத்தியப் பொருள் போலவும் தன்னைத் தோற்றுவித்துக் கொள்ளுகின்ற சத்தியம் அசத்தியம் என்ற இருமையும் கலந்திருக்கின்ற சதசதத்துப் பொருள் என்ற முப்பொருள்களையும் ஆராய்ந்து பார்த்து, சத்தியப் பொருளோடும், அசத்தியப் பொருளோடும் தோய்ந்து நில்லாமல் இரண்டையும் கடந்து நிற்கின்ற பொருள் ஒன்று உண்டு என்று ஆராய்ந்து முடிவுசெய்து, அப்பொருளானது, நித்தியப் பொருளாகவும் பரம மேன்மைப் பொருளாகவும் உள்ளது என்று கண்டும் நித்தம் +பரம் அல்லது 'நித்தப்பரம்' என்ற ஒரு பொருள் உண்டு என்று பொருளுண்மை ஞானம் கைவரப்பெற்று அப்பொருளையே தான் அடைய இருக்கும் பொருள் எனக் கொண்டு அதற்கேற்ற சாதனைகளைச் செய்து, சுத்தம் அசுத்தம் நீத்த நித்தப் பரம்பொருளை அடைதலாகிய 'பரயோகம்' என்பது ஒன்று உண்டு என்பது அதன்பொருள்.

சுத்தம் அசுத்தம்: சத்தியம் அசத்தியம் ஆகியவற்றைக் கடந்த ஒரு பொருள் இருக்க வேண்டும் என்ற கொள்கையானது பொருளாராய்ச்சியின் அடிப்படையில் அமைந்த ஒன்று.

இத்தகைய அடிப்படையில் நிகழ்வதெல்லாம் 'பொருண்மை யோகம்' என்று கொள்ளுதல் வேண்டும். இத்தகைய பொருள்தான் சுத்தசைவர்களுக்கு அடையக்கூடிய பொருளாக இருக்கும். அப்பொருளே நாம் சென்று அடைவதற்குரிய பொருளாக - நேயமாக இருக்கும்.

'சத்தும் அசத்தும் சதசத்தும் தான் கண்டு
சித்தும் அசித்தும் முன்சேர்வுறாமே நீத்த(தும்)
சுத்தம் அசுத்தம் தோய்வுறாமே நின்ற(தும்)
நித்தம்(ப்) பரம் சுத்த சைவர்க்கு நேயமே'

என்பது திருமந்திரம் ஐந்தாம் தந்திரம், சுத்தசைவம் என்ற தலைப்பில் அமைந்த '2' ஆம் பாடல். இதனை நித்தப்பர யோகம் என்று கூறலாம். இது சுத்த சைவர்க்கு உரியது.

பொருண்மை அடிப்படையில் அமைந்த இந்த யோகத்துக்கு மூவகை ஆய்வுகள் தேவை.

சத்துப் பொருள் பற்றிய ஆய்வு, அசத்துப் பொருள் பற்றிய ஆய்வு, சதசத்துப் பொருள் பற்றிய ஆய்வு என்ற மூவகை ஆய்வுகளை முதன்மையில் செய்து உலகப் பொருள்களை யெல்லாம் இம்மூவகை நிலைகளில் ஆய்வு செய்ய வேண்டும் பின்னர் சித்துப் பொருள்களும் அசித்துப் பொருள்களும் சேர்வுறாமே நீத்ததும், சுத்தப் பொருளும் அசுத்தப் பொருளும் தோய்வுறுதல் இல்லாமலே நீத்ததும் ஆகிய பொருள் ஒன்று உண்டு என்று கருதி அப்பொருளை நித்தப்பொருள் என்றும் பரம்பொருள் என்றும் கொண்டு, அதை அடைய முற்பட வேண்டும் என்பது அதன் உரை.

ஒலிவகையைச் சார்ந்து பொருளைத் துய்க்க முற்படும் யோகமுறை. இதுதான் உபதேச மார்க்கத்தில் நிற்பவர்கள் மேற்கொள்ளும் முறை. ஒலியால் அமையும் மந்திர மொழிகளின் உட்பொருளை அனுபவப்படுத்தி, மெல்ல மெல்ல மேலேறிச் சென்று இறுதியில் ஒலியால் உணர்த்தப் பெறும் பொருளை உணர்ந்து துய்க்கும் யோகமுறை.

ஆன்மாவானது படிநிலை வளர்ச்சியின் அடிப்படையில் பூதான்மா, அந்தரான்மா, தத்துவான்மா, சீவான்மா, மந்திரான்மா, பரமான்மா என ஆறுவகைப் படிநிலைகளில் நிற்கும்.

ஆன்மாவானது ஐந்தாம் நிலையாகிய மந்திரான்மாவாக நிற்கின்ற காலத்தே சுரர், நரர், விலங்கு, புள், தாவரம் ஆகிய எல்லாவற்றுக்கும் அதிதெய்வமாகிய மந்திரங்கள் உள்ளன எனவும் தாவர சங்கமங்களுள் மந்திரங்களினால் அதிட்டிக்கப்படாத உயிர்கள் இல்லையெனவும், மந்திரங்களை உச்சரிக்கும் முறை இன்னது எனவும் இவ்வாறு மந்திரங்களின் இயல்பும், அவ்வம் மந்திரங்களைக் கணிப்புழி ஆன்மாவானது படிகம்போல அவ்வம் மந்திரமேயாய் நிற்றலால் மந்திரான்மா என்ற பெயரைப் பெறும்.

இவ்வாறு மந்திரான்மாவாக நிற்கும் ஆன்மாவானது சார்ந்ததன் வண்ணமாதல் என்ற இலக்கணம் பற்றி, அத்துவித பாவனை உடைமையால் ஞானக்கண்ணால் சிவனை ஆன்மாவிற் கண்டு முழுவதும் வியாபகமாய் நின்று அறிவதாகிய முற்றுணர்வு உடையனாய், அவ்வப் பொருளியல்பு எல்லாம் அறிந்து மலவாசனை நீங்கி, கேவலமாய் நின்று முடிவு காண இயலாத பேரின்பத்தைப் பெறுவான் என்பது சர்வஞானோத்தர ஆகம வழிநின்று சிவஞான முனிவர் விளக்குவதால் இத்தகைய யோக முறையை உணரலாம்.

இத்தகைய ஒலியோக முறையை, திருவைந்தெழுத்து மூலமாகவும், ஓம் என்பதன், பிரிவாகிய பிராசாத கலாவிளக்கம் மூலமாகவும் 'தத்வமசி' மகாவாக்கிய விளக்கம் மூலமாகவும் அமைத்துக் கொள்ளுதல் உண்டு.

இதனைத் திருமூலர், ஐந்தாம் தந்திரத்தில் சுத்த சைவ விளக்கத்தில் 'தத்வமசி' மகாவாக்கிய விளக்கமாக அமைத்துக் காட்டுகின்றார். இதனைச் சைவசித்தாந்த யோகம் என்றும் மெய்யோகம் என்றும் திருமூலர் அமைத்துக் காட்டுகின்றார்.

'கற்பன கற்றுக் கலைமன்னும் மெய்யோகம்
முற்பத ஞானம் முறைமுறை நண்ணியே
சொற்பதம் மேவித் துரிசற்று, மேலான
தற்பரம் கண்டுளோர் சைவசித்தாந்தரே'

என்பது திருமந்திரம், ஐந்தாம் தந்திரம், 3ஆம் பாடல் *1403.*

கற்கத் தக்கனவாகிய சிவாகமங்களைக் கற்று அவற்றின் சிறப்பாகப் பொருந்தியிருக்கிற பிரசாத யோகத்தின் (பிரணவத்தை

24 கலைகளாகப் பிரித்துக் காணும் யோகம்) வழி, பிரணவ ஞானத்தைப் படிமுறையால் பொருந்தி, சாலோகம் முதலாகச் சொல்லப் பெற்ற பதமுத்திகளையும் அடைந்து, இவையாவற்றின் விளைவாகவும் அதிதீவிர பரிபாகமும் அதிதீவிர சத்திநிபாதமும் வரப்பெற்று அனைத்துப் பொருள்களுக்கும் மேலாய் ஆன்ம வியாபகத்துக்கும் மேலான வியாபகப் பொருளாகிய பரசிவப் பொருளைத் தலைப்பட்டவரே சைவ சித்தாந்திகள் எனப் பெறுவர். இது மகாவித்துவான் அருணையர் உரை.

மகாவித்துவான் அருணையார் கருத்தின் வண்ணம் சித்தாந்த சைவம், சுத்தசைவம் என்ற இரண்டும் ஒன்றே என்பது கருத்து. மேலும் முற்பதம் என்பதற்கும் 'பிரணவம்' என்றே உரை கூறுகிறார்.

ஆயினும், இதே பாடலுக்கு வீரசைவபரமாக விளக்கங்களைக் காணப்புகும்போது கீழ்க்கண்டவாறு கொள்ள வேண்டும்.

கற்கத் தக்கனவாகிய நூல்களில் உபநிடதங்களும் சேர்த்துக் கொள்ளப்பெறும். சிவாகமங்களுடன் அருளாளர் நூல்களும் இணைத்துக் கொள்ளப் பெறும். மேலும், மந்திர நூல்களைக் கற்றுக் கொள்ளுதல் கடமையாகிறது. மந்திர நிலைகளை மனிதன் தன்னுடைய உடல், ஆவி, இறைவன் ஆகியோர்களுடன் இணைத்துக் காண வேண்டும். அதனால் மந்திரங்களை- உடல், ஆவி முதலியவற்றுடன் இணைப்பதையே மெய்யோகம் என அமைத்துத் திருமூலர் வழங்குகின்றார்.

பிரணவஞானத்தைப் படிமுறையில் அனுபவ வழியில் பொருந்தி, உடல், ஆன்மா, இறைவன் இம்மூவரையும் இணைக்கும் மந்திரயோகமே சத்தியயோகம். அதுவே மெய்யோகம்.

மந்திரங்களையும் உடல், ஆன்மா, இறைவன் ஆகிய மூன்றையும் இணைக்கும் முறை எவ்வாறு?

உடலுக்கு மூல மந்திரம்	நமசிவய
ஆன்மாவுக்கு மூல மந்திரம்	சிவயநம
ஆன்மாவுக்கு அடுத்த சூக்குமம்	சிவய
ஆன்மாவுக்கு அடுத்த காரணம்	சிவசிவ
இறைவனுக்கு மூலமந்திரம்	பிரணவம் ஓம்

ஆகிய மந்திர முறைகளை அவற்றின் சத்தியத் தன்மையுடனும் சித் என்னும் சித்தியல் தன்மையுடனும் கற்று, பின்னர்ச் சொற்பதத்தைப் பொருந்தி உணர்தல் வேண்டும்.

சிவயநம என்ற எழுத்துகளை உணர்தல், பின்னர் அவற்றைச் சொல்லாக உணர்தல், பின்னர் அவற்றைப் பதமாக உணர்தல் என்ற மூன்று வகைகளைத் திருமூலர் அமைத்துக் காட்டுகிறார்.

1. மந்திர எழுத்துகளை உணரும்போது அவற்றின் பொதுப் பொருளையும் அவை நிற்கும் முறையையும் அவ்வாறு நிறுத்துவதால் வரும் பொதுப்பொருளையும் உணர்தல் வேண்டும்.

நூல்களில் படிக்கும்போது மந்திர எழுத்தின் பொருளை அறிதல் ஒருவகை. அவையே உபதேச மார்க்கத்தில் வரும்போது உணர்தல் மற்றொரு வகை. எழுத்துகளின் பொதுப்பொருள் நூல்களிலேயும் உபதேசத்திலும் மாறாது. ஆனால், அவை உபதேச மார்க்கத்தில் நிறுத்தும் முறையை உய்த்து உணர்தல் வேண்டும்.

சிவ என்ற எழுத்துகள் முறையே சிவனையும் அருட்சத்தியையும் குறிக்கும். உபதேசத்தில் எட்டும் இரண்டும் அறிக எனக் கூறினால் எட்டு எது? இரண்டு எது? என உணர்தல் வேண்டும். இதனைப் பொதுவாக, பிரயோக முறை என்பர். அருணகிரிநாதரும் 'ஓரெழுத்தை ஆறெழுத்தில் ஓதுவித்த பெருமானே' என்று அருளும்போது அதன் விளக்கமாக ஓரெழுத்து எது? அதில் பிறக்கும் ஆறெழுத்து எவை எவை? என்பதை உணர்தல் வேண்டும். (விரிக்கிற் பெருகும்)

2. எழுத்தைச் சொல்லாக உணரும்போது எழுத்துக்குரிய பொருளை உணர்தல் என்பது பொதுப்பொருள். ஆனால், எழுத்துக்கும் பொருளுக்கும் இடைவெளியில் அமைந்திருக்கும் உறவை உணர்தல் வேண்டும்.

சிகாரத்தை உணரும்போது 'சி' என்ற எழுத்தானது இறைவனைக் குறிக்கும் என்பது பொதுப்பொருள். 'சி' என்ற எழுத்தானது இறைவனை மேவிநிற்கும்போது, அந்த எழுத்தானது இறைவனைப் பொருந்தி நின்று, அவன் தலைவன் என்பதை உணர்த்துவதோடு அந்த எழுத்தானது இறைவன் ஒருவனையே

பொருந்தி, ஏனைய கடவுளர்களை, 'சீ என இழிபொருளாய் நின்று விலக்கிப் பொருந்துவதைக் கற்றல் வேண்டும்.

எழுத்தானது சொல்லாகவும் பின்னர்ப் பதமாகவும் பொருந்தும் முறையை - மேவும் முறையை அனுபவ வழியாற் காணுதல் வேண்டும்.

பின்னர், 'தத்வமசி' என்ற மகாவாக்கியப் பொருளிலும் இம்முறைகளை- உறவுகளை அமைத்துக் காணுதல் வேண்டும். அப்போதுதான் ஆன்மாவின் துரிசு- குற்றம் அற்றுப் போகும்.

3. இனி, உபநிடதங்களின் உட்பொருளாக அமைந்த தத்வமசி என்னும் மகாவாக்கியப் பொருளை அனுபவப் பொருளாக அமைத்துக் கொண்டு,

தத் + துவம் + அசி

என அம்மகா வாக்கியத்தைப் பிரித்துக் கொண்டு 'தத்' என்பதைப் பரம் எனவும் துவம் என்பதை ஆன்மா எனவும் அசி என்பதை ஆன்மாவும் சிவமும் என்ற இருபொருள் இணைந்த ஒருபதம் எனவும் பொருள் பொருள் கொண்டு அனுபவம் பெற வேண்டும்.

இத்தகு வரிசைமுறையில் இறுதியில் தற்பத ஞானத்தைப் பெற்று அத்தற்பதப் பொருளைத் துய்த்து உணர்பவர்களே சைவசித்தாந்திகள்.

திருமூலர் கருத்துப்படி, சைவசித்தாந்திகள் தத்வமசி வாக்கியப் பொருளாராய்ச்சியை மேற்கொண்டு, அசிபதம், துவம்பதம் ஆகிய பதஞானங்களை முறைமுறையே பெற்று, இறுதியில் தத்பத ஞானம் பெற்று அந்த ஞானத்தினால் தத்பதப் பொருளை அடைபவர்கள்.

இனி, முடிவாக வேதாந்திகள், சுத்தம் விளங்கிய சித்தாந்த நடுக்கற்ற காட்சியைக் கண்டவர்களாகிய நாதாந்தத்தில் நின்றோர் போதாந்தம் நுகர்ந்தோர், பூதாந்தர், நாதாந்த நிலையில் நிறைவு பெற்றவர் ஆகிய அனைவரும் ஞானமார்க்கத்தவர்களே என்று முடிவாகச் சொல்லி முடிக்கின்றார்.

'வேதாந்தம், சுத்தம் விளங்கிய சித்தாந்தம்
நாதாந்தம் கண்டோர் நடுக்கற்ற காட்சியர்

பூதாந்த போதாந்த மாகப் புனஞ்செய்ய
நாதாந்த பூரணர் ஞான நேயத்தர்'

(பாடல் 1404, ஐந்தாம் தந்திரம், சுத்தசைவம் 4)

திருமூலர் காட்டும் மூன்றாவது யோகம்

திருமூலர் வகைப்படுத்தியும் விரிவுபடுத்தியும் காட்டிய யோகங்கள் மூன்றனுள் இரண்டு யோகங்களை இதுவரையில் எடுத்துக் காட்டி விளக்க முடிந்தது.

பொருள்வகையால் உயர்பொருள் இதுஎனக் கொண்டு அதனை அடையும் யோகம் முதன்மைத்தனமானது.

ஒலிவகையால் உயர்பொருள் இது எனக் கொண்டு அதன் முடிவிடமாகிய நாதத்தின் அடிப்படையில் முடிவுப் பொருளாகிய மந்திர வகையாலும் மந்திர வகைகளின் சத்தியல்நிலை சித்தியல் நிலை என்ற அடிப்படை நெறிகளாலும் ஆய்ந்து கண்டு, பின்னர் உடல், ஆவி, இறைவன் என்ற மூன்று பொருள்களுக்கும் ஒலிகளுக்கும் ஒலியால் அமைந்த மந்திரங்களுக்கும் உள்ள இயைபுகளைக் கண்டு அறிந்து மேலான பரம்பொருளை, தத்பத வாக்கியப் பொருளாகக் கண்டு அனுபவித்தல்.

மேலே குறிப்பிடப் பெற்ற இரண்டு வகை யோகங்களையும் கடந்த நிலையில் மூன்றாவது யோகநிலையை எடுத்துக் காட்டி விளக்கம் செய்கிறார் திருமூலர்.

சிவயோகம் எனப்பெறும் அங்கியோகம்

சிவயோகம் எனப்பெறும் அங்கியோகமானது மிக எளிமையான உயர்நிலை அடையும் முறை. இது ஆன்மாவில் உள்ள அதோமுகப் பரம்பொருளை எழுப்பி அதனாற்பெறும் உயர்ந்த அனுபவ முறை.

குருவானவர் இந்த யோகத்தைத் தொடங்கி வளர்த்தல் வேண்டும்.

குருவானவர் இந்த யோகத்தை எவ்வாறு தொடங்கி வைப்பார் என்பதை இக்கட்டுரையின் அடுத்த பகுதியாகிய சம்பிரதாயம் என்பதிற் காணலாம்.

குருவானவர் தொடங்கி வைக்கும் இந்த மூன்றாவது யோகத்தில் இரண்டு செயல்களை முக்கியமாகச் செய்வார்.

1. சீடனுடைய அறிவானது ஐம்புலன் மூலமாக வந்த பாச அறிவாக இருக்கும். அதனால் சீடனுக்கு என்ன பயன் என்னும் வினாவானது எழும். நீரில் ஆழத்தில் அமிழ்ந்து கரை ஏற அறியாத நிலை போலவும், அறிவின் சுழற்சியிலே சென்று மீள முடியாத நிலைமை போலவும் அவன் அறிவு இருக்கும். இத்தகைய இடர்ப்பாட்டிலிருந்து எவ்வாறு விடுபடுவது என அறியாது அவன் இடர்ப்படுவான். அப்போது அவனைக் கரையேற்றிக் காப்பாற்றும் வல்லமை மிகுந்ததாகிய ஒரு குறியை - ஓர் ஒளிப்பொருளை எடுத்துக் கொடுத்து அதன் பொருளை அவனுக்கு அறிவித்துக் கரையேற்றுவான்.

குருவினால் எடுத்துக் கொடுக்கப் பெற்றதும் அறிவுறுக்கப் பெற்றதும் ஆகிய அந்தக் குறியே- அடையாளமே- இலிங்கமே அவனை வாழ்விப்பதாக அமையும்.

இலிங்கமாக விளங்கும் குறியும், அதன் இலக்கண விளக்கமாகிய உரைகளுமே சீடனை அவன் சிக்கியிருக்கிற சிக்கலில் இருந்து நீக்கி எழுச்சி பெற வைப்பதாக அமையும்.

இச்செய்தியை நாம் திருமந்திரம், முதல் தந்திரம் உபதேசப் பகுதியின் ஏழாம் பாடலில் காணலாம்.

'அறிவு ஐம்புலனுடனே நான்றது ஆகி
நெறி அறியாது உற்ற நீர் ஆழம்போல (வும்)
அறிவு அறிவுள்ளே அழிந்தது போல (வும்)
குறி அறிவிப்பான் குருபரன் ஆமே'

என்பதே அப்பாடல்.

2. குருவானவர் சீடனுக்குச் செய்யும் இரண்டாவது செயல் மிக முக்கியமானது.

நந்தி என்பது திருமூலர் திருமந்திரத்தைப் பொறுத்தவரையில் ஆன்மாவின் உள்ளே தங்கியிருக்கும் அதோமுகத்தையே குறித்தல் வேண்டும். அதுவே ஆன்மாவைத் தாங்கிக் கொண்டிருந்து, அதனை மேல்மேல் உள்ள நிலைகளில் வளரச் செய்வது. இச்செய்தி முன்னமேயும் கூறப்பெற்றது.

குருவானவர் சீடனை (ஆன்மாவை)த் தாங்கியிருக்கும் அதோமுகத்தை மேல்மேல் எழுப்புவதற்குரிய செயலை மேற்கொள்வர். நந்தி எல்லா ஆன்மாக்களும் பொதுமையில் நிற்பது ஆதலின் அதற்குப் 'பொது' என்றும் பெயர். அதனால், 'பொது என உள்நிற்கும் நந்தி' என்ற பெயரைப் பெற்றது.

குருவானவர் நந்தியை எழுப்பி, அதனை மேல்நோக்கிச் செல்ல வைப்பார். அப்போது ஆன்மாவின் ஐந்து அடுக்குகளையும் ஆன்மாவுக்கு நன்மை செய்வதாக - ஆன்மாவின் முயற்சிக்குத் துணை செய்வதாக மாற்றுவார். ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதானம் என்ற ஐந்து மலங்களையும், அவற்றின் தீமைத்தன்மைகளை மாற்றி, அவற்றின் நன்மைத் தன்மைகளை மிகுவிக்கச் செய்து அவை ஆன்மாவுக்கு நன்மையும் அழகும் செய்வனவாக மாற்றுவர். அப்போது குருவானவர் தன்னுடைய அருளாற்றல் மூலமாகத்தான் அதனைச் செய்வார்.

அந்நிலையில் மலங்களின் இருப்பிடமாக இருந்த- தலமாக இருந்த- தங்கும் இடமாக இருந்த ஆன்மாவைக் கூத்தப் பெருமான் ஆடுமிடமாக மாற்றுவான்.

பின்னர், இதுவரையில் சதாசிவத்தின் இருப்பிடமாக இருந்த உடலை, அதன் புலன்களை, விஷயம் வரும் வழிகளை மாற்றி, அதனைக் கூத்தப் பெருமானுக்கு உரிய இடமாக மாற்றி அருளுவான்.

பின்னர், ஆன்மாவானது இறைஅனுபவம் பெறும் வகையில் ஐவகை மந்திர மொழிகளை அமைத்துத் திருவருள் நலம் அமையுமாறு செய்வான்.

நமசிவய	-	தூலம்
சிவயநம	-	சூக்குமம்
சிவாய	-	அதிசூக்குமம்
சிவசிவ	-	காரணம்
சி	-	மகாகாரணம்

என்ற ஐவகை நலங்களால் ஆன்மாக்களின் உள்ளிடத்தையும் புற

இடமாகிய உடம்பையும் கூத்தப் பெருமானின் தலங்களாக மாற்றி அமைத்து விடுவான். அவ்வாறு செய்வது நந்தியே. நந்தியை எழுப்பி அவ்வாறு செய்ய வைப்பது குருவானவரின் அருளிப்பாட்டுச் செயல்.

அப்போது ஆன்மாவும், அதன் உடலும் கூத்தப் பெருமானின் திருக்கூத்து நிகழும் இடங்களாக மாற்றம் பெறும். இந்நிலையில் ஆன்மாவின் உடல், ஆன்மா ஆகிய இரண்டும் கூத்தியற்றும் இடமாக மாற்றம் பெறும்.

ஞானம், மேன்மை (தலைமை) என இரண்டும் அமைந்த சோதியாய் நின்ற அவன்

சிவானந்தக் கூத்து

சுந்தரக்கூத்து

பொன்பதிக் கூத்து

பொன்தில்லைக் கூத்து

அற்புதக் கூத்து

என ஐவகைக் கூத்துகளை இயற்றுவான். இதனைத் திருமூலர்,

‘சிற்பரஞ்சோதி சிவானந்தக் கூத்தனை
சொற்பதமாம் சுந்தரக் கூத்தனை
பொற்பதிக் கூத்தனை, பொன்தில்லைக் கூத்தனை
அற்புதக் கூத்தனை யார் அறிவாரே’

என்பது 2680ஆம் பாடல்.

எனவே, திருமூலர் அருளும் சிவயோகமாகிய மூன்றாவது யோகத்தில் ஆன்மாவைத் தாங்கும் பொது எனப்பெறும் நந்தி எழுப்பப் பெறும் நந்தியாக மேல் நோக்கி எழுந்து ஆன்மாவையும் உடலையும் அருளாட்டுத் தலங்களாக- கூத்துத் தலங்களாக மாற்றும். இங்கே ஆன்மாவானது தன்னுடைய உடம்பிலேயே திருக்கூத்துகளைக் காணும் நிலையையும், அவற்றிற்குரிய ஐந்தெழுத்து நிலைகளின் அனுபவங்களையும் கண்டு களித்து இன்புறும்.

மேலே குறிப்பிடப் பெற்ற செய்திகளை, சிவயோகியர் செயல் இது என்றும் சிவயோகத்தின் செயல் இது என்றும் விளக்கிக் காட்டுகிறார் திருமூலர்.

சிவயோகிகளின் செயல்

குருவருளால் சிவயோகம் கைவரப் பெற்றவர்கள் பிறவிக்கு வித்தாக இருக்கின்ற வினையைச் செயல்புரியாதவாறு கெடுத்து விடுவார்கள். முடிவிடம் என்று சொல்லப்பெறும் ஆறாவது இடமாகிய ஆயிரஇதழ்த் தாமரை மலரும் இடத்தை அடைந்து விடுவார்கள். குருவினுடைய உபதேச மொழியின் பொருளை உண்மையாக உணரும் நிலை எனப்பெறும் சுத்தத் துரியம் அவர்களிடத்தில் தொழிற்படும். பாசஞானம் முதல் பரிஞானம் வரை உள்ள அனைத்தும் ஒருமை நிலைமை எய்தி, சிவஞானமாகவே எல்லாம் சிவமாகவே காணும் காட்சி அவர்களுக்கு உண்டாகும்.

சிவஞானத்துள் முன்பெற்ற அனைத்து ஞானங்களும் ஒத்துப் போய்விடும் நிலைபெறுவார்கள்.

ஐம்புலன்கள், உயிர், உடம்பு ஆகிய மூன்றும் சிவஞானமயமாய் ஆகி நிற்பதால், அவர்களின் உடம்பு முதலியன செத்துப் போன நிலையில் இருப்பதைக் கருதப்பெறும். ஆனால், அவர்களை நோக்கி வருபவர்களுக்குச் சிவஞானத்தை வழங்கிக் கொண்டே இருப்பார்கள்.

சிவயோகத்தின் நிலை

உடம்பாவது அறிவற்றது; ஆகையால் அசித்து. ஆன்மாவானது அறிவுடையது; ஆகையால் சித்து. ஆயினும் ஆன்மாவானது இறைவனை நோக்க அசித்து. இவ்வாறு ஆராய்ந்து நிற்கும் நிலையானது சிவயோகத்தில் இல்லை.

சிவயோகத்தில் நிலை இரண்டே இரண்டுதான்.

இறைவன் அங்கி, ஆன்மா, உடல், உலகம் ஆகிய அனைத்தும் அங்கங்களே. இறைவன் ஒருவனே அங்கி. ஏனைய அனைத்தும் அவனுக்கு அங்கங்களே என்ற உணர்வு தோன்றிவிடும். அவ்வாறே

ஆன்மாவானது நினைந்து நினைந்து நிற்கும். அதுவே தவயோகம். அப்போது இறைவனுடைய அருள்ஒளியானது, அங்கமாகிய ஆன்மாவைத் தன்னுள் அகப்படுத்திக் கொள்ளும். அவ்வாறே உலகம் வரையில் அருளொளி பரவும்.

இறைவன் அங்கி, ஆன்மா, அங்கம். அங்காங்கிநிலை.

அங்காங்கி நிலைமை அடைந்தபின் அப்படியே ஆன்மாவும் இறைவனும் நிற்பதால், ஆன்மாவானது வேறு யோகங்களை - வீணான யோகங்களைச் சார வேண்டும் என்று எண்ணாது அங்காங்கி யோகத்திலேயே நிற்கும்.

அங்காங்கி யோகத்தில் நிற்கும் நிலையில் ஆன்மாவானது இறைவன் முன்காலுற்ற நிலையாகிய அன்பை அதிகமாக அனுபவிக்கும்.

எனவே, ஆன்மாவானது. இறைவனுடன் அங்காங்கி பாவமாக நின்று அன்பை அழுந்தி அழுந்தி அனுபவிக்கும் நிலையே சிவயோகம்.

நிலை	-	அங்காங்கி நிலை
அனுபவம்	-	அன்பை ஆழ்ந்து அனுபவித்தல்

இதுவே சிவயோகம், அங்காங்கி யோகம், அங்கி யோகம் என்றெல்லாம் பெயர்ப்படுத்தப் பெற்றன.

அங்காங்கி யோகத்தை நவயோகம் என்றார் திருமூலர். நவயோகம் என்பதற்குப் புதிய யோகம் என்று பெயர். ஒன்பது யோகம் என்று பொருள் கொள்ளக் கூடாது.

குருவினால் எழுப்பப் பெற்ற நந்தியே இத்தகைய சிவயோகத்தை, அங்காங்கி யோகத்தை, இலிங்காங்க யோகத்தை, அன்பையே ஆழ்ந்து ஆழ்ந்து அனுபவிக்கும் நவயோகத்தைத் தந்தருளினான் என்பது கருத்து.

அதோமுகமாகிய நந்தியைக் குருவானவர் எழுப்பி, அந்நந்தியால் இந்த யோகம் அமைக்கப்பெற்றது ஆதலின், அங்காங்கி யோகம் என்ற புதிய யோகம் நந்தியோகம் எனவும் பெயர் பெற்றது.

நடுவுள அங்கி அகத்தியன் பெற்ற யோகமும் இதுவே. அத்தகைய அங்கி யோகத்திலேயே அகத்தியன் இந்த உலகத்தைச் சரிந்து கெட்டுப்போகாமல், மேல்கீழ், வலம் இடம் எனச் சரிந்து கெட்டுப் போகாமல் நடுவுநிலையில் நிறுத்திக் காத்தான் என்று பொருள் கொள்ளல் வேண்டும்.

இத்தகைய யோகமே குருகுகேச யோகம் எனப்பெறும் இலிங்காங்க யோகம். அதுவே சடுத்தலயோகம். அதுவே அதோமுக நந்தியோகம் என்று கருதுதல் வேண்டும்.

திருமூலர் அருளிய மூன்று யோகங்களில் முன்னது பொருண்மை யோகம். இரண்டாவது ஒலியாற் பெறும் யோகம். மூன்றாவது யோகமே ஒளிநிலை யோகம். ஒளிநிலை யோகத்தையே வீரசைவ சடுத்தல யோகம் என்று கொள்ளுதல் வேண்டும்.

அங்கலிங்க யோகமுறையே -ஒளிநிலை யோகமுறையே சடுத்தலயோகம்.

வீரசைவயோகத்தில் - ஒளிநிலை யோகத்தில் அன்பால் உறவு கொள்ளுதல் வேண்டும். அன்பினால்தான் அங்கலிங்க இணைப்பானது உண்டாகும்.

பொருளை அடைவது என்றில்லாமல் ஒலியை - நாதத்தை அடையும் பொருளாக ஆக்கிக் கொள்வது என்றில்லாமல், அங்கமும் அங்கஅங்கியுமாக நின்று அருளொளியைப் பெறுதல் வேண்டும் என்பது வலியுறுத்தப் பெறுகிறது.

அன்பையே கருவியாகக் கொண்டு அங்கியாகிய அருளொளியை இலிங்கத்துடன் ஐக்கியமாகி பேரன்பை, அனுபவித்தல் வேண்டும் என்பதே இந்த யோகத்தின் மையக் கருத்து.

இறைவன் அங்கியாக ஆன்மாவானது அங்கமாக நின்று அருளொளி பெற்று பேரன்பைத் துய்த்துக் கொண்டிருப்பதுதான் வீரசைவச் சடுத்தலயோகம். அதுவே அன்புஅதிபோக யோகம்.

வீரசைவ சடுத்தலயோகத்தில், அங்காங்கி யோகத்தில், ஒளியோகத்தில் மூவகைக் கலப்பு உண்டு.

1. விரவுதல்
2. அடங்குதல்
3. ஒடுங்குதல்

1. விரவுதல்

வெட்டவெளியில் சுத்தவெளியானது விரவிக் கலந்து நிற்கும். பாலில் நீர்போல் கலந்து நிற்கும் அதனை வியாபக வியாப்பியம் என்று தத்துவநூல் கூறும். வெட்டவெளியாக அங்கி எனப்பெறும் பரமவிழுப்பொருள் நிற்க அதனுள் சுத்த வெளியாகவும் அங்கமாகவும் உள்ள ஆன்மாவானது விரவி நிற்கும். ஒன்றாகி விடாது.

2. அடங்குதல்

அளியில் அளியானது அடங்கி நிற்கும். அங்கியினுடைய பேரருளாகிய நெகிழ்ச்சியினுள் அங்கமாகிய ஆன்மாவினுடைய அனைத்தையும் நெகிழவைக்கும் அன்பானது அடங்கி நிற்கும். ஒருமையுள் ஐந்தாகிய உறுப்புகளையுடைய ஆமை அடங்கியிருத்தல் போல் பேரருளில் ஆன்மஅருள் அடங்கிச் செயற்பட்டுக் கொண்டிருக்கும்.

3. ஒடுங்குதல்

சூரிய ஒளியினுள் கண்ணொளி ஒடுங்கி நின்று காணுதல் போல அங்கியினுடைய ஞானப் பேரொளியில் அங்கமாகிய ஞானப் பேரொளியில் அங்கமாகிய ஆன்மாவின் ஞான ஆற்றல் அடங்கி நிற்றல்.

இம்மூன்றையும் அனுபவமாக உணர்கின்றவர்களே ஒடுக்கம் எனப் பெற்றனர்.

ஒடுக்கத்துள் இம்மூன்றும் அடங்கிவிடும். அவர்களே சித்தர் எனப் பெற்றனர். அடயோகம் முதலியவற்றால் அணிமாதி ஆற்றல்களைச் சித்திக்கப் பெற்றவர்கள் எல்லாம் சாதியொருமை பற்றிச் சித்தர் எனப்படினும் அவர்களெல்லாம் திருமூலர் கூறுவது போல, வெளியில் வெளியும், அளியில் அளியும், ஒளியுள் ஒளியும் ஒடுங்கப் பெறாமையால் அவர்களால் பிறப்பை அறுத்துக் கொள்ள

முடியாது. அவர்களெல்லாம் அவசித்தரே. மூன்று நிலைகளைக் கொண்ட 'ஒடுக்கப் பேறு' பெற்றவர்களே சித்தர்கள். அவர்களே சிவசித்தர் என்பது திருமூலர் கொள்கை.

வீரசைவ சடுத்தல யோகமுறையாகிய அங்காங்கி யோக முறையை, நவயோக முறையை, அதோமுக நந்தி அருளிய யோகமுறையை இலிங்காயதம் என்ற சொல்லால் தீட்சை முறையில் வைத்து இட்டலிங்க அபிஷேக மாலையில் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகள் விளக்குவாராயினர்.

பரம்பொருள் நின்ற நிலை

> **'பரத்திலே ஒன்றாய் உள்ளாய்ப் புறமாகி**
> **வரத்தினுள் மாயவனாய் அயனாகி**
> **தரத்தினுள் தான்பல தன்மையன் ஆகி,**
> **கரத்தினுள் நின்று கழிவுசெய் தானே'**

பரம்பொருள் ஒன்று. அது ஆன்மாக்களின் உள்ளும் புறமாகவும் நிற்கிறது. பின்னர் திருமால், பிரமன் என நின்று, உலகப் பொருள்களுக்கேற்பப் பலப்பல தன்மையன் ஆகி, தீக்கை செய்விக்கப் பெற்ற ஆன்மாக்களின் கரங்களில் நின்று, பொருள்களின் குற்றங்களை நீக்கி அருளுகின்றான்.

கரத்தினுள் நிற்றல் என்பதற்குச் சத்திகளின் செய்கைகளில் நிற்பர் என்றும் பொருள் கொள்வர்.

எளிய ஆன்மாக்களும் கண்டு, இதுவே பரம்பொருள் என்று அறிந்து தொழுது ஒளிபெற்றுச் சிறப்பதற்காக குருவினால் எடுத்துக் கொடுக்கப் பெற்ற இட்டலிங்கமாய் அவர்களின் கைகளில் எடுத்தருளப் பெற்று, பாசங்களை நீக்குவதாக அமைந்தான் என்பது வீரசைவபரமாக அமைந்த பொருள்.

> **'கொண்ட குறியும் குலவரை உச்சியும்**
> **அண்டரும் அண்டத்து அமரரும் ஆதியும்**
> **எண்திசையோரும் வந்து என் கைத்தலத்தினுள்**
> **உண்டெனில் யாம் இனி உய்ந்து ஒழிந்தோமே'**

என்பது திருமந்திரம் 1840ஆம் பாடல்.

கொண்ட குறி என்பதைக் கொண்ட குழி என்றும் என்கைத்தலத்தினுள் என்பதை என் கைத்தலத்தினும் என்றும் பாடபேதம் கொண்டுள்ளார்கள்.

குலவரை உச்சி என்பதால் கொண்ட குழி என்ற பாடபேதம் கொள்ளப்பெற்றது என்பது காரணம்.

என் கைத்தலத்தினுள் உண்டு என்று கூறியதால் என்கைத்தலத்தினுள் என்னவாக இருக்கிறது? என்ற வினா எழுவதால் அதற்கு விடையாகக் குறி என்ற பாடம் கொள்ளப் பெற்றது.

'அறிவு ஐம்புலனுடனே நான்றதாகி' எனத் தொடங்கும் திருமந்திரப் பாடலில் 'குருஅறிவிப்பான் குருபரன்' என்று திருமூலர் கூறியிருப்பது கொண்டு, 'குறி' என்னும் இலிங்க உருவைத் தந்து அதன் இயல்புகளை அறிவிப்பான் என்பது முன்பேயும் கூறப் பெற்றது.

கற்பனைக் களஞ்சியனாரின் இட்டலிங்க அபிஷேகமாலை முதற்பாடல் கீழே வருமாறு;

பந்தம் அறும் அரர் மிருடர் பவர் உருத்திரர்கள்ஒரு
பதினொருவர் மிளிர் பீடமேல்
படியில் ஐஐவகைப்படும் ஈசர்தாம் நிதம்
பத்தில் எண்வித்தை இறைவர்
சந்தமுறு கோமுகத்து ஐங்கலைகள் சத்தி
சாதாக்கியம் மூர்த்தி வதனம்
தட்டற்ற வட்டத்தில் ஒட்டற்ற சிற்சத்தி
தாளுற்ற நாளத்திலே
நந்தலற வருகோளகம் திகழ் சிதம்பரம்
நற்சிகையினில் சூனியம்
நட்டமற அமைகின்ற இட்ட வடிவொடு நின்ற
ஞானமய மோன நடுவோடு
அந்தமற முந்து பரமானந்த நீ நந்த
அபிடேக மாடியருளே
அறிவுற்று என் அங்கைமலர் செறிவுற்று அமர்ந்த இறை
அபிடேகம் ஆடியருளே

இட்டலிங்கத்தில் ஆறு உறுப்புகள் உண்டு. அவை முறையே,

பீடம்	-	ஆசாரலிங்கத்துக்குரியது.
இடை	-	குருலிங்கத்துக்குரியது.
வட்டம்	-	சிவலிங்கத்துக்குரியது.
கோமுகம்	-	சங்கமலிங்கத்துக்குரியது.
நாளம்	-	பிரசாதலிங்கத்துக்குரியது.
கோளகம்	-	மகாலிங்கத்துக்குரியது.

எனக் கொள்ள வேண்டும். அவற்றில் உலகைக் காப்பாற்றுகிற அனைவரும் அடங்கியுள்ளார்கள். எனவே இட்டலிங்கம் என்பது ஒரு குறி. அதனை நற்குருவானவர் என்கையில் அமைத்து, அதன் தன்மையை உணர்ந்து கொள்ளும் வகையில் அதில் அடங்கியுள்ள வர்களைக் குறிப்பிட்டருளுகின்றார்.

இட்டலிங்கமானது தன்னுடைய ஆறு பாகங்களில் எல்லாரையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது என்பதுடன் வேறொரு கருத்தையும் இங்கே இணைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

பந்தம் அறும் அரர் மிருடர் ஆகியவர்களையெல்லாம் அங்கமாக அமைத்துக் கொண்டு பரம விழுப்பொருளானது அங்கியாக இருக்கிறது என்பதையும் எண்ணிக் கொள்ளுதல் வேண்டும்.

அத்துடன் நில்லாது, என்கையில் உள்ள இட்டலிங்கமானது என்னையும் என் உடலையும் உலகையும் உலகைக் காக்கின்ற தொழிலரகளையும் அங்கமாகக் கொண்டு என்னுள் இருக்கும் பரமன் அங்கியாக இருந்து இயக்கிக் கொண்டிருக்கிறான் என்ற கருத்தையும் இணைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

ஆன்மாவும் இறைவனும் முறையாக அங்கமும் அங்கியுமாக இணைந்திருக்கும் இயல்பைத் திருமூலர்,

'கணுஅற நின்ற கலப்பு' என்றும் கூறுகின்றார். இது அங்காங்கி அமைப்பு முறை.

இரண்டாவது பாடலில் சத்தியோசாதம், வாமம், அகோரம், தற்புருடம், ஈசானம் ஆகிய முகங்களில் தோன்றும் ஆகமங்களைப் பற்றிக் கூறி, அவை என் இட்டலிங்கத்தினுள் அமைந்துள்ளன என்று குறிப்பிடுகின்றார் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகள்.

அடுத்து மூன்றாம் பாடலில் இட்டலிங்கத்தை ஒருவன் தன் திருக்கையில் வைத்துத் தியானம் செய்யும் முறையை விளக்குகின்றார்.

அடுத்து 6,7,8 ஆகிய மூன்று பாடல்களில் மூன்று வகையான தீட்சை முறைகளை எடுத்துக்காட்டி விளக்குகிறார்.

வீரசைவ சமயச் சித்தாந்தத்தின்படி, தீட்சையானது இட்டலிங்க தீட்சை, பிராணலிங்க தீட்சை, பாவலிங்க தீட்சை என மூன்று வகைப்படும். அவை ஒவ்வொன்றும் ஏழு வகைப்படும்.

இட்டலிங்க தீட்சை நெறி

கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகள் இட்டலிங்கத்தை மையப்பொருளாகக் கொண்டு ஐந்து நூல்கள் அருளியுள்ளார்கள். அவை முறையே,

1. இட்டலிங்க அபிஷேக மாலை
2. இட்டலிங்க நெடுங்கழிநெடில்
3. இட்டலிங்கக் குறுங்கழிநெடில்
4. இட்டலிங்க நிரஞ்சன மாலை
5. இட்டலிங்கக் கைத்தல மாலை

எனப் பெயர் பெற்று நிற்கின்றன. அவற்றுள் முதலில் நின்ற இட்டலிங்கமாலையில் ஆறாம் பாடலில், இட்டலிங்க தீட்சை எனப்பெறும் முதல்தீட்சையின் ஏழு படிநிலைகளை எடுத்துக் கூறி விளக்க முற்பட்டார்.

வீரசைவ தீட்சையானது இட்டலிங்க தீட்சை, பிராணலிங்க தீட்சை, பாவலிங்க தீட்சை என மூவகைப்படும்.

தீட்சை வேறுபாட்டினால், அவற்றை ஏற்றுக் கொள்ளும் சீடர்களும் மூன்று வகைப்படுவர்.

தூலதேகத்தின்கண் (பருவுடம்பு) இஷ்டலிங்கத்தை ஏற்கும் சீடரானவர் வீரசாமானியர் எனப் பெறுவர்.

சூக்குமதேகத்தின்கண் (நுண் உடம்பு) பிராணலிங்கத்தை ஏற்கும் சீடரானவர் வீரவிசேஷர் எனப் பெறுவர்.

காரண சரீரத்தின்கண் (மிகுநுண் உடம்பு) பாவலிங்கத்தை ஏற்கும் சீடரானவர் வீர நிரராபரர் எனப் பெறுவர்.

முதலில் வீரசாமானியருக்குத் தூல உடம்பின்கண் செய்யப் பெறும் இட்டலிங்க தீட்சையின் ஏழுநெறிகளை விளக்குகிறார் சிவப்பிரகாச அடிகள்.

முதலில், இட்டலிங்க தீட்சையைச் செய்யப் புகும் குருவானவரை ஓகைமலி குரு என்று அடைமொழியுடன் எடுத்துக் காட்டுகிறார்.

வீரசைவ மரபுப்படி, பிறக்க இருக்கும் குழந்தையானது தாயின் கருப்பையில் இருக்கும்போதே அதற்குத் தீட்சை என்ற சமயவழி நிகழ்ச்சி தொடங்கப் பெற்று விடுகிறது. இதனைக் கருப்பலிங்க தாரணம் என்பர். இந்த இலிங்கம் கருவுற்ற தாயின் கழுத்தில் அணிவிக்கப் பெறும். குழந்தை பிறந்ததும் முதல் அல்லது மூன்றாம் மாதங்களில் தாயின் கழுத்திலிருந்த இலிங்கம் குழந்தையின் கழுத்தில் அணிவிக்கப் பெறும்.

மயிலம் பொம்மபுர ஆதீன நிறுவுநர் என நின்ற பாலசித்தர் இலிங்கதாரணத்துடன் குழந்தை உருவினராய் வருகிறார். கன்னட நாட்டில் சிறப்பாகப் பேசப்பெறும் பசவதேவர் பிறக்கும்போதே வீரசைவ இலிங்க தாரணத்துடனேயே பிறக்கிறார்.

கருப்பலிங்க தாரணமானது பிறக்க இருக்கும் குழந்தையை இலிங்கம் எனப்பெறும் பரம்பொருளிடம் அடைக்கலமாக ஒப்புவித்து விடுதல். இதனை மணிவாசகர்,

'உங்கையிற் பிள்ளை உமக்கே அடைக்கலம் என்று
அங்கு அப்பழஞ்சொல் புதுக்கும்'

என்ற திருவெம்பாவை வரிகளில் எடுத்துக் காட்டுகின்றார். இது பிறக்க இருக்கும் குழந்தையை இலிங்கம் என்னும் பரம்

பொருளுக்கு அடிமையாக்கி விடுதல் என்னும் இதனை, மாணிக்கவாசகரே,

'அன்றே என்றன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் எனை ஆட்கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்கு உண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே!
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே' (திருவாசகம், குழைத்தபத்து, பாடல் 7)

என்று எடுத்துக் காட்டுகிறார்.

கருவிலேயே இலிங்காதாரணம் செய்யப் பெற்ற குழந்தைக்கு மீளவும் மூன்று (அ) ஐந்து ஆண்டுகள் முடிந்தபின் முதன்மைத்தான இலிங்காதாரணம் செய்யப் பெறுகிறது. கர்ப்பலிங்க தாரண விதி இக்காலத்தே முழுமையாக எல்லாக் குடும்பங்களிலும் பின்பற்றப் படுவதில்லை. கட்டாயம் பின்பற்றப் பெற வேண்டியது என்பதாக இப்பாடல் மூலம் தெரிய வருகிறது.

இட்டலிங்க தாரண தீட்சை புரிய இருக்கும் குருவானவர் ஓகை மலி குரு என்று அடைமொழி கொடுக்கப் பெறுகின்றனர்.

கருவிலிருந்தபோது குழந்தையை அடைக்கலம் கொடுத்து இலிங்கதாரணம் செய்தபோது அவர் ஓகைக் குருவாக இருந்தார். இப்போது ஓகை மலி குருவாக அமைகிறார்.

அ+உ = ஓ + கை = ஓகை

அகர, உகர எழுத்துகளின் சேர்க்கையாக உணரப் பெறுவது ஓ, கை என்ற எழுத்தானது ஒழுக்கத்தினைக் குறிக்கும்.

குருவானவர் கர்ப்பலிங்க தாரணம் செய்தபோது ஓ என்ற பிரணவ மந்திரத்தின் சாதகாங்கசுத்தராய் நின்று இலிங்கமெனும் மூலப்பரம்பொருளிடம் கர்ப்பத்திலிருக்கும் குழந்தையை அடைக்கலம் கொடுத்துக் கருப்பலிங்கதாரணம் செய்திருப்பார். 'ஓ' அறைதல் என்பது சத்தியம் செய்து கொடுத்தல் போன்ற நிகழ்வு. இது சங்க காலத்திலும் 'ஓம் அறைதல்' என்பதாக அமைகிறது.

கர்ப்ப லிங்க தாரணத்துக்குப் பின் செய்யப் பெறும் வீரசாமான்ய தீட்சையில் குருவானவர் ஓ என்ற பிரணவப் பொருளிலிருந்து விரிந்த ஓம் நமசிவய என்ற மந்திரத்தில் சாதகாங்க சுத்தராய் நிற்கிறார் என்பதை உணர்த்தவே ஓகைமலிகுரு என்று கற்பனைக் களஞ்சியம் எடுத்துக் கூறுகிறார்.

1. குருஆணை உறுவிக்கும் ஆணை

இதுவே வீரசைவ சாமான்ய தீட்சையில் அமைந்த முதல் நெறி (படி). இது ஆக்கினா தீட்சை - ஆக்ஞா தீட்சை என்வும் கூறப் பெறும்.

குருவானவர் சீடனுக்கு முதலில் நீ இன்ன இன்னவாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை அறிவித்தல் என்பது பேராசிரியர் அடிகளாசிரியரின் உரை.

சீடனுக்குத் தமது ஆணையை அடையச் செய்தலாகிய ஆக்கினா தீட்சை என்பது 1.10.1965இல் மயிலம் பொம்மபுர ஆதீனத்தால் வெளியிடப் பெற்ற பழைய உரை. இவ்வாறு ஓர் உரை உண்டு என்று பேராசிரியர் அடிகளாசிரியர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

'ஆணை உறுவிக்கும் ஆணை' என்பது சிவப்பிரகாசர் வாக்கு. உறுவிக்கும் என்பது பொருந்துவிக்கும் என்ற பொருளதாய் நின்ற திருவாக்கு.

குருவானவர், தனது மூலாதாரத்திலுள்ள அதோமுக நந்தியை எழுப்பி, மேலே எழச்செய்து, தன்னுடை ஏனைய ஐந்து இடங்களிலுள்ள, இலிங்கப் பெருமானையும் அங்கமாகிய ஆன்மாவையும் கூத்தப் பெருமானின் இடங்களாக மாற்றி, ஆக்ஞா எனப்பெறும் புருவமத்தியில் சோதி உருவைத் திரளச் செய்து அதன் வழியாகச் சீடனை ஒளி அனுபவம் பெறச் செய்ய வேண்டும்.

இலிங்கம் அங்கியாக ஆன்மாவானது அங்கமாக இருக்கும் உண்மையை ஆணைவழி- மந்திர மொழிகளின் மூலமாக அவன் அறிந்து உய்யுமாறு செய்ய வேண்டும்.

கர்ப்பலிங்க தாரணம் பெற்றுக் கொண்ட சீடன் குடும்பப் பயிற்சி முறையால் என்னென்னவாறெல்லாம் நடந்து கொள்ள

வேண்டும் என்பதை அறிந்தவனேயாதலின் ஆணை உறுவிக்கும் ஆணை என்பது மந்திர விளக்கமாகத்தான் இருக்க வேண்டும்.

ஓ மற்றும் ஓம் நமசிவய என்ற மந்திரங்களின் உட்பொருளைத் தன்னுடைய ஆக்ஞா எனும் புருவமத்தியில் எழுப்பிய ஒளியால் சீடனைத் துய்க்க வைத்தல் அல்லது உற்று அறியுமாறு செய்தல் என்ற வகையில் ஒலியை ஒளிநிலைப்படுத்துதல் செய்ய வேண்டும்.

2. உவமா தீட்சை

உவமா தீட்சை என்பது இட்டலிங்ககாரண தீட்சையில் அமைந்த இரண்டாம் நெறி (அ) படி.

உயர் புராதன சரிதமொடு ஒக்கும் நடை வருவிக்கும் உவமா தீட்சை என்பது அடிகள் திருவாக்கு.

உயர்ந்த பழைய தொண்டர்களின் வரலாற்றைக் கூறி அவ்வரலாற்றுடன் ஒத்த சமய ஒழுக்கத்தை அடையச் செய்யும் உவமா தீட்சை என்பது அடிகளாசிரியர் உரை.

ஒத்த சமயாசார ஒழுக்கங்களைப் போதிக்கும் உவமா தீட்சை என்பது பழைய உரை.

திருநீறு பூசுதல், இட்டலிங்கத்திற்கு அபிஷேகம் செய்தல், அபிஷேகப் பொருள்களின் வரிசையை அறிவித்தல் போன்ற சமயாசார ஒழுக்கங்களில், சைவம் முதலிய ஏனைய சமயாசாரங்களோடு இட்டலிங்க பூசைமுறை எவ்வாறு வேறுபடுகின்றது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் குருவானவர் சொல்லித் தருதல் வேண்டும். சைவர்களுக்கும் வீரசைவர்களுக்கும் இட்டலிங்கபூசை முறை உண்டு. இரண்டு இட்டலிங்கப் பூசைகளுக்கும் இடை அமைந்த வேறுபாடு என்ன? என்பதை உவமைப்படுத்திக் காட்டுதல் வேண்டும். வீரசைவ இட்டலிங்கப் பூசையானது அங்காங்கி பாவமாக அமைத்துச் செய்யப் பெறுவது போன்ற செய்திகளை ஒப்புமைப்படுத்தியும் வேறுபடுத்தியும் காட்டுதல் வேண்டும்.

3. சுவத்திகாரோகண தீட்சை

இது இட்டலிங்க தீட்சையில் அமைந்த மூன்றாம் நெறி (அ) படி.

தன்மகனை ஒண்சுவத்திகம் ஏற்றுபு சோகம் அறும் மனுமயம் செய்து அமைத்திடும் ஒரு சுவத்திகாரோகணமும் என்பது சிவப்பிரகாச அடிகள் திருவாக்கு.

தன்மகன் என்று கருதத்தகும் தன் சீடனை ஒளிபெற்ற சுவஸ்திகா மண்டலத்தில் தர்ப்பை ஆசனம் இட்டு, தனக்கு முன் உட்காரச் செய்து பஞ்சப்பிரமம் முதலான மந்திரங்களால் சீடனுடைய உடலுறுப்பைத் தொடுதலாகிய நியாசம் செய்து அவனுடைய உடம்பை மந்திரமயமாக்கும் சுவத்தி காரோகண தீட்சையும் என்பது பேராசிரியர் அடிகளாசிரியரின் விளக்கம்.

தன்மகனாகிய சீடனை ஒளிபொருந்திய சுவஸ்திகாசனத்தில் ஏற்றி, சோகமற்ற மந்திர ரூபமாகச் செய்து இருக்கச் செய்யும் ஒரு சுவத்திகாரோண தீட்சையும் என்பது பழைய உரை.

சுவத்திகம் என்றால் என்ன? மொஹஞ்சதாரே, ஹரப்பா அகழ்விட நாகரிக வரலாற்றை ஆராய்ந்தவர்கள் அங்கே சுவத்திகா வடிவம் கிடைப்பதாக அமைத்துக் காட்டினார்கள். அதன் வடிவம் இரு எதிர்நிலைக் கோடுகளின் இணைப்பு X + என இருவகைகளில் காணப் பெறுகிற அடையாளம். அதற்கு உரை கண்டவர்கள் வாழ்வியல் தோற்றம் அல்லது அமைப்பு இரண்டு எதிர்நிலைக் கோடுகளில் அமைகின்றன.

வேறொரு விளக்கமும் காணப்பெறுகிறது. படைப்புகள் இருவகை. கீழ்நோக்கிய படைப்பு. மேல்நோக்கிய படைப்பு. உயிரற்ற பொருள் உயிர், மனம் என்பவை கீழ்நோக்கிய படைப்பில் வருவன. இவை ராஜஸம், சத்துவம், தாமஸம் எனலாம். இதை அதம் என்று குறிப்பிடுவர். இதற்கு ஒரு வடிவம் முக்கோணத்தில் அமைகிறது.

அடுத்தது மேல்நோக்கிய படைப்பு. இது சுத்த இருப்பு, (சுத்தசத்) சுத்த ஞானம் (சுத்தசித்) தூய இன்பம் (சுத்தானந்தம்) என்பன. இதன் வடிவம் மேல்நோக்கிய முக்கோணமாக அமைகிறது. அதனை அம்மா என்றனர்.

இருவகைப் படைப்புகளையும் இணைத்தால் இருநிலைப் படைப்புகளில் இணைந்த வடிவம் கிடைக்கும். இந்த

இரண்டிற்கும் மேலாக அருள்நிலை என்றும் சொல்ல முடியாதது என்றும் சூன்யம் என்றும் ஒருநிலை பேசப்பெறுகிறது.

கீழ்நிலைப் படைப்பு, மேல்நிலைப் படைப்பு என்ற இரண்டையும் கடந்த நிலையில் உள்ளது பரம் எனும் இலிங்கப் பொருள். இம்மூன்றையும் இணைத்தால் பெறும் வடிவமே சுவத்திகம். இருபடைப்புகளைக் கடந்த மேல் நிலையாகிய ஒன்றை அடைவதே சுவஸ்திகம் ஏற்றுதல் என்று பெயர் பெறும்.

அந்த மேல்நிலைப் பொருளே இன்பப் பொருள். அது ஒளிவடிவமாகத் திகழ்வது.

இவ்வுருவத்தைத் திருஞானசம்பந்தர்,

'இருமையின் ஒருமையும்
ஒருமையின் பெருமையும்'

என்று எழுகூற்றிருக்கையில் குறிப்பிட்டருளினார்.

'இருமையும் கடந்து நின்றார்' என்று பெரியபுராணமும் 'இருமையும் நீத்தார்' என்று திருக்குறளும் எடுத்தியம்புகின்றன.

அவ்வடிவமே சுவத்திகம் என்பதை ஒத்தது. நேர்நின்ற, எதிர் நின்ற இருமைகளைக் கடந்த மேல்நிலையாக அமைந்த மேற்புள்ளியே சுவத்திகம் என்பது. ஸ்வ+அஸ்தி+இகம் = சுவத்திகம் இரண்டாய் நின்ற தன்னுண்மை நிலை. அதைக் கடந்து மேலான இன்பநிலை பெறுதல் வேண்டும் என்பது.

சுவஸ்திகம் என்ற கருத்தைத் தமிழில் ஐ, அஃகு, இயம் என்று கூறலாம். இதுவே ஐக்கியநிலை.

இந்நிலையில் சீடனை ஏற்றுவதற்கு ஓம் என்ற மந்திரநிலையைப் பயன்படுத்துவது மரபு.

குருவானவர் ஓம் என்ற மந்திரத்தில் ஆறு நிலைகளை விரித்தும் தொகுத்தும் அமைத்துச் சுத்த சாதகாங்கராய் அமைந்து, தர்ப்பையால் சீடன் உடம்பை ஆறு நிலைகளில்- பக்கங்களில் மெல்ல நீவி, தருப்பையை மேல் உயர்த்தி நிறுத்துதல் வேண்டும். இதனால் சீடனுடைய புற உடலும் அக உடலும் ஆன்மாவும் தூய்மை பெறும்.

இப்போது ஒரு மரப்பலகையில் சுவத்திகா உருவக்கோலம் அமைத்து அதன்மேற் சீடனை இருத்தி, தர்ப்பையால் சிவசிவ மந்திரத்துடன் நீவி முடித்தல் என இந்நிகழ்வு அமைக்கப் பெறுகிறது.

4. விபூதிப் பட்டம்

இது இட்டலிங்க தாரண தீட்சையில் அமைந்த நான்காம் நெறி (அ)படி. நூல் சொல்லிய இடங்களில் தூய நீறு அணிதரும் தொல் விபூதிப் பட்டமும் என்பது அடிகள் வாக்கு.

பூதி என்றால் செல்வம். வி என்றால் தனக்கு மேலாக ஒன்றும் இல்லாதது. தானே தலைமைச் செல்வமாய் தனக்கு மேலாக எந்த ஒரு செல்வமும் இல்லாத பெருமையுடையதாய் விளங்குவது விபூதி. திருநீறு எனத் தமிழில் குறித்தல் உண்டு.

'சாதனத்துள் எல்லாம் முந்து திருநீறு' என்பது சிவப்பிரகாசர் அடிகள் திருவாக்கு.

நூல்களில் விதித்துள்ளவாறு உடற்பாகங்களில் தூய திருநீற்றை அணியச் செய்கின்ற பழைமையான விபூதிப் பட்டை என்ற தீட்சையும் என்பது பொருள். திருநீறு என்ற தலைப்பில் மூன்று மந்திரங்களை அருளிச் செய்கின்றார் திருமூலர்.

'கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வரே'

என்பது 1643ஆம் திருமந்திரப் பாடல். பொருள் வெளிப்படை. **'எல்லாவற்றையும் ஒடுக்கிய பின்னர், அவை ஒடுங்கிய சாம்பலைப் பூசுகின்ற'** என்பது விசேடவுரை.

இலிங்கதாரணத்துக்கு முன்னரும் திருநீறு பூசுதல் வேண்டும் என்ற பொருளில் தொல்விபூதி என்று அடைமொழி கொடுத்துக் கூறினாராயிற்று.

சைவருக்கும் வீரசைவருக்கும் திருநீறு அணிவதில் சிற்சில வேறுபாடுகள் காணப் பெறுகின்றன. அவையாவும் வழக்கத்தில்

உள்ளனவேயன்றி, நூலாதாரம் காட்டி அமைத்தலோ, மறுத்தலோ இயலவில்லை.

திருநீற்றினை மூன்று வகைகளாகப் பூசுதல் வேண்டும் என்பது மரபு.

உத்தூளனம் என்பது திருநீற்றைத் தூளாகவே பூசுதல். இது இரண்டு வகை. 1. உடம்பு முழுவதும் மேலிருந்து கீழாக அமைத்துத் தூளாகப் பூசுதல். 2. வலக்கைப் பெருவிரலும் நடுவிரலும் இணைய நிறுத்தி, தூளாக இருக்கும் விபூதியை உடம்பில் எதிர்த்துப் பூசுதல், கீழிருந்து மேலாகப் பூசுதல், மேலிருந்து கீழாகப் பூசுவது. ஊழிக்காலத்தில் இந்த ஆன்மா காப்பாற்றப் பெற வேண்டும் என்ற கொள்கை அடிப்படையில் திருநீறு பூசுதல் முதல்முறை. ஊழிக்கால முடிவில் ஆன்மாக்களெல்லாம் திருநீற்றினுள் ஒடுங்கிக் கிடக்கும். அவற்றுக்குத் திருநீறு கவசமாக இருக்கும்.

எதிர்த்துப் பூசும் இரண்டாவது முறையில் பேரூழிக் காலத்தில் அனைத்து நிலைகளும் ஒடுங்கி விட்ட காலத்தில் திருநீறு ஆன்மாக்களைத் தன்னுள் அடக்கிக் கொண்டு, இறைவன் திருவடிகளில் ஒடுங்கி நிற்கும். அப்போதும் ஆன்மாக்கள் ஐந்தொழிற்படுத்தப் பெறும்.

பின்னர், திரிபுண்டரகமாகப் பூசப்பெறுதல் வேண்டும். தூளாக இருக்கும் திருநீற்றை எடுத்துத் தண்ணீர் விட்டு, மந்திரம் ஓதி, பின்னர்க் குழைத்துப் பூசுதல் வேண்டும். இதனைத் தொல்விபூதிப் பட்டம் என்று எடுத்துக் காட்டுகின்றார், சிவப்பிரகாச அடிகள்.

வீரசைவத்தில் குருவினுடைய பாதோகத்தைக் கொண்டு வந்து திருநீற்றினுள் விட்டுக் கட்டியாக அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். அதற்கு ஆதாரம் என்பது பெயர். அதைக் கைவிரல்களால் தடவி எடுத்துத் திரிபுண்டரமாக அணிதல் வேண்டும் என்பது சிறப்பு விதி.

5. கலசாபிடேகம்

இது ஐந்தாவது (அ) படியாக அமைகிறது. மாகலச நீராட்டும் கலசாபிடேகமும் என்பது சிவப்பிரகாச அடிகள் திருவாக்கு. இது

பஞ்சாசாரிய கலசம் என்று உரைகொள்ளப் பெற்றது. பேராசிரியர் அடிகளாசிரியர் அவர்களும் பழைய உரையாசிரியரும் இதே கருத்தைத் தெரிவித்துள்ளார்கள்.

வீரசைவத்தில் பஞ்சாசாரிய கலசம் அமைத்து மந்திர உருவேற்றி, அம்மந்திர நன்னீரை - வீரசாமான்ய தீக்கையைச் செய்து கொள்ள இருக்கின்ற சீடனுக்கு அபிஷேகம் செய்து அவனுடைய ஆன்மாவில் அமைந்துள்ள ஐவகை அழுக்குகளையும் நீக்குதல் வேண்டும் என்ற இந்தமுறை பின்பற்றப் பெறுகிறது.

சைவசமயத் தீக்கை முறையிலும் சதாசிவமூர்த்தத்துக்குரிய தற்புருடம், வாமம், அகோரம், சத்தியோசாதம், ஈசானம் என்ற ஐம்முகங்களை உணர்த்தும் வகையில் ஐவகைக் கலசம் வைத்து, சதாசிவ மூர்த்தியை எழுந்தருளச் செய்து, அதற்குரிய மந்திரங்களை உருக்களாக அமைத்து, சீடனுக்கு அபிடேகம் செய்யும் முறையை மேற்கொண்டு ஒழுகுவது உண்டு.

இங்கே கூறப்பெற்ற இரண்டு வகைகளுக்கு இடையே திருமூலர் வேறொரு முறையை அறிமுகப்படுத்துகிறார்.

'சிவபெருமான் நிட்கள சகளத் திருமேனி கொண்டு (அருவுருவம்) சதாசிவமூர்த்தம் எனப்பெற்று, சாதாக்கிய தத்துவத்தில் நின்று ஐந்தொழில் முதல்வனாக நிற்பான். ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்னும் ஐந்து திருமுகங்களையும் உடையவனாய் விளங்குவன்.

ஈசானம் மேலிடத்தை நோக்கியும், (வடகிழக்கை நோக்கியது எனவும் ஆகமம் கூறும்) தற்புருடம் கிழக்கு நோக்கியும், அகோரம் தெற்குநோக்கியும் வாமம் வடக்கு நோக்கியும், சத்தியோசாதம் மேற்கு நோக்கியும் நிற்கும்.

படைத்தற் சத்தி முதலிய ஐந்து சத்திகளே ஐந்து திருமுகங்களின் வழிச் செயல்படும் என்று ஆகமங்கள் கூறும்.

அதனால் ஐந்தொழிற்கும் முதல்வனாம் சிவபெருமானை அம்முதன்மை தோன்ற அவ்ஐந்து முகங்களுடன் சாதாக்கிய தத்துவத்தில் வைகும் சதாசிவ மூர்த்தியாகவே நிலவுலகத்தார் கருதி வழிபடுதல் ஆகம முறையாயிற்று.

ஆயினும், நிலவுலகத்தார் செய்யும் வழிபாட்டில் அவர்க்குத் தோன்றாது நின்று அருள்புரியும் ஆற்றலை, அவ்ஐந்து முகங்களுக்கும் வேறாக, தோன்றாது நிற்கும் ஆறாவது முகமாகவே - அதோமுகமாகவே ஆகமங்கள் கூறும். (இச்செய்திகள் திருமந்திரத்துக்கு உரைகண்ட அருணையார் தரும் செய்திகளைத் தழுவி எழுதப் பெற்றவை.

ஆயினும், ஐம்முகங்களின் மூலமாக அருள் செய்யும் ஆற்றல்பொருந்திய அதோமுகமே தொல்லைத் திருமுகம் என்று கந்தபுராணம் கூறுகிறது.

சிவபெருமான் மேலுலகத்து உள்ளார்க்கேயன்றிக் கீழுலகத்துள்ளார்க்கும் அருள்புரிபவனே என்றாலும் சிவபெருமான் மூலமாக உலகத்தவர்களுக்கு அருள்புரிவது அதோமுகமே என்பது திருமந்திரத்தில் இரண்டாந் தந்திரத்தில் 'அதோமுகத் தரிசனம்' என்ற தலைப்பில் அமைந்த ஆறு பாடல்களால் உணர்த்தப் பெறுகிறது.

'அண்டமோடு எண்டிசை தாங்கும் அதோமுகம்
கண்டம் கறுத்த கருத்து அறிவாரில்லை'

என்ற அதோமுகத் தரிசன இரண்டாம் பாடலில் உள்ள முதல் இரண்டு வரிகளின் பொருள்.

சிவபெருமானின் உள்நின்று உலகத்தவரைப் புரக்கும் அதோமுகமே உலகைப் புரப்பது. அது கறுத்த கண்டத்தை உடையதாய்த் தோன்றுவதை யாரும் அறியவில்லை என்றார்.

முடிந்த முடிபாக, ஆறாவதாகிய அதோமுகமே நிலவுலகத்தார்க்கு கறைக்கண்டனாக வெளிப்பட்டு அருள் செய்வது என்பதும் அத்திருமுகமே (அதோமுகமே) நிலவுலகத்தார்க்குக் கறைமிடற்றண்ணல் வடிவினதாய்த் தோன்றும் என்பதும் திருமூலர் கருத்தாகக் கொள்ளலாம். அதோமுகமே கருணைத் திருவுருவத் திருமுகம்.

இனி,

'நந்தி எழுந்து நடுவுற ஓங்கிய
செந்திக் கலந்து உட்சிவனென நிற்கும்
உந்திக் கலந்து அங்கு உலகம் வலம் வரும்
அந்தி இறைவன் அதோமுக மாமே'

என்பது அதோமுகத் தரிசனம் என்ற தலைப்பில் அமைந்த நான்காம் பாடல். அதன்பொருள் வருமாறு;

சிவபெருமானது அதோமுகமானது ஆகவநீயம் என்ற வடதிசைத் தீ, தக்கிணாக்கினி என்ற தென்திசைத் தீ என்னும் இரண்டற்கும் இடையில், நடுவில் இல்லத்தீ (காருகபத்யம்) எனப் பெயர் பெற்று வளர்ந்து எரிகின்ற தீயினுள் நின்று அதனைச் சிவாக்கினியாகச் செய்யும். மேலும் அது ஏனைய இரண்டு தீயினுள்ளும் சென்று கலந்து உலகம் முழுவதும் வலம் வரும்.

இப்பாடலின் முடிபாக நாம் கொள்ளத் தகுவது, நிலவுலகில் இல்லத்தில் வைத்துச் செய்யும் வழிபாட்டில் நின்று அருள்புரிவதும், திருக்கோயில்களில் வைத்துச் செய்யும் வழிபாட்டில் நின்று அருள்புரிவதும் அதோமுகமே. மேலும் ஒளிவடிவாய் நின்ற பலபொருள்களாய் அமைந்த இலிங்கங்களையும் அதோ முகமாகவே கொள்ள வேண்டும்.

மேலும், திருமூலரின் அதோமுகத் தரிசனத்தில் அமைந்த ஆறாவது பாடலில்,

ஆசாரியர்களால் எடுத்துக் கொடுக்கப் பெறும் குறி (இலிங்கம்) யினுள் நின்று அருள்புரிவதும் ஆன்மார்த்த இலிங்கம் எனப்பெற்று நிற்பதும் அதோமுகமே என்று கொள்ளுதல் வேண்டும்.

நடுவுற ஓங்கிய செந்தீ என்று குறிக்கப் பெறுவதால் அகத்தே இதயத்தினுள் சுடர் வடிவாக இருப்பதும், மணிபூரகம் முதலிய ஆதார இடங்களில் நின்று மேலோங்கி உடல் முற்றும் பரவும் மூலாக்கினியாகப் பொதுமையில் நிற்பதும் அதோமுகம் என்ற செந்தீயே.

யோகியர்களின் பாவனையில் நின்று அவர்க்கு அருள் செய்வதும் ஆறுமுகப் பெருமானாக வெளிப்பட்டு நின்றதும் அந்த அதோமுகமே.

எனவே, அதோமுகமே நந்தியாக எழுந்து, நடுவுறும் பொதுமைச் செந்தீயாக நின்று, அனைத்துக் குறிகளையும் இலிங்கமாக ஆக்கி அருள் செய்வது என்பது தெளிவு.

தற்புருடம் ஆகிய ஐம்முகங்களும் தத்தம் நிலைகளில் ஒத்தனவே. வீரசைவன் மேற்குத் திக்கில் அமைந்த சத்தியோசாத முகத்தின் வழியாக அதோமுகத்தையே வழிபடுதல் வேண்டும். சீடனுடைய கையில் கொடுக்கப் பெறும் இலிங்கமாக நின்று தரிசனப்படுத்துவதே அதோமுகம் எனக் கொள்ள வேண்டும்.

மேலே குறிப்பிடப் பெற்ற அனைத்துச் செய்திகளையும் இணைந்த வகையில் அதோமுகத்துக்கான கலசமே, வீரசைவ சாமானிய தீட்சையில் அமைக்கப் பெற வேண்டும் என்ற குறிப்பை அமைத்து,

மா கலசநீர் ஆட்டும் கலச அபிடேகமும் என, மா என்ற சிறப்பு அடைமொழி கொடுத்துச் சிவப்பிரகாச அடிகள் குறித்ததாகக் கொள்ளலாம். இச்செய்திகள் திருமூலர் திருமந்திரத்தை அடிப்படையாகக் கொண்டவை.

அதோமுகமே ஆன்மாவினுள் நிற்பது. ஆன்மாவை அங்கமாகக் கொண்ட அங்கி (உறுப்பை உடையது) என நின்றது எனவும் கொள்ள வேண்டும்.

திருமூலர் கருத்தை அறிஞர்கள் சிந்திக்க வேண்டும் என்பதே என் வேண்டுகோள்.

இலிங்காயதம் இது வீரசைவ சாமானியர்க்கு வழங்கப்பெறும் இட்டலிங்கத் தாரண தீட்சையில் அமைந்த ஆறவாது நெறி (அ) படி.

சிவலிங்க வடிவத்தைத் தூய்மை செய்து மந்திர நியாசகங்கள் செய்து, சிவகலையை நிறுத்தி அதற்குரிய வழிபாடுகளைச் செய்து முடித்து, அதனை எடுத்து, குருவானவர் தன்கையில் வைத்துக் கொண்டு கருப்பூர ஆராதனை செய்து சீடனை அச்சிவலிங்கத்தை நோக்குமாறு செய்யும் **இலிங்காயத தீட்சை** என்பது அதன் பொதுப் பொருள்.

சிவலிங்கத்தைச் சீடனுக்குத் தரிசிப்பித்தல் என்பது பழைய உரை.

சிவலிங்கத்தைக் குருவானவர் தன்கையில் வைத்துக் கொண்டு, சீடனைத் தன்னருகில் அழைத்து அமரச் செய்து (அ) முன்னம் அமர்ந்திருந்த சீடனைச் சிவலிங்கத்தை நோக்குமாறு செய்கிறார்.

இந்நிகழ்ச்சியைக் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகள் **'மருவு சிவம் நோக்குவிக்கும் வயங்கு இலிங்காயதம்'** என்று குறிப்பிட்டருளுகின்றார்கள்.

'சிவத்தை நோக்குமாறு செய்வது என்பது வெளிப்படை. சிவமே காட்சிப் பொருள். அத்தகைய சிவத்தை மருவி- இணைந்து உள்நிற்கும், விளங்குகின்ற அதோமுக இலிங்கத்தைப் பார்க்குமாறு செய்தலே இலிங்காயதம். சிவாயதம் கண்டு, ஆகுக என்னாது சிவத்தின் மூலம் சிவத்தை மருவி நிற்கும் அதோமுக இலிங்கமாகிய தற்பரம் என்று விளங்கி நிற்கும் இலிங்கமாகிய தனிப்பொருளை, சீடனை நீ நன்றாகக் காண்பாயாக என்று அறிவுறுத்துவதே மருவு சிவம் நோக்குவிக்கும் வயங்கு இலிங்காயத நெறி என்று கொள்ளுதல் வேண்டும்.

இட்டலிங்கத்தில் சிவனைக் காண்பது முதல்நிலை. சிவனை மருவியிருக்கும் அதோமுகத்தைக் காண்பது இரண்டாம் நிலை.

சிவமும் அதோமுகமும் முறையே அங்கமும் அங்கியுமாக உறுப்பும் உறுப்பை உடையவனும் ஆக அமைந்த உறவில் நிற்பனவே. அவ்வாறே அதோமுகம் அங்கியாக, நீ அங்கமாக நிற்க வேண்டும் என உணர்த்தி அவ்வாறு பார்க்குமாறு செய்வது மூன்றாம் நிலை.

சிவத்தை மருவி நின்றும் தனித்து விளங்கி நிற்கும் (அதோமுக) இலிங்கத்தைக் காணுதல் வேண்டும் என்பதே இப்படி நிலையின் மையக்கருத்து.

இலிங்க சுவாயதம்

இது வீரசாமானியர்க்குச் செய்யப் பெறும் இட்டலிங்கத் தீட்சையில் ஏழாவது நெறியாக இறுதிப் படியாக அமைகிறது.

'மன்னு சிவலிங்கம் உரு அணை இலிங்க சுவாயதம்' என்று கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகள் அமைத்தருளி னார்கள்.

நிலைபெற்ற சிவலிங்கத்தை ஏகபாவம் செய்து மாணவனுடைய உத்தமமாகிய உறுப்பில் அணிந்து கொள்ளச் செய்யும் இலிங்க சுவாயதம் என்று உரைகண்டார் பேராசிரியர் அடிகளாசிரியர் அவர்கள்.

பொருந்தி இருக்கும் இலிங்கத்தைச் சீடனுடைய சிரம் முதலிய உத்தம உருவத்தில் தரிப்பித்தலாகிய இலிங்க சுவாயத தீட்சையும் என்று உரைகண்டார் பழைய உரையாசிரியர்.

மன்னுசிவலிங்கம் என்பதற்கு நிலைபெற்றிருக்கின்ற சிவலிங்கம் என்று போற்றப் பெறும் இட்டலிங்கத்தின் உருவுடன் அணைந்திருக்கும் அதோமுகஇலிங்கம் என்னும் ஒளியை, சீடனிடத்து, அவனுடைய தன்னுண்மை நிலையுடன் இணைத்து நிறுத்துதல் என்பது பொருள்.

குருவானவர் சீடன் கையில் சிவலிங்கத்தைக் கொடுக்கிறார். சீடன் அதனைச் சிவலிங்கம் என்று கருதி வைத்துக் கொண்டாலும், அந்த உருவத்தில் அகமுகமாக அணைத்திருக்கிற அதோ முகலிங்கத்தின் சுவ+ஆயதம் = இயற்கை உண்மைத் தன்மையாகிய கருணையை, சீடன் தன்வயப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஆணை இடுகிறார்.

சீடனே, உன் கையில் கொடுத்திருப்பது ஏதோ ஒரு சிவலிங்க உருவம் என்ற அந்த அளவில் மட்டும் எண்ணிவிடாதே. அதன் இயற்கை உண்மைத் தன்மையானது ஞானத்தினால் சுத்திகரிக்கப் பெற்ற கருணையே என்று எடுத்துக் கூறி, அந்த இலிங்க உருவைப் பார்த்து, நீ அழுது அழுது, அந்த இலிங்கத்தின் சுவபூதித் தன்மையை உன்னுடையதாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று ஆணையிடுதல் குருவின் ஆணை. அதுவே, இலிங்கத்தின் அதோமுகலிங்கத்தின் உண்மைச் சொரூபமாகிய கருணையைத் தன்வயமாக்கிக் கொள்ள வேண்டும் என்று ஆணைப்படுத்துதலின் மூலம் சீடனை ஆற்றுப்படுத்துதல் என்பதே இலிங்க சுவாயதத்தின் விளக்கமாகக் கொள்ள வேண்டும்.

இட்டலிங்கத் தாரணம் எனப்பெறும் வீரசைவ நன்னெறியின் முதன்மைத் தீட்சையின் ஏழுநெறிகளை - படிகளை மேற்கண்டவாறு விரித்துரைக்கத் திருவருளும் குருவருளும் துணை நின்றன.

திருமூல தேவநாயனாரின் அருளாணை வழி நின்று 'இலிங்காயதம்' என்ற யோகநிலைப் பொருளை இயன்ற அளவில் உணரவும் உணர்த்தவும் முடிந்தது.

அதோமுகத்தைச் சிவலிங்கததின் வழிநின்று அணைந்து, அதன் தன்னுண்மைத் தன்மையாகிய கருணையை, அழுது அழுது எழும் அன்பினால் அணைந்து அதோமுக இலிங்கத்தின் கருணை மயமாக ஆதல் என்பதே வீரசாமான்யர்களின் தீட்சையாகிய இட்டலிங்கத் தாரண தீட்சையின் மையப்பொருள் என்பதனை உணர்ந்து தெளிதல் வேண்டும்.

இட்டலிங்க தாரணம் எனப்பெறும் வீரசைவ நன்னெறியின் முதன்மைத் தீட்சையின் ஏழுநெறிகளை - படிகளை மேற்கண்டவாறு விரித்துரைக்கத் திருவருளும் குருவருளும் துணை நிற்கின்றன.

திருமூல தேவ நாயனாரின் அருளாணைவழி நின்று இலிங்காயதம் என்ற யோகநிலைப் பொருளை இயன்ற அளவில் உணரவும் உணர்த்தவும் முடிந்தது.

அதோமுகத்தைச் சிவலிங்கத்தின் வழிநின்று அணைந்து, அதன் தன்னுண்மைத் தன்மையாகிய கருணையை அழுது அழுது எழும் அன்பினால் அணைந்து அதோமுக இலிங்கத்தின் கருணை மயமாக ஆதல் என்பதே வீரசாமான்யர்களின் தீட்சையாகிய இட்டலிங்க தாரண தீட்சையின் மையப் பொருள் என்பதனை உணர்ந்து தெளிதல் வேண்டும்.

இட்டலிங்க தாரண தீட்சையின் விளக்கப் பொருளாது மரபு வழியில் உணர்ந்தவர்களுக்கு மாறுபாடாகத் தோன்றலாம். ஆயினும், அப்பொருளானது அல்லது விளக்கமானது திருமூலர் வழிநின்றும் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகளின்

வாக்கின் வழிநின்றும் திருவருயையும் குருவருளையும் துணையாகக் கொண்டும் அமைக்கப் பெற்றது.

வீர விசேஷ வீர நிராபார தீட்சைகள்

வீரசைவ சமய வழியில் நின்று உணரப் பெறும் மூவகைத் தீட்சைகளில் ஒன்றன் விளக்கம் மட்டுமே இங்கு அமைக்கப் பெற்றது. இலிங்காயதம் என்பதே வீரசைவ தீட்சைகள் மூன்றற்கும் மையப் பொருள் ஆதலின் அதனை அடிப்படையாகக் கொண்டே ஏனைய தீட்சைகளின் இயல்புகளை உணர்ந்து கொள்ளலாம் என்ற கருத்தில் அவற்றின் விளக்கம் இங்கே தரப்பெறவில்லை.

இட்டலிங்க அபிஷேக மாலையின் உரை விளக்கம் வரும்போது அவற்றையும் முழுமையாக விளக்கத் திருவருளும் குருவருளும் துணை செய்யும்.

அங்க அங்கி யோகமே

இலிங்க அங்க யோகமே

நடுவுள அங்கி அகத்திய யோகமே

நவயோகம் (புதியது) எனப்பெறும் வீரசைவ இலிங்காயத நெறி.

3. நந்திக்கொடி

இலிங்காயத்துக் கொள்கையை மேலும் விளங்கிக் கொள்ளும் வகையில் அருள்வளம் கொழிக்கும் நந்திக்கொடி என்ற விளக்கம் இங்கே இணைக்கப் பெறுகிறது.

1. **சிவனுக்கு உரிய பெயர் நந்தி**

சிவன் என்னும் நாமம் தனக்கே உரிய செம்மேனி எம்மான் எனப்பெறும் சைவப் பெருமைத் தனி நாயகனுக்கு 'நந்தி' என்ற பெயர் உண்டு.

'நந்தி' என்ற பெயரால் சிவபெருமானை அதிகமாகக் குறிப்பிட்டுப் பாராட்டிக் கூறுவார் திருமூலர்.

'நந்தி நாமம் நமச்சிவாயவே' என்று எடுத்துக் காட்டினார் திருஞானசம்பந்தர்.

'நந்தி' என்ற தலைப்பில் இதுவரை வெளிவந்த செய்திகள் பலவற்றையும் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் காண வேண்டியது சைவசமயம் சார்ந்தவனின் கடமை என்பதை உணர்தல் வேண்டும்.

ஞானியாரடிகள் என்ற பெயரில் அனைவருக்கும் ஞானகுருவாக, விளங்கிய திருப்பாதிரிப்புலியூர் தவத்திரு ஞானியாரடிகள் திருநந்தி தேவர் என்ற தலைப்பில் 25.04.1937இல் சென்னை, திருமயிலை வெள்ளிச்சுரத்தில் ஒரு சொற்பொழிவாற்றியுள்ளார். அதிலமைந்த சில செய்திகளை முதலில் காணலாம்.

1. 'நந்தி' என்ற பதத்துக்குச் சந்தோஷமாக இருப்பவன் என்பது பொருள். 'நந்தி' என்ற பதத்துடன் 'ஆ' என்பதைச் சேர்த்தால் 'ஆநந்தி' என வரும். சந்தோஷம் என்பது நிலையற்றது. ஆனந்தம் என்பது நிலையானது. தானும் ஆனந்தமாக இருந்து பிறரையும் ஆனந்தமாக வாழுமாறு செய்பவன் என்ற பொருள் தரும். இது சிவனுக்கே பொருந்துவது நந்தி, நம்பன் என்ற பெயர்கள் சிவனுக்கு உண்டு.

சச்சிதானந்த சொரூபியாக இருக்கும் சிவன் தன்னைச் சார்ந்த ஆன்மாக்களையும் சச்சிதானந்தமயமாக ஆக்குபவன் என்ற பொருளில் நந்தி என்ற சொல் விளக்கம் அமைகிறது.

2. நந்தி என்ற பெயரில் அழைக்கப் பெறும் சிவனுக்குத் தேவர் என்ற பெயரும் உண்டு. தேவர் என்ற பெயருக்குரிய சிறப்புகள் எவை?

அதிக வயதுள்ளவர்
அமுதம் உண்டவர்
பொன்னுலகில் இருப்பவர்
கிழத்தனம் இல்லாதவர்
காளைப்பருவம் உடையவர்
நல்லனவற்றைச் செய்து புகழுடம்பு பெற்றவர்

இவையெல்லாம் விண்ணகத் தேவரின் விழுமிய குணங்கள். விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா விழுப்பொருளாகிய சிவன், தேவதேவன் என்றாலும் தேவர்களுள் ஒருவனாகச் சிவனை வைத்து எண்ணும் மரபு இருப்பதால் மேலே கூறிய குணங்களைச் சிவனுக்கு உபசார வழக்காக அமைத்துக் கூறுதல் உண்டு.

'ஆதியிலும் திருநந்தி அநாதியிலும் திருநந்தி
வாதனையால் விளையாட வருமிடமும் திருநந்தி
தீதிலாத் திருநந்தி திகழ்பெருமைத் திசைமுகனார்
ஓதிடினும் அவர்க்கு வாய்ஒரு கோடி போதாவே'

என்று ஞானக்கூத்தர் அருளுகின்றார்.

3. ஆனந்தச் செல்வராகிய நந்தி (சிவன்) நமக்கு ஆகமங்களை அருளிச் செய்தார்.

'செம்பொருளாகமத் திறன் தெரிந்து
நம்பவம் அறுத்த நம் நந்தி வானவன்'

நாமனைவரும் அனுபவித்துத் தெரிந்து கொள்ளுமாறு நமக்கு ஆகமங்களை அருளியவன் சிவன் எனப்பெறும் நந்தி.

திருநந்தி தேவர்

1. திருநந்தி தேவர் வேறு, நந்தி என்று அழைக்கப் பெறும் சிவம் வேறு.

2. திருநந்தி தேவருக்கு நந்தி என்பது தீட்சா நாமம்.

3. சிவன் நந்திதேவர் உருவில் வந்து பக்குவம் பெற்ற ஆன்மாக்களுக்கு சிவாகம ஞானத்தை வழங்குவதால் திருநந்தித் தேவரே முதற்குருநாதன் என்று கூறுவதுண்டு.

'அங்கணன்

கைலை காக்கும் அகம் படித்தொழின்மை பூண்டு

நம்குரு மரபுக் கெல்லாம் முதல் குருநாதன் ஆகி'

என்பது அருளாளர் வாக்கு.

4. சிவபெருமான் நந்திக்கு அதிகாரம் கொடுத்துள்ளார்.

5. நந்தியெம் பெருமானுக்கு நெற்றிக் கண்ணும், சந்திரனும், நான்கு புயங்களும், வெண்மை நிறமும், அழல் வடிவமும், உடைவாளும், பிரம்பும் கொடுக்கப் பெற்றுள்ளன.

6. நந்தி தேவருக்கு அளித்திருப்பது சாரூப முத்தி, உருத்திர கணங்கள். அனைவருக்கும் இறைவன் சாரூப முக்தியை அளித்தாலும் திருநந்தி தேவருக்குக் கொடுத்தது போல அதிகாரத்தை மற்றவர்களுக்குக் கொடுக்கவில்லை.

7. நந்திதேவரின் வலது கையில் மழுவும், இடது கையில் மானும் உண்டு. இவ்விரண்டும் வேதத்தைக் குறிப்பன. வேதமாகிய மான்குட்டியைத் தாங்கியிருக்கிறார் என்று பொருள்படும். மழுவானது வீரத்தைக் குறிப்பது. மழுவானது சம்ஹாரம் செய்வது. சம்ஹாரம் என்பதற்கு ஒழுங்காக இழுத்துக் கொள்வது என்பது பொருள். ஒய்வுபெறுதல் என்பதே சம்ஹாரத்தின் உட்கோள். எல்லாச் சீவர்களையும் ஒரே காலத்தில் ஓய்வுபெறச் செய்வதே மகாசம்ஹாரம். அவ்வதிகாரம் திருநந்தி தேவருக்கு உண்டு.

8. திருநந்தி தேவர் ஒரு சித்தர் எனத் திருவையாற்றுப் புராணம் கூறுகிறது.

9. திருக்கயிலையைக் காக்கும் காவல் தொழில் மேற்கொண்டவர் திருநந்தி தேவர்.

10. திருநந்தி தேவருக்குத் தூயவன், சைலாபதி என்ற பெயர்களெல்லாம் உண்டு.

11. பரமேசுவரரிடம் உபதேசம் பெற்றவர் அனந்ததேவர். அவர் ஸ்ரீகண்டருக்கு உபதேசித்தார். அவர் நந்திதேவருக்கு உபதேசித்தார். அவர் நந்தி தேவருக்கு உபதேசித்தார். ஆகமப் பொருளும் சாத்திரப் பொருளும் உபதேச வாயிலாக அனைவரும் கேட்கப் பெற்றனர். அதனாலேயே திருக்கயிலை மரபில் அகச்சந்தானத்தில் முதற்குரவர் என்று திருநந்திதேவர் போற்றப் பெறுகிறார்.

ஆசாரிய முறையில் நமக்கு உபதேசமும் அனுக்கிரகமும் செய்பவர் திருநந்தி தேவரே.

பிரமோத்சவம் எனப்பெறும் பெருந்திருவிழாவிலே ஒருநாள் சிவபெருமான் திருநந்தி தேவர் எனப்பெறும் அதிகார நந்தியின் மேல் அமர்ந்து காட்சி தருவார்.

அன்று அவ்விழாவைக் கண்டு வணங்கியவர்கள் சிவஞானம் கைவரப் பெறுவர். திருக்கோயிற் பெருந்திருவிழாவில் ஏற்றப் பெறும் கொடியில்உள்ள நந்திக்கும் திருநந்தி தேவருக்கும் எத்தகைய சம்பந்தமும் இல்லை. திருநந்தி தேவரே கொடியில் இருப்பவர் என்று பலரும் குறிப்பிட்டுள்ளனர்.

புராணம் எழுதுபவர்கள் 'நந்தி உபதேசப் படலம்' என ஒரு பிரிவை அமைத்து அப்பிரிவில் சைவசித்தாந்த சாத்திர உண்மைகளை எடுத்துக் கூறும் மரபு உண்டு. இது திருநந்தி தேவரைச் சார்ந்ததே.

திருநந்தி தேவர் சிலாத முனிவரின் திருமகனார் என்பது புராண வரலாறு.

இந்திரன் சிவபெருமானை இடப உருக்கொண்டு தாங்கினான். அது இந்திர நந்தி எனவும் போகநந்தி எனவும் கூறப்பெறும்.

பிரமதேவன் ஒருகாலத்தில் இடபமாக நின்று இறைவனைத் தாங்கினான் என்று புராணங்கள் கூறுகின்றன. அதற்குப் பிரமநந்தி எனவும் பெயர்கள் உண்டு.

இறைவன் முப்புராதிகளை எரியூட்டி அழிக்கச் சென்றபோது திருமால் இடப உருக்கொண்டு தாங்கினார் என்பது வரலாறு. திருமால் நந்தி என்பது அதன் பெயர்.

கடகரியும் பரிமாவும் தேரும் உகந்து ஏறாதே
இடபம் உகந்து ஏறியவாறு எனக்கு அறிய இயம்பேடி
தடமதில்கள் அவைமூன்றும் தழல்எரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ
- திருச்சாழல் 15

என்று மணிவாசகப் பெருமான் அருளியுள்ளார்.

அறம் (தருமதேவதை என்பர்) உலகமனைத்தும் முழுமையாக ஒடுங்குகின்ற மகாசங்கார காலத்து, இடப உருத்தாங்கியதாக வரலாறு உண்டு. திருக்கோயில் திருவிழாக்களில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப் பெறும் இடப வாகனத்தை அறம் (அ) தர்மதேவதை என்று சொல்லுவதே சமயப் பொருளியல் வழக்கு.

சிவனுறையும் திருக்கோயில்களில் கருவறையில் எழுந்தருளி யிருக்கும் இலிங்க மூர்த்தத்துக்கு எதிரில் படுத்துக் கொண்டு சிவலிங்கத் திருமேனியையே நோக்கிக் கொண்டிருப்பதாக அமைக்கப் பெற்றிருக்கும் நந்தி ஒன்று உண்டு. அது ஆன்ம நந்தி எனப்பெறும்.

திருவருள் நிலையமாகிய கொடியின் (திருவருளின்) துணைக் கொண்டு, பலிபீடம் எனப்பெறும் பாசத்தை அறுத்துப் பதியையே நோக்கிக் கொண்டிருக்கும் திருவுடைத்தாகிய ஆன்மாவே நந்தி என அழைக்கப் பெறும்.

இந்நந்தியின் முன்பக்கத்து வலதுகால் சற்றே உயர்ந்திருக்கும். பின்பக்கத்து வலது காலைச் சற்றே தூக்கி நிறுத்தியவாறு படுத்திருக்கும். அது ஞான மார்க்கத்தைக் குறிக்கும். சரியை, கிரியை, யோகம் என்ற மூன்று கால்களையும் மடித்து ஒடுக்கிக் கொண்டு நாலாம் பாதமாகிய ஞானத்தின் துணைக்கொண்டு ஞானபாதத்தினால் பரம்பொருளைக் கண்டு கொண்டிருக்கிறது என்பது ஆகம விதி.

சிவலிங்கத்துக்கும் ஆன்மநந்திக்கும் இடையில் யாரும் போதல், வருதல், கூடாது என்பதும் ஆகமவிதி.

சிவன் எக்காலத்தும் எவ்விடத்தும் ஏறிவந்து காட்சி அளிப்பது ஆன்ம நந்தியின் மேல்தான். (திருவிழாக்கள் தவிர)

பிரதோஷ காலத்தில் ஆன்ம நந்தியின் இரண்டு கொம்புகளுக்கு இடையில் சிவன் நடனமாடியதாக, அதைக் கண்டு வணங்குவதே பிரதோஷ வழிபாட்டின் உண்மைக்கூறு.

பொதுவாக ஏறு என்றும் இடபம் என்றும் எருது என்றும் வரும் இடங்களிலெல்லாம் ஆன்மநந்தியையே பொருளாகக் கொள்ள வேண்டும் என்பது பொது வழக்கு. ஆன்மநந்தி வேறு. கொடி நந்தி வேறு.

நந்தி என்பதன் பொருள்

நந்துதல் என்ற வேர்ச்சொல்லிலிருந்து நந்தி என்ற சொல் தோற்றம் பெறுகிறது. படிமுறை வளர்ச்சியின் அடிப்படையில் ஆன்மாவானது இறையருள் துணையினால் மெல்ல மெல்ல மேலேறிச் சென்று இறைநிலையை எய்துகிறது என்ற பொருளில் நந்தி என்ற சொல்லானது ஆன்மாவைக் குறிக்கிறது.

ஆன்மாவுடன் உடனாய் நின்று ஒளிவடிவில் ஆன்மாவை மேலேற்றும் காரணத்தால் ஆன்மாவின் பாசத்தை அறுத்த நிலையில், படிப்படியாக ஆன்மாவை மேலேற்றும் காரணத்தால் சிவனுக்கும் நந்தி என்ற பெயர் வழக்கு உண்டாயிற்று.

நந்து + ஈ என்ற இரண்டு சொற்களும் இணைய நின்றபோது நந்தி எனவும் உந்தும் + ஈ என்ற இரண்டு சொற்களும் இணைய நின்றபோது உந்தீ எனவும் இருநிலையாக ஆன்மாவுக்கு அனுபவப்படுபவன் சிவன். நந்தீயாகவும் உந்தீயாகவும் ஒலியெழுப்பி, ஒலியெழுப்பி ஆன்மாவை மேலேற்றும்போதே ஒலி, ஓசை என்ற இரண்டாலும் ஆன்மாவுக்கு அருளையும் ஞானத்தையும் வழங்கிக் கொண்டேயிருப்பான்.

திருவாசகத்தின் திருக்கோத்தும்பியும் மெய்கண்ட சாத்திரங் களுள் முதன்மைத்தாய் நின்ற உந்தியாரும் இக்கருத்தை உள்ளீடாகக் கொண்டவை.

ஆன்மாவானது ஆணவமலத்தில் அழுந்தி நின்ற காலத்து இறைவன் நந்தியாக நின்று ஆன்மாவைத் தாங்கி மேலேற்றுகின்றான். அடுத்த நிலையில் ஆன்மாவானது அருளிற் கலந்து சிவஞானத்தால் இறைவனையும் தன்னையும் உணர்ந்த காலத்து, ஆன்மாவானது ஏறு என, இடபம் என, நந்தி என நின்று சிவனைத் தாங்குகிறது. இது ஒருவகையான இருமைநிலை. இதனைத் திருநாவுக்கரசர்,

'தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே'

என்ற வரிகளால் உணர்த்தி அருளினார்.

இனி, சுந்தரர் பெருமான் திருவாக்கு ஒன்றையும் இங்கே அமைத்து விளக்கம் காணவேண்டும்.

திருவோண காந்தன் தளி இறைவனைப் பாடும் சுந்தரர்

'ஓவணம் மேல் எருது ஒன்று ஏறும்
ஓண காந்தன் தளியுள்ளார்' (7-5-10)

என்று குறிப்பிடுகின்றார். ஓவணம் என்பதற்கு ஓவு வண்ணம் எனப்பொருட்குறிப்பை எழுதி எல்லா வண்ணங்களையும் (நிறம்) ஒழிய நின்ற வெண்மை நிறம் என்று பொருள் கொண்டுள்ளார்.

ஓவணம் என்ற தொடருக்கு ஓ+வண்ணம் எனக் கொண்டு ஓங்காரத்தின் வடிவமாகப் பொருள் கொள்ளுகின்றார் இலங்கைப் பேராசிரியர் திரு.ஆ..நடராசா அவர்கள்.

'ஓ' என்பது அகரமும் உகரமும் சேர்ந்தது. அகரமாகிய சிவனும் உகரமாகிய அருட்சத்தியும் ஆக நின்று, எருதின்மேல் ஏறுகின்றான் என்றும் கொள்ளலாம். எருதின்மேல் இருக்கும் சிவபரம்பொருளை ஓ என்ற ஒலியின் வடிவமாகவும் நிறமாகவும் காண வேண்டும் என்றும் அவ்வாறு கண்டார் சுந்தரர் என்றும் கொள்ளலாம்.

இனி, திருஞானசம்பந்தர் திரு இலம்பையங் கோட்டூர்த் திருப்பதிகத்தில் திருக்கடைக் காப்புப் பாடல் தவிர ஏனைய பத்துப் பாடல்களிலும் எனதுரை தனதுரையாக என்ற வாக்கியத்தை எடுத்தருளுகின்றார்.

எனது உரையைத் தனது உரையாக ஏற்றுக் கொண்டபின் நீறு அணிந்து பின்னர் ஏறு உகந்து ஏறினான் என்று முதல் இரண்டு பாடல்களிலும் குறிப்பிடுகின்றார்.

திருஞானசம்பந்தர் உரையைத் தனது உரையாக ஏற்றுக் கொள்ளுகிறான்.

நீறு அணிகிறான்
ஏறு உகந்து ஏறுகிறான்

என்று மூன்று செய்திகளையும் வரிசைப்படுத்திக் கூறுகிறார்.

உரையை ஏற்றுக் கொண்டபின் எருதேறுவதற்கு முன்னால் திருநீறு அணிகிறான் என்று குறிப்பிடுவதால் ஓவணம் என்ற சுந்தரர் திருவாக்கினுக்கு, வெண்மை நிறமாகிய திருநீற்றினைத் தன்மேல் பூசிக்கொண்டு பின்னர் எருதின்மேல் ஏறுகின்றான் என்றும் கொள்ளலாம்.

1. நந்தி என்ற சொல்லானது சிவனையே குறிக்கும்.

2. பாசத்தளையை நீக்கிப் பதியை நோக்கிய நிலையில் திருவடியின்பத்தில் திளைக்கும் ஆன்மாவுக்கு நந்தி என்ற பெயர் உண்டு. இது ஏறு, எருது என்ற பெயர்களாலும் குறிக்கப் பெறும்.

3. ஏறு, காளை, எருது, நந்தி ஆகிய சொற்கள் உலக வழக்கில் ஆண்மாடுகளைக் குறிக்கிற வழக்கு உண்மையாலும் ஆண்மாட்டின் உருவம் எடுத்தே திருமால், பிரமன் ஆகிய தேவர்களும் அறமும் இறைவனுக்கு வாகனமாக வந்தமைந்தனர் என்ற வரலாற்றுண்மைகள் இருப்பதாலும் நந்தி என்ற சொல்லானது ஏறு, காளை என்பனவற்றோடு ஒரு சொல் நீர்மைத்தாய் அமைந்துவிட்டது என்று அமைத்துக் கொள்ளலாம்.

4. சிலாதர் என்ற முனிவர் பிள்ளைப் பேறு எய்திய வரலாறு வந்த பிறகுதான், நந்தி, நந்திதேவர் என்ற பெயர்கள் மிகுதியும் பயிலப் பெற்றன.

5. இறைவனுக்கு, பாசத்தளையை நீக்கிய ஆன்மா என்ற ஒரே ஒரு நந்திதான் வாகனமாக அமைவது.

'ஏறலால் ஏறமற்று ஒன்று இல்லையே' என்று காரைக்காலம் மையார் அற்புதத்திருவந்தாதியில் குறிப்பிடுவாராயினர்.

6. திருக்கோயிற் பெருவிழாவில் இடபமாகப் பெருமானைத் தாங்கி வருவது அறம் எனப்பெறும் தருமதேவதையே.

7. திருக்கோயிற் பெருவிழாவில் ஒருநாள் திருநந்தி தேவர்மேல் சிவபெருமான் அமர்ந்து திருவோலக்கம் கொண்டு வீதிவலம் வருதல் உண்டு. இது குருஉபதேச ஞான விளக்கமாக அமைவது. இது உபதேச ஞான விளக்கமாக அமைவது. இது அதிகார நந்தி எனப்படும்.

இவ்வாறெல்லாம் நந்தி, இடபம், ஏறு, எருது, காளை என்ற சொற்களாற் குறிக்கப் பெறும் பொருளை வேறு பிரித்துக் கண்டு கொள்ள வேண்டும்.

திருக்கோயிலில் கொடிக்கம்பத்தின் உச்சியில் அமைக்கப் பெறும் நந்தியானது யாரைக் குறிக்கிறது?

சைவத் திருக்கோயில்களில் பத்து நாட்கள் தொடர்ந்து நடைபெறும் திருவிழாவில் (பிரம்மோற்சவம்) விநாயகர் பூசை முடிந்ததும், மறுநாள் கொடியேற்றம் அமையும். அந்தக் கொடியில் நந்தியின் உருவம் அமைக்கப் பெற்றிருக்கும். திருத்தேர் உற்சவம் நிறைவுற்றபின் அந்தக் கொடியை இறக்கி விடுவார்கள். கொடிச் சீலையில் ஏறவும் இறங்கவும் ஆகிய வகையில் இரண்டு கயிறுகள் அமைக்கப் பெற்றிருக்கும்.

கொடிச்சீலையில் அமைக்கப் பெற்றிருக்கும் நந்தியானவர் யார்? என்ற வினாவை எழுப்பினால் மேலே குறிப்பிடப்பட்ட ஏழு நந்திகளும் அல்லர். இதுவரை வந்த உரைகள் பலவற்றையும் உற்று நோக்கினால் நந்திக் கொடியானது பல பேராசிரியர்களுக்குக் குழப்பத்தையே உண்டாக்கி இருக்கிறது என்பதை வெளிப்படையாக உணரலாம்.

திருக்கோயில் கொடியேற்று விழா என்ற சொன்னவுடனேயே தில்லையில் கொடியேற்றம் தடைப்பட்டு விட, கொற்றவன் குடி உமாபதிசிவன் வந்தால் கொடியேறும் என்ற அசரீரி வாக்கின்

வண்ணம் உமாபதி சிவாச்சாரியாரை அழைத்து வந்து கொடியேற்றம் செய்விக்க வேண்டும் என்று தில்லை மூவாயிரவர்கள் கேட்டுக் கொண்ட நிகழ்ச்சியையும் அவர் அருளிய கொடிக்கவியையும் எடுத்துக்கூறி எல்லாரும் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள்.

கொடியில் உள்ள சின்னத்தைப் பற்றி ஆய்வுசெய்யும்போது அருளியல் அனுபவமோ, ஆகம வசனங்களின் உட்பொருளோ சாத்திர வாக்கியங்களின் நுட்பப் பொருளோ தெளிவாகத் தெரியாதபோது அருளாளர்களின் அருள் வாக்கியங்களையே நாம் பின்பற்ற வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. அவ்வகையில்,

'ஏற்றுயர் கொடியுடையாய்'

எனவும்,

'................. சாலவும்
ஏதிலார் துண்ணென்ன மேல்விளங்கி ஏர்காட்டும்
கோதிலா ஏறாங்கொடி'

எனவும் வருகின்ற மணிவாசகர்தம் திருவாக்கினைக் கொள்வது மரபு.

மேற்கண்டவற்றை இணைத்துக் காணும்போது கொடியானது ஏறு எனப் பெறும் நந்தியின் முகம்போல் காணப்பெறும் எனத் திருமூலர் வாக்கினால் உணரலாம்.

'நந்தி எழுந்து நடுவுற ஓங்கிய
செந்தீக் கலந்து உட்சிவனென நிற்கும்
உந்திக் கலந்து அங்கு உலகம் வலம்வரும்
அந்தி இறைவன் அதோ முகமாமே'

என்பது திருமூலர் வாக்கு.

சிவபெருமானுடைய அதோமுகமானது (மங்கலமுகம் மறைய நின்ற முகம், கீழுள்ள உயிர்களை நோக்கி வந்து அருள்புரிந்து அவற்றை மேலேற்றும் முகம்) வடதிசை, தென்திசை ஆகிய இருபக்கத்துத் தீக்களுக்கு இடைநின்ற நித்தியாக்கினியாகும். முகம்

அதுவே செம்மை நிறமாகி சிவாக்கினியாக நிற்கும். அதுவே மேலும் மேலும் உந்திச் சென்று உலகம் முழுவதையும் வலம் வரும். அதுவே அந்தம் ஆதி என நிற்கும்.

'அதோமுகமே ஆன்மாக்களின்
உள்நின்ற ஒளியாகிய ஆன்மார்த்தலிங்கம்
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகன்'

என்றும்,

'நின்அடியார் பழங்குடில் தொறும்
எழுந்தருளிய பரனே'

என்றும் மணிவாசகர் அதோமுகத்தையே குறிப்பிட்டார்.

அதோமுகமானது படுத்திருக்கும் முகம் ஆகையாலும் நடுவுற எழுந்தபோது நந்திமுகம்போல் இருப்பதாலும் தெற்குத் தீயும் வடக்குத் தீயும் இரண்டுகாதுகளாக நடுத்தீயானது காளையின் முகம்போல் அமைந்தன.

ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்னும் ஐந்து திருமுகங்களைக் கொண்டதாய் சாதாக்கிய தத்துவத்தில் நின்று ஐந்தொழில் புரியும் அவ்வைந்து முகங்களும் முறையே, மேலிடம், கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு என்னும் திசைகளை நோக்கியனவாக இருக்கும்.

ஆயினும், நிலவுலகத்தாரோடு ஏனைய உலகத்தாரும் வழிபட்டுக் குறையிரந்து நின்றபோது அவர்க்குத் தோன்றாமல் மறைய நின்று அருள்புரியும் ஆற்றல் வாய்ந்த முகம் அதோமுகமே என்பது ஆகமவிதி. அதோமுகமானது கீழ் நின்றது. அது படுத்தே இருக்கும் என்று உரிய காலத்து வீறிட்டு எழுந்து மேல் மேல் உயர்ந்து வெளிப்படும் என்றும் ஆகமங்கள் கூறுகின்றன.

நஞ்சுண்ட காலத்தும், சூரபதுமனை அழிக்க முற்பட்ட காலத்து முருகனாக வெளிப்பட்டதும் அதோமுகமே. அட்ட வீரட்டங்களுக்கு உரியதும் அதோமுகமே.

அதோமுகமானது அனைத்து ஆன்மாக்களின் உள்ளேயும் ஒளி வடிவாகத் தங்கியிருக்கும். சதாசிவத்து வேறாய் நின்று ஆறாவது முகமாக நின்று அருள்புரிவது அதோமுகமே.

இதனைத் தொல்லைத் திருமுகம் என்றும் அறிஞர்களால் சிந்திக்கப் பெறும் திருமுகம் என்றும் ஆகமங்களில் எடுத்தியம்பப் பெறுகிறது.

அதோமுகம் படுத்தே இருக்கும் என்று வீராகமம் கூறுகிறது. அதோமுகம் மேலெழும்போது மூவகைத் தீயுருவானது காணப்பெறுகிறது. தெற்குத் தீயுரு ஆகவனீயம் என்ற வடக்குத் தீயுரு இவை இரண்டுக்கும் இடையில் ஒரு தீயுருத் தோன்றும்.

ஒளிமயமாகப் பிரகாசிக்கும். ஆனால் தமது காயக் கோயிலில் பிரகாசிப்பதால் அது நம்+தீ = நந்தி எனப் பெயர் பெற்றது. இது ஆன்ம தத்துவம்.

'மூலாதாரத்தின் மூண்டு எழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்து அறிவித்து'

என ஔவைப் பிராட்டியார் விநாயகர் அகவலுள் அருளியிருப்பது கொண்டு தெளியலாம் என்று கூறியுள்ளார்.

இது ஒருவகையில் சற்று அழுத்தமான ஆய்வுதான். ஆய்வு என்பதை விட இக்கருத்து, அவர்தம் அருளியலனுபவம் என்று கொள்ள வேண்டும்.

கொடிச்சீலையில் உள்ள வடிவமைப்பும் கிடந்த கோலமும் அனைத்துயிர்களுக்கும் அருள் வழங்கும் ஆற்றலும் ஆகியவற்றை விளக்குவதாக ஒரு முழுமை விளக்கத்தை நாம் அமைத்துக் கொடுக்க வேண்டும். இல்லையெனில் நிறைவுடையதாகாது.

திருமூலர் திருமந்திரத்தில் அமையும் விளக்கத்தை எடுத்துக் காட்டி இச்சிந்தனையை நிறைவு செய்யலாம். திருமூலர் திருமந்திரத்தில் இரண்டாம் தந்திரம் அதோமுகத்தின் பெருமையையும் ஆற்றலையும் விளக்குகின்றது.

காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாம்
நீள்நாகம் புனைந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்

என்பது சேக்கிழார் திருவாக்கு.

காட்சிப் பொருளாக அமையும் உருவத்திற்கும் காட்சியுட் படாத பொருளாக அமையும் அருவத்திற்கும் காரணமாக நின்ற ஒப்பற்ற குறியாக நிற்கும் சிவலிங்கம் சதாசிவம் எனப்பெறும்.

வேறு ஒன்றையும் இந்த இடத்தில் நாம் இணைத்துச் சிந்தித்தல் வேண்டும்.

சிவனுக்குத் திருநீற்றுக் கொடி உண்டு. திருவாசகம், கீர்த்தித் திருவகவல் வரிகள் 102 முதல் 104 வரை பார்க்கவும்.

'எந்தமை ஆண்ட பரிசது பகரின்
ஆற்றல் அதுவுடை அழகமர் திருவுரு
நீற்றுக் கொடி நிமிர்ந்து காட்டியும்'

என்பனவே அவை.

மேலே குறிப்பிடப் பெற்ற திருவருளுடைய சான்றோர்களின் அனுபவவாக்கின் மூலம் இறைவன் குருவுருத்தாங்கி ஆன்மாக்களை ஆண்டு கொள்ள வருகின்ற காலத்துத் திருநீற்றுக் கொடியுடையவனாய் வருவான் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

திருநீற்றுக் கொடியானும் திருநந்திக் கொடியானும் அவ்வுருவை அமைக்கும்போது படுத்திருப்பதாக அமைத்ததன் நோக்கம் என்ன என்பதையும் சிந்தித்தல் வேண்டும்.

எருதினை வாகனம் என்று சொல்லி அது படுத்திருக்கிறது பார் என்று சொன்னால் அது அவ்வளவு பொருத்தமுடையதாய் அமையுமா? என்பதையும் சிந்திக்க வேண்டும்.

வணக்கத்துக்கும் போற்றுதலுக்கும் உரிய அடியார்க்கடியன் க.சிவகுருநாதன் அவர்கள் கீழ்வரும் அரிய கருத்தை எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

ஒருயோகியானவன் பத்மாசனம் இட்டுத் தவத்தில் இருக்கும்போது அவனது மூலாதாரத்தில் மூண்டெழுதும் அனலைச் சூரிய சந்திர கலைகளாகிய சுவாசத்தால் மேல் எழச் செய்து ஆறாதாரங்களிலும் உள்ள தடைகளைக் கடந்து சிதாகாயத்தில்

சுழிமுனை வழியே ஏற்றி நிராதாரத்துள் செலுத்த, அது ஓர் பெருங்கடலை உள்ளடக்கியிருக்கும் தீயை வடவைத் தீ என்றும் அது குதிரை முகம்போல இருக்கும் என்றும் கூறுவது போல அதோமுகம் மேலெழுந்தபோது நந்தியின் முகம் போல இருக்கும்.

உலகத்தவர்களுக்கு அருள் வழங்கும் முகம் அதோமுகமே.

மேலே குறிப்பிடப் பெற்ற காரணங்களினாலேயே கொடியில் நந்தி உருவம் அமைக்கப் பெற்றது.

உலகம் முழுமைக்கும் அருள் வழங்கும் அதோமுகத்தின் அடையாளமே நந்திக் கொடி எனக் கொள்ளுதல் வேண்டும்.

சைவத்திற்குத் திருநீற்றுக் கொடிக்குப் பின்னர் ஏற்றுக் கொடி அமைந்தது.

நீற்றுக் கொடியிலும் முப்பட்டையானது படுத்த நிலையிலேயே அமைக்கப் பெற்றது. அங்கேயும் மூன்று எனக் கோடுகள் முன்னர் அமைக்கப் பெற்றதன் காரணம் முத்தீயின் வடிவம் என்பதே.

மேலும் விரிவு வேண்டுவோர் திருமூலர் திருமந்திரம் இரண்டாந் தந்திரத்தை முழுமையாகப் படித்தறிந்து கொள்ளலாம்.

உலகில் உள்ள அனைவர்க்கும் அருளை வரையாது வழங்கும் சின்னமே நந்திக்கொடி.

சிவநெறிச் செல்வர் சி.தனபாலா ஜே.பி. அவர்கள் அதோமுக நந்திக் கொடியை அகில உலகெலாம் பட்டொளி வீசிப் பறக்க வைக்கும் அரிய பணியைத் தம் வாழ்வியற் குறிக்கோட் பணியாக அமைத்துக் கொண்டு அல்லும் பகலும் அரும்பாடு படுகிறார்கள்.

யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற திருமூலரின் தவராச வாக்கினுக்கொப்ப காணும் இடம் எல்லாம் செல்லும் இடமெல்லாம் நடக்கும் தடமெல்லாம் அதோமுக ஞானசொரூபச் சின்னமாய் அருள் வளம் கொழிக்கும் அற்புத ஞானக் கொடியைப் பரப்பும் சிவநெறித் தொண்டில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி உழைக்கிறார்கள்.

அனைத்து உயிர்களையும் இல்லமாகக் கொண்டு அருளையும் ஆற்றலையும் வளத்தையும் வாய்மையையும் வாரி வாரி வழங்கும்

அதோமுகத்தின் அடையாளமே ஆனேற்றுக் கொடி எனச் சைவர்கள் உணர்ந்து தெளிதல் வேண்டும்.

குருகுகேசம் (அ) வீரசைவக் கொள்கையைப் பற்றி அறிய முற்படும்போது இரண்டு கலைச்சொற்களின் விளக்கம் தேவையாகின்றது. என எடுத்துக் கொண்டு, அவற்றில் முதல் நின்ற இலிங்காயதம் என்பதன் உட்பொருள் விரித்து எழுதப் பெற்றது. அடுத்து நின்ற சம்பிரதாயம் என்பதன் விளக்கத்தை நாம் அறிந்து கொள்ளுதல் அவசியமாகிறது.

4. சம்பிரதாயம்

முன்னுரை

சம்பிரதாயம் என்ற சொல்லானது மரபு என்ற பொருளைத் தரும். மரபு என்று திருமூலர் கருதுவது ஞானமரபு என உரையாசிரியர்கள் எடுத்துக் காட்டுகின்றனர்.

திருமந்திரம் ஏழாம் தந்திரத்தின் தொடக்கம் ஆறந்தம் என அமைகிறது. மனித உடம்பில் அமைந்த ஆறு சக்கர நிலைகள் (ஆற்றல் மையங்கள்) அதன்மேல் நின்ற ஒலிவகைகள் எழுத்து வகைகள் ஆகியவகைகளை எடுத்துக் காட்டி, அதன்பின் அண்டலிங்கம் என்ற பகுதியை அமைக்கிறார். இப்பகுதியில் திருமூலர் ஆன்மார்த்தம், பரார்த்தம் என்ற இரண்டு வழிகளை ஏற்றுக் கொண்டு அவற்றில் இலிங்கவழிபாடு உண்டு என்று கூறி, அவற்றில் ஆன்மார்த்த வழிபாட்டுக்குரிய இரண்டுவகை இலிங்கங்களில் எந்த எந்த பொருள்களை இலிங்கமாகக் கொள்ளலாம் என அமைத்துக் காட்டுகிறார். பின்னர் முறையே,

பிண்டலிங்கம்
சதாசிவலிங்கம்
ஆத்துமலிங்கம்
ஞானலிங்கம்
சிவலிங்கம்

ஆகியவற்றை விரிவாகக் கூறுகின்றார். அதன்பின்னர் வருவதுதான் சம்பிரதாயம் என்ற தலைப்பு.

ஏனைய தந்திரங்களில் தாம் கூறும் செய்திகளுக்கு மூலச் சான்றுகள் இவை. இவற்றை ஆகமங்கள் கூறுகின்றன என்றெல்லாம் எடுத்துக்காட்டும் திருமூலர் ஏழாந் தந்திரத்தில் மட்டும் ஆறாதாரம், ஆறு சிவலிங்கவகைகளை எடுத்துக் கூறிய பின்னர், மரபுவழியாகப் பின்பற்றப் பெறும் செய்திகள் சிலவற்றை எடுத்துக் காட்டுகின்றார். அவையாவும் வீரசைவ அனுட்டானக் கொள்கையோடு ஒத்துப் போவனவாக இருத்தலின் அவற்றை விளக்குதல் இங்கே கடமையாகிறது.

சம்பிரதாயம் என்ற தொடரிலிருந்து சில செய்திகளை நாம் முன்னிறுத்திக் கொள்ள வேண்டும்.

சம்பிரதாயம் தெரிவிக்கும் செய்திகள்

1. சம்பிரதாயம் என்ற தலைப்பில் வரும் செய்திகள் காலத்தால் முற்பட்டவை.

2. சம்பிரதாயச் செய்திகள் யாரால் எப்போது எதற்காக அமைக்கப் பெற்றன எனக் காலம், காரணம் முதலியன பற்றிக் கேட்டால் சொல்லப் பெற இயலாதவை.

3. சம்பிரதாயச் செய்திகளை மாற்றும் உரிமை யாருக்கும் கிடையாது.

சம்பிரதாயம் என்ற தலைப்பில் திருமூலர் சொல்வன.

முதலாவது, ஆன்மாவானது ஒருகாலத்தில் ஒருவரால் தோற்றுவிக்கப் பெறாத ஒரு பொருள். அது அருவப்பொருள். அதனை அங்கமாகக் கொண்டு, அதனுள் இருக்கும் அங்கியாகிய இறைவன்- பிரமப்பொருள் - இலிங்கப்பொருள் 'குரு' என மனித உருத்தாங்கி நேரில் வந்து சீடனை அணுகுகிறான்.

இலிங்கம் குருவாக வருவதற்குக் காரணம் அங்கம் அங்கி என்ற உறவில் என்றென்றும் பிரியாது நின்றமைதான். அங்கியாக நின்ற ஒளிப்பொருள் அங்கம் என நின்ற பொருளை அணுகி, ஐந்து நிலைகளில் அதனைத் தன்னுடையதாக ஆக்கிக் கொள்ளுகிறது.

கருணை என்னும் திருவருள் நன்னீரினால், அங்கி என நின்ற பரம்பொருளான்து அங்கம் என நின்ற ஆன்மாவின் உள்ளே பேரன்பை எழுப்புகிறது. பேரன்பை உணர்ந்து நாள்தோறும் தன் உள் இருக்கும் இலிங்கப்பொருளைக் காணவேண்டும், அணைய வேண்டும் என அழுதுகொண்டிருக்கும் அங்கத்தின் முன்வந்து நின்று கொண்டு, அங்கத்தின் அன்பில் தன்னுடைய வான் தேன் என்னும் கருணையைக் கலந்து தழங்கருந்தேன் அன்ன தண்ணீராக ஆக்கி, அதனைப் பருகுமாறு செய்து, அதன்மூலம் அங்கத்தின் (ஆன்மாவின்) உடல், ஞானம், ஆன்மா (பிரரணவாயு எனவும் சிலர் கருதுகிறார்கள்) ஆகிய மூன்றையும் தன்னுடைய

உடைமைகளாகவும், அடிமையாயும் எடுத்துக் கொள்கிறான். இது முதற்செயல்.

இரண்டாவதாக, குருவாக வந்தவன் சீடனுடைய புருவ மத்தியில், நந்தியாக எழுந்து கூத்தன் எனநின்ற ஒளிப்பொருளாய் அருள்ஞானத்தை, தன்கூர்த்த நோக்கின் மூலம் சீடனுடைய உடல், பொருள், ஆவி என்ற மூன்றிலும் பாய்ச்சி, அம்மூன்றையும் பாசஞானம், பசுஞானம், பதிஞானம் ஆகிய மூவகை ஞானங்களையும் கடந்த அருள்ஞான மயமாக ஆக்குகிறான். இங்கே கூறப்பெற்ற இரண்டு செயல்களையும் குருவாக வந்தவன் தானே செய்கிறான். சீடனுடைய அனுமதி கேட்டுச் செய்யவில்லை. இவற்றை அவன் செய்வதற்கு என்ன அடிப்படை? சீடனின் அழுகை என அமைந்த பக்தி ஒன்றே.

மேலே கூறப்பெற்ற இரண்டு செயல்களாலும் நான் என்ற அகங்காரத்துடன் எழுந்து, செய்யப்பெறும் வினைக்கும் செயலுக்கும் இடைநின்ற ஆணவப் பற்றானது அறும் வரையில் பார்க்கிறான். அதனால் வினைக்கும் வினையைச் செய்யும் ஆன்மாவுக்கும் இடைநின்ற பற்று அறுபட்டு விடுகிறது. செயல் நின்று விடவில்லை. செயலையும் ஆன்மாவையும் இணைத்து நின்ற நான், எனது என்ற தொடர்புகள் முற்றாக அறுந்து விடுகின்றன.

மூன்றாவது செயலாக குருவானவர் தன்னுடைய திருக்கரங்களைச் சீடன் தலையில் வைக்கிறார். இது தீட்சை முறைகளுள் ஒன்று. கைவைத்தல் என்பது சீடன் செயலைத் தன் செயலாக்குதல். கை என்பது ஒழுக்கம். கைவைத்தலின் மூலம் பரஞானத்தைச் (சிவஞானத்தை) சீடனுடைய ஞானமாக ஆக்குகிறான். கைவைத்தலின் மூலம் சீடனுடைய செயலையும் இச்சையையும் தன்செயலாக, தன் இச்சையாக மாற்றி விடுகிறான். சீடனுடைய இச்சை, ஞானம், கிரியைகள் ஆகிய அனைத்தும் இலிங்கத்தின், குருவின் இச்சா ஞானக் கிரியைகளாக மாறிவிடுகின்றன.

சிறிய நிழலானது பெரிய நிழலில் ஒடுங்கி விடுவது போல என்பர். இல்லை, இல்லை, சிவன் ஞானமும் செயலும் இச்சையும் சீடன் மூலம் வெளிப்படுகின்றன. சீடன் சிவனுடைய இச்சா

ஞானக் கிரியைகளை அனுபவித்துக் கொண்டிருப்பான். இதுவே சீவன் முத்தநிலை எனப்பெறும்.

நாலாவது செயல் - நொடியின் அடிவைத்தல் என்பது சீடனின் தலைமேல் குருவானவர் தன்னுடைய திருவடிவகளைச் சூட்டுவார். ஒரு நொடிப்பொழுதில் அருளனுபவம் உண்டாகுமாறும் அதை அனுபவிக்குமாறும் செய்வார்.

ஐந்தாவது செயல் - சீடன் இதுவரை எடுத்த அவ்வளவு பிறவிகளிலும் அவன் பெற்ற அனுபவங்களை ஒருசேரத் தொகுத்து, இதுவரை யாரும் பெறாத இலிங்கானுபவத்தை நுண்ணிய, தொடர்ந்து செல்லக் கூடிய அனுபவமாக ஆக்கித் தருவார்.

ஆறாவது செயல்- இதுவே மிக முக்கியமான செயல். சீடன் புல்லாகப் பிறந்தது முதல் இந்நாள்வரை பிறந்து, இறந்து வந்த பிறவிகளையும் துன்பம் நிறைந்த பிறவிகளையும் அறுத்து, இனிவரும் பிறப்புகளையும் அறுத்து ஒழிக்கும் வல்லமைமிக்க ஒரு பொருளை அவன் கைகளில் கொடுத்து, (இட்டலிங்கம்- குறி-குறியாக்குறி) இதையே கண்டு கொண்டிரு என்று கூறி, அப்பொருளைக் காணும் முறையையும் நெறியையும் தந்து, அவற்றுக்கேற்ற உணர்வையும் தந்து விடுவான்.

பிறப்பு அறுமாறு காட்டினன் என்ற தொடரமைப்பு இருக்கிறது. எதைக் காட்டினன் என்ற வினா எழுவதால் இட்டலிங்கம் அல்லது அதுபோன்ற ஒளிப்பொருளை அல்லது ஒளியைத் தந்திருக்க வேண்டும் என்று உரை காணப்பெற்றது. இனி திருமூலரின் பாடல்,

'உடல்பொருள் ஆவி உதகத்தால் கொண்டு
படர் வினைப் பற்றறப் பார்த்து, கைவைத்து
நொடியின் அடிவைத்து நுண்ணுணர் வாக்கி
கடிய பிறப்பு அறக் காட்டினன் நந்தி'

என்பது திருமந்திரம் ஏழாந்தந்திரம், சம்பிரதாயம் என்ற தலைப்பில் அமைந்த முதற்பாடல். (1755)

சம்பிரதாயம் என்பதைப் பொதுவாக மரபு என்றும் ஞான மரபு என்றும் எடுத்து நிறுத்திக் கூறினாலும், காட்டினன் நந்தி எனவரும் தொடர்மூலம் குறியாக்குறி என்ற ஒன்றைக் கொடுத்து அதைக்

காணும் மரபையும் முறையையும் நெறியையும் காட்டினான் என வருவதால் சம்பிரதாயம் என்ற இத்தலைப்பானது இட்டலிங்க அனுபவமுறையைக் கூறவந்தது என்று கொள்ளுதல் வேண்டும்.

'என் கைத்தலத்தினுள் உண்டெனில்
யாம் இனி உய்ந்து ஒழிந்தோமே'

என்றும்,

'கரத்தினுள் நின்று கழிவு செய்தானே'

என்றும், பிறாண்டும் இவ்வாறெல்லாம் கூறும் மரபுடையவர் திருமூலர் என வருவதால் சம்பிரதாயம் என்பது வீரசைவ சமயாசார, தீட்சாகுருவினர் பின்பற்றும் மரபு என்பதை உணரலாம்.

'அம்மா சிவஞானி அடிக்கமலம்
மும்மாயை கடந்து முயங்குமது
சும்மா தலைமேல் சுமத்தினனால்
கைம்மாறு உளதோ கடையேன் இடையே'

என்பது சிவப்பிரகாச அடிகள் திருவாக்கு, 'சும்மா' என்பது 'சொம்மா' என்பதன் திரிபு. ஸ்வம்மா என்பது சொம்மா என்றாகி அது சும்மா என வந்தது. ஸ்வம் என்பது எனக்கே உரிமையுடையதாக அனுபவிக்கப் பெறும் பொருள் என்பது கருத்து.

சிவரபம்பொருள் மூலம் அதோமுகப் பரம்பொருளை அடைய விரும்பி, அவனிடம் உயிர், சரீரம், பரம் ஆகிய மூன்றையும் அங்கம் அங்கி என்ற உறவு முறையில் இணைத்து விட்ட பின்பும் மூச்சுக் காற்று முதலியன இயங்கிக் கொண்டிருக்கும். அவற்றையும் பிரார்த்த கன்மம் அழியும் பொருட்டுச் சிற்சத்தி முதலியவற்றுக்கு ஒப்புக்கொடுக்கும் வகையில் குருபரன் சீடனாகிய யான் உய்யுமாறு எடுத்துக் கொண்டான் என்பது இரண்டாவது பாடலின் பொருள்.

இனி மூன்றாவதாக நின்ற பாடல் கீழ்வருவது

'பச்சிம திக்கிலே வைச்ச ஆசாரியன்
நிச்சலும் எனை நினை என்ற அப்பொருள்

உச்சிக்குக் கீழது உள்நாக்கு மேலது
வைச்ச பதம் இது வாய் திறவாதே'

என்பது.

சீடனாகிய யான் கிழக்கு நோக்கியிருக்க, குருவானவர் வடக்கு நோக்கியிருந்து என் கையில் கொடுத்த இட்டலிங்கத்தை மேற்கு முகமாக அமைத்துப் பூசித்துத் தியானம் செய்ய வேண்டும் என்று கூறி உறுதிப்படுத்தினார் குரு. அது யாது எனில், உச்சிக்குக் கீழும் உள்நாக்கிற்கு மேலும் அமைவதாகிய புருவமத்தியின் மூலம் வெளிப்பட்டுத் தோன்றிய அதோமுக ஒளிப்பொருளாகிய இலிங்கப் பொருளே. அது பேசாப்பொருளா மனத்தால் தியானிக்கப் பெறுவதாய் அமைந்திருக்கும்.

பச்சிம திக்கு என்பது மேற்குத்திசை. அம்முகப் பூசை, தியானத்துக்காக வைச்ச பதம் இது என்றார். அவ்வாறு அமைத்துக் கொடுக்கப் பெற்ற பொருள் இட்டலிங்கப் பெருமானாகிய அதோமுகப் பிரமமே. மேற்குத்திசைப் பூசை வீரசைவத்துக்கே உரியது.

அதோமுகப் பிரமமும் ஆன்மாவாகிய சீடனும் கலந்து, தியானித்து, பூசித்து, ஒன்றியிருந்த நிலையில் ஒரு மாற்றம் நிகழ்ந்தது என்பதை அடுத்த பாடலில் கூறுகிறார்.

'பெட்டடித்து எங்கும் பிதற்றித் திரிவேனை
ஒட்டடித்து உள்ளம்ஆர் மாசுஎலாம் வாங்கிப்பின்
தட்டு ஒக்க மாறினன் தன்னையும் என்னையும்
வட்டமது ஒத்தது வாணிபம் வாய்த்தது'

இங்கே போவது அங்கே போவது என்ற வரையறை எதுவும் இல்லாமல் எங்கும் சென்று, எனக்கு விருப்பப்பட்ட கொள்கைகளையெல்லாம், அளவையியல் நெறியிலோ, ஆராய்ச்சி முறையிலோ, பேசாமல் பிடிவாதமாகவே வலிந்து வாய்க்கு வந்தவாறு பேசித் திரிந்து கொண்டிருந்தேன். அப்படிப்பட்ட என்னை, என் அகக்குற்றங்கள் அனைத்தையும் ஒட்ட (முழுவதுமாக) நீக்கி, ஒட்டடையை அழிப்பதுபோல் அழித்து, ஆன்மாவிலும், அதை அடுத்துள்ள மனம், புத்தி, சித்தம்

ஆகியவற்றிலும் அமைந்துள்ள மலக்குற்றங்கள் எல்லாவற்றையும் சுத்தமாக நீக்கினான். பின்னர் புருவமத்தியில் சோதியாகத் தோன்றி என் கைத்தலத்தினுள் இருக்கும் பொருளாகிய இட்டலிங்கப் பொருள் என்னும் தன்னையும் என்னையும் தட்டு ஒக்க மாற்றினான். அதனால் வட்டம் ஒத்து நின்றது. பின்னர் அவனுக்கும் எனக்கும் கொடுத்துக் கொள்ளும் வாணிகம் வாய்த்தது.

ஞானத்தொடு ஒன்றுபடாத கொள்கைகளையெல்லாம் உயர்ந்த கொள்கை என்று பிடிவாதமாகப் பேசிக் கொண்டிருந்த என்னுடைய மனத்தில், ஆன்மாவில் உள்ள குற்றங்களையெல்லாம் ஒட்டடையை அடிப்பதுபோல் அடித்து நீக்கினான்.

தட்டு ஒக்க மாற்றினான் என்பது வீரசைவக் கொள்கையின் முக்கியமான பகுதி.

ஆன்மாவின் குற்றங்களையெல்லாம் முழுவதுமாக மாற்றிவிட்டான் என்றார்.

இறைவன் இருப்பினாலும் 'சத்ர' அறிவினாலும் சுத்த சத்தியம், சுத்த சித்தியல் பொருள். ஆன்மாவே ஆணவம், கன்மம், மாயை ஆகிய அசுத்தங்களைக் கொண்டிருக்கும் பொருள். அத்துடன் அது என்றும் இறைவனையே சார்ந்திருக்கும் பொருள்.

ஆன்மா, எந்த அளவுக்குத்தான் சுத்தமாக நின்றாலும் ஆணவ அழுக்கை முற்றாக நீக்க முடியாது. ஆணவம் வலிமை கெட்டு, ஆன்மாவை இடமாகக் கொண்டு தங்கியிருக்கும் என்பது சைவசித்தாந்தக் கொள்கை.

ஆணவ இருப்பை ஒத்துக் கொண்டாலும் சுத்த நிலையில் ஆணவத்தை முற்றாக நீக்கி (இறையருளால்) சுத்தமாக நிற்கக் கூடியது என்பது வீரசைவக் கொள்கை. திருமூலர் கருத்துப்படி பரம், ஆன்மா என்ற இரண்டு தட்டும் மாசு இல்லாத வகையில் ஒப்ப நிற்கும் தன்மையுடையன என்று கொள்ள வேண்டும்.

அநாதி முத்தனாகிய இறைவனும், அழுக்கைத் திருவருளால் நீக்கிக் கொண்ட ஆன்மாவும் சாதி ஒருமையால் சுத்தம் என்று

கூறப்பெற்றாலும் இரண்டும் வேறுபட்டனவே என்று சைவசித்தாந்த விளக்கமாகச் சிவஞானமுனிவர் கூறுகின்றார்.

அழுக்கு இல்லாமலே இருந்தாலும், இருந்து நீங்கினாலும் சுத்த சுத்தமே என்பது வீரசைவக் கொள்கை. அந்த மரபு வழியில்-கொள்கை வழியில் நின்று திருமூலர்,

'என்னையும் தன்னையும் தட்டு ஒக்க மாறினன்'

என்றும்,

'வட்டமது ஒத்தது'

என்றும் கூறுகின்றார்.

அப்படியானால் இலிங்கமும் ஆன்மாவும் ஒன்றே என நின்று இரண்டும் சமம் என ஆய்விடுமோ, ஒன்றாகவே ஆய்விடுமோ என்றால் இல்லை. இல்லை.

சத், சித், ஆனந்தம் என்ற மூன்று நிலைகளில் சத் என நின்ற இருப்பு நிலையில் இலிங்கத்தைப் போலவே, சுத்த சத்தியப் பொருளாக ஆன்மாவும் நிற்கும் தன்மையுடையது.

சித் என்ற ஞானப்பகுதியில் இலிங்கமும் ஆன்மாவும் சுத்தசித் என்ற வகையில் ஒத்த நிலை உடையவையே.

இருவகை நிலைகளிலும் இலிங்கமும் ஆன்மாவும் ஒக்கநின்ற நிலையில், இன்பநிலை எனப்பெறும் ஆனந்தநிலையில், மட்டும் வேறுபாடு அமைகின்றது. இலிங்கம் ஆனந்தமயம். இலிங்கமானது ஆனந்தத்தைக் கொடுக்க ஆன்மா அதனை ஏற்று அனுபவித்துக் கொண்டிருக்கும். அவ்வகையில் இரண்டும் ஒன்றாகாது. அந்நியமாகவே இருக்கும்.

சைவசித்தாந்தக் கொள்கையின் வண்ணம் சத், சித், ஆனந்தம் என்ற மூன்று நிலைகளிலும் சிவமும் ஆன்மாவும் வேறுபட்டே இருக்கும்.

வீரசைவநெறியில் சத், சித் என்ற இருநிலைகளில் இலிங்கமும் அதன் அங்கமாகிய ஆன்மாவும் ஒத்தே இருக்கும். அதைத்தான் தட்டு ஒக்க மாறினன் என்று குறிப்பிட்டார் திருமூலர். ஆனால்,

ஆனந்த நிலையில் இரண்டற்கும் கொடுத்துக் கொள்ளல் எனப்படுவதாகிய வாணிப நிலை உண்டு என்பது திருமூலர் கருத்து.

'தந்தது உன்தன்னைக் கொண்டது என்தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றது ஒன்று என்பால்
சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்
திருப்பெருந் துறைஉறை சிவனே
எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய்
யான் இதற்குஇலன் ஓர்கைம்மாறே'

என்ற மணிவாசகரின் அனுபவமொழியையும் இணைத்து நிறுத்திக் காணப்பெற வேண்டிய ஒன்று.

சம்பிரதாய முறைப்படி, மரபுப்படி இத்தகைய பரிமாற்றம் உண்டு. அதனால் வாணிபம் வாய்த்தது.

ஆனந்தத்துக்கு வேறுபாட்டினை அமைத்துக் காட்டியதுபோல, ஏனை இரண்டிலும் வேறுபாடு உண்டு என அமைத்துக் காட்டுவதினால் சிவமும் ஆன்மாவும் முற்றாக வேறுபட்டவை என்ற கருத்தே போதரும்,

'தட்டு ஒக்க மாறினன்'

என்றும்,

'வட்டமது வாய்த்தது'

என்றும் கூறியிருப்பதால் ஒத்தநிலையும் உண்டு. வாணிபத்துக் கேற்றதாகிய கொடுத்துக் கொள்ளும் நிலையும் உண்டு என்பதே திருமூலரின் கொள்கை.

எனவே, திருமூலர் கூறும் சம்பிரதாயக் கொள்கையானது பரமும், சீவனும் முடிவில் ஒன்றே எனக்கூறும் அத்வைத வேதாந்தக் கொள்கையினின்றும் வேறுபட்ட கொள்கையே என்று கூறலாம்.

அவ்வாறே சத்து, சித்து, ஆனந்தம் என்ற மூன்றாலும், ஏன் முழுமையாலும் சிவத்தொடு சீவன் எக்காலத்திலும் (பெத்தத்திலும்

முத்தியிலும்) வேறுபட்டதே என்று கூறும் சைவ சித்தாந்தக் கொள்கையினின்றும் வேறுபட்ட கொள்கையையே திருமூலர் கூறுகின்றார் என்றும் கொள்ள வேண்டும்.

திருமூலர் அமைத்துக் காட்டும் சம்பிரதாயக் கொள்கையானது வீரசைவத்தோடு முற்றிலும் ஒன்றுபட்டதே என்று கூறுவதில் ஐயம் இல்லை.

இனி, இட்டலிங்கத்தைத் தன்கையில் வைத்துக் கொண்டு அதன்மூலம் அதோமுக இலிங்கத்தை நோக்கிக் கொண்டிருத்தலால் எனக்குப் புறநோக்கு அறவே அகற்றப்பட்டு அகநோக்கு விரிவுபடுத்தப் பெற்றது. அதனாலே அகநோக்கினால் அனைத்துயிர்களுக்கெல்லாம் தலைவனாகவும் தாங்கிக் கொண்டிருப்பவனாகவும் உள்ள தலைவனை, அவன் இருக்கும் தன்மையையும், அனைத்தையும் தன்னுள் கருக்கொண்டிருக்கும் தன்மையையும், கண்டு கொண்டேன். அவ்வாறு காண்பதுதான் சம்பிரதாயம் எனக் கூறுகின்றார்.

முதலில் இறைவன் தான் தனித்திருக்கும் நிலையில் அவனிடமிருந்து நாதம், விந்து முதலியன தோன்றின. பின்னர் அவற்றிலிருந்து உலகம் தோன்றியது. நாதத்தினால் விந்துவையும் பிறவற்றையும் உலகத்துயிர்கள் நோக்கின. அவ்வாறு நோக்கும்போது நாதமானது புறத்தே உள்ளவற்றை உணர்வதற்குத் துணை செய்தது. யான் அந்த நாதத்தை அகநோக்கிற் செலுத்திக் கண்டபோது இலிங்கமயமாய் நின்ற பரம்பொருளையும் அவன் இருப்பையும் காண முடிந்தது. அதுவேறு ஒன்றும் இல்லை. நாதம் முதலியவைகளை வெற்று ஒலியாகக் காணும்போது புறம் (அ) புறஉலகம் நன்றாகத் தோன்றியது. அவ்வாறு செய்யாமல் நாதத்தை அகநோக்கில் திருப்பினால் அங்கு அகக்கண் மலரும். அதுவே அருளாகியகண். அருளையே கண்ணாகக் கொண்டு அகத்தே நோக்கினால் இலிங்கத்தில் உறையும் அதோமுக நாதனின் இயல்பையும் நன்கு உணர்ந்து கொள்ளலாம். அது சம்பிரதாயம். அவ்வாறு உணர்ந்து கொண்டேன்.

வீரசைவ வழிபாட்டில், இலிங்கத் திருவழிபாட்டை முடித்தபின்னர், இட்டலிங்கத் திருவுருவைத் தன்னுடைய இடது

கரத்தில் தாங்கி, உற்றுநோக்கிக் கொண்டிருந்தால் சீடனின் புறநோக்கானது திருப்பப் பெற்று, அது அவனது அகநோக்காக மலர்த்துவிக்கப் பெறுகின்றது. அகநோக்கு மலர்ந்ததும் அருளானது வெளிப்பட்டு அனுபவப்படுகிறது. அதே அருட்கண்ணால் இட்டலிங்கத்தைப் பார்க்கும்போது இறைவனின் தன்மையையும் அவன் பெருந்தன்மையையும் மிக எளிதில் உணர்ந்து கொள்ள முடிகிறது.

புறநோக்கில் உண்டாகும் வேறுபாடுகளை- பிணக்குகளை நீக்குவதற்கு அகத்தே காணப்பழக வேண்டும். இட்டலிங்கத்தைச் சில மணித்துளிகள் மனத்தோடு இணைத்துக் காண முற்பட்டால் அருட்காட்சியும் அகநோக்கும் மலர்ந்து விடும். அவைகளாற் காண்பதால் இறையுண்மையையும் அவன் பெருந்தன்மையையும் அனுபவத்தில் காணலாம்.

இதனைக் காரைக்காலம்மையார் 'மெய்ப்பொருளைத் திருவருளாற் காணும் விதியுடையேன்' என்று கூறுவதை நாம் இணைத்துச் சிந்திக்கலாம்.

இனி, அடுத்த ஆறாம்பாடலில், அதோமுகத்தின் ஒளிவீச்சாகவும் ஆன்மாவை அங்கமாகவும் கொண்டு அங்கி, அங்கம் என நின்ற பரம்பொருள் ஆன்மாவை மட்டுமன்றி அதனைச் சார்ந்த உடல் பொருள் முதலியவற்றையும் இணைத்து விடும். அவ்வகையில் பொருள், பொருளை உடன்கொண்ட உடல், உடலைச் சார்ந்த உயிர் ஆகிய மூன்றும் ஒன்றென நின்று இலிங்கம் என்னும் பரம்பொருளுக்கு அங்கமாக இருக்கும். அப்போது ஆன்மாவானது இலிங்கத்துக்கு அங்கமாக நின்றது போலவே, உடலும் பிறவும் இலிங்கம் என்னும் பரம்பொருளுக்கு அங்கமே என்பது ஆன்மாவுக்குப் புலப்படும். இலிங்கமானது தன்னுடைய அருளாகிய ஞானசத்தியால் அவைகளையும் கூடி, அடிவைத்து ஞானமயமாக ஆக்கி விடுவதால்,

உடல் அங்கமாக உயிர் அங்கியாக இருந்த முன்னை நிலைமை மாற்றம் பெற்று, பொருள், உடல், உயிர் என்ற மூன்றுமே அங்கமாக நிற்க இலிங்கம் அங்கியாக நிற்கும் நிலைமை உண்டாகி விடுகிறது.

அதனால், ஆன்மாவானது உடலை அங்கமாகக் கொண்டு செயல்படும்போது வருகின்ற பிணக்குகள் எல்லாம், இலிங்கமே, அவற்றை அங்கமாகக் கொண்டு செயல்படுவதால் பிணக்குகள் இல்லாத அருட்செயல்களாகவே உடல்களின் செயல்கள் அமைந்து விடும்.

ஆன்மாவும் உடல் பொருளுடன் இணைந்து இலிங்கத்தின் அங்கமாகவே இருத்தலால் இறைவன் அங்கியாக இருந்து செயற்படும்போது ஆன்மாவுக்குத் தான் செய்யும் செயலாக எதுவும் இல்லை. ஆன்மாவானது உடலில் நின்று செய்யும் செயல்கள் எல்லாம் இலிங்கம் என்ற அங்கியின் செயல்களாகவே அமைந்து விடுகின்றன. அவ்வகையில் ஆன்மாவுக்கு எந்தவகையான மலக்குற்றமும் நிகழ்வதில்லை.

ஆன்மாவுக்கு அங்கங்களாக உடலும் பொருள்களும் இருப்பது உலகியல் முறை. அருளியல் முறையில் உடலும் பொருளும் இலிங்கம் என்னும் அருளொளிப் பொருளுக்கு நேராகவே அங்கமாகி விடுகின்றன. ஆன்மாவானது அங்கி என்றும் உடலும் பொருளும் ஆன்மாவுக்கு அங்கங்கள் என்றும் அமைத்துக் கொள்ளும் நிலை இல்லாமல் ஆன்மாவைப் போலவே உடல் முதலியவைகளும் இலிங்கமெனும் பரம்பொருளுக்கு நேரே அங்கமாக ஆகி விடுவதால் ஆன்மாவுக்கு உடல் பொருள் முதலியவைகளால் ஏற்படும் குற்றங்கள் ஏற்படுவதில்லை.

சம்பிரதாய முறையில் ஆன்மாவுக்கு இத்தகைய மாற்றங்களை இலிங்கமெனும் பரம்பொருளே செய்து விடுகின்றது. ஆன்மாவானது தான் இலிங்கமெனும் பரம்பொருளுக்கு வெறும் அங்கமே என நின்று, அங்கியைப் பார்த்துக் கொண்டிருந்தாலே போதும் என்பது திருமூலர் கருத்தாக அமைகிறது. இதுவே சம்பிரதாய முறை.

ஆன்மாவானது தன்னையும் தன் உடலையும் பரம்பொருளுக்கு அர்ப்பிதம் செய்ய வேண்டும். பின்னர் ஆன்மாவானது தான் செய்யும் செயல்கள் எல்லாவற்றையும் இறைவனுக்கு அர்ப்பணமாக்க வேண்டும். பின்னர் அந்த ஆன்மாவானது செய்யும் செயல்களால் விளைந்த பலன்களையெல்லாம் இறைவனுக்கு

அர்ப்பணம் செய்ய வேண்டும் என்று எல்லாச் சமயங்களும் எடுத்துக் கூறி வற்புறுத்துகின்றன.

ஆனால், வீரசைவத்தில் இட்டலிங்கத்தைத் திருக்கையில் வைத்து வழிபாடு செய்யும் போது வழிபாட்டுச் செயல்கள் அனைத்தையும் இலிங்கம் என்னும் பரம்பொருள் எனக்கு அங்கியாக இருக்கிறது. யான் வெறும் அங்கமே என்ற எண்ணத்தில் மட்டும் நின்று பூசை செய்து விட்டு, பின் இலிங்கத்தையே பார்த்துக் கொண்டிருத்தல் வேண்டும். அப்போது இலிங்கமானது ஆன்மாவைப் போலவே ஆன்மாவுக்குரிய அங்கமாகிய உடலையும் உடைமைகளையும் தனக்கே உரிய அங்கங்களாகத் தானே எடுத்துக் கொள்வதால் அவையும் இலிங்கமெனும் பரம்பொருளுக்கு நேர் அங்கங்களாக ஆகி விடுகின்றன. அதனால், ஆன்மாவானது உடல்மூலம் உடைமை மூலம் செய்யும் செயல்கள், அவற்றின் பலன்கள் ஆகியவையெல்லாம் இறைவனுக்கே நேராகவும் இறைவனே அங்கியாக நின்று அவற்றைச் செய்ததாகவும் பலன்களை ஏற்றுக் கொண்டதாகவும் அமைந்து விடுகின்றன. அதனால், என் செயல்களுக்கெல்லாம் இறைவன் பலன் கொடுத்தான். பின்னர் அவற்றையெல்லாம் இறைவனுக்கே அர்ப்பணம் செய்து விட்டேன் என்ற செயல்களுக்கெல்லாம் வாய்ப்பே இல்லாமல் போய்விடுகின்றது. இதுவே அங்காங்கி பாவ யோகமுறை.

'கொண்டான் அடியேன் அடிமை குறிக்கொள
கொண்டான் உயிர் பொருள் காயக் குழாத்தினை
கொண்டான் பலன்முற்றும் தந்தவன் கோடலால்
கொண்டான் என ஒன்றும் கூறகிலேனே'

இலிங்கம் அங்கி. யான் அங்கம் என நின்று இட்டலிங்கத்தைப் பார்த்தல் ஒன்றே போதுமானது. இதனால் பிறசமயங்கள் சொல்லும் நிஷ்காம கர்மம் என்பன போன்ற சாதனை முறைகள் தத்துவக் கொள்கைகள் தாமே தொழிற்பட்டு விடும் என்பது மேலே குறிப்பிடப் பெற்ற பாடலின் நேர்ப்பொருள்.

திருமூலர் அங்காங்கி யோக முறையை அடுத்து வரும் சம்பிரதாயப் பதினொன்றாம் பாடலால் விளக்குகின்றார்.

நான்என நீஎன வேறுஇல்லை நண்ணுதல்
ஊன்என ஊன்உயிர் என்ன உடன்நின்று
வான்என வானவர் நின்று மனிதர்கள்
தேன்என இன்பம் திளைக்கின்ற வாறே

என்பது அப்பாடல்.

குருவருளால் இட்டலிங்கத்தின்வழி அங்காங்கி யோகநெறியை மேற்கொண்ட சீடன் சிவன் ஆகாயம்போல் வியாபகனாய் விளங்குதலை உணர்ந்து தானும் அவ்வாறே வியாபகனாய் நின்று உணருவதைப் போல அவனது தூய இன்பத்தைத் தேனின் சுவை நுகர்தல் போல நுகருகிறான்.

அந்நிலையில் நான் இன்பத்தை நுகருகின்றேன், நீ இன்பத்தைத் தருகின்றாய் என இவ்வாறு வேறு நின்று, நுகருமாறு அவன் இவரின் வேறாய் நிற்றல் அன்று. நுகரும் இவர் உடம்பு போலவும் நுகரப்படுபவன் அவ்வுடம்பின் உள்ள உயிர்போலவும் உடனாய் நிற்றலேயாம்.

இறைவன் அங்கியாக ஆன்மா அங்கமாக நின்று இணைதல் வேண்டும். அது ஒருவகை யோகம். அம்முறையில் இலிங்கமும் அங்கமாகிய ஆன்மாவும் நிற்க, அப்போது இலிங்கம் தரும் உணர்வை அங்கமாகிய ஆன்மா உணர்ந்து துய்க்கும் என்று கொள்ளுதல் வேண்டும்.

அப்போது இலிங்கமானது இவ்வுயிர் நானே. அங்கமே. யான் அங்கியே என்ற ஒற்றுமையில் நின்று அவ்வுயிரின் உள்ளத்தில் தனது கருணையை வானத்தில் உள்ள கரிய பெரிய மேகம் பொழிவதைப் போலப் பொழிவான்.

இத்தகைய சம்பந்தத்தை ஒருமைவாதமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. அங்கம், அங்கி என நின்ற உறவாகவே கொள்ளுதல் வேண்டும்.

இனி, சம்பிரதாயம் என்ற தலைப்பில் அமைந்த இறுதிப் பாடல் வருமாறு,

'பெருந்தன்மை தான்என யான்என வேறாய்
இருந்ததும் இல்லை அஃது ஈசன் அறியும்

பொருந்தும் உடல் உயிர்போல் உண்மை மெய்யே
திருந்தமுன் செய்கின்ற தேவர் பிரானே'

என்பது 14ஆம் பாடல்.

உண்மையை உணர முற்படுகின்ற காலத்தில் உண்மையில் நின்று உண்மையை உணர வேண்டும். அவ்வாறு உணராமல் மெய், பொய் என்பனவற்றுக்கு வேறாக உண்மை உள்ளது என்று உணருதல் பொருத்தமுடையதாக ஆகாது. ஆகையால் பெருந்தன்மை வீரம் (அ) பெருமிதம் எனப்பெறும் வீரசிவன் வேறாக ஆன்மாவாகிய யான் வேறாக நின்று உணர்தல் இல்லை. அவ்வாறு இருந்ததும் இல்லை. இனி இருக்கப் போவதும் இல்லை. அதனை ஈசனே அறிவான்.

உடலும் உயிரும் வேறு பொருள்கள். ஆயினும் ஒன்றாக ஆகிவிடாமல் ஒன்றுபோல இருந்து, கலந்து ஒற்றுமைப்பட இருப்பது போல, அவன் என்னுள் ஒன்றாய்- அநந்நியமாய்க் கலந்திருக்கின்றான்.

ஆன்மாவாகிய யான் திருத்தமுற நின்று அனைத்தையும் பெறுவதற்காக அவன் அவ்வாறு என்னுள் இருக்கிறான். அவன் அறிவான். அவனுக்கு அங்கமாக இருக்கிற யானும் அவனுடன் ஒற்றுமைப்பட நிற்றலால் அறிவேன்.

அங்கியோக முறையை இவ்வாறு சம்பிரதாயம் என்ற தலைப்பின் இறுதிப் பாடலில் எடுத்து விளக்குகின்றார் திருமூலர்.

சம்பிரதாயம் என்ற தலைப்பின் முடிப்புரை

மரபு வழியில் வருகின்ற ஒருவகை யோக முறையை அல்லது இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் உள்ள உறவு முறையைப் பதினான்கு திருமந்திரப் பாடல்களால் விளக்கியருளுகின்றார்.

குருவானவர் வந்து சீடனுடைய உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தையும் ஆன்மாவானது தன்பால் செலுத்துகின்ற அன்பின் அடிப்படையில் தன்னுடைய கருணையாகிய உதகத்தால் தன் உடைமைப் பொருளாக ஆக்கிக் கொண்டு அந்த ஆன்மாவானது உய்த்து உணருமாறு ஒன்றைக் கையில் கொடுத்து (இட்டலிங்கம்) ஆன்மாவின் பிறப்பு இறப்பு

முதலியவை முற்றாக அழிந்து ஒழிந்து போகுமாறு இதனைக் கண்டு கொண்டிரு என ஆணையிட்டுச் சொல்லுகின்றார்.

பின்னர்ச் சீடன் அப்பொருளுடன் அங்கி, அங்க யோக முறையில் இணைந்து நின்று படிப்படியாக முன்னேறுகின்றான்.

இது ஒரு எளிமையான யோகமுறை. இது புதிய யோகமுறை. இதை நந்தியானவன் எனக்குக் கொடுத்தாலும் மரபு வழியாக வருகின்ற யோக முறை.

மரபுவழியாக வரும் இம்முறையை எடுத்துக் கூறும் திருமூலர் **அங்கம்,** அங்கி என்ற இணைப்பு முறையை எளிமையாக விளக்குகின்றார்.

மேலும், இது ஏனைச் சமயத்தவர்கள் எடுத்துக் காட்டும் சாதனை முறைகளைப் போன்றதன்று எனவும் கூறுகின்றார்.

ஆன்மாவின் கண் மூன்று பொருள்கள் உள்ளன. அவற்றை எவ்வாறு இணைக்க வேண்டும் என்பதையும் உணர்த்துகின்றார்.

இலிங்கப் பரம்பொருளை அங்கி என நிறுத்தி ஆன்மாவானது தன்னை அங்கமாக நிறுத்த வேண்டும். பின்னர் உடலையும் உடமைப் பொருள்களையும் ஆன்மாவானது தனக்கு அங்கங்களாக நிறுத்தக் கூடாது. உடலையும், உடைமைகளையும் இலிங்கத்துக்கு நேர்நின்ற அங்கங்களாக ஆக்கி விடுதல் வேண்டும்.

அவ்வகையில் ஆன்மாவானது இலிங்கமாக நின்ற பரம்பொருளுக்கு - அங்கிக்கு அங்கமாக நின்றது போல, உடல் பொருள் ஆகியவைகளையும் இலிங்கத்துக்கு அங்கங்களாக ஆக்குதல் வேண்டும் என்ற முறை மிகவும் எளிமையானது, சிறப்பானது என்று திருமூலர் சம்பிரதாயம் என்ற தலைப்பின்கீழ் விளக்கமாக அமைத்துக் காட்டுகின்றார்.

மேலும் ஒரு முக்கியமான விளக்கத்தை அமைத்துக் காட்டுகின்றார் திருமூலர் சம்பிரதாயம் என்ற தலைப்பில்,

தட்டு ஒக்க மாறுதல்
வாணிபம் வாய்த்தல்

என்பனவே அவை.

‘சுத்தசத்’ என்ற வகையில் இலிங்கமும் அங்கமாகிய ஆன்மாவும் ஒத்த தட்டுகளே.

‘சுத்தசித்’ என்ற வகையில் இலிங்கமும் அங்கமாகிய ஆன்மாவும் ஒத்த தட்டுகளே.

‘ஆனந்தம்’ என்ற மூன்றாம் நிலையில் மட்டும் கொடுப்பானும் துய்ப்பானும் என்ற வேறுபாடு அமைவதால் அங்கே வாணிகம் வாய்த்தது என்றார்.

அவ்வகையில், இலிங்கமும் ஆன்மாவும் ஒன்றே என்று கூறும் அத்வைத வேதாந்தக் கொள்கையினின்றும்;

சத், சித், ஆனந்தம் என்ற மூன்று நிலைகளிலும் ஆன்மாவும் சிவனும் வேறுபட்டனவே என்று கூறும் சைவசித்தாந்தக் கொள்கையினின்றும் வேறுபட நின்றது அதுதான் எது எனில்,

அங்காங்கி பாவயோகமாய் நிற்கும் வீரசைவப் பெருநெறி விளங்குகிறது என்பதை மரபுவழியில் வந்த வீரசைவம் எனத் திருமூலர் விளக்குகிறார் என்று அறிந்து உணர்ந்து தெளிந்து துய்த்தல் வேண்டும்.

இரண்டாங் கட்டுரையின் முடிப்புரை

இலிங்காயதமும் சம்பிரதாயமும என அமைந்த இந்த இரண்டாம் கட்டுரையில் வீரசைவமாகேச நெறி எனப்பெறும் குருகுகேச நெறியின் மையக்கருத்துகள் இரு தலைப்புகளில் எடுத்துக் காட்டப் பெற்றன.

தீட்சை வகையில் முதல்நின்ற வீரசாமானிய தீட்சை எனப்பெறும் இட்டலிங்க தாரண தீட்சையின் இயல்பும் அதன் ஏழு படிநிலைகளில் ஆறாவதாக, ஏழாவதாக நின்ற இலிங்காயதம், இலிங்க சுவாயதம் என்ற படிநிலைகளை விளக்கி வீரசைவ முறையானது அகத்தீ ஒழுக்கநெறி என்றும், நடுவுள அங்கிமுறை என்றும் அதோமுகமே நந்தியாக வந்து அருளும் முறை என்றும் அங்காங்கி யோகம் என்பது திருமூலருக்கு நந்தி அருளிய புதியயோகமுறை என்பதும் விளக்கப் பெற்றன.

இலிங்க சுவாயதத்தில் சீடனானவன் இலிங்கம் எனப்பெறும் அதோமுகப் பரம்பொருளின் தன்னுண்மை நிலையை உணர்ந்து

அனுபவிக்கும் பேற்றினைக் குருவானவன் மூலமாகவும் இட்டலிங்க தாரண தீட்சை மூலமாகவும் பெறுகிறான் என்பது விளக்கப் பெற்றது.

இலிங்காயதம் என்ற தலைப்பில் அதோமுகத்தைப் பற்றிய பல்வேறு ஆகமச் செய்திகள் விளக்கப் பெற்றன.

சிவத்தை மருவி நிற்கும் அதோமுகப் பரம்பொருளை எவ்வாறு மருவிப் பார்க்க வேண்டும் என்ற முறை விளக்கப் பெற்றது. அந்த வகையில், கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகள் இட்டலிங்க அபிஷேக மாலையில் சில சொற்களை இணைப்பதன் நுட்பப் பொருள் திருவருளின் குருவருளின் துணைக்கொண்டு விளக்கப் பெற்றன.

இலிங்காயதம் என்பது குருகுகேச நெறிக்குப் பயனாய் வந்த பெயர் என்பது எடுத்துக் காட்டப் பெற்றது.

அகத்தியம், நடுவுள அங்கி, அங்கியோகம் என்பனவற்றின் நுட்பப் பொருள்கள் விளக்கி எழுதப் பெற்றன. அவற்றை விளங்கிக் கொள்ளும் வகையில் அதோமுகமே நந்திக்கொடியாக மலர்கிறது என்ற செய்தியையும் அதனைத் துணை நின்று விளக்குவதற்குரிய இணைப்புக் கட்டுரை ஒன்றும் அமைக்கப் பெற்றன.

இலிங்காயதம் என்ற தலைப்பைப் போலவே, திருமூலரால் அறிமுகப்படுத்தப் பெறும் சம்பிரதாயம் என்ற தலைப்பு விளக்கமும், அத்தலைப்பிற் கூறப்பெறும் செய்திகளும் விளக்கிக் காட்டப் பெற்றன.

சம்பிரதாயம் - மரபு. மரபுவழியில் வருவதாக அமைந்ததே வீரசைவப் பெருநெறி எனப்பெறும் குருகுகேசப் பெருநெறி என்பது விளக்கிக் காட்டப் பெறுகிறது.

அங்கம், அங்கி என நின்ற உறவு முறையினை மரபு வழியில் வந்த முறைமை எனக்காட்டி, வீரசைவம் தொன்மைக்காலம் தொட்டு மரபு வழியில் வந்த- மறுக்கப் பெற இயலாத வகையில் அமைந்த வீரமாகேசப் பெருநெறி என்றும் அது 'அதோமுகத்தை' மூலமாகக் கொண்ட பெருநெறி என்பதும் விளக்கப் பெற்றன.

5. தத்துவ நோக்கில் குருகுகேசம்

(அ)

வீரசைவம்

தமிழகத்தில், சைவசித்தாந்தக் கொள்கையாளர்கள் வீரசைவத்தை ஐக்கியவாத சைவம் என்றும் அது அகப்புறச் சமயங்கள் ஆறனுள் ஆறாவதாக நின்றது என்றும் அமைத்துக் காட்டுவர்.

சிவப்பிரகாசம் என்ற நூலினை இயற்றிய உமாபதி சிவாச்சாரியார் ஐக்கியவாதசைவம் பற்றித் தாம் இயற்றிய சங்கற்ப நிராகரணத்துள் அமைத்துக் காட்டியுள்ளார்.

உமாபதி சிவாச்சாரியார் எடுத்துக் கூறியுள்ளவற்றை மூலமாகக் கொண்டு மாதவச் சிவஞான சுவாமிகள் ஐக்கியவாத சைவம் பற்றி எடுத்துரைத்துள்ளார்.

ஐக்கியவாத சைவம் ஆணவமலத்தை ஒத்துக் கொள்ளாத தத்துவம் என்று கூறியுள்ளார்.

ஐக்கியவாத சைவத்துக்கெனத் தனிநூல் இல்லை. செவிவழிச் செய்தியாக அறிந்தனவற்றின் மூலமாகக் கொண்டு அக்கொள்கை விளக்கத்தைச் சிவஞான முனிவர் யாத்துள்ளார்.

அடுத்து, நீரொடு நீரும், பாலொடு பாலும் சேருவது ஐக்கியம் என்று கூறுகிறார் சிவஞான சுவாமிகள். ஆன்மா அறிவிக்க வேண்டாது தானே அறியும் இயல்பினது என்றும் கூறப்பெறுகின்றது.

அத்தகைய கொள்கைகள் தற்போதுள்ள வீரசைவ நூல்களிற் காணப் பெறவில்லை.

பாலொடு பாலும், நீரொடு நீரும் சேர்தல் என்பன ஒரே பொருள் இருவேறு நிலைப்பட்டு நின்று மீண்டும் இணைதல் என்பதாகும். குடாகாயம் மகாகாயம் இணைதல் பெரியது சிறியது என்ற வேற்றுமையன்றி ஆகாயத்தில் வேறுபாடில்லை. அதைப்

போன்றதே நீரொடு நீர் சேர்தல். அத்வைத வேதாந்தம் ஏற்கும் இக்கொள்கையை அத்வைதம் என்று சொல்லாமல் ஐக்கியம் என்று சொல்வானேன்?

தமிழகத்தில் காலத்தால் மிகத் தொன்மை வாய்ந்த சைவமாக, அகத்தீ நெறிநின்ற அகத்தியர், திருமூலர் ஆகியவர்களால் கடைப்பிடித்து ஒழுகப்பெற்ற வாழ்வியல் நெறியமைந்த தத்துவக் கொள்கையாகவும் சமய ஒழுக்க நெறியாகவும் அறம் சார்ந்த வாழ்வியல் பேற்றுக்கொள்கையாகவும் ஐக்கியவாதம் இருந்துளது.

குருகுகேசம் என்ற தலைப்பில் வெளிவரும் பொம்மபுர ஆதீனப் பதிப்புகளில் வீரசைவக் கொள்கையானது விரிவாக விளக்கம் பெற்று வருகிறது.

திருமூலர் இக்கொள்கையை **சம்பிரதாயம்** என்ற தலைப்பில் பதினான்கு திருமந்திரங்களால் விளக்குகின்றார்.

இனி ஐக்கியம் என்ற சொற்பொருளைக் காணலாம்.

ஐ +ஃ + இயம்

என்ற மூன்றும் சேர்ந்த நிலையில் ஐக்கியம் என்ற வழக்குச் சொல் அமைகிறது.

தத்துவ இயலார் ஒப்பும் சம்பந்தம் இரண்டே இரண்டுதான்.

ஒன்று : அத்துவித சம்பந்தம்

இரண்டு : தாதான்மிய சம்பந்தம்

முதலாவதாக நின்ற அத்துவித சம்பந்தம் என்பது இரண்டு வேறுபட்ட பொருள்கள் ஒன்றுபோல நிற்பது அத்துவித சம்பந்தம்.

இரண்டாவதாக நின்ற தாதான்மிய சம்பந்தம் ஒரே பொருள் ஏதேனும் ஒரு காரணத்தால் இருவகைப்பட்டு நிற்றல் என்பதே.

'முன்னது பாலும் நீரும் போல
பின்னது பொன்னும் மணியும் போல'

இருவகை சம்பந்தங்களையும் விளக்குவதற்குத் தமிழில் உயிரெழுத்துகளில் இரண்டே இரண்டு கூட்டெழுத்துகள் உள்ளன.

அவை,

ஐ, ஔ

என்பன. ஐ என்பது அ+இ என்ற இரண்டன் (இரண்டு உயிரெழுத்துகளின்) கலப்பு.

அகரம் இறைவன். இகரம் ஆன்மா. இங்கே குறிப்பிடப் பெற்ற இரண்டு பொருள்களும் அடிப்படையில் வேறுபட்ட இரண்டு பொருள்கள். இவை இரண்டும் ஒன்றுபோல் இருக்கும் சம்பந்தத்தை உணர்த்துவது 'ஐ' என்ற எழுத்து. இது அத்துவித சம்பந்தம்.

'ஔ' என்ற எழுத்து அ+உ (அ) அ+வ் என இரண்டன் இணைப்பு. இது ஒரே பொருள். இறைவனும் சத்தியும் ஏதேனும் ஒரு காரணத்தால் இருமைப்பட்டு நிற்றல் தாதான்மிய சம்பந்தம்.

வீரசைவத்தில் ஆன்மாவும் இறைவனும் அங்கம் அங்கி என்ற உறவில் நின்று, பின்னர் ஒன்றுபோல அமைந்து நிற்றலால் 'ஐ' என்ற எழுத்தை ஒத்தது. அது அத்துவிதசம்பந்தம். அது நீரும் நீரும் இணைதல் போன்றதன்று.

அடுத்தது 'ஃ' என்ற முப்புள்ளி எழுத்து. இருமை நேர் நிற்க. மேல் ஒன்று நின்று இயங்குதல்.

ஆன்மாவும் உடலும் இருமைகள். அவை இரண்டும் நேர் நேரே பரம்பொருள் என நின்ற இலிங்கத்து அங்கமாக அமைகின்றன. இலிங்கத்துக்கு ஆன்மா அங்கம். அவ்வாறே ஆன்மாவின் உடல் இலிங்கத்துக்கு அங்கம்.

ஆன்மாவானது உடலுக்கு அங்கி என்பதை வீரசைவம் ஏற்பதில்லை.

ஆன்மாவும் உடலும் தனித்தனியே இலிங்கத்துக்கு அங்கங்களாக அமைகின்றன. ஆன்மாவுக்கும் ஆன்மாவானது எடுத்த உடலுக்கும் இலிங்கம் ஒன்றே அங்கியாக நின்று செயற்படுத்துகின்றது என்பதே அடிப்படை வாழ்வியற் கொள்கை.

அவ்வகையில் ஐ எனவும் ஃ எனவும் நின்ற தமிழ் எழுத்துகளின் விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஐக்கியம் என்ற தமிழ்ச்

சொல்லும் அவற்றை ஒத்த இலக்கண வாழ்வியல் முறைகளையும் கொண்டு விளங்குவது ஐக்கியவாதம் என்ற வீரசைவம்.

பிரமசூத்திரத்துக்கு ஸ்ரீபதி பண்டிதாசாரியர் ஸ்ரீகர பாஷ்யம் எழுதியுள்ளார். அது வீரசைவ அடிப்படையில் எழுந்த பாடிய நூல்.

அந்நூலில் அவர் வீரசைவம் **சத்தி விசிட்டாத்வைதம்** எனப் பெறும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். 1977-இல் என்னால் எழுதப் பெற்று, சென்னைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப் பெற்ற வீர சைவம் என்ற நூலில் சத்தி விசிட்டாத்வைதம் அத்துணை யளவுக்கும் பொருத்தமான குறியீட்டுச் சொல் அல்ல என்று குறிப்பிட்டுள்ளேன்.

வீரசைவத்தைத் திருமூலர் நந்தி தனக்கு அளித்த ஒருவகைப் புதிய யோகமுறையைச் சார்ந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஏழாந் தந்திரத்துள் சம்பிரதாயம் என்ற தலைப்பில் 14 பாடல்களில் அது ஒருவகை மரபு வழிவந்த கொள்கை என்று குறிப்பிட்டுள்ளார்.

வீரசைவத்தை ஐக்கியாத்வைதம் என்றோ அங்கியாத்வைதம் என்றோ அமைத்துக் காட்டலாம்.

ஐ, ஃ என்ற இரண்டு தமிழ் எழுத்துகளின் அடிப்படையில் எழுந்த தமிழர்தம் வாழ்வியற் கொள்கையே வீரசைவம். அதனை விளக்கிக் கொள்வதற்காக, தொல்காப்பியச் சிந்தனைக் கட்டுரை ஒன்று இத்துடன் இணைக்கப் பெற்றுள்ளது.

தொல்காப்பியச் சிந்தனையில் தமிழ்த் தத்துவம்

முன்னுரை - தலைப்பு விளக்கம்

தொல்காப்பியம் தமிழ்மொழியின்கண் உள்ளதோர் பழமையானதும் மூத்ததும் ஆகிய இலக்கண நூல் என்பது அறிஞர் ஒப்ப முடிந்த கொள்கை. தொல்காப்பியத்துள் என்மனார் புலவர் என வருதல் கொண்டு தொல்காப்பியத்துக்கு முன்னும் இலக்கண நூல் இருந்தது என்று கொள்ளலாம். ஆயினும், இன்று நமக்குக் கிடைக்கும் பழைமையான இலக்கண நூல் தொல்காப்பியமே என்று கொள்ளுதல் பொருத்தம் உடையதே.

கி.மு. ஐயாயிரத்து ஐநூறு தொடங்கி கி.பி. ஐநூறு வரையில் உள்ள பல்வேறு காலவரையறைகளைத் தொல்காப்பியத்துக்கு உரிய காலம் என்று பன்னூற் புலவர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். தொல்காப்பியத்தின் கால எல்லையை வரைமுறைப்படுத்திக் காட்டுதல் இவண் எடுத்துக் கொண்ட பொருள் அன்று. எனினும் கி.மு ஐநூறுக்கு முற்பட்ட தமிழ் இலக்கண நூல் தொல்காப்பியம் என்று பொதுவிற் கொள்ளலாம்.

தொல்காப்பியம் மூன்று அதிகாரங்களில் இருபத்தேழு இயல்களில் அமைத்துக் காட்டப் பெற்றதாய், தமிழர்களின் வாழ்வியற் கூறுகளை விளக்கும் குறிக்கோளுடையதாய் அமைந்த இலக்கண நூல்.

சிந்தனையாளர்கள் பலவகை. தத்தம் புலமைத் திறத்தின்வழி அவரவர்கள் சிந்திப்பதால் ஒரே நூலைப் பற்றிய பல்வேறு சிந்தனைகள் வெளிப்படுத்தப் பெறும். அவையாவும் வாழ்வியற் சிந்தனைகளாக நின்று மக்கள் வாழ்வியலைச் செம்மைப்படுத்தி முழுமைபெற வைக்கும். அவ்வகையில் தொல்காப்பியம் பற்றி சிந்தனைகள் பல. அவற்றுள் தொல்காப்பியம் பற்றிய தத்துவச் சிந்தனையும் ஒன்று. தத்துவச் சிந்தனையில் மலர்ந்த கொள்கைகளை எடுத்துக் காட்டி நிறைவு செய்தல் இங்கே எடுத்துக் கொண்ட பணியாக அமைகிறது.

இனி, தத்துவம் என்ற சொல்லானது பொருள்தன்மை என்ற பொருளைத் தரும். 'தத்' என்ற சொல்லானது அது என்றும் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட பொருள் என்றும் இருவகைப் பொருள் தரும். ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட பொருளின் தன்மை இது என்று வரையறை செய்தலே தத்துவம் என்ற சொல்லின் பொருள்.

உலகில் காணும் எந்த ஒரு பொருளுக்கும் இரண்டு தன்மைகள் உண்டு. என்றும் மாறாத இயற்கைத் தன்மை ஒன்று உண்டு. மாறிக்கொண்டே இருக்கும் தன்மை ஒன்று உண்டு.

நீரின் இயற்கைத் தன்மையானது குளிர்ச்சி. அது சூடேற்றுங்கால் வெந்நீர் எனப்படுமாயினும் அதற்கு வெம்மையானது

செயற்கையே ஒழிய, இயற்கையன்று. இவ்வாறாக, எடுத்துக் கொண்ட பொருள் எதுவாக இருந்தாலும் அப்பொருளின் இயற்கை, செயற்கைத் தன்மைகளை வரையறை செய்து முடிவு செய்தலே தத்துவத்தின் பணி.

தத்துவம் என்றால் இக்காலத்தில் கடவுளை ஒத்துக் கொள்ளுதல் பற்றிய கொள்கை என்று பொருள் கூறுவது ஒரு தவறான முடிவு. கடவுளும் ஒரு பொருள் என்ற வகையில் அதன் இயற்கை, செயற்கைத் தன்மைகளை ஆய்ந்து வெளிப்படுத்துதல்என்பது தத்துவத்தின் பணியாக அமைகிறது.

இதனைத் திருவள்ளுவர்,

'ஓர்த்து உள்ளம் உள்ளது உணரில் ஒருதலையாப்
பேர்த்து உள்ள வேண்டாப் பிறப்பு' (357)

என்பது கொண்டும் தெளியலாம்.

இனி, பொருட்டண்மையை ஆய்ந்து தெளிந்து உறுதிப் படுத்துதல் வேண்டும் என்ற அடிப்படையில் இருவகை ஆய்வியல் முறைமைகளை (METHODOLOGY) தத்துவம் என்று வரையறை செய்கிறது.

அறிவினால் ஆராய்தல் ஒருவகை. அறிவினால் ஆய்ந்து அறிந்ததை அனுபவத்தினால் அதன் உண்மையை அறிதல் இரண்டாம் வகை. முன்னது பொது. பின்னது உண்மை எனவும் வழங்கப் பெறும். முன்னதைப் பொருட்பாலில் அறிவுடைமையில் வைத்துக் காட்டிய வள்ளுவனார், பின்னதை அறத்துப் பாலில், துறவற இயலில் மெய்யுணர்தல் என்ற அதிகாரத்தில் அமைத்துக் காட்டினார் என உணர்தல் வேண்டும்.

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு' (423)

'எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு' (355)

என இருவகைப்படுத்திக் காட்டுவதன் மூலம் இதனை உணரலாம்.

இனி, தமிழ்த் தத்துவம் என்பதும் இருவகைப் பொருள் நிலையை உளங்கொண்டது.

தொல்காப்பியத்தினுள் வடமொழி போன்ற பிறமொழிச் சிந்தனையாளர்களின் கருத்துகளும் ஆங்காங்கே காணப்படுதலின் அவற்றைத் தவிர்த்துத் தமிழ்மொழிக்கே உரியனவாய், தமிழ்மக்கள் தம் வாழ்வியற் செய்திகளாக மலர்ந்த தத்துவ உண்மைகளை எடுத்து வளர்க்கும் நிலையில் தமிழ்த்தத்துவம் என்று பொருள் காண்பது முதல்வகை.

இனிமையும் நீர்மையும் (சிறந்த குணம்) தமிழ் எனல் ஆகும் என்ற பிங்கலநிகண்டின் அடிப்படையில், தமிழர்தம் வாழ்வியற் குறிக்கோளாய் நின்று, தொல்காப்பியச் சிந்தனையின் மூலம் மலர்ந்த இன்பியற் கொள்கை எனப்பொருள் காண்பது இரண்டாம் வகை.

இரண்டாம் வகையை விளங்கிக் கொள்வதற்கு ஏற்புடையதாக அமைந்த சான்று ஒன்றைக் காணலாம்.

வடக்கேயிருந்து தமிழகம் போந்த சிவயோகியார் தென்தமிழ்நாட்டில் மூலன் உடம்பில் புகுந்தபின் திருமூலராகிறார். மூலன் உடம்பில் தன்னைப் புகச்செய்து இன்பப் பொருளாகிய தன்னைத் துய்க்க வைத்த பெருமானைச் சிறப்பித்துக் கூறும் வகையில்,

'என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே'

என்று கூறியருளினார். அவருக்கு இந்த உணர்வும் இன்பத் துய்ப்பும் தமிழ்நாட்டில் மாடுமேய்ப்பவனாக இருந்த மூலன் உடம்பில் புகுந்த பின்னர்த்தான் கிடைக்கப் பெற்றன.

சிவயோகியார் வடமொழியில் தெளிந்த ஞானம் உடையவர். மந்திரமொழிப் பயிற்சி உடையவர். கூடுவிட்டுக் கூடுபாயும் அளவுக்கு யோகக் கலையில் முதிர்ந்த பயிற்சியும் உடையவர். மூலன் உடம்பில் புகுந்தபின் திருமூலராக எழுந்த அவர் அருளிய வகையில் தமிழையும் வடமொழியையும் சிறிதளவில் ஆய்ந்து காணலாம்.

வேதத்தின் சிறப்பு என்றும் ஆகமத்தின் சிறப்பு என்றும் இருபகுதிகள் கூறி முடித்தபின் இறுதியில் ஒரு திருமந்திரப் பாடலை அமைத்துக் காட்டுகின்றார்.

'அவிழ்க்கின்ற வாறும் அது கட்டுமாறும்
சிமிட்டலைப் பட்டுஉயிர் போகின்ற வாறும்
தமிழ்ச்சொல் வடசொல் எனும் இவ்விரண்டும்
உணர்த்தும் அவனை உணர்தலும் ஆமே' (தி.ம.66)

என்ற திருமந்திரப் பாடலில், தமிழ்ச்சொல் அவனை உணர்த்தும் தன்மையுடையது என்பதும் வடசொல் அவனை உணர்தலுக்குக் கருவியாக அமைவது என்பதும் புலனாகின்றன.

ஆன்மாவின் அகத்தே நின்ற (அனுபவப் பொருளாக நின்று) இறைவனை உணர்த்தும் தன்மையுடையது தமிழ் என்பதும், புறத்தே நின்று அவனை இன்னான் என்று அறிவினால் ஆராய்ந்து உணர்வதற்குக் கருவியாய் நிற்பது வடசொல் என்பதும், திருமூலர் கருத்தாய் அமைகின்றன.

ஒருபொருளை அறிந்தபின், அறிந்த அப்பொருளை அடைந்து இன்பம் துய்ப்பது ஒருவகை.

ஒருபொருளைத் துய்த்து உணர்ந்த பின்னர், துய்த்ததன் அடிப்படையில் இது இவ்வாறு இருந்தது என வெளியே சொல்லி இன்புறுவது இரண்டாவது வகை.

தமிழானது முதலில் இறைவனை இன்பப் பொருளாகத் துய்த்து இன்புறுவதற்குத் துணையாய் நின்று, பின்னர் அவ்வின்பத்தைப் பிறர்க்கு எடுத்துரைப்பதாயிற்று.

வடசொல்லானது அவ்வாறின்றி, இறைவனை அறிந்தபின்னர் துய்ப்பதற்கு உதவும் கருவியாயிற்று.

தமிழ்ச்சொல், வடசொல் என்ற இரண்டும் ஒத்த உரிமையன என்றாலும் இறைவனை அன்புருவாய் நின்று, அகத்தே துய்த்து இன்புறுதலை முதன்மைத்தாகக் கொண்டமையின் செந்தமிழ் சிவணிய நிலத்தைத் தமிழ்நாடு என்றும் தமிழ் என்பது இன்ப அனுபவம் என நின்றது என்றும் பின்னர் அது அவ்வின்பம்

வெளிப்பாடாக நின்ற மொழிக்கு ஆகுபெயராக வந்தது என்றும் கொள்ளுதல் திருமூலர் கருத்தினின்றும் பிற வழக்காறுகளிலிருந்தும் உணரப் பெறும் செய்திகளாகும்.

இக்கருத்தை மேலும் விளக்கும் முறையானே திருமூலர், ஆறாந் தந்திரத்தில் அருளுடையமையின் ஞானம் வருதல் என்ற தலைப்பில்,

'தமிழ் மண்டலம் ஐந்தும் தாவிய ஞானம்
உமிழ்வது போல உலகார் திரிவார்
அவிழும் மனமும் ஆதி அறிவும்
தமிழ் மண்டலம் ஐந்தன் தத்துவமாமே' *(1646)*

என்ற பாடலை அருளிச் செய்கின்றார். இறையின்பத்தை ஐவகைத் திணை நிலைகளில் நின்று நுகர்ந்த அனுபவ நிலைகளும் அதன்பின் பெற்ற முதன்மை அறிவும் (முதன்மை அனுபவ நிலையாற் பெற்ற முதன்மை அறிவும்) தமிழ் மண்டலத்தின் மெய்ப்பொருளியல் துணிபுகளாக அமைந்துள்ளன என்று கூறுகின்றார் திருமூலர்.

தமிழ்மண்டலம் ஐந்து என்பதற்கு, சேர,சோழ, பாண்டிய, கொங்கு, தொண்டை என்ற ஐந்து மண்டலம் என இக்காலத்தே பொருள் கொள்ளுவர்.

ஆன்மாவுக்கு ஐவகையான அனுபவ உடம்புகள் உண்டு என மெய்ப்பொருளியலாளர் கூறுப. அவற்றையெல்லாம் ஈண்டு விரிக்கிற் பெருகும்.

இதுகாறும் எடுத்துக் கூறியவற்றால், தொல்காப்பியம் என்ற மூத்த தமிழ் இலக்கண நூலைப் பல்வேறு சிந்தனையாளர்கள் அணுகியுள்ளனர். அவர்களுள் தத்துவச் சிந்தனையாளர்கள் அணுகிய நிலையில் வெளிப்பட்ட கருத்துகள் பலவுள. அவற்றுள் பிறமொழிகளிலிருந்து வந்தேறிய கருத்துகளை நீக்கி, தமிழ்ப்புலம்சார் மக்களின் வாழ்வியற் சிந்தனைகளாக அமைந்த மெய்ப்பொருளியற் கருத்துகள் இங்கே விளக்கப் பெறுகின்றன என்பதே இத்தலைப்பைப் பற்றிய விளக்கமாகக் கொள்ளுதல் வேண்டும்.

தமிழ்த்தத்துவம் என்று கொண்டதால் தமிழர்களின் வாழ்வியற் குறிக்கோள் இன்பத்துய்ப்பே எனக் கொள்வதும் இத்தலைப்பினாற் போந்த பொருள் எனக் கொள்ளலாம்.

தொல்காப்பியத்திற் காணப்பெறும் மெய்ப்பொருளியற் சிந்தனைகள் அனைத்தையும் எடுத்துக் கூறப் புகின், அது அகன்று விரிந்த பெருநூலாய் முடியும் ஆதலின், இயன்ற வகையில், சில இன்றியமையாக் கருத்துகளை மட்டும் எடுத்துக் காட்டி நிறைவு செய்தல் கடமையாகின்றது.

தொல்காப்பியத்துள் வரையறை செய்து உணர்த்தப் பெற்ற மூன்று அதிகாரங்களினுள்ளும் சில எடுத்துக்காட்டுகளை எடுத்துக்காட்டி இச்சிந்தனையை நிறைவு செய்யலாம்.

இங்கே எடுத்துக்காட்டப் பெற்றவை மட்டுமே தொல்காப்பியத்தினுள் அமைந்த தத்துவச் சிந்தனைகள் என்று முடிவு செய்து விடுதல் கூடாது. மேலும் பலவுள எனக்கொள்ளுதல் நல்லறிஞர்தம் கடனாகும்.

எழுத்ததிகாரச் சிந்தனையில் ஆய்தம்

> 'எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தால்
> மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும் - மொழித்திறத்தின்
> முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
> கட்டறுத்து வீடு பெறும்'

என்பது ஒரு பழம்பாடல். நன்னூற் காண்டிகையுரையினுள் ஆறுமுக நாவலர் எடுத்துக் காட்டிய பாடல்.

மொழிதெரிந்தவர்கள் எல்லாருமே எழுத்தைத் தெரிந்தவர்கள் தாம். எழுத்தை அறிந்தால் இழிதகைமை தீரும் என்பது மேலே குறிப்பிடப்பெற்ற பாடலின் பொதுக்கருத்தை நாம் உணர முடிகிறது. ஆனால், அதனுள் அமைந்து கிடக்கும் களஞ்சியக் கருத்தைத் தெள்ளிதின் உணர்தல் இயலாததாக ஆகிவிடுகிறது. என்றாலும் தமிழ்நெடுங்கணக்கில் உள்ள ஏதேனும் ஓர் எழுத்தின் உட்பொருளையாவது நாம் ஓரளவு உணர்ந்து கொள்ளுதல் இம்மைக்கும் மறுமைக்கும் பயன்தரத் தக்கதாக அமையும் என்று கொள்ளலாம்.

தொல்காப்பியத்தின் முதல் அதிகாரம் எழுத்ததிகாரம். எழுத்ததிகாரத்தினுள் முதல் இயல் நூன்மரபு. நூன்மரபின் முதல் நூற்பாவானது,

'எழுத்தெனப் படுப
அகரமுதல் னகர இறுவாய்
முப்பஃ தென்ப
சார்ந்து வரல் மரபின் மூன்றலங் கடையே'

என்பது.

'அவைதாம்,
குற்றியலிகரம், குற்றியலுகரம்
ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோரன்ன'

என்பது இரண்டாம் நூற்பா.

எழுத்து என்று சொல்லப்பெறும் தகுதியுடையவை மொத்தம் முப்பதுதாம் என்பது முதற்கருத்து. சார்ந்து வரும் தன்மையுடைய மூன்று எழுத்துகள் உள. அவற்றைச் சேர்க்காத வகையில் எழுத்துகள் முப்பதே.

எழுத்துகளே ஆனாலுமம அவை மூன்றும் தனித்து வராமல் சார்ந்தே வருவன ஆதலின் அம்மூன்று எழுத்துகளையும் தனியே பிரித்து ஓதினராயிற்று என்பது விளக்கம்.

சார்ந்து வரல் ஆம் எழுத்து மூன்று என்று தொல்காப்பியர் கொண்டதால் அகரமுதல் னகர இறுதிவரை உள்ள முப்பது எழுத்துகளையும் முதல் எழுத்துகள் எனக் கொண்டார் நன்னூலார்.

'உயிரும் உடம்புமாம் முப்பதும் முதலே'

என்பது நன்னூல் நூற்பா.

தொல்காப்பியர் கொள்கைப்படி, சார்பெழுத்துகள் அல்லது சார்ந்து வரும் நிலையினவாய எழுத்துகள் மூன்றுதாம். அவை குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற முப்பாற்புள்ளி எழுத்து என்ற மூன்றுமே.

இகரமும் உகரமும் உயிரெழுத்துகளே. அவை தத்தம் மாத்திரையில் குறுகி ஒலிக்கும்போது, முறையே குற்றியலிகரம், குற்றியலுகரம் என்ற பெயரைப் பெறுகின்றன. இகரமும் உகரமும் முதல் எழுத்துகளே. அவை மொழியில் மாத்திரை குறைந்து ஒலிக்கும் காலத்தில் சார்பெழுத்துக்களாகின்றன. உயிர் என்ற இனத்தில் முதல் எழுத்துகளாக நின்ற இகரமும் உகரமும் மாத்திரைக் குறைவால் சார்பு எழுத்துகள் என்ற நிலையைப் பெறுகின்றன.

இகர, உகரத்துக்குரிய இலக்கணம் ஆய்தத்துக்குப் பொருந்துவதாக இல்லை. எந்த இடத்தும் ஆய்தம் தனித்து வருதல் இல்லை. தனி எழுத்து எனக் கொள்ளுவதற்குரிய தனித்தன்மை உடையதாக ஆய்த எழுத்து அமையவில்லை.

தனித்து நில்லாமல் மொழியின்கண் மட்டுமே தோன்றித் தம்மை நிலைப்படுத்திக் கொள்ளும் தன்மையுடையதாக ஆய்த எழுத்தின் தன்மை அமைகிறது.

முதலெழுத்துகளின் கணக்கிலோ வரிசையிலோ வராத ஒன்று எப்படிச் சார்பெழுத்தாக அமைய முடியும் என்ற வினாவுக்குத் தொல்காப்பியரிடம் விடை கிடைக்கவில்லை.

மாத்திரை குறையாமல் ஒலிக்கும் தன்மையைக் கொண்டது முதல் எழுத்து என்றும் அதுவே மாத்திரையிற் குறைந்து ஒலிக்குமேயானால் சார்பெழுத்து என்றும் ஓர் இலக்கணத்தை நாம் வகுத்துக் கொண்டு ஆய்த எழுத்தை நோக்குவேமாயானால் அதற்கு இரண்டு தன்மைகளும் உண்டு என்பது தொல்காப்பியத்தின் மூலமாகவே நமக்குக் கிடைக்கின்ற செய்தியாகும்.

தொல்காப்பிய எழுத்ததிகாரத்தின் இரண்டாம் இயலான மொழிமரபின் ஏழாம் நூற்பாவைக் கீழே காணலாம்.

> உருவினும் இசையினும் அருகித் தோன்றும்
> மொழிக்குறிப்பெல்லாம் எழுத்தின் இயலா
> ஆய்தம் அஃகாக் காலையான

என்ற நூற்பாவால் ஆய்தம் அஃகாக் காலையான என வருவதால் ஆய்த எழுத்தானது தன்னுடைய மாத்திரையில் குறையாது

ஒலிக்கும் நிலை ஒன்று உண்டு என்பது கொள்ளக் கிடக்கிறது. அவ்வாறாயின், மாத்திரையிற் குறையாததும் குறைந்தும் ஒலிக்கும் இருபகுதிப்பட்ட நிலைகளும் இகரம், உகரம், ஆய்தம் என்ற மூன்று எழுத்துகளுக்கும் உண்டு என்று கொண்டு விடலாம். எழுத்தின் இயலா ஆய்தம் என இணைத்துப் பொருள் கண்டால் வேறு பல செய்திகள் கிடைக்கும். அங்கே புகுவது இவ்விடத்துக்கு ஏற்புடையதன்று.

ஆய்தம் பற்றித் தொல்காப்பியம கூறும் செய்திகள் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டளவினதாய பவணந்தியாரை உள்ளிட்ட இலக்கணச் சிந்தனையாளர்களுக்குப் பொருந்துவனவாக இல்லை. அவர்களெல்லாம் ஆய்தமும் தனிஓர் எழுத்தெனவே கொண்டு ஆய்தக் குறுக்கத்தையும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

ஆய்தம் என்ற முப்பாற் புள்ளி எழுத்து எங்கே தனித்து நின்று, தான் ஓர் எழுத்து என்பதைப் புலப்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதற்குச் சான்று தர இயலவில்லை.

இனி, அடுத்ததாக எழுந்து நிற்கும் சிக்கல் ஒன்று உண்டு.

ஒலித்தொகுதிதான் எழுத்து என்றாலும் அதனிடம் ஒரு பொருளைக் குறிப்பிடுவதற்குரிய மூலக்கூறு இருக்க வேண்டும் என்று எண்ணியிருக்கிறார் தொல்காப்பியர். மொழியாகும் கூறு. அதுபற்றி விளக்கம் கூறப்புகுந்த தொல்காப்பியர் மெய்யெழுத்துகள் சேர்ந்து நின்று ஒரு பொருளைக் குறித்தல் இயலாது எனக் கருதி, உயிரெழுத்துகளில் நெட்டெழுத்து ஏழுக்கும் அத்தகுதி உண்டு என்று கருதிய நிலையில்,

'நெட்டெழுத்து 'ழே' ஓரெழுத்து ஒரு மொழி' (மொழிமரபு - 10)

என்று கூறி,

'குற்றெழுத்து ஐந்தும் மொழி நிறைபு இலவே' (மொழிமரபு - 11)

என்று கூறுகிறார்.

நெட்டெழுத்தைப் போல் குற்றெழுத்துகளுக்குத் தனித்து நின்று மொழியாகும் நிலை அவ்வளவு நிறைவாக இல்லை என்று கூறி

எடுத்துக்காட்டுகிறார். எனினும் அ,இ,உ,எ,ஒ ஆகியனவற்றுக்குச் சுட்டுப் பொருளையும் வினாப்பொருளையும் குறிக்கும் ஆற்றல் உண்டு என்று குறிப்பிடுகிறார்.

மொழியாகும் தன்மை என்ற மூலக்கூறு ஆய்தத்துக்கு உண்டா? என்ற வினா எழுகிறது. மொழியைத் தோற்றுவிக்கும் ஆற்றல் உயிர் நெட்டெழுத்தைப் போல ஆய்தத்துக்கு இல்லை என்றாலும் மொழிக்குறிப்பு ஆய்தத்துக்கு உண்டு என்பதை ஒப்புக் கொள்கிறார் தொல்காப்பியர்.

'உருவினும் இசையினும் அருகித் தோன்றும்
மொழிக்குறிப்பு எல்லாம் எழுத்தின் இயலா
ஆய்தம் அஃகாக் காலையான'

என்ற மொழிமரபின் 7ஆம் நூற்பாவினாற் பெறலாம்.

இனி, ஆய்தம் புள்ளி எழுத்தா? புள்ளி பெறாத உயிரெழுத்தா? என்ற ஆய்வும் நடந்திருக்கிறது. ஆய்தம் என்ற முப்பாற் புள்ளி என்பதற்கு, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற மூன்று எழுத்துகளுமே புள்ளியியல் எழுத்துகளே என்று கூறிய உரைகாரர்களும் உண்டு.

முப்பாற்புள்ளி என்பது ஆய்தத்தைக் குறிக்க வந்த தொடரே என்பது அதன் வடிவத்தை இன்றுள்ளோர் குறிக்கும் முறையாலும் பிறவற்றாலும் உணரலாம்.

ஆய்தம் என்பது மூன்று புள்ளி வடிவானதாய எழுத்து என்பதே பெரும்பாலான இலக்கண ஆசிரியர்களின் கொள்கை. கிடுகுபடை போன்ற அமைப்புடையது என்றும், அடுப்புக்கூட்டுப் போல அமைந்த எழுத்து என்றும் விளக்கியுள்ளனர்.

ஆய்த எழுத்தை ஒர் எழுத்தெனக் கொண்டு எடுத்தாள்வதில் இருவகை மரபுகள் காணப்பெறுகின்றன.

ஆத்திசூடி அருளிய ஔவையார் அகரத்தை முதலாகத் தொடங்கி அறஞ்செய விரும்பு என்று கூறி ஔவியம் பேசேல், அஃகம் சுருக்கேல் என்று வரிசைப்படுத்துகிறார். இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த அருளாளர் பாம்பன் ஸ்ரீமத்

குமர குருதாச சுவாமிகள் **சண்முக கவசம்** என்ற அரிய பாராயண நூலை அருளியிருக்கிறார். இது உலகளாவிய பெரும்புகழ் கொண்டது. முப்பது பாடல்களைக் கொண்ட இக்கவச நூலில் ஆய்தம் வரிசைப்படுத்தப்படவில்லை. ஆயினும் சுவாமிகள் தாம் இயற்றிய ஞானவாக்கியம் என்ற நூலில் ஆய்த எழுத்தை வரிசைப்படுத்தி 13ஆவது வாக்கியம் அமைத்துள்ளார்.

'அஃ கை லிலாதார் தர்க்கம் இடாரே' என்பதே ஞானவாக்கியம்.

இனி அந்த எழுத்தின் மூலம் நமக்குக் கிடைக்கும் உண்மைதான் என்ன? என்பதை ஓரளவு காணலாம்.

'ஃ' என்பதை ஓர் எழுத்து என்பதையும் அது தமிழ் வழக்குக்கே உரிய எழுத்து என்பதையும் நாம் ஒத்துக்கொள்ள வேண்டும்.

'ஃ' என்ற எழுத்தானது உயிரெழுத்தும் இல்லை, மெய்யெழுத்தும் இல்லை, இரண்டிற்கும் இடையில் நின்ற எழுத்து என்பதே யான் அமைத்துக் கொள்ளும் விளக்கம்.

ஆய்த எழுத்து எனப்பெறும் எழுத்துக்கு மட்டும் வடிவம் அமைக்கப் பெற்றுள்ளது.

கிடுகுபடை என்ற ஆயுதம் போன்றது என்றும், மூன்று புள்ளி வடிவானது என்றும், கூறப் பெற்றுள்ளது.

'முற்காலத்தார் மூன்று புள்ளி வடிவினதாக எழுதப் பெற்ற ஆய்த எழுத்தை இக்காலத்தார் நடுவு வாங்கியிட்டு எழுதுப' என்ற கருத்து விளக்கமும் காணப்பெறுகிறது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக விளங்கிய திருவாளர் பூவராகம் பிள்ளையவர்கள் மூன்று புள்ளியாகத்தான் எழுத வேண்டும் என்பதை வலியுறுத்துவார். புள்ளி அமைத்தால் ∴ பொருள் உண்டு என்பது பொருள். நடுவு வாங்கியிட்டு ஃ எழுதினால், மூன்று பூச்சியங்கள் என வந்து மூன்று பொருள்களும் இல்லை என்பதாக முடியும். ஆய்த எழுத்து என்ற ஓர் எழுத்து உண்டு என்று கொள்வதாக இருந்தால் ∴ என்றுதான் எழுத வேண்டும் என்றும் அதுதான் மரபு என்றும் வலியுறுத்துவர்.

ஆய்தம் என்ற ஒர் எழுத்து உண்டு என்பதையும் அதன் வடிவம் இது என்பதையும் ஏற்றுக் கொண்டு விட்ட பிறகு அதனால் சுட்டப் பெறும் நுண்பொருள் ஏதும் உண்டா? என்பதை இங்கே எடுத்துக்காட்டுதல் நலம் பயக்கும்.

தமிழக மக்களின் வாழ்வியற் கூறுகள், வாழ்வியல் அறங்கள் ஆகிய அனைத்து நிலைகளிலும் ஆய்தம் என்ற முப்புள்ளி எழுத்தின் அடிப்படையில் அனுபவம் புலப்படுத்தப் பெற்றிருக்கின்றது.

சுருங்கக் கூறின், தமிழன் அடையாளம் முப்புள்ளி வடிவினதே அல்லது முப்புள்ளியே என அமைத்துக் கூறிவிடலாம்.

இரண்டு நேர்ப்புள்ளி அமைத்தல் வேண்டும். இரண்டும் தம்மளவில் ஒத்தவை, சமமானவை. மூன்றாவது புள்ளியை இரண்டு புள்ளிகளுக்கும் மேலே, இரண்டன் நடுவில் அமையக் கூடியதாய் அமைத்துக் காட்டுதல் வேண்டும்.

வாழ்வியலில் அனைத்து நிலைகளிலும் இருமைகள் உண்டு. இருமைகள் இரண்டும் எதிர் நிலைகள் உடையவை. வேறுபட்டவை. ஒன்று இருந்தால் இன்னொன்று இருக்கும். ஆனால், அவை இரண்டும் வேறுபட்டவைகளே ஒழிய, ஒன்றை ஒன்று அழித்து விடக்கூடிய முரண்பட்டவைகள் அல்ல. CONTRADICTION அழித்து விடும் முரண் CONTRATIES வேறுபட்டவை. தமிழகத்து வாழ்வியலில் முரண் கிடையாது. ஆனால் வேறுபாடுகள் உண்டு.

வேறுபட்டவை இரண்டும் என்றும் அழியாதவை. ஒன்றுடன் ஒன்று வேறுபட்டவை அவ்வளவே. ஆனால், வேறுபட்ட இருமைகளுக்கு நடுப்பட்டதாய், இரண்டையும் கடந்ததாய் ஒன்று உண்டு. அதுவே உயர்ந்தது. சில எடுத்துக்காட்டுகள்.

முப்புள்ளி எழுத்தில் முதற்புள்ளியானது கொள்கையைக் குறிக்கும். உடனே அதற்கு எதிர்க்கொள்கை உண்டாகும். அது இரண்டாவது புள்ளி. முதற்புள்ளியோடு ஒத்த. சமமானது. அது .. முதற்கொள்கையும் இரண்டாவது கொள்கையும் ஒன்றுடன் ஒன்று முரண்பட்டவை அல்ல. வேறுபட்டவை அவ்வளவே.

ஆண்மை	-	பெண்மை
நன்மை	-	தீமை
மெய்	-	பொய்
கற்கப்படுவோன்	-	கற்போன்
நோதல்	-	தணிதல்
இல்லறம்	-	துறவறம்
நீதி	-	அநீதி

முதலிய வாழ்வியற் கூறுகளை எடுத்துக் காட்டுகளாகக் கொள்ளலாம்.

'இருமைகளுக்கு இடையில் தோன்றி
இருமைகளைக் கடந்ததாய் நிற்பது'

மூன்றாவது புள்ளி. இருமைகளுக்கு இடையில் நின்றாலும் இருமைகளைப் பிரித்துக் காட்டி, இருமைகளின் அனுபவங்களைக் கடந்ததாய் நிற்பது ஒன்று உண்டு என்பதை உணர்த்துவதே மேல் நின்ற மூன்றாவது புள்ளி.

மூன்றாவது புள்ளி என்பது எதிர்நிலை இல்லாதது. எதிர்நிலைகளைக் கடந்தது. இரண்டு எதிர் நிலைகளிலும் அனுபவித்த பின்னர், உணரப் பெறுவது என இலக்கணம் கூறலாம்.

சில எளிய எடுத்துக்காட்டுகள்

வீட்டின் வாயிற்படி. அதனை நிலைப்படி என வழங்குவார்கள். வீட்டின் அகத்தையும் (உள்) புறத்தையும் வேறுபடுத்துவது நிலைப்படி. நிலைப்படியின் தத்துவம் மறக்கப்பட்டபோது, வாயிற்படி வந்து சேர்ந்தது. அகத்தையும் (உள்ளிடம) புறத்தையும் வேறு பிரிக்கும் ஆற்றல் வாய்ந்த நிலைப்படியானது அகமா? புறமா? அகம், புறம் என்ற இரண்டையும் பிரிப்பது அதுதான். அப்பிரிவுகளுக்குக் காரணமானது அதுதான். ஆனால், அது இரண்டற்கும் நடுவில் தன்னைப் புலப்படுத்திக் கொள்ளுகிறது. ஆனால், அது இரண்டையும் கடந்தது.

நெடுஞ்சாலையின் நடுவே மஞ்சள் கோடு. அந்தக் கோடுதான் வலம், இடம் என்ற இரண்டாக அந்தப் பாதையைப் பிரிக்கிறது. ஆனால், அந்தக் கோடு இடமா, வலமா என்றால் இரண்டற்கும் நடுவில் நின்று, இரண்டாகப் பிரிவதற்குக் காரணமாக நின்று, இரண்டையும் கடந்ததாக நின்றது அது. அதுவே முப்பாற் புள்ளியின் அனுபவத் தத்துவம்.

முக்கண்ணன். முக்கண். இடக்கண், வலக்கண் என்பவை இருநிலைகள். சமமானவை. இரண்டற்கும் இடைப்பட்டதாய் இரண்டாகப் பிரிவுபடுவதற்குக் காரணமாய், இரண்டையும் கடந்ததாய் நின்றது மூன்றாவது கண் என உணர்ந்தால் அதுவும் முப்பாற் புள்ளியின் அமைப்புத்தான்.

இல்லறம் - துறவறம் இரண்டும் தத்தம் அளவில் நல்லனவே. இரண்டும் முழுமையானவை அல்ல. இரண்டையும் கடந்த ஓர் நிலை உண்டு. அது நீத்தார் நிலை. திருவள்ளுவர் நீத்தார் பெருமை பேசுகிறார். துறவிகளே நீத்தார் என்று பொருள் கண்டுள்ளார்கள். துறவிகள் வேறு, நீத்தார் வேறு.

அறம் என்ற சொல்லுக்கு அடைமொழி கொடுத்தார் திருவள்ளுவர். இல்லறம் - துறவறம் என. ஒன்றுடன் ஒன்று எதிர்நிலை. இரண்டு அறவாணர்களையும் கடந்தவர் அறவோர். அறவோர் என்பதை அடைமொழி இல்லாமல் குறிப்பிட்டார். அதைச் சுத்தம் என்று தத்துவம் கூறும். இல்லறம், துறவறம் என்ற இரண்டிலும் நின்று வாழ்ந்து பின்னர் அவற்றை நீத்தநிலையில் நின்றவர்களே அறவோர் (நீத்தார்).

நீத்தார் யார் என விளக்க வேண்டுமானால் முப்புள்ளி எழுத்தைக் காட்டித்தான் விளக்க முடியும்.

இருமைகளின் இடையில் உணரப்படுவதாய், இருமைகளைக் கடந்ததாய் அமைந்த ஒன்றை எதிர்நிலை இல்லாதது என்று கொள்ளுதல் தமிழ் வழக்கு. அதன் அடையாளம் முப்புள்ளி எழுத்து.

மெய்-பொய். இவை இரண்டும் எதிர் நிலை உடையவை. மெய் என்று சொன்னதும் பொய் நினைவில் வரும். அவை இரண்டும்

ஒன்றுக்கு ஒன்று எதிர்நிலை உடையவை என்பது பொருள். இரண்டையும் கடந்தது உண்மை. எனவே, உண்மை என்பது மெய், பொய் என்ற இருமையைக் கடந்ததாய் இரண்டன் இடை நின்றதாய் உணரப்படுவது என்று கொள்ளுதல் வேண்டும்.

உண்டு என்றால் இல்லை என்று கூறி, இரண்டும் எதிர்நிலைகள் என்று இன்றைய வழக்கில் எடுத்தாளப் பெறுகின்றன.

இல்லை என்பது உண்டு என்பதற்கு உரிய எதிர்நிலை அன்று. இருப்பது என்பதற்கு உரிய எதிர்நிலைதான் இல்லை என்பது. உண்டு என்பது எதிர்நிலை இல்லாதது. இருப்பது, இல்லாதது என்ற இரண்டற்கும் இடைநின்றதாய் இரண்டையும் கடந்ததாய் விளங்குவதே உண்டு என்பது. அதன் அடையாளமே முப்பாற் புள்ளி எழுத்து.

ஆண்மை - பெண்மை

அறுநான்கு இரட்டி இளமை நல்யாண்டு என நற்கீரர் கூறுமாப் போல ஓர் ஆடவன் நாற்பத்தெட்டியாண்டுகள் தனிநின்று பிரமசரியம் காத்து ஆண்மை என்பதன் உண்மையை அனுபவித்தல் வேண்டும். அவ்வாறே பெண் ஒருத்தியும் அவ்வாறு நின்று பேரிளம்பெண் எனநின்று தன்னுடைய உண்மை நிலையாகிய பெண்மையை அனுபவித்தல் வேண்டும்.

இத்தகு நிலையில் நின்ற இருவரும் ஒருவரோடு ஒருவர் இணைதல் என்பதாக இல்லாமல் தத்தமக்குள் இருக்கும் பெண்மையை ஆணும், ஆண்மையைப் பெண்ணும் துய்த்தல் வேண்டும். இருமைநிலை அனுபவம் பெற்றபின் வரும் உயரிய பண்பே அலி என்பது. ஆண்மை, பெண்மை இரண்டன் அன்மை நிலையே அலி என்பது.

'ஆணானான் பெண்ணானான் அல்லா அலியும் ஆனால்'

எனவும்,

'ஆண்அல்லன் பெண்அல்லன் அல்லா அலியும் அல்லன்'

எனவும் வரும் அருளாளர்களின் திருவாக்குகளை உன்னி உணர்க.

ஆண், பெண், அலி எனல் முப்புள்ளி எழுத்தின் உண்மையே.

ஆண்மையும் பெண்மையும் இருவகை எதிர்நிலைகளேயொழிய, இரண்டும் ஒன்றோடு ஒன்று முரண்பட்டவை எனக் கொண்டு ஒன்றை ஒன்று அழித்துவிடும் நிலையுடையவை என்று கொள்ளுதல் கூடாது.

ஆண்மையில் பெண்மை ஒடுங்குவதும் பெண்மையில் ஆண்மை ஒடுங்குவதும் உண்டு என்ற வகையில் சிவனுடைய தன்மையில் வைத்து உணர்த்திக் காட்டியவர்கள் தமிழகத்து மெய்ப்பொருட் சிந்தனையாளர்கள்.

ஆண்மையும் பெண்மையும் தத்தம் தனிநிலைகளில் நிறைவு பெற்றவைகளோ முழுமை பெற்றவைகளோ அல்ல.

ஆண்மை, பெண்மை என்ற இருமையும் நீத்த - கடந்த நிலை ஒன்று உண்டு. அதற்குப் பெயர் அன்மை - அலி. இரண்டு தன்மையும் அல்லாத தன்மை என்பது பொருள். அப்படி ஒரு பொருள் உண்டு என உணர்ந்து விட்ட நிலையில் தமிழன் அதற்கென ஓர் எழுத்தை அமைத்து, அதன் வடிவத்தையும் அமைத்துக் காட்டினான்.

இரண்டு தன்மைகளை நேர்நிலையில் நிறுத்திக் காட்டி, இரண்டன் அல்லாத தன்மையை இரண்டுக்கும் மேலே அமைத்துக் காட்டி, அந்த நுண்பொருள் தன்மையை விளக்கினான் தமிழன்.

இரண்டு நேர்நிலைத் தன்மைகள், இரண்டன் அன்மைத் தன்மை என்ற மூன்று நிலைகளை விளக்க வந்த எழுத்தே ஆய்தம் என்ற முப்பாற்புள்ளி என உணர்தல் வேண்டும்.

அருளாளர்களின் சான்றுகள் - திருஞானசம்பந்தர்

தமிழக மக்களின் வாழ்வியற் கொள்கைகளின் அடிப்படையாக விளங்கும் ஆய்த எழுத்தின் தத்துவத்தைப் பின்வரும் அருளாளர்களும் எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார்கள்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் விளங்கிய திருஞான சம்பந்தப் பெருமகனார் தாம் அருளிய திருப்பதிகங்களுள் ஒன்று திருஎழுகூற்றிருக்கை. திருஎழுகூற்றிருக்கை என்பது ஒரே பாடல். ஆனால் அது ஓர் பதிகம். மூல இலக்கியம். திருஞான சம்பந்தருக்கு முன்னர் யாரும் பாடியதாகத் தெரியவில்லை.

திருஞானசம்பந்தர் பதிகங்களைத் திருஞானசம்பந்தர் காலத்திலேயே ஓதிப் பாராயணம் செய்யும் வழக்கம் இருந்திருக்கிறது. திருஞானசம்பந்தரின் தந்தையார் சிவபாத இருதயர் தம் திருமகனாராகிய திருஞானசம்பந்தர்தம் திருப்பதிகங்களை முழுமையாகப் பாராயணம் செய்துவிட்டுத்தான் உணவு கொள்வார். அவ்வகையில் சிவபாத இருதயர் அனைத்துப் பதிகங்களையும் படிப்பதால் பலநாள் உணவு கொள்ள முடியாமல் பட்டினி கிடக்க வேண்டியதாயிற்று.

இந்நிலையை உணர்ந்த திருஞானசம்பந்தர், 'நான் இதுநாள் வரையில் பாடியனவும், இப்போது பாடிக்கொண்டிருப்பனவும், இனிமேல் பாட இருப்பனவும் ஆகிய அனைத்துப் பதிகங்களின் உட்கருத்துகளும் இவையே' எனக் கூறிப் பாடிய ஒரு பதிகமே திருஎழுகூற்றிருக்கை.

திருஎழுகூற்றிருக்கையின் நாற்பத்திரண்டாம் வரியானது,

'இருமையின் ஒருமையும்
ஒருமையின் பெருமையும்
மறுஇலா மறை' (முதல் திருமுறை பதிகம் 128)

என அமைந்துள்ளது.

நேர்நேராக நின்று இருமை நிலைகளை ஒத்துக் கொள்ளுதல் வேண்டும். இருமையை நேர்நிறுத்தினால் இருமைகளோடு இணைப்புடையதாய் இருமைகளின் நடுவில் உள்ளதாய் இருமையைக் கடந்ததாய் நின்ற ஒருமை ஒன்று உண்டு. அந்த ஒருமையே பெருமையுடையது. இதுவே குற்றமற்ற மறை என அந்த வரிகளுக்கு விளக்கம் காணுதல் வேண்டும்.

நேர் நேராக நின்ற இருமைகளும் மெய்மைகளே. இரண்டும் என்றும் உள்ளவை. ஆனால், அவை அனைத்துமே நிறைவுபெற்ற முழுமைகள் அல்ல. மேல்நின்ற ஒருமையே நிறைவான முழுமை என விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

முதல் திருமுறையில் திருஞானசம்பந்தர் வலியுறுத்திக் கூறிய, இந்த வாழ்வியற் கொள்கையை, கி.பி. பன்னிரண்டாம்

நூற்றாண்டில் மலர்ந்த இறுதித் திருமுறையாகிய பன்னிரண்டாம் திருமுறையிலும் கண்டு மகிழலாம்.

சேக்கிழார் வாக்கு

சேக்கிழார் பெருமான் தாம் அருளிய திருத்தொண்டர் புராணம் எனப்பெறும் பெரிய புராணத்தில், இறைவனே சுந்தரர் பெருமானுடன் இணைந்து நின்று, தேவாசிரிய மண்டபத்தில் உள்ள அடியவர்களின் பெருமையை எடுத்துக் கூறுவதாக அமைந்த பாடல் கீழே கொடுக்கப் பெற்றுள்ளது.

'பெருமையால் தம்மை ஒப்பார்
பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார்
ஊனம்மேல் ஒன்றும் இல்லார்
அருமையாம் நிலையில் நின்றார்
அன்பினால் இன்பம் ஆர்வார்
இருமையும் கடந்து நின்றார்
இவரை நீ அடைவாய் என்று'

என்பது 342ஆம் பாடல்.

'இருமையும் கடந்து நின்றார்
ஒருமையால் உலகை வெல்வார்'

என்ற இருவரிக் கருத்துகளையும் இணைத்துச் சிந்தித்தல் வேண்டும்.

மேலும் ஒரு கருத்தையும் இணைத்துச் சிந்திக்கலாம்.

திருக்கோயிலினுள் கருவறையில் இருக்கும் சிவலிங்கத்தின் உண்மையை உணர்த்த வந்த சேக்கிழார், குறிப்பிட்டுக் காட்டி விளக்கும் கருத்தையும் இணைத்துக் காணலாம்.

கண்ணுக்குப் புலனாவது அல்லது காட்சிப் படுவது உருவம். கண்ணுக்குப் புலனாகாதது அல்லது காட்சிக்கு உட்படாதாதது அருவம். திருக்கோயிலினுள் கருவறையில் இருக்கும் சிவலிங்கத்தை உருஅரு அல்லது அருஉரு என்னும் வழக்கும் உண்டு. அருஉருவம் எனக்கூறி விளக்குவதுண்டு. ஆனால், சேக்கிழார் பெருந்தகை,

சிவலிங்கம் என்பது அருவம், உருவம் ஆகிய இரண்டும் அன்று, இரண்டன் இணைப்பும் அன்று. இரண்டற்கும் மூல முதற்காரணமாக இருப்பது என்ற கருத்தை எடுத்துக் காட்டுகின்றார்.

'காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீள்நாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்'

என்பது, சாக்கிய நாயனார் புராணத்தின் எட்டாம் பாடல். (3648) அருவம், உருவம் இரண்டையும் கடந்ததாய் இரண்டற்கும் அப்பாற்பட்டதாய், இரண்டற்கும் காரணமாய் நின்ற குறி என்பதே சிவலிங்கத்துக்குச் சேக்கிழார் பெருமான் தரும் விளக்கம்.

அதே பாடலின் அடுத்த இரண்டு வரிகளில் ஓர் உண்மையைச் சேக்கிழார் புலப்படுத்துகின்றார்.

'நாணாது நேடியமால் நான்முகனும் காண நடுச்
சேணாரும் தழற்பிழம்பாய்த் தோன்றியது தெளிந்தாராய்'

என்பனவே அப்பாடலின் பின்னிரண்டு வரிகள்.

நடுந்தழற் பிழம்பு என்பதன் குறிப்பை ஓர்ந்து உணர்தல் வேண்டும். உரு, அரு என்ற இரண்டற்கும் இடையில் தோன்றிய ஒளியை நடுச்சோதி என்று குறிப்பிட்டுக் காட்டுகின்றார்.

மேலும் பல சான்றுகளை எடுத்துக் காட்டி விளக்கலாம். விரிவஞ்சி விடுத்தாம்.

எனவே, ஆய்தம் என்ற முப்பாற்புள்ளி எழுத்தானது தமிழர்தம் வாழ்வியற் கூறுகள் எல்லாவற்றிலும் அடிப்படைக் குறிக்கோள் வட்டமாக நின்ற உயிரோட்டக் கொள்கைக்குறியே என்று உணர்ந்து தெளிந்து தெரிதல் சான்றோர் கடனாம்.

தொல்காப்பியச் சொல்லதிகாரச் சிந்தனை- பெயரும் வினையும்

இனி, தொல்காப்பியச் சிந்தனையில் சொல்லதிகாரப் பகுதியில் அமைந்துள்ள ஒரு கருத்தினை எடுத்துக்காட்டி அதன்கண் அமைந்துள்ள தமிழ்த் தத்துவ அமைப்பைச் சிந்திக்கலாம்.

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'

என்பது 640ஆம் நூற்பா.

தொல்காப்பியம் மூன்று அதிகாரங்களைக் கொண்டது. அவற்றுள் இடைநின்றது சொல்லதிகாரம். சொல்லதிகாரம் ஒன்பது இயல்களைக் கொண்டது. அவற்றுள் இடைநின்றது பெயரியல். பெயரியலின் முதல் நூற்பாவே மேலே காட்டப் பெற்றது.

ஒலித்தொகுதிகள்தாம் எழுத்து என்றாலும், அது மொழியாக ஆவதற்குரிய தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும். மொழியாக ஆதல் என்பது பொருளைக் குறிக்கும் தகுதியே. அதன் அடிப்படையில் எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என உணர்த்தினாராதல் வேண்டும்.

எழுத்துகள் மொழியாக ஆக்கம் பெறும் முறைமையைத்தான் கிளவியாக்கம் என்ற முதல் இயலில் அமைத்துக் காட்டினார்.

இனி, சொற்களை வகைமைப்படுத்தும்போது பெயர், வினை, இடை, உரி என நான்காகப் பொதுமையிற் பிரிவுபடுத்திக் கூறாமையால் பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் த்னியே எடுத்துக் கூறி, இடைச்சொல், உரிச்சொல் என்ற இரண்டையும் பெயர், வினை ஆகியனவற்றின் வழியில் நின்று தோன்றும் சொற்கள் என்று வேறுபடுத்திக் காட்டினார்.

எழுத்துகளில் முதல் எழுத்துகள் எனப் பிரித்து முதன்மைப்படுத்திக் கூறி, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற மூன்றையும் சார்ந்து வரும் எழுத்துகள் எனக் குறிப்பிட்டது போலவே, சொற்களிலும் பெயரும் வினையும் முதன்மை உடையன என்றும் இடையும் உரியும் சார்பியல் நிலையில் வருவன என்றும் அமைத்துக் காட்டினார்.

பெயர்ச்சொல், வினைச்சொல் என்ற முதன்மைச் சொற்களெல்லாம் என்ன காரணம் பற்றி அவ்வாறு அமைந்தன என்ற விளக்கத்தைத் தொல்காப்பியர் எடுத்துக் கொள்ளவில்லை.

ஒருபொருளைச் சுட்டும் தன்மையை உடைய சொற்களையெல்லாம் பெயர்ச்சொற்கள் என்றும், காலத்துடன் இணைந்து தோன்றி, வேற்றுமையை ஏற்றுக் கொள்ளாதன எல்லாம் வினை என்றும் கூறும் கருத்துடையவர் தொல்காப்பியர் என்று கொள்ளலாம்.

பெயர்ச்சொல், வினைச்சொல் என்பனவற்றின் உள்ளீடாக அமைந்த மெய்ப்பொருளியற் கொள்கைகளை முன்னரே பல பேராசிரியர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள். ஆதலின் அவற்றையே எடுத்தி எழுதி விளக்கும் முறையை இங்கே அமைத்துக் கொள்ளவில்லை.

பெயர்வதற்கு உரியது பெயர் எனப் பெயர்ச் சொல் அமைந்ததன் காரணத்தை அமைத்துக் கொள்ளலாம். வேற்றுமை உருபுகள் போன்றவற்றை அமைத்து அப்பொருளைச் செயற்படுபொருள் கருவிப்பொருள் முதலியவாக மாற்றினால் மாறுவதற்குரியதாக அப்பெயர்ச்சொல் அமைகின்ற காரணத்தினால் அத்தகைய சொற்களைப் பெயர்ச்சொல் என முதன்முதலில் பிரித்திருக்கலாம்.

பெயர்வதற்கு உரியதைப் பெயர் என்று கூறினாற்போன்று புடைபெயர்வதை - மாற்றம் உறுதலாகிய செயற்பாட்டினை வினை என்று கூறினார்கள் எனக் கொள்ளலாம்.

பெயர்வதற்குரியது எதுவோ அதனிடத்திலேயேதான் புடைப்பெயர்ச்சியைக் காண முடியும் என்று கூறியதன் கருத்தானது புடைப்பெயர்ச்சியைத் தனித்துக் காணமுடியாது பெயர்வதற்குரிய பொருளின் மூலமாகத்தான் காணமுடியும் என்ற கருத்தில்தான் என்று இலக்கணம் வகுக்கப் பெற்றது என்று கொள்ளலாம்.

பெயர்வதற்குரியதாக இருந்து, புடைபெயர்ச்சியைத் தன்மூலம் காட்டுவதற்கு உரியதாக அக்காலத்து மக்கள் வாழ்க்கையில் பெரிதும் பயிற்சியில் இருந்த வில்லை எடுத்தாண்டிருக்கலாம். புடைபெயர்வதற்கு உரியது வில். அந்தவகையில் அது பெயர்ச்சொல். அதுவே காலம் வரும்போது வளைவதற்கு உரியது என எடுத்துக்காட்டுவதன் மூலம் வில் என்ற சொல்லை எடுத்தாண்டார்கள். அதன்மூலம் வினை என்ற சொல் உருவாகியிருக்கலாம். ஆனால், வேற்றுமை கொள்ளாது என்பதற்கு உருபேற்காது என்று உரை கொண்டது வழக்கத்தில் அமைந்த இலக்கணம் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், முதலில் தோற்றம் பெறும்போது புடைபெயர்ச்சியைத் தனித்து விளக்கிக்

காட்ட முடியாது. புடைபெயர்வதற்கு ஏற்ற பொருளின் மூலமாகத்தான் புடைபெயர்ச்சியை (அ) வினையைக் காட்ட வேண்டும் என்ற அடிப்படைப் பொருளில்தான் வேற்றுமை கொள்ளாது என்ற இலக்கணம் உண்டாகியிருத்தல் வேண்டும். இது மேலும் ஆராய்வதற்குரியது.

ஒலித்தோற்றமும் பொருள்தோற்றமும்

உலகில் அனைவராலும் காணப்பெறும் பொருள்கள் அனைத்திற்கும் சொற்கள் உண்டு. உலகில் காணப்பெறும் அனைத்துப் பொருள்களின் தோற்றத்தினை நாம் கணித்துக் கூறுவமேயானால் முதலில் தோன்றும் வினா ஒன்று உண்டு.

ஒளிகளின் தொகுதிகளாகிய சொல்தோன்றிய பின்னர் பொருள் தோன்றுகின்றதா? பொருள் தோன்றிய பின்னர் அதைக் குறிப்பிடுவதற்கேற்ற சொல் தோன்றுகிறதா? என்பதே அவ்வினா.

மொழி ஆராய்ச்சியாளர்களும் வரலாற்றாராய்ச்சியாளர்களும் மேலே கூறப்பெற்ற இருவகைக் கோட்பாடுகளையும் ஆதரித்திருக்கிறார்கள்.

ஆயினும், புதிய கண்டுபிடிப்புகள் வருகின்ற காலத்தில் பொருளைக் கண்டுபிடித்தபின் அதற்கு என்ன பெயர் வைப்பது என்பது பற்றிய ஆய்வு நடைபெறுகிறது. இவ்வகையில் பொருள் தோற்றமே முன்னது என்ற கொள்கையை வலியுறுத்துபவர்கள் உளர்.

இவ்வகை ஆய்வில் தொல்காப்பியர் கருத்தென்ன? என வினவுமேயானால், சொல்லின் தோற்றமே முதலில் அமைகிறது. அதை ஒட்டியே பொருள் தோற்றம் அமைகிறது என்ற கருத்துடையவரே தொல்காப்பியர் என்று கொள்ளலாம்.

எல்லாப் பொருளும் சொல்லுடையனவே என நூற்பாவை அமைக்காமல்,

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'

என அமைத்திருப்பதன் மூலம், தொல்காப்பியனார் சொல்லை முதன்மைப்படுத்துகிறார் என்று கொள்ளலாம்.

தொல்காப்பியப் பெயரியலின் இரண்டாம் நூற்பாவானது,

'பொருண்மை தெரிதலும் சொன்மை புரிதலும்
சொல்லின் ஆகும் என்மனார் புலவர்'

என்பது. இந்நூற்பாவின் தொடக்கமும் கூட.

'சொன்மை தெரிதலும் பொருண்மை தெரிதலும்
சொல்லின் ஆகும் என்மனார் புலவர்'

என்றிருக்க வேண்டும் என்று கருதியவரும் உண்டு.

சொல்லானது தன்னை ஒரு சொல் என்று புலப்படுத்திக் கொள்ளும். பின்னரே அது பொருளை உணர்த்தும் என்பதாகக் கொள்ளுதல் வேண்டும்.

இனி, தத்துவ இயலார் நோக்கில் இச்செய்தியை அணுகிப் பார்க்கலாம்.

ஒலிதான் பொருளுடைய அடிப்படைக் கட்டமைப்பாக அமைகிறது. ஒரு கட்டிடத்தின் வரைபடம் கோடுகளாக அமைவதுபோல, ஒலிக்கற்றைகள்தாம் ஒரு பொருளின் உள்ளமைப்பாக உருவாகிறது.

ஓம் என்ற ஒலியமைப்பு உள்ளீடாக நிற்க, அதன் அடிப்படையில் யானை உருவம் அமைதல் போல அனைத்துப் பொருள்களுக்கும் மூலக் கட்டமைப்பாக அமைவது ஒலியே.

மனித உடலின் அடிப்படைக் கட்டமைப்பானது, 'நமசிவய' என்ற ஒலிகளின் அமைப்பாக அமைகிறது. உலகில் காணப்பெறும் பொருள்கள் அனைத்தினுக்கும் மூலமாக ஒலிக்கட்டமைப்புத்தான் அமைகிறது. அத்தகைய மூல ஒலிக்கட்டமைப்பின் அடிப்படையில் தான் அப்பொருளின் பெயர் அமைந்திருத்தல் வேண்டும். ஆனால், நாம் அந்தப் பொருளின் புடைபெயர்ச்சி, தன்மை ஆகியவற்றை உணர்ந்து அவற்றின் அடிப்படையில் அப்பொருளுக்குப் பெயர் அமைக்கின்றோம். பல பொருள்களுக்கு அப்படிப்பட்ட அடிப்படை ஒலிக் கட்டமைப்பானது நமக்குத் தெரியாமையினால் நமக்குத் தோன்றிய சொல்லைப் பெயராக அமைக்கின்றோம். சில பெயர்ச் சொற்கள் பொருள்களைக் குறித்தாலும் அடிப்படைக் காரணம்

தெரியாமையினால் அவற்றை இடுகுறி என்றே அழைத்து வருகிறோம்.

மனித உடலில் குறிப்பிட்ட சில நரம்பு மண்டலங்களைத் தொடுவதன்மூலம் மனித உறுப்புகளை அசைய வைத்தல் போல, குறிப்பிட்ட ஒலி மையங்கள் மூலம் உடம்பில் உள்ள உறுப்புகளை அசைய வைக்க முடியும் என்று சித்த மருத்துவ நூல்கள் குறிப்பிடுகின்றன.

மந்திர நூல்களில் காணப்பெறும் பீஜ எழுத்துகள் இவ்வாறு அமைக்கப் பெற்றனவே.

எழுத்து வடிவம் அமைவதற்கு முன்னால் எண் வடிவம் அமைகிறது என்றும், ஒரே பொருளை எண்ணாலும் எழுத்தாலும் உணர வேண்டும் என்ற கருத்து முற்காலத்தே இருந்தது என்றும் திருமுறைகளாலும் வள்ளலார் தம் எழுத்துகளாலும் உணர முடிகின்றது.

ஒரே பொருளை எண்ணாலும் எழுத்தாலும் உணர வேண்டும் என்பதாக இருந்த கலை இப்போது பயிற்சியில் இல்லை என்று வள்ளலாரே குறிப்பிட்டிருக்கின்றார். திருமுறைகளில்,

> 'எண்ணானான் எழுத்தானான் எண்ணும்
> எழுத்தும் ஆனான்'

என்ற வாக்குகள் வருகின்றன. 'எண்' என்பதற்குக் கணக்கு என்று நாம் பொதுவாகப் பொருள் கொண்டு விட்டோம்.

ஒலித்தனியன்கள் எண் அமைப்பில் இணைந்து பின்னர் எழுத்தாகின்றன. எழுத்துகள் தனித்தும் தொடர்ந்தும் பொருள் தருகின்றன எனக் கொள்ளுதல் வேண்டும்.

பாசிபடு குட்டத்தினுள் நாம் இட்ட கல்லானது ஆழ்ந்து ஆழ்ந்து செல்லுமேயன்றி, வரையறைப்படுத்து ஆய்வியல் வகையில் உணர்ந்து, உணர்த்துமாறில்லை என்பதே முடிவு.

இடைச்சொல் பற்றிய சிந்தனை

(புடை) பெயர்வதற்கு உரியது பெயர்

புடைபெயர்ச்சியை உணர்த்துவது வினை

என்ற வரையறைகளை மட்டும் பெயர்ச்சொல், வினைச்சொல் என்ற இரண்டற்கும் உரிய விளக்கம் என எடுத்துக் கொண்டு, இடைச்சொல், உரிச்சொல் ஆகியனவற்றுக்குரிய மெய்ப்பொருளிய லாளர்கள் கொள்கைகளை ஓரளவு எடுத்துக்காட்டி, சொல்லதிகாரப் பிரிவை நிறைவு செய்யலாம்.

இடைச்சொல்லின் இலக்கணத்தைக் கீழ்வருமாறு தொல்காப்பியர் எடுத்துக் காட்டுகிறார்.

'இடையெனப் படுப பெயரொடும் வினையொடும்
நடைபெற்றியலும் தமக்கு இயல்பிலவே'

என்பது தொல்காப்பியம், சொல்லதிகாரம், இடையியல், முதல் நூற்பா. (734)

இடைச்சொற்களெல்லாம் தமக்கெனத் தனித்த நடை இல்லையென்றாலும், பெயரொடும் வினையொடும் இணைந்து நடைபயிலும் என்பதே தொல்காப்பியர் கூறும் இலக்கணம்.

இடைச்சொற்களெல்லாம் ஏழு வகைகளில் நின்று பணி செய்கின்றன என்பது தொல்காப்பியக் கோட்பாடு.

இடைநிற்றல் ஏன்? புடைப்பெயர்ச்சிக்கு உரியதாக இருக்கும் பொருளைக் காலத்தோடும் பிறவற்றோடும் இணைந்து நின்று புடைபெயர்ச்சிப்படுத்துதல் வேண்டும். புடைபெயர்ச்சிப் படுத்தினால்தான் அப்பொருளின் உண்மை ஆற்றல் வெளிப்படும்.

புடைபெயர்வதற்குரியவன் மனிதன். அவன் புடைபெயர்தல் வேண்டும். செயற்படுதல் வேண்டும். செயற்படாமலேயே இருப்பானாயின் அவன் செத்து விடுவான். செயற்படச் செயற்படத்தான் அவனுள் மறைந்து நிற்கும் ஆற்றல் வெளிப்படும்.

மனிதனிடம் மறைந்திருக்கும் ஆற்றல்கள் வெளிப்படுகின்ற காலத்தில் அவனிடமிருந்து அறுபத்து நான்கும் அதற்கும் மேற்பட்ட கலைகள் வெளிப்படும். கலைகள் வெளிப்படும்போது மனிதனும் தன் செயல்திறனை மேலும் மேலும் வெளிப்படுத்த முயற்சிக்கிறான்.

மனிதன் தன்னிடத்தில் அமைந்துள்ள பல்வேறு திறமைகளை வெளிப்படுத்திக் கொள்ளவும் வளர்த்துக் கொள்ளவும் உதவுவது அவன் மேற்கொள்ளும் செயல் முறைகளே.

'நடந்தால் நாடெல்லாம் உறவு, படுத்தால் பாயும் பகை' என்ற முதுமொழிக்கிணங்க மனிதன் செயற்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும். மனிதன் செயற்பட, செயற்பட அவனிடம் மறைந்திருக்கும் பல்வேறு வகையான திறமைகள் வெளிப்படும். மரம் முதல் மனிதன் வரையில் பல்வேறு வகையான உயிரினங்களும் தாம் பெற்ற உடம்பினைக் கருவியாகக் கொண்டு செயற்பட வேண்டும் என்பதே இயற்கையின் நியதி. மனித இனத்தைச் செயற்படுத்தித் திறமைகளை வெளிக்கொணர வைப்பது என்ற ஒரு பெரிய திட்டப் பணியில் முதன்மைப் பங்கு அல்லது முழுமைப் பங்கினை வகிப்பது இடைச் சொல் என்றால் மிகையாகாது.

மனித வாழ்க்கையில் இயல், இசை, கூத்து எனவும் அறம், பொருள், இன்பம் எனவும் மும்மூன்றாகப் பிரிக்கப் பெற்ற கொள்கைகள் தாம் அமைந்திருந்தன. இற்றை வாழ்க்கை நிலையில் ஒவ்வொரு பிரிவிலும் பல்வேறு கிளைகள் தோன்றிவிட்டன. ஐந்திலக்கணங்கள் போதா என அறுவகை இலக்கணம் வேண்டினார் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள். அவ்வாறே, 'அறிவியல் தமிழ்' என்ற பிரிவு தோன்றியது. அறிவியல் தமிழை முன்னுள்ள முத்தமிழின் கிளை என்று கூறலாகாது. அது ஒரு தனிமரமே என்று தனிக்கொடி நாட்டும் ஆராய்ச்சியாளர் பலர் உள்ளனர். இத்துணைப் பிரிவுகளும் விரிவுகளும் எங்கே இருந்தன? மனிதனிடத்தில்.

'சுடச்சுடரும் பொன்போல்' என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப, பொன்னின் ஒளி சிறப்பதற்குச் சூடு காரணமாக இருப்பது போல், மனிதனிடத்தில் உள்ள பல்வேறு கலைத்திறனும் தோன்றுவதற்கு 'இடைச்சொல்' ஒரு காரணம் என்பதை ஒத்துக் கொள்ளுதல் இல்லை. ஏனென்றால், இடைச்சொல்லானது வாக்கியத்தை அமைப்பதற்குரிய இலக்கண உத்தியாக நின்று விடுகிறது என்று ஒதுக்கித் தள்ளிவிட்டமையே காரணம். செயற்படுவதற்குரியவர்களை இடைநின்று செயற்படுத்தும் ஆற்றல் உடைய ஓர் இனம் எல்லா நாட்டிலும் உண்டு. அதுதான் ஆசிரிய இனம். இவன் இன்னவகையில் செயல்படுவான் என உணர்ந்து, அவனுக்கு உணர்த்தி அவனைச்

செயற்படுத்திய பெருமை இடைநின்றான் எனப் பெறும் ஒருவனுக்கே உண்டு. அவனை ஆசிரியன் என அழைக்கலாம். குரு என அழைக்கலாம். மகாபாரதத்தில் இடையனாக நின்ற கண்ணனுக்கு என்ன பணி?

இடைச்சொல்லின் பணி ஏற்றுக் கொள்ளப் பெறாவிடினும், அதன் பணியை மறுத்தல் இயலாது.

பெயர்வதற்குரிய ஒரு பொருளை வினைமுதல் எனநிறுத்தியும் பல்வேறு வகைகளில் வேற்றுமைப்படுத்தியும், அப்பொருளையும் சமுதாயத்தையும் பயன்நிலைக்குரியதாக்கியும் பணி செய்வதே இடைச்சொல்லாகும்.

எழுவாய் பற்றிய விளக்கம்

இனி, எழுவாய் பற்றிய ஒரு செய்தியை எடுத்துக்காட்டி, இடைச்சொல்லுக்கும் பெயருக்கும் உள்ள இடைநிலையை மெய்ப்பொருளியலாளர் கூறும் விளக்கத்துடன் விளக்கி நிறைவு செய்யலாம்.

வேற்றுமை எட்டனுள் முதல் வேற்றுமையும் எட்டாம் வேற்றுமையும் ஐயப்பாட்டிற்குரியவைகளே. 'வேற்றுமைதாமே ஏழென மொழி' என்று கூறிய தொல்காப்பியர் எட்டாம் வேற்றுமையாகிய விளிவேற்றுமைக்கு இரண்டாம்நிலை இடத்தையே தருகிறார். அவ்வாறே, முதல் வேற்றுமை எனப்பெறும் எழுவாய் வேற்றுமையை வேற்றுமை எனக் கொள்வதற்குத் தயக்கம் காட்டுவோரும் உளர்.

வேற்றுமையின் பெயர், முறை ஆகியனவற்றை வரிசைப்படுத்திக் கூறும் தொல்காப்பியர்,

'அவைதாம்
பெயர் ஐ, ஒடு, கு
இன், அது, கண், விளி என்னும் ஈற்ற' (தொல், சொல், வேற்- 3)

என்று கூறுகிறார்.

அந்நூற்பாவினுள் 'பெயர்' என்ற சொல்லானது எழுவாய் வேற்றுமையைக் குறிக்கிறது. அடுத்த நூற்பாவானது,

அவற்றுள்,

எழுவாய் வேற்றுமை பெயர் தோன்றும் நிலையே என்று முதல் வேற்றுமையை - பெயர் என மூன்றாம் நூற்பாவில் குறிப்பிட்ட ஒன்றை எழுவாய் வேற்றுமை என்ற பெயரால் சுட்டுகிறது.

உலகில் காணப்பெறும் எந்த ஒரு பொருளுக்கும் மூன்று நிலைகள் உண்டு. பொருளின் இருப்புநிலை, பெயர்வதற்குத் தயாராக நின்ற நிலை, பெயர்ந்து நின்ற நிலை என்பனவே அந்த மூன்று நிலைகள்.

சாத்தனார் என்பவர் ஒரு பேராசிரியர். அவர் காலையில் வீட்டில் இருக்கிறார் அது அவர்தம் இருப்புநிலை. சாத்தனார் பேராசிரியப் பணியை மேற்கொள்வதற்கான சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டு, அதற்கேற்ற உடை முதலியன தரித்துக் கொண்டு தயாராக இருக்கிறார். இதனை, ஆங்கிலத்தில் ரெடி டு ஒர்க் என்றும் தமிழில் ஆயத்தநிலை என்றும் கூறுவர். இந்நிலையில் அவர் இருப்புநிலையைக் கடந்து விட்டார். இன்னும் அவர் ஆசிரியப் பணியை மேற்கொள்ளவில்லை. சாத்தனாரின் இந்த நிலையானது இருப்புநிலைக்கும் ஆசிரியப்பணி நிலைக்கும் இடைப்பட்ட நிலை. இத்தகைய, இடைநிலை நுட்பத்தை விளக்கப் புகுந்த தொல்காப்பியனார்,

'எழுவாய் வேற்றுமை பெயர் தோன்றும் நிலையே'
(549, தொல், சொல், வேற், 4)

என்றார்.

பெயர் தோன்றும் நிலை என்று குறிப்பிட்டதனால் பெயரின் இருப்புநிலை ஒன்று உண்டு என்று கொள்ளுதல் வேண்டும்.

எந்த ஒரு பொருளுக்கும் பல்வேறு திறன்களை, ஆற்றல்களைத் தன்னுள் அடக்கிக் கொண்டு, வாய்ப்பு ஏற்படின் பெயர்வதற்குரிய நிலையில் இருக்கிறது. இதனை இருப்புநிலைப் பொருள் என்று கொள்ளலாம். அப்பொருளானது செயற்படும் நிலை எமக்கு வந்து விட்டபோது செயற்படுவதாக- செயல் மேற்கொள்வதாக அமைகிறது. இந்த இருநிலைகளுக்கும் இடைப்பட்ட நிலை ஒன்று உண்டு. அதுவே ஆயத்தநிலை.

இருப்புநிலையில் பெயர் வினைக்குரிமை தோன்ற - செயற்படுநிலையில் அது செயற்படுபொருள், கருவிப்பொருள், கருத்தாப் பொருள் என வினையினை ஏற்று நிற்கிறது. இரண்டற்கும் இடையில் நின்ற பெயரையே தொல்காப்பியனார் பெயர் தோன்றும் நிலை என்று குறிப்பிட்டுக் காட்டினார்.

இருப்புநிலைக்கும் செயற்படுநிலைக்கும் இடையில் ஒரு பொருள் செயல்புரிவதற்குரிய ஆயத்த நிலையில் இருக்கும். அவ்வாறு ஆயத்தநிலையில் இருக்கும் ஒரு பொருளின் நிலையைத் தெளிவாக மெய்ப்பொருளியலாளர்கள் விளக்கியுள்ளார்கள்.

மெய்ப்பொருளியலாளர்கள் கொள்கையில் உயிர்ப்பொருள் உயிரல் பொருள் என்ற பிரிவுகள் உண்டு. உயிர்க்கும் தன்மையுடையன எல்லாம் உயிர்ப்பொருள். அவற்றுக்கு அறிவு உண்டு. அவற்றை ஆன்மாக்கள் என்றும் வழங்குவர்.

ஓர் ஆன்மாவைச் செயற்படுத்துவதற்குரிய கருவிகள் முப்பத்தைந்து. அவற்றுள் சுத்ததத்துவம் ஐந்து. வித்யாதத்துவம் ஏழு. ஆன்மதத்துவம் இருபத்து நான்கு.

சுத்ததத்துவம் ஐந்தும் ஆன்மாவைச் செயற்படுத்தும் வலிமையுடையன. வித்யா தத்துவம் ஏழும் ஆன்மாவுடன் இணைந்து நிற்கும் கருவிகள். அவை முறையே காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என்பன. அவைகளும் காலம் முதலியவற்றை ஏற்றுக் கொண்டு நிற்கும் ஆன்மாவே புருடன். அவன் தன் கீழுள்ள மாயையுடன் தொடர்பு கொண்டு செயற்பட ஆரம்பிக்கிறான். அந்த மாயையிலிருந்து இருபத்து நான்கு கருவிகள் உண்டாகும். அவற்றையெல்லாம் தன்னிச்சைப்படிச் செயற்படுத்தும் நிலையில் உள்ள ஆன்மாவுக்குத்தான் புருடன் என்று பெயர். ஆன்மாவும் புருடனும் ஒன்றுதான். ஆன்மா என்பது அப்பொருளின் இருப்புநிலை. புருடன் என்பது ஆன்மாவின் செயல்பாட்டுக்கு ஏற்பநிற்கும் ஆயத்த நிலை. ஆன்மாவானது எழுவாயாக, பெயர் தோன்றும் நிலையாக அமைந்தபோது புருடன் எனப்பெறுகிறது.

இக்கருத்தை இங்கே அதிகமாக விரித்துரைக்கில் இலக்கணச் சிந்தையிலிருந்து மாற்றம் பெற்று மெய்ப்பொருட் சிந்தனையாக மாறிவிடும்.

இடைச்சொல்லும் ஒருவகையில் ஆய்த எழுத்தைப் போன்றதுதான்.

பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் தனித்தனியாக நேர்க்கோட்டில் நிறுத்திவிடலாம். பெயரோ, வினையோ ஆற்றலுடையவைதாம். ஆனால், தாமே அவை செயல்படமாட்டா. பெயரானது தானே தன்னுடைய ஆற்றலைச் செயற்படுத்திக் கொள்ள மாட்டாது. வினையானது தானே செயற்படாது. இரண்டையும் இணைத்துச் செயற்படுத்துவது இரண்டையும் கடந்த ஒன்று. அதுதான் மூன்றாவது புள்ளி. மூன்றாவது புள்ளி இல்லையானால் பெயர்வதற்குரிய பெயரும் வளைந்து செயற்படுவதற்குரிய வினையும் தனித்தனியே இருந்தும் பயனில்லை. இக்கருத்தைச் சாங்கிய நூலார் முதன்முதலில் ஆய்ந்து தெளிந்தார்கள். சைவசித்தாந்தக் கொள்கையே அவை எல்லாவற்றிலும் செம்மையுடையதாக இந்நாள்வரையில் அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக அமைந்திருக்கிறது.

இடைச்சொல்லானது ஏழுநிலைகளில் பிரிந்து நின்று பெயர்ப்பொருளை எட்டுவகையாக வேற்றுமைப்படுத்தி, பெயர்ப் பொருளில் உள்ளிருக்கும் அறுபத்து நான்கற்கும் மேற்பட்ட ஆற்றல்களை வெளிக்கொணர்கிறது.

பெயர்ப் பொருளிலிருந்து இடைச்சொல்லின் மூலமாக வெளிப்பட்ட பல்வேறு கண்டுபிடிப்புகள், ஆற்றல் வாய்ந்ததும் வாழ்வியலுக்குத் தேவையான துணைக்கருவிகளின் வெளிப்பாடுகள் ஆகியவை வெளிப்பட்டன. மாந்தரினம் அவற்றையெல்லாம் மாந்திக் களித்தது.

மனிதன் விஞ்ஞானியானவன். அணுகுண்டுகளைத் தயாரித்து அழிக்கும் சக்தியை வெளிப்படுத்தினான். ஆக்கசக்தியை வெளிப்படுத்தினான். உலகம் வியக்கும் பல்வேறு திறமைகளை வெளிப்படுத்தினான். ஆண்டாண்டு காலங்களாக மனிதனும் இருக்கிறான். தேவைகளும் இருக்கின்றன. மனிதன் பேராற்றலால் வேற்றுமைப்படுத்தப் பெறும்போது அவன் செயல் மேற்கொள்கிறான். வேற்றுமைப்படுத்தப் பெறுதலும் செயல் மேற்கொள்ளலும் இணையும்போது தேவகைள் நிறைவு செய்யப்

பெறுகின்றன. இத்தகைய இணைப்புகளையெல்லாம் இடைநின்று செய்வது ஒன்று உண்டுதானே. ஆம். உண்டு. உண்டு எனில் அது இடைச்சொல்.

உரிச்சொல் பற்றிய விளக்கம்

இனி, தொல்காப்பியச் சொல்லதிகாரச சிந்தனையில் உரிச்சொல் பற்றிய ஒரு கருத்தை எடுத்துக்காட்டி நிறைவு செய்யலாம்.

சொல்லதிகாரத்தில் பெயர், வினை, உயிர், மெய், உயிர்மெய் போன்றனவற்றுக்கெல்லாம் உள்ளீடாக அமைந்த மெய்ப்பொருளியல் நாட்டத்தைப் பல பேரறிஞர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள். அவர்களால் எடுத்துக் காட்டப் பெற்றவற்றைத் தவிர்த்து, இரண்டொரு செய்திகளை மட்டும் எடுத்துக் காட்டுவதே இவ்வுரையின் நோக்கம். என்னுடைய தனிவழிச் சிந்தனையில் அமைந்த எல்லாவற்றையும் இங்கே எடுத்துக்காட்டவில்லை என்பதையும் உளங்கொள்ள வேண்டும்.

காலமும், இடமும் சூழலும் கருதியதே ஏனையவற்றைக் குறிப்பிடாமல் விட்டமைக்குக் காரணம்.

உரிச்சொல்லையும் பெயர்ச்சொல், வினைச்சொற்களைப் போல முதன்மைச் சொல்லாகத் தொல்காப்பியனார் எடுத்துக் காட்டவில்லை.

இடைச்சொல்லைப் போலவே, உரிச்சொல்லும் பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் சார்ந்து நடக்கும் இயல்புடையது என்பதே தொல்காப்பியனார் கருத்து. இச்செய்தியானது முன்னமேயே - இடைச்சொல் இலக்கணத்தை எடுத்துக்காட்டும் இடத்திலேயே சுட்டிக்காட்டப் பெற்ற ஒன்று.

பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல் ஆகியனவற்றை விட விரிவான பரப்புடையது. உரிச்சொல் எனக்கொள்வதுதான் உரிச்சொல்லின் இலக்கணம்.

தமிழ்மொழியின்கண் உரிச்சொல் பற்றிய விரிவான ஆய்வுகள் (எனக்குத் தெரிந்தவரை) இன்னும் வெளிவரவில்லை எனத் துணிந்து கூறலாம்.

இசை, குறிப்பு, பண்பு ஆகிய மூன்றனை நிலைக்களனாகக் கொண்டு தோன்றும் தன்மையுடையது உரிச்சொல்.

பெயர் போலவும் வினைபோலவும் பெயர்ச்சொல் வினைச்சொல் ஆகியனவற்றுக்கு முதனிலையாகவும் தோன்றும் இயல்பினது உரிச்சொல்.

உரிச்சொல் இது என உணரவும் உரிச்சொல்லின் பொருள் இது என உணரவும் மரபுமுறையைத்தான் கடைப்பிடிக்க வேண்டும் என்ற நியதியை வகுத்தமைக்கின்றார் தொல்காப்பியர்.

பொருளதிகாரத்தில் பொருட்பிரிவு முறைகளை எடுத்துக் காட்டும் தொல்காப்பியர் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்று பிரிவுபடுத்தி உரிப்பொருளுக்கு ஒப்பற்ற உயர்நிலை அளிப்பது போல, சொல்லதிகாரத்திலும் உரிச்சொல்லுக்கு ஓர் உயரிய நிலையை அமைத்துக் காட்டுகின்றார் தொல்காப்பியர்.

பெயர்வதற்கு உரியது பெயர். வளைந்து, தொழிற்பட்டு, காலத்தோடு காலத்தோடு வினைசெய்யுமாறு பெயர்ப் பொருளைச் செயற்படுத்த முனைவது வினை. இடைநின்று பெயர்ப்பொருளை வேறுபடுத்தி, அப்பெயர்ப் பொருளிடம் அமைந்த பல்வேறு திறமைகளை வெளிக்கொணர்ந்து, ஒரு தனிமனிதனைப் பல்திறன் கொண்ட திறமைக் களஞ்சியமாக உருவாக்கவல்லது இடைச்சொல் என்பதை மெய்ப்பொருளியல் நோக்கில் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

மெய்ப்பொருள் எனப்பெறும் தனிமனிதனிடத்தில் அமைந்துள்ள திறமைகள் இரண்டுவகை.

1. உடைமைத்திறன் 2. உண்மைத்திறன்

இடைச்சொல்லால் தனிமனிதனின் உடைமைத் திறன் வெளிப்படும். உரிச்சொல்லால் தனிமனிதனின் உண்மைத் திறன் வெளிப்படும்.

தனிமனிதன் வினைவலர் ஆதல். விஞ்ஞானியாக நின்று சிந்தித்து, அத்தேவைகளை நிறைவு செய்யும் போக்கில் புதிய

கண்டுபிடிப்புகளை உண்டாக்கி உலகமே வியக்கும் அளவுக்கு உயர்புகழ் பெறுதல் என்பன எல்லாம் உடைமைத் திறமைகள்.

உடைமைத் திறமைகளால் ஒருவன் ஆன்றோர் ஆக முடியும். சான்றோர் ஆக முடியாது.

ஆளுதல் பெற்றோர் ஆன்றோர். ஆளுதல் திறமைகளை வெளிப்படுத்தி அதனால் உலகப்புகழ் பெற்று அமைதியுற்றவர் ஆன்றோர். ஆனால் உண்மைத் திறமையை வெளிப்படுத்தி, செயற்படுத்தி நிறைவு பெற்றவர் சான்றோர். சாலுதல் நிறைதல்.

உடைமைத் திறமையை வெளிப்படுத்தத் துணைநிற்பது, செயற்படுவது இடைச்சொல்.

உண்மைத் திறமையை வெளிப்படுத்தத் துணை நிற்பது, செயற்படுத்துவது உரிச்சொல்.

ஒலிவேறு, ஓசைவேறு. ஒலியாற் பொருளுணரவும் செயற்படவும் செய்வதற்குரிய சொற்கள் பெயர், வினை, இடை என்ற மூன்றுமே.

ஒலி- ஒல் என விரைந்து சென்று பொருளை உணர வைப்பது.

ஓசை என்பது ஒலியினும் வேறுபட்டது. ஓ செய்தல் ஓசை. பூவினாற் செய்தல் பூசை என்றாற் போல.

'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே'

என்றார் அப்பரடிகள்.

'திருச்சிலம்பு ஓசை வழியே சென்று
நிருத்தனைக் கும்பிடு என்று உந்தீபற
நேர்பட அங்கே நின்று உந்தீபற' - திருவுந்தியார் - தாழிசை

கூத்தப் பெருமானின் உடுக்கையிலிருந்து வெளிப்படுவது மாயை கலந்த ஒலி. கூத்தப் பெருமானின் ஊன்றிய திருவடிச் சிலம்பிலிருந்து வெளிப்படுவது பரநாதம் எனப்பெறும் சுத்த ஒலி. கூத்தப் பெருமானின் தூக்கிய திருவடியிலிருந்து வெளிப்படுவது திருச்சிலம்பு ஓசை.

ஓசையானது தனிமனிதனிடத்திலுள்ள அகலப்பொருள் நாட்டத்தை உணர்த்தும். பண்பை உறுதிப்படுத்தி வெளிப்படுத்தும். அதனால் வெளிப்படும் அறிவானது தன்னுண்மை அறிவு எனப்பெறும்.

'நுண்ணிய நூற்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே வெளிப்படும்' (373)

என்றார் திருவள்ளுவர்.

இசை, குறிப்பு, பண்பு ஆகிய மூன்றன் அடிப்படையில் தோன்றி, தனிமனிதனின் அகநிலை நாட்டத்தையும் ஆன்ம உணர்வையும் உலகைக் காக்கும் சால்புப் பண்மையும் மேம்படுத்த உதவுவதே உரிச்சொல்.

உரிச்சொல்லுக்கு இதுபொருள் என்பதே மரபு வழியில் நின்றுதான் உணர வேண்டும் என விதி வகுத்தார் தொல்காப்பியர்.

'அன்ன பிறவும் கிளந்த அல்ல
பன்முறை யானும் பரந்தன வரூஉம்
உரிச்சொல் எல்லாம் பொருட்குறை கூட்ட
இயன்ற மருங்கின் இனைத்து எனஅறியும்
வரம்பு தமக்கு இன்மையின் வழிநனி கடைப்பிடித்து
ஓம்படை ஆணையின் கிளந்தவற்று இயலால்
பாங்குற உணர்தல் என்மனார் புலவர்'
- (தொல், சொல், உரி- 98)

என்ற நூற்பாவின் மூலம் உரிச்சொல்லானது பொருள் உணர்த்தும் நிலையை ஓரளவு தெளிவுபடுத்தினார்.

ஓம்படை மொழியாலும் ஆணை மொழியாலும் பொருள் உணரும் முறையை அடிப்படையாகக் கொண்டுதான் உரிச்சொல்லின் முறையை- அதன் பொருண்மையை உணர்தல் வேண்டும் என்றார் தொல்காப்பியனார்.

ஓம்படுத்தும் மொழியானது ஓம்படை மொழி எனப்பெறும். ஓம் அறைதல் என்பது சங்க இலக்கிய வழக்கு. தோழியானவள்

தலைவியைத் தலைவனிடம் இவளை எந்நாளும் பாதுகாத்தல் வேண்டும் எனக் கூறி அரண்படுத்துதல் ஓம்படைக் கிளவி.

'ஓம்படைக் கிளவிப் பாங்கின் கண்ணும்'
-(தொல், பொருள், கள, 23, வரி 25)

எனவரும் தோழியின் கூற்றினை நோக்குக.

உலகியல் வழக்கில் இன்றும் காணப்பெறும் சத்தியம் செய்தல் என்பதே ஓம்படுத்தும் ஓம்படை நிலை என அமைந்தது.

இலங்கைவாழ் தமிழர்கள் ஒருவருக்கொருவர் பேசும்போது ஓம் எனச் சொல்லுதலும் இவ்வழக்கை அடிப்படையாகக் கொண்டதே.

அகரம் என நின்ற இறைவனையும் உகரம் என நின்ற இறைவியையும் தனித்தனி நிறுத்தி, மகரம் என நின்ற உலக வழக்கில் சொல்லும் செய்தியை அவ்விருவர் இடையிலும் அகப்படுத்தி நிறுத்துதல் என்பதே ஓம்படுத்துதல் என்பதாம்.

இறைவனுக்குச் செய்யும் நாமாவளிகளையும் ஓம் என்ற முதன்மை ஒலியுடன் இணைத்தால்தான் இறைநிலைப்படும் என்பது மந்திர நூல் முறைமை.

ஆணையிற் கிளத்தல்

'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப' (தொல், செய் - 176)

மறைமொழிகள் இறைவனுடைய ஆணை என்றும் ஞான சத்தியால் ஆன்மாவிடத்தில் நேரே வெளிப்படுத்தும் மொழிகளே அவை.

'நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்' (28)

என்ற திருக்குறள் கருத்தையும் இணைத்து உணர்க. இவை எல்லாவற்றையும் உரிச்சொல் என்று யான் குறிப்பிடவில்லை.

தனிமனிதனிடத்தில் இசை, குறிப்பு, பண்பு ஆகியவற்றை மூலமாகக் கொண்டு இறையருளால் வெளிப்படுத்தப் பெறும்

மொழிகளே உரிச்சொற்கள். அவற்றுக்கெல்லாம் பொருள் காணும்போது உலகியல் மொழிகளுக்கு விளக்கம் காணும் வகையில் அமைத்து விளக்கம் காண முடியாது. அவை எல்லாம் ஓரெழுத்தாக, இரண்டெழுத்தாக, பல எழுத்துகளின் சேர்க்கையாக இருக்கலாம். சிலமொழிகள் வெளிப்படையாகப் பொருள் தரலாம். சில குறிப்பாகப் பொருள் தரலாம். எவ்வாறாயினும் அவை அந்த மனிதனிடமிருந்து வெளிப்பட்டு, அவனுக்கே உரிமையுடைய னவாய் நின்ற சொற்கள் என உணர்தல் வேண்டும்.

அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களைத் தந்து விடும் மொழியையே நிறைமொழி என விளக்கம் அளித்தார் பரிமேலழகர். ஆனால், நிறைநிலை பெற்ற ஒரு பொருளானது தனிமனிதன் மூலம் வெளிப்படுத்திய மொழியே நிறைமொழி எனக் கொள்ள வேண்டும்.

திருமுறை மொழிகள் எல்லம் அவ்வாறு நிலைபேரின்பப் பொருளால் மனிதன்மூலம் வெளிப்படுத்தப் பெற்ற மொழிகள். அதனால்தான் திருஞானசம்பந்தர்,

'அரசாள்வர் ஆணை நமதே'

என்று கூறினார்.

தனிமனிதனுடைய மூன்று நிலைகளை உடன்கொண்டு உரிச்சொல் தோன்றும்.

1. நிறைநிலைப் பொருளுக்கும் தனிமனிதனுக்கும் இசைய நின்ற தொடர்பு.

2. நிறைநிலைப் பொருளின் குறிப்பைத் தனிமனிதன் தன்மூலம் வெளிப்படுத்தும் ஆற்றல்.

3. தனிமனிதனிடம் கால்கொண்டிருக்கும் நிறைநிலைப் பொருளின் பண்புகள்.

அனைத்திற்கும் உரிமையுடைய நிறைநிலைப் பொருளானது தன்னிடம் உரிமை கொண்டு வளர்த்துக் கொண்ட தொடர்பின் அடிப்படையில், தனிமனிதன் மூலமாக, அவனுக்கே

உரிமையுடையன என எண்ணும் வகையில் வெளிப்படுத்தப் பெற்ற சொற்களே- நிறைநிலைப் பொருளால் மொழியப்பெற்ற சொற்களே உரிச்சொற்கள். அவை தனிமனிதனின் பண்புநலன்களை உலகிற்கு வெளிப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தவை. அவையாவும் சாதாரண மக்கள் பேசும் பேச்சு வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் இடம் பெறலாம். ஆனால் அவற்றுக்குப் பொருள் காணும் முறையில் தனித்த உத்தியைக் கையாள வேண்டும் என்று குறிப்பிட்டுக் காட்டுகின்றார் தொல்காப்பியர்.

உரிச்சொற்கிழமையும் பயனும்

இடைச்சொல்லானது தனிமனிதனின் பல்வேறு திறமைகளை வெளிப்படுத்துவது போல உரிச்சொல்லானது தனிமனிதனின் உண்மைப் பண்புகளை வளர்த்து, அப்பண்புகளுக்கு அவனைக் கிழமையுடையவனாக- உரிமையுடையவனாக ஆக்கி அவனை நிறைமனிதனாக ஆக்கும்.

இடைச்சொல்வரை அமைந்த சொற்களின் பயன் பெற்றவன் உலகவரால் மதிக்கப் பெறுவான். அவனைத் தேடி உலகம் வரும். நாள்தோறும் அவன் புகழ் உலகவரால் மதிக்கப் பெறும். அவன் வித்தகன். சுருங்கக் கூறின், அவன் ஒப்புரவாளன். சுனாமியைப் போல உலகப் பேரழிவு வருமானால் வரும் என்று எச்சரிக்கை செய்யும் ஆற்றலுடையவன்.

உரிச்சொற்கிழமை பெற்றவன் நிறைநிலை மனிதன். உலகைத் தாங்கும் ஆற்றல் பெற்றவன். சுனாமியைப் போல உலகப் பேரழிவு வருமானால் அதனைத் தடுத்து மடை மாற்றும் செய்யும் ஆற்றல் உடையவன்.

உரிச்சொற் கிழமையாளன் யார்?

தனிமனிதன் தன்னிடத்தே அமைந்த பலவகைப் பண்புகளும் இணைய வளர்ந்து நிறைவு பெறுகின்ற காலத்தே அவன் முழுமையும் மகிழ்வும் கொண்ட நிலையினை அடைகிறான். அவ்வகையில் அவன் நிறைநிலை மனிதன் ஆகிறான்.

தொல்காப்பியமும் திருவள்ளுவரும் நிறைநிலை மனிதனைச் சான்றாளன் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

எழுத்தர் வேறு, எழுத்தாளர் வேறு என்றாற் போல, சான்றோர் வேறு, சான்றாளன் வேறு எனக் கொள்ள வேண்டும்.

தனிமனிதன் ஒருவன் அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம் வாய்மை என்ற ஐந்து மூல அறங்களில் தனித்தனியாக நிறைவு பெறுதல் வேண்டும்.

ஐந்து மூல அறங்களில் தனித்தனியே நிறைவு பெற்றபின், அவற்றின் இணைப்பில் ஒரு முழுமை உண்டாகும். அதில் நிறைவு பெற்றவனே- முழுமை பெற்றவனே சான்றாளன் என்று தொல்காப்பியரும் திருவள்ளுவரும் அமைத்துக் காட்டுகின்றனர்.

தந்திரமாக ஏமாற்றுவதற்குப் பெயர் பெற்றதாக நரியைக் கூறுவது போல, இழிவுக்குப் பெயர் பெற்றதாகப் பன்றியைக் கூறுவதுபோல, நன்றியுணர்ச்சிக்குப் பெயர் பெற்றதாக நாயைக் கூறுவது போல, சுறுசுறுப்புக்குப் பெயர் பெற்றதாக எறும்பைக் குறிப்பிடுவது போல, ஆற்றலுக்கும் ஆன்மீகப் பரிபக்குவத்துக்கும் ஏற்றதாகக் குதிரையைக் குறிப்பிடுவதுபோல உழைப்புக்கு எடுத்துக் காட்டாக மாடுகளைக் குறிப்பிடுவது மரபு வழக்கு.

மாடுகளை ஆக்கள் என்று குறிப்பிடுவது மரபு. ஆக்கள் என்ற சொல்லானது பசுக்களையும் (பெண் மாடுகளையும்) பகடு என்ற சொல்லானது ஆண்மாடுகளையும் குறிக்கும் வழக்குகள் உள்ளன. ஆவின்பால் என்றால் பெண்மாடுகளின் பால் என்று விளக்கிக் கொள்ளுதல் இக்கால வழக்கு.

தனிமனிதன் ஒருவன் கல்வி, செல்வம் சேர்த்தல் முதலியவற்றில் வெற்றி பெற்றறால் அது அவன் பெற்ற இயற்கை வெற்றி. அது முல்லை எனப்பெறும். அவனே சமுதாயத்தோடும் உலகளாவிய பொது அமைப்போடும் இணைந்து வெற்றி பெற்றால் அது செயற்கை வெற்றி. அதுவே வாகை எனப்பெறும்.

ஆ அனைய சான்றோர் என்றும் பகடு அனைய சான்றோர் எனவும் சான்றோர் இருவகைப்படுவர். இருவரும் சான்றாளர்களே எனினும் ஒருவகை வேறுபாடு உண்டு.

ஆ அனைய சான்றோர்களும் பகடு அனைய சான்றோர்களும் வெற்றிநிலை எய்தியவர்களே. இருவரும் உரிச்சொற்கிழமை யாளர்களே. அவர்களுக்குள் அமைந்த வேறுபாடுதான் என்ன?

அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ற ஐவகை அறத்தூண்களால் அமைந்த மாடத்தைத் தன்னுடையதாக ஆக்கிக் கொண்டாலும் அவற்றைக் கையாளும் வகையில் ஒரு வேறுபாடு உண்டு.

ஒழுக்கம் என்ற சொல்லுக்கு இருவகைப் பகுதிகள் (அ) விளக்கங்கள் உண்டு.

ஒழுகுவது ஒழுக்கம். ஒழுக்குவது ஒழுக்கம். தன்னளவில் மேலே குறிப்பிடப் பெற்ற பண்புகளில் தவறாது ஒழுகி, தன்னிறைவு பெறுதல் ஒருவகை.

தன்னளவில் நிறைவு பெற்ற அவனே பிறரையும் அவ்வாறே ஒழுக்கமுடையவனாக ஆக்குதல் ஒருவகை.

முன்னதை அறம் என்றும், பின்னதை ஒழுக்கம் என்றும் திருவள்ளுவர் கூறுவார்.

'பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு' (148)

என்ற திருக்குறளை நோக்கியுணர்க.

தன்னளவில் ஒழுக்கத்தில் நிறைவு பெற்றவர் ஆ அனைய சான்றோர். தன்னளவில் ஒழுக்கத்தில் தவறாது இருத்தலோடு பிறரையும் ஒழுக்கமுடையவராக ஆக்குபவர் பகடு அனைய சான்றோர்

'பகட்டினானும் ஆவினானும்
துகள்தபு சிறப்பின் சான்றோர் பக்கமும்'

என்பது தொல்காப்பியப் பொருளதிகார வாகைத் திணையுள் கூதிர்வேனில் எனத் தொடங்கும் நூற்பாவில் வரும் வரிகள்.

முடிப்புரை

தொல்காப்பியச் சொல்லதிகாரச் சிந்தனையில் பெயர், வினை, இடை, உரி என நின்ற நால்வகைச் சொல்முறைகளும் அவற்றோடு தொடர்புடைய தனிமனித வாழ்வியல் வெற்றி நிலைகளும் மெய்ப் பொருளியலார் நோக்கில் விளைந்த சில கருத்துகளும் ஓரளவு இப்பகுதியில் எடுத்துக் காட்டப் பெற்றன.

6.அப்பாலைக்கு அப்பால் என்பது இட்டலிங்கமே

தொல்காப்பியச் சிந்தனையில் தமிழ்த் தத்துவ நோக்கானது எவ்வாறு கால்கொண்டுள்ளது என்பதை எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என்ற அதிகாரங்களால் அமைத்து ஓரளவு காண முடிந்தது. அவ்வகையில் தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அமைந்துள்ள தமிழ்த் தத்துவ நோக்கை எடுத்துக் காட்டி முறைப்படுத்துதல், வரிசையில் அமைந்த வாய்மையாகும்.

தொல்காப்பியப் பொருளதிகாரமானது அகத்திணையியல் தொடங்கி மரபியல் வரையில் அமைந்த ஒன்பது இயல்களைக் கொண்டதாக அமைகிறது. சற்றொப்ப அறுநூற்று அறுபத்து நான்கு நூற்பாக்களைக் கொண்டதாக அமைகிற பொருளதிகாரமே பழந்தமிழ் மக்களின் வாழ்க்கையை அங்கை நெல்லி என எடுத்துக் காட்டுவதாக அமைகிறது என்பது தொல்காப்பியத் திறனாய்வாளர்களின் கொள்கையாக அமைகிறது.

பொருளதிகார நூற்பாக்கள் எண் 947இல் தொடங்கி 1610இல் நிறைவுபெறுகிறது. அவற்றுள் 1593 முதல் 1610வரை உள்ள நூற்பாக்கள் இடைச்செருகல் என்றும் அவையெல்லாம் தமிழக மக்களின் வாழ்வியலுக்கு ஏற்புடையன அல்ல என்றும் கூறி விலக்கியவர்கள் உண்டு. அவ்வாறே 1570 முதல் 1584வரை உள்ள நூற்பாக்களையும் இடைச்செருகல் என்று கூறிய திறனாய்வாளர்களும் உளர்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் தொடக்கம் அகத்திணையியல். மக்கள் வாழ்க்கையின் குறிக்கோள் இன்பமே என்பதும் இன்ப ஒழுக்கத்தின் வகைகள் இத்துணை என்பதும் அந்த இன்ப ஒழுக்கத்தினைத் தோற்றி வளர்க்கும் காரணிகள் இவை இவை என்பதும் பற்றிய விளக்கங்களைப் பற்றியனவாகவே அகத்திணையியலின் தொடக்கம் அமைகிறது.

செந்தமிழ்நாட்டிற் சிவணிய மக்கள் தத்தம் வாழ்வியல் நெறிகளையும், துறைகளையும் வல்லவாறு வகுத்துக் கொண்டு வாழ்ந்து சிறந்த மாண்பினைச் சங்க இலக்கியம் முதலாக அமைந்த

வாழ்வியல் துறை நூல்களையும் தொல்காப்பியம் முதலாக அமைந்த வாழ்வியல் நெறி நூல்களையும் மூலமாகக் கொண்டு தெளியலாம்.

தமிழக மக்களின் வாழ்வியலோடு இணைந்து வராத வாழ்வியல் நெறிகளும் துறைகளுங்கூட, மேலே கூறப் பெற்ற நூல்களிற் காணக் கிடைக்கின்றன என்ற கருத்தை முற்றாக மறுத்தல் இயலாது. முயன்றால் ஒவ்வாத இடைச் செருகல்களை நீக்கி, தமிழக மக்களின் வாழ்வியல் துறையும் நெறியும் இவையே என வரையறுத்துக் கூற முடியும். ஆனால், அம்முயற்சியானது அங்கொன்றும் இங்கொன்றுமாக அமைந்ததே ஒழியக் கூட்டாக அமையவில்லை. அத்தகைய இடங்களை நான் இப்பகுதியில் எடுத்துக் காட்டவில்லை.

தத்துவத்துறை சார்ந்த கடவுள், உயிர்வகைகள் போன்ற செய்திகளையே எடுத்துக்காட்ட வில்லையே இக்கட்டுரையில் என வினவுவராயின் வெளிப்படையாக வருவனவற்றையும் பிற அறிஞர்களால் சுட்டிக் காட்டப் பெற்றவற்றையும் தவிர்த்து ஒரு சில புதிய சிந்தனைச் செய்திகளை மட்டும் குறிப்பிட்டுள்ளேன்.

இன்பமே வாழ்வுக்குக் குறிக்கோள்

தமிழக மக்களின் வாழ்வியற் சிந்தனையில் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றே குறிக்கோட் பொருளாக இருந்தமை தெளியலாம்.

> 'அந்நிலை மருங்கின் அறம் முதலாகிய
> மும்முதற் பொருட்டும் உரிய என்ப'

என்பது தொல்காப்பியப் பொருளதிகாரச் செய்யுளியல் 105ஆம் நூற்பா.

அறம், பொருள், இன்பம் என்ற மூன்றனுள் ஒவ்வொன்றையும் முதன்மைப்படுத்தி எழுந்த சான்றுகளும் உள்ளன.

அறம், பொருள், இன்பம் என்ற மூன்றனுள் ஒவ்வொன்றையும் முதன்மைப்படுத்தி எழுந்த சான்றுகளும் உள்ளன.

'அறம் முதலாகிய மும்முதற் பொருள்'

என அறத்தை முதன்மைப்படுத்திய நூற்பாவைப் போலவே,

'சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப் படூஉம் தோற்றம் போல'

எனவரும் வாக்கினையும் காணலாம்.

அறம், பொருள், இன்பம் என்ற மூன்றனுள் நடுவணது எய்த இருதலையும் எய்தும் என்ற வாக்கும் சங்க இலக்கியத்தில் காணப் பெறுகிறது. இங்கே நடுவணது என்பது பொருளை முதன்மைப்படுத்தியது.

'இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கில்' (1038)

என்ற தொல்காப்பியப் பொருளதிகாரக் களவியல் முதல் நூற்பாவானது இன்பத்தை முதன்மைப்படுத்துகிறது.

அறம், பொருள், இன்பம் என்ற மூன்றனுள்ளும் இன்பமே மக்கள் வாழ்க்கையின் தொடக்கமும் முடிவும் என்ற கருத்தே தொல்காப்பியரின் முற்ற முடிந்த கருத்தாகக் கொள்ளலாம். அக்கருத்தை விளக்கும் நூற்பாவைக் கீழே காணலாம்.

'எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வரூஉம் மேவற் றாகும்' (1169)

என்பது தொல்காப்பியப் பொருளதிகாரப் பொருளியல் நூற்பா.

இந்திய நாட்டின் மெய்ப்பொருளியற் கொள்கையாளர் அனைவரும் அஞ்ஞானத்தை நீக்கி ஞானம் பெறுதலே மக்கள் வாழ்க்கையின் முடிந்த முடிபு என்று வலியுறுத்தியுள்ளார்கள்.

ஞானத்தின் நிறைவில் எழும் மோனத்தின் எல்லையில் ஒருவகை இன்பம் உண்டு என்று அவர்கள் அனைவரும் விளக்கம் தருகிறார்கள்.

இன்பத்தை நோக்கி ஓடுதல் ஆன்மாவின் இயல்புநிலை. அது மெல்ல வளர்ந்து முற்றிய இன்பத்துள் ஆழ்ந்து திளைப்பதே அனைத்துயிர்களுக்கும் ஒத்தநிலை என்பது தமிழக மக்களின்

வாழ்வியல் துணிபு. அதுவே, தொல்காப்பியர் கருத்தாகவும் அமைகிறது.

'ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே என்னுடை அன்பே' (திருவாசகம் 386)

என்றார் மாணிக்கவாசகர்.

தொல்காப்பியர் காட்டும் பொருட்பிரிவுகள்

பொருளதிகாரத்தின் முதல் இயலாகிய அகத்திணையியலில் பொருள்களின் பிரிவை எடுத்துக் கூறி விளக்குகிறார் தொல்காப்பியர்.

முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் எனப் பொருளை மூவகையாகப் பிரிக்கிறார் அவர். இத்தகைய பிரிப்பு முறையே தமிழக மக்கள் வாழ்க்கையின் சிறந்த கூறு எனக் கொள்ளலாம். உலகமக்களேயன்றி இந்திய நாட்டு அறிஞர்களும் வியந்து பார்க்கும் பொருட்பிரிவுக் கூறு இது என்றால் மிகையாகாது.

உரிப்பொருள் என்பது மக்கள் வாழ்க்கையின் அனுபவக்கூறு

அனுபவத்தின் அடிப்படையில்தான் முதற்பொருளையும் கருப்பொருளையும் இவைஇவை என்று முடிவுசெய்ய வேண்டுமேயன்றி, ஏனைய காரணிகளைக் கொண்டு முடிவு செய்தல் கூடாது என்பதே தொல்காப்பியர் கொள்கை. முதற்பொருள் மயங்கும். கருப்பொருள் மயங்கும். ஆனால், அனுபவத்தின் அடிப்படையில் விளங்கும் உரிமையுடையதாகிய உரிப்பொருளில் மயக்கம் நேர்தல் இல்லை.

'முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங்காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங்காலை' (949)

என்று கூறியதோடு நிறுத்தி விடாமல்,

'உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே' (959)

என்று வரையறுத்தும் வலியுறுத்தியும் கூறினார் தொல்காப்பியர். மாந்தரினத்தின் அடித்தளமாகிய அனுபவத்தின் - துய்ப்பின்

அடிப்படையில்தான் முதற்பொருளையும், கருப்பொருளையும் முடிவு செய்தல் வேண்டும் என்பது தொல்காப்பியர் கருத்து.

முதற்பொருள் பற்றிய ஆய்வு

பொதுவாக, மெய்ப்பொருளியல் அறிஞர்களை மூன்று வகையினராகப் பிரிக்கலாம்.

1. கடவுளை முதன்மைப்படுத்தி, கடவுளை மையமாகக் கொண்டு மனித வாழ்க்கைக் கூறுகளையும் உலகையும் விளக்கும் திறனாய்வாளர்கள்.

2. மனிதனை மையமாகக் கொண்டு கடவுளையும் உலகையும் விளக்கும் கொள்கையினர். தமிழகத்தில் விளைந்த செழும்புதையல் எனப்பெறும் சைவசித்தாந்தம் இவ்வகையைச் சார்ந்தது.

3. உலகை மையமாகக் கொண்டு ஏனைய இரண்டு பொருள்களையும் (கடவுள், மனிதன்) விளக்கும் நோக்கில் அமைந்த மெய்ப்பொருட் கொள்கையாளர்கள்.

சைவசித்தாந்தத்தைப் போலவே மனிதனை அவன் துய்ப்பினை மையமாகக் கொண்ட மெய்ப்பொருளியற் கொள்கையையே வலியுறுத்தும் தொல்காப்பியர் மெய்கண்டாரைப் போலவே உலகை முதன்மைப்படுத்தித் தம் கொள்கையைத் தொடங்குகின்றார்.

மெய்கண்டார் உலகை முதன்முதலில் எடுத்து விளக்கினாலும், உலகுக்கு அந்தமும் ஆதியுமாக இருப்பவன் ஒருவன் உண்டு என்று சிவஞானபோதம் முதல் நூற்பாவிலேயே எடுத்துக்காட்டுகிறார்.

ஆனால், நிலமும் காலமுமே முதற்பொருள் என்று வரையறை செய்கிறார் தொல்காப்பியர்.

(Time and Space) காலமும் இடமும் மூலப்பொருள்கள் என்பதை இன்றைய விஞ்ஞானிகளும் ஒப்புகின்றனர்.

காலத்தை முதன்மைப்படுத்துகிறது சைவசித்தாந்தம் என்றாலும் காலம் அறிவற்றதாகலின் அதை ஓர் அறிவுடைப் பொருள்தான் இயக்க வேண்டும் என்ற அடிப்படையில் கடவுளுக்கு முதன்மை இடம் தருகிறது சைவசித்தாந்தம்.

தொல்காப்பியர் காலம் இடம் என்ற இரண்டற்கும் ஒத்த இடம் தருகிறார். ஆனால், கடவுளை அவர் எவ்வாறு இணைக்கிறார் என்பது ஓர் அற்புதமான செய்தி. அதை விளக்குவதே இவ்வாய்வின் அடிப்படை.

உலகம் விளக்கம்

உலகம் என்பதற்கு இரண்டு வகையான இயல்புகளைக் கூறுகிறார் தொல்காப்பியர்.

1. நிலமும் பொழுதும் இயல்பாக உலவுவதைத் தன்னகத்தே கொண்டது உலகம் என்பது முதற்பொருள். நிலமும் காலமும் இயல்பாகத் தம்முள் கலப்பதால் கருப்பொருள் தோன்றுகின்றன. கருப்பொருளக்ள் தோன்றியபின்பு அங்குள்ள மக்கள் அப்பொருள்களைத் துய்ப்பதன் மூலம் உரிப்பொருள்கள் உணரப் பெறுகின்றன என்பது தொல்காப்பியர் கோட்பாடு.

தெய்வம் கருப்பொருள்களுள் ஒன்றாக முதன்மை இடம் பெறுகிறது. உரிப்பொருளுக்குரிய மக்கள் பெயர்களும் அமைக்கப் பெறுகின்றன.

தெய்வம் கருப்பொருளாக வந்தபின், அந்நிலத்து மக்கள் அவ்வந்நில அனுபவத்தின்வழி ஆயர், வேட்டுவர் என அமைத்து விட்ட பிறகு, மாயோன், சேயோன், வேந்தன், வருணன் ஆகியவர்கள் யார் என்ற வினா எழுந்ததால் அவர்கள் அவ்வந்நிலத்தின் கடவுளர் என்று கூற வேண்டிய கட்டாயம் வந்தது. மேய என்ற சொல்லும் நம்முடைய ஐயத்தை நீக்குவதாக அமையவில்லை.

மாயோன் காடுறை உலகத்து ஆயர்களால் தெய்வமாகத் துய்க்கப் பெறுவான் என்பது போல அனைத்து நிலங்களுக்கும் எடுத்துக் காட்டி அமைதிகூற வேண்டி வரும். காடுறை உலகத்துக்குக் கடவுள் மாயோன் எனக் கொண்டால் கடவுளின் ஆற்றல் சுருக்கப் பெற்றதாக அமைந்துவிடும். மெய்ப் பொருளியலாளர் எழுப்பும் பல்வேறு வினாக்களுக்கும் விடை சொல்லும் அளவுக்கு மாயோன், சேயோன் போன்றவர்கள் நமக்கு வலுவூட்டவில்லை. இத்தகைய இடர்ப்பாட்டினால்

உரையாசிரியர்களுள் கருத்து வேறுபாடும் உரை வேறுபாடும் தோன்றின.

2. உலகம் என்பதற்கு இரண்டாவது வகையான இயல்பு ஒன்றையும் எடுத்துக்காட்டி விளக்குகின்றார் தொல்காப்பியர்.

'நிலம் நீர் தீ வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாமைத்
திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும்' (*1589*)

என்பது தொல்காப்பியர், பொருளதிகார மரபியலில் தரும் விளக்கம்.

நிலம் முதலிய ஐவகைப் பருப்பொருள்களும் கலந்தும் மயங்கியும் அமைந்த நிலையே உலகம் என்பது அதன் விளக்கம்.

நிலம் முதலிய ஐந்தும் தனித்தனியே நாம் காணும் முறையில் உள்ளன. தண்ணீர் இருக்கிறது. தண்ணீரைத் தாங்கிக் கொண்டு நிலம் இருக்கிறது. இவ்வாறு உலகத்தை உணரும்போது அவற்றைத் தனித்தனியே நாம் காணலாம். இதனைக் கலப்பு என்கிறார் தொல்காப்பியர்.

உலகப்பொருள்களாக நாம் பார்க்கும் அனைத்திலும் நில அணு முதலிய ஐம்பூத அணுக்களும் கலந்துள்ளன. ஆனால் அவற்றைத் தனித்தனியே பார்த்தல் நம்போன்றவர்களுக்கு இயலாது. விஞ்ஞானிகளாலும், மருத்துவர்களாலும் அவை வரையறை செய்யப் பெறுகின்றன. இத்தகைய நிலையை மயக்கம் என்று குறிப்பிட்டு வேறுபடுத்திக் காட்டுகிறார் தொல்காப்பியர்.

கலத்தல் வேறு. மயக்கம் வேறு. கலத்தலைப் பிரிக்கலாம். மயக்கத்தைப் பிரித்தல் இயலாது. கலத்தலை அண்டக் கலப்புக்கும் மயக்கத்தைப் பிண்டக் (உடல் முதலியன) கலப்புக்கும் உரியனவாகக் காட்டுதல் மெய்ப்பொருள் இயல் வல்லுநர்களின் கொள்கை.

நிலமும் பொழுதும் கலந்து உலவுவதை உலகம் என்ற தொல்காப்பியர் அத்தகைய கலப்பினால்தான் கருப்பொருள்

தோன்றி, உரிப்பொருள் அனுபவம் வாய்க்கும் என்ற அடிப்படையில் முதல் விளக்கத்தைக் கூறினார்.

நிலம் முதலிய ஐம்பூதக் கலப்பினாலும் மயக்கத்தினாலும் விளைந்த உலகத்தால்தான் ஒலியும் பொருளும் நுகரப் பெறும் என்ற வகையில் இரண்டாவது விளக்கத்தைக் கூறினாரெனப் பிரித்து உணர்தல் வேண்டும்.

ஐந்திணைத் தத்துவம்

தொல்காப்பியப் பொருளதிகாரத்துள் முதல் இயலான அகத்திணையியலுள் அகவொழுக்கம் (அ) அகத்திணை ஒழுக்கம் ஏழு எனப் பொதுவகையாற் கூறி, அவை கைக்கிளை ஒழுக்கம், ஐந்திணை ஒழுக்கம், பெருந்திணை ஒழுக்கம் என மூவகைப்படும் என்றார் தொல்காப்பியர். அவற்றுள் நடுநின்ற, ஐந்திணை ஒழுக்கமே தமிழக மக்களின் வாழ்வியல் இன்ப ஒழுக்கம் என்ற தகுதியைப் பெற்றதாக நின்றது என்பதும் தொல்காப்பியர் தரும் விளக்கம்.

கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என மூவகைகளில் இடைநின்ற ஐந்திணை என்பதற்கு நிலம் என்றும் ஒழுக்கம் என்றும் இருவகையாகப் பொருள் கொண்டுள்ளனர் உரையாசிரியர்கள்.

> 'அவற்றுள்,
> நடுவண் ஐந்திணை நடுவணது ஒழிய
> படுதிரை வையம் பாத்திய பண்பே'

என்ற, தொல்காப்பிய, பொருளதிகார அகத்திணையியல் இரண்டாம் நூற்பாவினுள் நடுவண் ஐந்திணை என்பதற்கு நிலம் என்றே பொருள் கூறியிருக்கின்றனர்.

ஐந்திணை என்பதற்கு முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் எனப் பொருள் கொண்டு அவற்றுள் நடுவில் நின்ற பாலை என்ற நிலம் நீங்கலாக நின்ற நால்வகை நிலம் எனப்பொருள் கொண்டுள்ளார் கழகப்புலவர் இளவழகனார்.

நடுவணது என்றும் நடுவுநிலைத் திணை என்றும் அகத்திணையியலிற் கூறும் தொல்காப்பியர் பாலை என்ற சொல்லைப் பயன்படுத்தவேயில்லை.

புறத்திணையியலில்தான் - வாகையின் இயல்பினைக் கூறும் 1019 நூற்பாவில்தான் பாலை என்ற சொல்லையே எடுத்தாளுகிறார் தொல்காப்பியர்.

'வாகைதானே பாலையது புறனே'

என்பது அந்நூற்பா.

மாயோன் மேய எனத் தொடங்கும் நூற்பாவில் நால்வகை நிலங்களைக் கூறிய காரணத்தால் பாலையை ஒரு நிலமாக அமைத்துக் கொண்டதோடல்லாமல் வாகைதானே பாலையது புறனே என்ற நூற்பாவின் கருத்தையும் உடன்கொண்டு நடுவணது என்பதற்குப் பாலை என்று பொருள் கொண்டார்கள் உரையாசிரியர்கள்.

நடுவணது என்பதற்குப் பொதுவானது என்ற உரையும் உரையாசிரியர்களால் கொள்ளப் பெற்றுள்ளது. (கழகப்புலவர் இளவழகனார் உரை, கழகம், இரண்டாம் பதிப்பு, பிப்ரவரி 1954, பக்கம். 225. அனைத்து உரையாசிரியர்களின் விளக்கத்தை எடுத்துக் காட்டி விளக்க யான் முற்படவில்லை)

நடுவணது என்பதற்குப் பொதுவானது என்று உரை கண்டாலும் அது எந்த வகையில் பொதுவானது என்பது விளக்கப் பெறவில்லை.

'நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே' (955)

என்ற நூற்பாவில் வரும் நடுவுநிலைத் திணை என்பதற்குப் பொதுநிலை ஒழுக்கமாகிய பாலைத்திணை என உரை வகுத்தார் கழகப்புலவர் இளவழகனார்.

மேலே குறிப்பிடப் பெற்ற இரண்டு இடங்களிலும் பொதுவானதாகிய, அல்லது பொதுநிலை ஒழுக்கமாகிய பாலைத்திணை என்பது சுட்டப்பெற்றுள்ளது.

நிலத்தையும் ஒழுக்கத்தையும் பின்னிப் பிணைந்து கூறப் பெற்றிருந்தாலும் பின்வரும் நூற்பாக்களையும் உரைகளையும் அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது பாலை என்பதை நிலம் என்றும் பிரிதல் என்பதைப் பாலைநில ஒழுக்கம் என்றும்

அமைத்துக் கொள்ளும் நிலையில்தான் உரையாசிரியர்களின் வழிகாட்டுதல் அமைந்திருக்கிறது என்று சொல்லலாம்.

பாலை என்ற நிலம் இல்லை. நிலம் இல்லாத பாலைக்கு ஒழுக்கம் கூறப்பெற்றுள்ளது என்றும் அது பிரிதல் ஒழுக்கம் என்று கொள்ளவேண்டும் என்றும் தொல்காப்பியர் கருதுகிறார் என உரையாசிரியர்கள் அமைத்துக் காட்டுகிறார்கள்.

நிலங்களுள் பாலையை நடுவணது என்றும் நடுவுநிலைத்திணை என்றும் சுட்டிக் கூறுவதன் அடிப்படைக் காரணம் யாதாக இருக்க முடியும் என்பது ஆய்வதற்குரியது.

முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்பதுதான் நிலத்து வரிசை என (951) மாயோன் மேய காடுறை உலகம் என்று தொடங்கும் நூற்பாவால் அறிய முடிகிறது.

உரிப்பொருள் வரிசையை எடுத்துக்காட்டும் நூற்பாவானது புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் (960) என வரிசைப்படுத்துகிறது. இந்நூற்பாவினுள் பாலைக்குரிய உரிப்பொருளாகிய பிரிதல் என்பது இரண்டாவதாக வருகிறது. மேலே எடுத்துக் காட்டப்பெற்ற நூற்பாக்களின் அடிப்படையில் நடுவணது என்பதற்கும் நடுவுநிலைத்திணை என்பதற்கும் உரிய தெளிவான விளக்கத்தைக் காண இயலவில்லை.

பாலையை நடுவணது என்றும் நடுவுநிலைத்திணை என்றும் சுட்டப் பெறுவதன் அடிப்படைக் காரணி ஒன்றை அகநானூற்றுப் பதிப்புகளில் காண முடிகிறது.

அகநானூற்றைப் பதிப்புச் செய்தவர்கள் நால்வகை நிலங்களுக்கும் இடை இடையே பாலையை அமைத்துப் பதிப்பித்துள்ளார்கள். எடுத்துக்காட்டாக, குறிஞ்சி, பாலை, முல்லை, பாலை, மருதம், பாலை, நெய்தல், பாலை என ஒவ்வொரு நிலத்துக்கும் இடையே பாலையை அமைத்தார்கள்.

இந்த அடிப்படை அமைப்பைக் கூர்ந்து நோக்குவேமாயானால் புணர்தல் என்ற உரிப்பொருளைப் பிரித்து, இழுத்தல் அல்லது ஊடல் என்ற உரிப்பொருளை வருவிப்பது எது? புணர்தல் என்ற உரிப்பொருளுக்குத் தன்னுடைய அனுபவத்தில் இருக்கும் ஒரு

பொருளைத் தானே பிரிக்கும் ஆற்றல் இருக்க முடியாது. அதைவிட ஆற்றல் வாய்ந்த ஒன்றுதான் அதனைப் பிரிக்க முடியும்.

எடுத்துக்காட்டாக, ஒன்றைக் காணலாம். தலைவனும் தலைவியும் கூடியிருக்கும் காலத்து நிகழ்வது புணர்தல் என்ற உரிப்பொருள். புணர்தல் என்ற உரிப்பொருள் நிகழுங்காலத்து, புணர்தலே பிரிதல் என்ற உரிப்பொருளை உண்டாக்காது. புணர்தல் என்ற உரிப்பொருள் அனுபவம் நிகழ்ந்து கொண்டிருக்கும்போதே, பிரிதல் என்ற உரிப்பொருள்தான் இடைநின்று புணர்தல் என்ற ஒழுக்கத்தைத் தடுத்து நிறுத்தி, அவ்விருவரையும் பிரிக்கும்.

அவ்வாறே, புணர்தல் என்ற உரிப்பொருள் ஒழுக்கத்திலிருந்து பிரிந்து, தனித்திருத்தல் என்ற ஒழுக்கத்தில் தலைவியும் தலைவனும் இருக்கின்ற காலத்து, பிரிதல் என்ற ஒழுக்கமானது இருத்தல் என்ற உரிப்பொருள் ஒழுக்கத்திலிருந்து அவர்களைப் பிரித்து, மீளவும் புணர்தல் என்ற ஒழுக்கத்திலோ அல்லது ஊடல் என்ற ஒழுக்கத்திலோ அவர்களை ஈடுபடுத்தும். பிரித்து தனித்திருத்தல் என்ற ஒழுக்கமே அவர்களைத் தன்னிடத்திலிருந்து பிரித்து வேறோர் ஒழுக்கத்தில் ஈடுபடுத்தாது. அத்தகைய ஆற்றல் புணர்தல், இருத்தல், இரங்கல், ஊடல் ஆகிய எந்த ஒரு உரிப்பொருள் ஒழுக்கத்துக்கும் இருக்க முடியாது. பிரிதல் என்ற பாலைநில உரிப்பொருள் ஒழுக்கத்துக்குத்தான் அந்த ஆற்றல் உண்டு.

இணைதல், (தனித்து) இருத்தல், ஊடிக்கொள்ளுதல், இரங்குதல் என்ற நான்குதான் தனித்தன்மை வாய்ந்த தனித்தன்மையுடைய ஒழுக்க நிலைகள். அவற்றிற்குரிய நிகழிடம் அதாவது நிலைக்களம் நான்கு. அவை முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன. அவையும் தனி நிலங்களே.

இணைதல் என்ற உரிப்பொருள் ஒழுக்கம் இல்லாதபோது அல்லது பதிவுபெற்றபோது தனித்திருத்தல் என்ற ஒழுக்கம் உண்டாகிறது. தனித்திருத்தல் என்ற ஒழுக்கம் பிரிவு உண்டானதுபோது ஊடல் வரும் அல்லது இணைதல் வரும். தனித்திருத்தலோ, ஊடலோ நீட்டித்தால் அவற்றிலிருந்து மனத்தைப் பிரித்தால் ஒருவகையில் வருந்துதல் வரும் அல்லது இணைதல் வரும்.

இணைதல், (தனித்து) இருத்தல், ஊடல், இரங்கல் என்ற நான்கு தனி அனுபவங்களைப் போல, பிரிதல் என்பது ஒருவகைத் தனி ஒழுக்கம் ஏதும் இல்லை.

சாத்தனும் கொற்றனும் அண்ணன் தம்பிகள். பாகப்பிரிவினைக் குரிய நிலத்தில் நடுவே ஒரு கோடு கிழிக்கிறார்கள். அந்த ஒரு கோடு இருக்கும் இடம் சாத்தனுக்கும் உரியது இல்லை. கொற்றனுக்கும் உரியது இல்லை.

வரையப் பெற்ற கோட்டுக்குப் பிரிக்கும் ஆற்றல் உண்டு. ஆனால், அது நின்ற இடம் நடுவணது என்றும் நடுவுநிலைக் கோடு என்றும் பெயர் பெறும். இருவருக்கும் பொதுவானது. நடுவானது. நடுவுநிலைத்திணை என்றாலும் கூட, இருவரில் எவரும் உரிமை கொண்டாட முடியாது.

இது அவனுடையது, அது இவனுடையது என்று கோடிட்டுக் காட்டப் பெற்ற கோடு அமைந்த இடம் என்ன அனுபவத்தைத் தரும்?

ஒருபொருளின் தொடர்ந்து செல்லும் ஒருவகை அனுபவத்தைத் தடுத்து நிறுத்தி வேறொரு அனுபவத்தில் அப்பொருளை ஈடுபடுத்தி விடுதலே பிரிவு.

இணைதலுக்கும் தனித்து இருத்தலுக்கும் நடுவே பிரிதல் வருகிறது. இன்ப அனுபவமாகிய இணைதலுக்கும் துன்ப அனுபவமாகிய தனித்து இருத்தலும் இடையே பிரிவு வருகிறது. பிரிவுதான் அதனைச் செய்கிறது. ஆனால், பிரிவு என்பது இன்பமா, துன்பமா? இரண்டும் இல்லை. சுருங்கக் கூறினால், பிரிதல் என்பதை யாரும் அனுபவித்தல் இல்லை.

இணைதல் என்ற இன்ப அனுபவம் நிகழும்போதே அந்த அனுபவத்தின் இடைநின்று, அதைப் பிரித்து, அடுத்த அனுபவத்துக்குத் தள்ளி விடும். அதனால் பிரிவு என்பது இணைதல், இருத்தல், ஊடல், இரங்கல் என்ற நால்வகை ஒழுக்கங்களில் நின்று வேறுபடுத்துமேயொழிய, பிரிவு என்பது தனியே நிற்காது. அதனால்தான் பிரிவுக்குரியதாக ஒரு தனிநிலத்தை அமைக்கவில்லை. அதனால் நிலமில்லாத பாலை எனப் பெற்றது.

மேலே குறிப்பிடப் பெற்ற காரணங்களினால்தான் பாலையை - பிரிதல் என்ற உரிப்பொருளுக்குச் சொந்தமாகிய பாலையைப் பொது ஒழுக்கம் என்றும் நடுவணது என்றும் நடுவுநிலைத்திணை என்றும் தொல்காப்பியம் வரையறை செய்தது.

பாலைக்குரிய களமும் காலமும்

தொல்காப்பியத்தில் பாலைக்குக் களம் கூறப் பெறவில்லை. காலம் கூறப்பெறுகிறது.

மாந்தரினத்து அனுபவம் இரண்டுதான். இன்பம், துன்பம் என்பனவே அவை. தனித்து இருத்தல் துன்ப அனுபவம். அடுத்ததாகக் கூடுதல் நிகழ இருக்கும்போது இருத்தலிலிருந்து ஒரு பிரிவு தோன்றும். அந்தப் பிரிவை இன்பமாகக் கொள்ளுவது உலகியல். அடுத்தாக வரும் இன்பம் அல்லது துன்பம் ஆகியவற்றை நோக்கும்போது பிரிவும் இன்பம் போல அல்லது துன்பம் போல எண்ணப் பெறுகிறதேயன்றி, பிரிதல் இன்பமும் அன்று. துன்பமும் அன்று.

பிரிதலுக்குத் தனியாகக் களம் இல்லை. தனியாக அனுபவிக்கப் பெறும் ஒழுக்கமும் இல்லை. ஆனாலும், பிரிதல் என்பது அனுபவிக்கப் பெறுவது அன்று. உணரப்பெறுவது என வரையறை செய்து கொள்ளுதல் வேண்டும்.

பிரிவைச் செயற்படுத்துவது காலம். இடமும் காலமும் என்பன பற்றி முன்னமும் விளக்கிக் கூறப் பெற்றுள்ளன.

தமிழகத்து மக்களின் அனுபவத்தை விளக்கும் தொல்காப்பியச் சிந்தனையைப் பொறுத்தவரையில் நிலமும் காலமும் முதன்மைப் பொருளாயினும் அவை முடிநிலை முதன்மைப் பொருள்கள் (ULTIMATE REALS) அல்ல.

அப்பாலைப் பொருள்

நிலத்தையும் காலத்தையும் இணைத்தும் வேறுபடுத்தியும், வேறுபடுத்துவதனால் வேறு வேறு காலங்களையும் நிலங்களையும் உண்டாக்கியும் அவற்றின்மூலம் கருப்பொருள்களை உண்டாக்கியும், இவற்றையெல்லாம் துய்ப்புப் பொருளாக்கியும்

மனிதனைத் துய்ப்பாளனாக ஆக்கி, அவனைச் செயற்படுத்தும் மூலப் பொருள் உண்டு. அது அறிவுடைப் பொருளாகவும் இருத்தல் வேண்டும்.

நிலம், காலம் (SPACE & TIME) என்ற இரண்டனுள் எது முதன்மையுடையது என்ற வினாவுக்கு உலக அரங்கில் முடிவான பதில் எதையும் அத்துறை வல்ல ஆய்வாளர்கள் அரங்கேற்றவில்லை.

காலத்தையும் நிலத்தையும் கடந்து நின்ற அப்பாலைத் தத்துவம் (META PHYSICAL REAL) முதலில் காலத்தோடு தொடர்பு கொண்டு, பின்னர் நிலத்தோடு தொடர்பு கொள்ளுகிறது என்ற சிந்தனையைத் தொல்காப்பியத்தில் காண முடிகிறது.

மனிதன் தன்னுடைய ஐந்து புலன்களாலும் உணர்ச்சித்து நின்றும், ஒலியினால் கேட்டு, கற்று, அறிந்து நின்றும் அமைக்கின்ற அனுபவங்களுக்கெல்லாம் மூலமாக நின்ற பொருள் பௌதிகப் பொருள்களே- பருமைப் பொருள்களே. (PHYSICAL OBJECTS)

பருமைப் பொருள்களையெல்லாம் பௌதிகப் பொருள்களையெல்லாம் உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் இயக்கும் பொருளே அப்பாலைப் பொருள். அதனைப் புலன் கடந்த பொருள் எனவும் கூறுவர்.

'செப்பார் முலைபங்கன் தென்னன் பெருந்துறையான்
தப்பாமே தாளடைந்தார் நெஞ்சுருக்கும் தன்மையினான்
அப்பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த
அப்பார் சடையப்பர் ஆனந்த வார்கழலே
ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தார் உள்ளிருக்கும்
அப்பாலைக்கு அப்பாலைப் பாடுதுங்காண் அம்மானாய்'
(திருவாசம்-185)

என்பது மணிவாசகரின் விளக்கம்.

பாலையின் - அப்பாலையின் இலக்கணம்

மணிவாசகப் பெருந்தகை அப்பாலைக்கு அப்பாலை (META - META PHYSICS)என்று எடுத்துக் காட்டினாலும் அதனைப் பாலை என்ற சொல்லில் வைத்தே இலக்கண முறையால் விளக்கம் கூறுகிறார் தொல்காப்பியர்.

தொல்காப்பியப் பொருளதிகாரக் களவியலின் இரண்டாவது நூற்பாவைக் கீழே காணலாம்.

'ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோன் ஆயினும் கடிவரை இன்றே ' (1039)

என்ற நூற்பாவில் முன்னிரண்டு வரிகள் அளிக்கும் செய்திகளை ஆழ்ந்து சிந்தித்துத் தெளிதல் வேண்டும்.

தலைவனும் தலைவியும் களவொழுக்கம் தொடங்குவதற்கு முன் இயற்கையாகச் சந்தித்துக் கூடுகிறார்கள்.

இத்தகு நிகழ்ச்சிகான துறையானது இயற்கைப் புணர்ச்சி என்று அமைத்துக் கூறப்பெறும்.

தலைமகளும் தோழிகளுடன் விளையாடுவதற்காகச் சோலைக்கு வருகிறாள். தலைமகனும் மான், புலி ஆகியனவற்றை வேட்டையாடுவதற்குக் கானகம் வருகிறான். இருவரும் தத்தம் தோழியர், தோழர்களுடன் வந்தாலுங் கூட, எவ்வாறோ எப்படியோ தனிநிலைப் படுத்தப் பெற்று விடுகிறார்கள். இருவரும் தனிநிலையில் ஒருவரை ஒருவர் காண்கின்றனர். பின்னர் அவர்களுக்குள் காதல் மலர்கிறது.

தலைவன், தலைவி எனப்பெறும் இருவரிடையே இயற்கைப் புணர்ச்சியானது நிகழ்வதற்குரிய அடிப்படைக் களனும் சூழலும் இவ்வாறு அமைகின்றன. இப்படித்தான் களவியல் நிகழ்ச்சியானது தொடங்கப் பெறும். இதே சூழலைத்தான் சற்றொப்ப, முன்பின்னாக அல்லது வேறுவகையாக அமைத்துக் காட்டியிருப்பார்கள் இத்துறையை அறிமுகப்படுத்தும் இலக்கண ஆசிரியர்கள்.

இக்காலத்தில் இதேநிகழ்ச்சியானது வேறுவிதமாக அமைத்துக் காட்டப்பெறும். தனித்து வருவதற்கு முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலையில் பல்வேறு கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிருக்கும் ஒரு பெண் மெல்ல, மெல்லச் சோலைக்குள் வந்து தனிமைப்படுத்தப் பெற்று விடுகிறாள்.

தலைவனோ அப்படியில்லை. வருவதற்குரியவன். காட்டுக்குள்ளேயோ, சோலைக்குள்ளேயோ வந்தேயாக வேண்டும். அவன் வீரத்தை முன்னிலைப்படுத்தி, மான்வேட்டைக்கோ, புலிவேட்டைக்கோ என ஒரு காரணத்தைக் கூறிக் கொண்டு பலரோடும் வந்தாலும் தனிமைப்படுத்தப் பெற்று விடுகிறான்.

தனிமைப்படுத்தப் பெறுதல் என்பது முதல்நிலை. இருவரும் ஒருவரை ஒருவர் நோக்குதல் இரண்டாம் நிலை. இந்த இரண்டு நிலைகளிலும் இருவரையும் முதன்முதலாகச் செயற்படுத்தியது யார்? என்பதே வினா.

இருவரும் திட்டமிட்டு வரவில்லை. இப்படி ஒரு சந்திப்பு நிகழும் என்பதற்குரிய அடிப்படைத் திட்டம் எதுவும் இல்லை. ஆனால், சந்திப்பு நடைபெற்று விடுகிறது.

எதிர்பாராதது, எதிர்பாராதது முழுக்க முழுக்க இயற்கையானது என்று எத்துணை முறை சொன்னாலும் தொல்காப்பியச் சிந்தனையில் அல்லது தமிழக மக்கள் வாழ்வியலில் ஒரு பெரும் பகுதியைக் களவாடிக் கொள்ளும் களவியல் இலக்கணச் சிந்தனையில் ஒரு நெருடல் இருக்கத்தான் செய்கிறது.

இருவரும் இயல்பான முறையில் நடந்தது - எதிர்பாராத வகையில் நடந்தது என்று எண்ணும் வகையில் சந்தித்தமைக்கு, இந்த இருவருக்கும் அப்பாற்பட்ட முறையில் ஒரு பொருள் செயற்பட்டிருக்க வேண்டும் என்று தொல்காப்பியம் திட்டவட்டமாகக் கருதுகிறது.

மேலே குறிப்பிடப் பெற்றவாறு இருவரையும் சந்திக்க வைத்த பொருள் எதுவாக இருக்கும்?

> **'ஒன்றே வேறே என்று இருபால்வயின்**
> **ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்'**

இத்தகைய சந்திப்பு நடந்தது என்பதே அந்நூற்பாவின் விளக்கம்.

மேலே குறிப்பிடப் பெற்ற நூற்பாவில் அமைந்த பால் என்ற சொல்லுக்கு ஊழ் என்று விளக்கம் கூறப் பெற்றுள்ளது.

ஒன்றாக இணைத்தல், வேறாகப் பிரித்தல் என்று வரும் இருவகை ஊழ்நிலைகளுள் பல பிறவிகளில் ஒன்றியிருக்கும்படிச் செய்து, அதனால் அன்பு உயர்வதற்குக் காரணமாகிய ஒருவகை ஊழினது ஆணையினால் என இப்பகுதிக்குப் பொதுவாகப் பொருள் கொள்ளப் பெற்றிருக்கிறது.

ஒன்றாக்குதல், வேறாக்குதல் என்ற இரண்டும் இருவகை ஊழ்கள் என்றால், ஒன்றி உயர்ந்த பால் என்பது மூன்றாவது வகை ஊழா?

ஊழ்த்தல் - மறைந்திருந்து காலத்தில் வெளிப்படுதல்.

'இணர் ஊழ்த்தும் நாறா மலரனையர் கற்றது
உணர விரித்துரையா தார்' (650)

என்பது குறள்.

ஊழ் என்பது காலம் வரும்போது நேரே வரும். ஆனால், அது நேரே வரும் அதன் ஆணையாக எதுவும் வருதல் இல்லை. ஊழ் என்பது மெய்ப்பொருளியலாளர் கொள்கைப்படி ஓர் அறிவற்ற பொருள். அதனையும் இயக்குவதற்கு ஓர் அறிவுடைப்பொருள் தேவை.

பால் என்ற சொல்லுக்கு ஊழ் என்ற பொருள் இருப்பதால் இவ்வாறு உரையாசிரியர்க்ளால் உரை கொள்ளப் பெற்று விட்டது. ஊழை இயக்கும் அறிவுடைப் பொருளுக்குப் பால்வரை தெய்வம் என்பது பொருள்.

பொருள், குணம், அனுபவம் என எந்த ஒன்றை எடுத்துக் கொண்டாலும் அது இருநிலைகளில் நிற்கும்.

சிந்தனையாளர்களில் கூட நேர்நிலைச் சிந்தனையாளர்கள், எதிர்நிலைச் சிந்தனையாளர் என இருவகைப்படுவர். ஒன்று, வேறு என்பன இருவகை எதிர்நிலைகள்.

எடுத்துக் கொள்ளப் பெற்ற எந்த ஒரு கொள்கைக்கும் எதிர்நிலைக் கொள்கை உண்டு. ளை எனில் ளை டேிவ இல்லை என்பதுதானே வரும். இதனை இலது என்றலின் உளது என்றார் மெய்கண்டார்.

கொள்கை (THESIS) எதிர்கொள்கை (ANTI THESIS) இரண்டும் இணைந்து ஒருவகையான இணைப்புக் கொள்கை (SYNTHESIS) உருவாகும் என்பது மேல்நாட்டுத் தத்துவம். தமிழகச் சிந்தனையில் இணைப்புக் கொள்கை (SYNTHESIS) என்ற ஒன்று உருவாகாது என்று முடிவு செய்துள்ளார்கள்.

இருவேறு எதிர்நிலைகள் இல்லாத பொருள் இவ்வுலகில் இல்லை. எடுத்துக்காட்டாகக் கூற வேண்டுமானால் இரண்டு பக்கங்கள் இல்லாத ஒரு பொருள் இந்த உலகத்தில் இல்லை என்பது மெய்ப்பொருளியலாளர் கொள்கை. மனிதனின் மறுபக்கம் என்றெல்லாம் இக்கால அறிஞர்கள் அதிகம் எடுத்துக்காட்டிப் பேசுவதைக் காணலாம்.

இதனை, 'ஒன்றே வேறே என்று இருபால்' என்று குறிப்பிட்டுக் காட்டினார் தொல்காப்பியர்.

பால் என்பதற்கு ஊழ் என்றே பொருள் கொண்டாலும் ஆகூழ், போகூழ் என இரண்டுதான் உண்டு. இரண்டையும் இணைத்த மூன்றாவது ஊழ் ஒன்றைத் திருவள்ளுவரும் எடுத்துக் காட்டவில்லை.

இனி, ஒன்றி உயர்ந்த பால் என்பது ஒன்று உண்டு என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

ஒன்றும் அல்ல, வேறும் அல்ல ஆனால், ஒன்று என நின்றதையும் வேறு என நின்றதையும் பற்றுக் கோடாகக் கொண்டு அவை இரண்டற்கும் வேறாக உயர்ந்து நிற்கும் பால் ஒன்று உண்டு. ஒன்று, வேறு என நின்ற இருவேறு நிலைகளிலும் ஒன்றி, அவ்விருவேறு நிலைகளைக் கடந்ததாய் உயர்ந்ததாய் நிற்கும் பால் ஒன்று உண்டு. அது வெளிப்படுவதற்கு ஒன்றும் வேறும் என்ற இருநிலைகள் தேவை.

இக்கருத்தானது முன்னே ஆய்தம் என்ற எழுத்தைப் பற்றிய விளக்கத்திலும் காட்டப் பெற்றது.

இருமைக் கருத்துகளுக்கு இடையில் வெளிப்படுவதாய் அதேசமயத்தில் இருமைக்கருத்துகளின் இணைப்பு என்று சொல்வதற்கு இடமில்லாததாய் இருமைக்கருத்துகளைக்

கடந்ததாய் உயர்ந்ததாய் நின்ற ஒன்றையே பொருள் என்று கொண்டனர் தமிழர் (அ) தொல்காப்பியர்.

அந்த ஒரு பொருள் - ஒன்றே வேறு என்ற இருபால் வயின் ஒன்றி, உய்ந்த பால் எனப் பெற்ற ஒருபொருள் தந்த ஆணையின் வண்ணம் தலைவனும் தலைவியும் இயற்கையாகக் கண்டு காதலித்தனர் என்று பொருள் கொள்ளுதல் வேண்டும்.

இருமை உலகத்து இயற்கை. இருவேறு உலகத்து இயற்கை என்றார் திருமூலர்.

இருவேறு நிலைப்பட நிற்கும் பொருளே உலகியற்பொருள். இருமையை ஒன்றி நின்றதாய், இருமையைக் கடந்த ஒருமையாய், உயர்ந்ததாய் நின்றது எதுவோ அதுவே பாலை எனப்பெறும் பரம். அதனை அப்பாலைப் பொருள் என அமைத்துக் கொண்டு பொருள் வரையறை செய்த பெருமை தமிழருக்கே உண்டு.

உலகத் தத்துவ அரங்கில் அப்பாலைப் பொருளுக்கு இத்தகைய விளக்கம் காண முடியவில்லை. தமிழகத்தின் சமயவாதிகளும் தத்துவவாதிகளும் இத்தகையதொரு தனித்தன்மை வாய்ந்த விளக்கத்தைக் கண்டு கொள்ளவேயில்லை.

தொல்காப்பியம் இற்றைக்கு இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று சொல்கிறார்கள். அக்காலத்திலேயே பொருள் என்ற ஒன்றற்குப் பாலை என்பதாகக் கொண்டு, இருமை என்ற இயற்கை நிலைகளில் கால்கொண்டு தோன்றுவதாக இருந்தாலும் இருமைநிலைகளைக் கடந்ததாய் உயர்ந்ததாய் நின்றதே பொருள் எனவும், அதுவே அப்பாலை எனவும் அமைந்த விளக்கம் தொல்காப்பியர் காலத்துத் தமிழகச் சிந்தனையாக மலர்ந்துள்ளது என்று கொள்ளலாம்.

அப்பாலையும் கடவுளும்

தொல்காப்பியத்தில் கடவுள் என்ற சொல் காணப்பெறுகிறது.

கடவுள் என்பதற்கு உள்ளத்தைக் கடந்தது என்றும் உள்ளத்தைக் கடவுவது (அ) செலுத்துவது என்றும் பொருள் கண்டுள்ளார்கள்.

மெய்ம்மைக்கு எதிர்நிலை பொய்மை. இரண்டும் இருவேறு நிலைகள். இருமைகள். இருமைகளைக் கடந்ததே உண்மை. உண்மை என்பது எதிர்நிலை இல்லாதது.

இருமைகளைக் கடந்ததாய் உயர்ந்த ஒன்றாய் நின்றதே கடவுள். அதுவே உள்ளது எனப் பெற்றது.

ஒருமை என்றும் அப்பாலை என்றும் கடவுள் என்றும் குறித்து உணரப் பெற்ற அப்பொருளுக்கு இரண்டு நிலைகள் உண்டு.

உள்ளது என நிற்றல் - இறைமை
செம்பொருள் என அனுபவப்படுதல் - அறம்

அமைப்பு விளக்கம்

மெய்மை - பொய்மை என்ற இருமையையும் கடந்தது உண்மை. அப்பாலை

மெய்மை பொய்மை

உண்மை (அப்பாலை)

உள்ளது என நிற்றல் செம்பொருள் என

இறைமை அனுபவப்படுதல் அறம்

அப்பாலைக்கு அப்பாலை

'அப்பாலைக்கு அப்பாலைப் பாடுதுங்காண் அம்மானாய்' என அருளிய மணிவாசகப் பெருந்தகையின் அனுபவ உண்மைத் திருவாக்கினை இவ்வாறு அமைத்துக் காணுதல் நலம் பயப்பதாகும்.

முடிப்புரை

தொல்காப்பியச் சிந்தனையில் தமிழ்த் தத்துவம் என்ற தலைப்பில் அமைந்த சிந்தனையின் உருவாக்கமாகிய இக்கட்டுரையில் தொல்காப்பிய எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற மூன்று அதிகாரங்களிலும் அமைந்துள்ள சான்றுகள் சிலவற்றைக் கொண்டு தமிழக மக்களின் வாழ்வியற்

கொள்கைகளும் மெய்ப்பொருளியற் கருத்துகளும் எவ்வாறு அமைந்துள்ளன என்பது விளக்கப் பெற்றது.

தொல்காப்பிய இலக்கணத்தின் வண்ணம், பாலை நிலமல்லாதது; ஆனால், அதன் செயற்பாடுகள் விரிவானவை. அதனை விளக்குவதற்குப் பாலைப் பாடல்கள் அதிகம் இருத்தலே சான்று.

பாலை, அப்பாலை என்பனவற்றைத் தொல்காப்பியச் சிந்தனை மூலம் விரிவாக அறியலாம்.

'அப்பாலைக்கு அப்பாலை' என்பதே தமிழர்களுடைய கடவுட்கொள்கை.

'அப்பாலைக்கு அப்பால்' என்ற அநுபவத் தத்துவத்துக்கு வரிவடிவம் கொடுத்த நிலையில், குருவானவர் சீடனுக்கு எடுத்துக் கொடுத்த வாழ்வியல் வடிவமே இட்டலிங்கம். இட்டலிங்க பரசிவமே மாணிக்கவாசகர் வாக்கில், 'அப்பாலுக்கு அப்பால்' என நின்றது.

இட்டலிங்க பரசிவமே 'அப்பாலைக்கு அப்பால்' என்ற மணிவாசகத் தொடரால் குறிக்கப் பெறுவதாகும். உணர்ந்து தெளிந்து உன்னதப் பயன் பெறுக.

குருகுகேசம் - 3 என்ற தலைப்பில் அமைந்த இந்நூலுள் 'வீர' என்ற அடைமொழியின் பொருள் (வீரசைவம்); இலிங்காயதமும் சம்பிரதாயமும்; வீரசைவத் தீட்சை முறைகள்; நந்தி என்பதன் பொருள்; அங்காங்கி யோகம்; தத்துவநோக்கில் வீரசைவம்; தொல்காப்பியச் சிந்தனையில் தமிழ்த் தத்துவம், அப்பாலைத் தத்துவமே இட்டலிங்கம் என்ற தலைப்புகளில் வீரசைவக் கொள்கை விளக்கம் செய்யப் பெற்றுள்ளது.

'வாழ்க வீரசைவப் பெருநெறி

வாழ்க இட்டலிங்க பரசிவ வணக்கநெறி

வெல்க அப்பாலைக்கு அப்பாலைத் தத்துவம்.'



தொல்காப்பியம் சுட்டும் 'பெருமிதம்' உடையவர், கணியனார் குறிப்பிடும் 'திறவோர்', 'மாட்சியில் தெரிந்தோர்', திருவள்ளுவரின் செயற்கரிய செய்யும் 'பெரியர்', திருஞானசம்பந்தர் காதைத்து 'கொள்கையினால் உயர்ந்த நிறையுடையவர்' ஆகிய 'வீரர்' என்போரே 'வீரசைவர்கள்' என இலக்கியச் சான்று காட்டுகிறார்.

மானுட மேன்மையையும் வாழ்வியல் செம்மையையும் முன்னிறுத்தும் வீரசைவ சமயக் கருத்துகளை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு நூல் களைப் படைத்து வருகின்றார். அதன் தொடர்ச்சியாகவே குருகுகேசம்–3ஆம் பகுதியையும் படைத்துத் தந்திருக்கிறார்.

நூலாசிரியர் முனைவர் வை.இரத்தினசபாபதி அவர்கள் மேன்மேலும் நீடூழி வாழ்ந்து மக்களுக்குப் பயன்பெறக் கூடியவகையில் இன்னும் பல நூல்களைப் படைத்தளிக்க மயிலம் பொம்மபுர ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீபாலசித்தர் அவர்கள்வழி ஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள் குருவருளையும் மயிலம் வள்ளி தெய்வானையர் உடனுறை முருகப்பெருமான் திருவருளையும் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

– ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்
20ஆம் பட்டம்

ISBN No. 978-81-926955-2-5